
# தமிழ் சாகித்திய விழா
# சிறப்பு மலர் - 2017
# மத்திய மாகாணம்

"அறிவு பெருக்கி ஆற்றல் மிகுவோம்"



மத்திய மாகாண விவசாய, சிறிய நீர்ப்பாசன, விலங்கு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, கமநல அபிவிருத்தி, நன்னீர் மீன்பிடி, இந்து கலாசாரம், தமிழ் கல்வி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சாகித்திய விழா
# சிறப்பு மலர்

## 2017

### "அறிவு பெருக்கி ஆற்றல் மிகுவோம்"

**இதழாசிரியர்**

திரு. எம்.பீ. சந்திரசேகரன்

மத்திய மாகாண விவசாய, சிறிய நீர்ப்பாசன, விலங்கு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, கமநல அபிவிருத்தி,நன்னீர் மீன்பிடி, இந்து கலாசாரம், தமிழ் கல்வி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழிய வே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா, 2017
# சிறப்பு மலர்

**வழிகாட்டல்**
**திரு. ம.ரா.விஜயானந்தன்**

**ஆலோசனை**
**திரு. பெருமாள் சரவணகுமார்**
விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்

**மலர் ஆசிரியர்**
**திரு.எம்.பீ. சந்திரசேகரன்**
உதவிக் கல்விப்பணிப்பாளர், வத்தேகம கல்வி வலயம்

**மலர் இணையாசிரியர்**
**திரு.கே.ராஜன்**
பிரதி அதிபர்,ம.மா/வ/விவேகானந்த த.ம.வி, குண்டசாலை.

**மலராக்க இணைப்பாளர்**
**திரு. எஸ்.எஸ். ராஜேந்திரா**

**மலர்க்குழு**
**திரு. டீ. பாலகிருஷ்ணன்**
உதவிக்கல்விப் பணிப்பாளர், மாகாண தமிழ் கல்வி அமைச்சு

**திருமதி. என். கமலினி**
ஆசிரியை மமா/வ/ அபிராமி த.ம.வி, கலாபொக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாகித்திய விழா கீதம்

இயற்கை அன்னையின் எழில் மிகு பதியாம்
வளம் மிகு நுவரெலியா மாநகர் தன்னில்
கலையுடன் கன்னல் தமிழின் பெருமை காத்திடும்
கவினுறு சாகித்திய பெரு விழா வாழ்க....... வாழ்க......

அழகியலினையே அருமையாய் கொண்டு
ஆன்மிகம் மொழியினை அகத்தினில் நிறைத்தே
இன, மத, சாதி, பேதங்கள் கடந்து - மனிதனின்
மாண்பினை கூறிடும் சாகித்தியம்
- இயற்கை......

சங்கங்கள் வளர்த்த தமிழினை போற்றுவோம்
கலைஞனின் அறிஞனின் வித்துவம் வாழ்த்துவோம்
காவியச் செழிமையின் சிறப்பினை போற்றியே
காலத்தை வென்ற படைப்பினை கொண்டாடுவோம்
- இயற்கை......

வீரம் தந்த வெற்றித்தமிழாம்
வித்தகர் நாவினில் விளைந்த தமிழாம்
விண்ணும் மண்ணும் ஓங்கும் தமிழாம்
வீறு கொண்டெழுந்தே பொங்கும் தமிழாம்
- இயற்கை......

வாழ்க! வாழ்கவே.. வாழ்க! வாழ்கவே......
முத்தமிழ் வித்தகர் வளர்தமிழ் வாழ்கவே....

வாழ்க! வாழ்கவே.. வாழ்க! வாழ்கவே......
கலைமகள் தந்த கன்னித் தமிழ் வாழ்கவே

வாழ்க! வாழ்கவே.. வாழ்க! வாழ்கவே......
மதுரச் சுவை தரு செந்தமிழ் வாழ்க வாழ்கவே

திருமதி. பவானி செல்வராஜ்
மாத்தளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தமிழ்

வங்கக் கடல் தாலாட்ட
வளர் இமயம் குடைபிடிக்க
சங்கத்தமிழ் தரணியிலே தவழ்ந்தது – எங்கள்
தங்கத்தமிழ் தாய்வடிவாய் உயர்ந்தது. (வங்கக் கடல் ......)

முந்து தமிழ் அகத்தியனும்
சிந்து புகழ் பாரதியும்
சந்தமுயர் திருப்புகழும் பயின்றது – கம்பன்
கன்னித் தமிழ் காவியமும் புனைந்தது. (வங்கக் கடல்.....)

வான் புகழும் குறளமுதும்
வண்ணத் தமிழ்ச் சிலம்பொலியும்
ஊனுருகும் வாசகமும் உடையது – தமிழ்
உண்ண உண்ணத் தெவிட்டாத சுவையிது (வங்கக் கடல் .....)

மன்னவர்கள் வளர்த்த தமிழ்
வைகைநதி வடித்த தமிழ்
பொய்கையில் செந் தாமரையாய்ப் பூத்தது - இது
புண்ணியர்கள் நாவில் கவிதை வார்த்தது. (வங்கக் கடல் ......)

செம்மொழிச் சிம் மாசனமும்
சிந்தை அள்ளும் சொல்வளமும்
விந்தைமிகு சரித்திரமும் படைத்தது - இங்கு
விண்ணவர்கள் வாழ்வை எமக்குக் கொடுத்தது.(வங்கக் கடல்......)

சுற்றி வரும் பூமியிலே
சூழ்ந்திருக்கும் எங்கள் தமிழ்
நித்தியமாய் நீடூழி வாழ்கவே! – என்றும்
நீங்காத நிறைவுடனே வாழ்கவே! (வங்கக் கடல் .........)

சி.கணபதிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு சனாதிபதி அவர்களின் வாழ்த்துச் செய்தி




ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் கலை, இலக்கியம் ஆகியன பாரிய தாக்கத்தினை செலுத்துகின்றன. கலை மற்றும் இலக்கியத்தின் ஊடாக ஒரு சமூகத்தின் வாழ்வியலானது மேலும் கட்டுறுதியாக பயணிப்பதுடன், அச்சமூகத்தின் இருப்பும் உறுதிப்படுத்தப்படுகின்றது. அத்துடன் அந்த சமூகமானது, நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் பெறுபேறுகளை உள்வாங்கி அபிமானத்துடன் முன்னேறிச் செல்லவும் அவை உதவி புரிகின்றன.

அந்தவகையில் மத்திய மாகாணத்தில் தமிழ், கலை,இலக்கியம் மற்றும் கலாசாரத்தினை ஊக்குவிப்பதற்காக மத்திய மாகாண விவசாய, சிறிய நீர்ப்பாசன, கால்நடை உற்பத்திகள் மற்றும் அபிவிருத்தி, கமநல அபிவிருத்தி, நன்னீர் மீன்பிடி, இந்து கலாசாரம், தமிழ் கல்வி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினால் ஈராண்டுக்கொருமுறை ஏற்பாடு செய்யப்படும் தமிழ் சாகித்திய விழாவுக்கு எனது வாழ்த்துச் செய்தியினை அனுப்பி வைப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

தான் சார்ந்த சமூகத்தின் கலைத்துறைக்கும் இலக்கியத்துறைக்கும் பங்களிப்புச் செய்வதனூடாக நம் நாட்டின் கலை இலக்கிய துறைகளின் வளர்ச்சிக்காக தமது பங்களிப்பை வழங்கும் கலைஞர்களும் இலக்கியவாதிகளும் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்களை இனங்கண்டு அவர்களுடைய சேவையை கௌரவித்து ஊக்கப்படுத்தும் நோக்கில் இந்த தமிழ் சாகித்திய விழாவினூடாக அவர்கள் கௌரவிக்கப்படுவதையும் நான் பாராட்டுகிறேன்.

இந்த தமிழ் சாகித்திய விழா சிறப்பாக நடைபெற வேண்டும் என்ற நல்லாசிகளை வழங்குவதுடன், இவ்விழாவில் விருது பெறும் அனைத்து கலைஞர்களினதும் பணிகள் மேலும் சிறப்பாக அமைய எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.




மைத்திரிபால சிறிசேன
ஸ்ரீ லங்கா சனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி




மனித வாழ்வு மற்றும் சமூக இருப்பினை மிகவும் சிறந்த நிலைக்கு முன்னேற்ற, இலக்கியம் ஊடாக மிக முக்கியமான பணி மேற்கொள்ளப்படுகிறது. அர்த்தம், சுவை, அழகு என்பன மிகுந்த அவ்வாறான சிறந்த இலக்கியப் படைப்புக்கள் மற்றும் படைப்பாளிகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்துவது பாராட்டத்தக்க ஓர் செயற்பாடாகும்.

மத்திய மாகாணத்தில் தமிழ்மொழி மூலம் இலக்கியப் பணிகளை மேற்கொள்ளும் எழுத்தாளர்களை பாராட்டி நடாத்தப்படும் மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா பிரதேச மட்டத்திலான படைப்பாளிகளை தேசிய மட்டத்திற்கு அறிமுகப்படுத்தி அவர்களை ஊக்குவிக்கவும், தமிழ் மக்களின் கலாசாரம், உள உணர்வுகள், விருப்புக்கள், அபிலாசைகளைப் பொது சமூகத்திற்கு கொண்டு செல்வதற்கும் பெறுமதியான சந்தர்ப்பமாக அமையும் என எதிர்பார்க்கிறேன்.

மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும் சிறந்த படைப்புக்களை சாகித்திய விழாவுடன் மாத்திரம் வரையறுத்து விடாது, தேசிய ஒற்றுமைக்கு உதவும் வகையில் ஏனைய மொழிகள் ஊடாக பொது வாசகர் சமூகத்திற்கு வழங்க முடியுமாயின் அது பெறுமதியான தேசியப் பணியாக அமையும்.

பொது சமூக நலனுக்காக இலக்கியப் பணிகளை அர்ப்பணிப்புடன் மேற்கொள்வதற்கான பலமும், துணிச்சலும் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து, மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவுக்கு எனது உளப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



ரணில் விக்ரமசிங்க
பிரதம அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**"இலக்கியம் ஒருவரை மேலும் மெருகூட்டுகிறது."**

இலக்கியமானது மொழியைக் கையாளுகிற திறன்களை அடிப்படையாகக் கொண்டதாகும். இதனால், மொழியில் போதுமானளவு தேர்ச்சியைக் கொண்டுள்ள ஒருவர் மகிழ்ச்சிகரமானதும் சமாதானமுமான வாழ்க்கைக்கு பங்களிப்பு நல்கக் கூடியவாறான சிந்தனைக் கருத்துக்களை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தக் கூடிய ஏதுநிலையைக் கொண்டிருப்பார்.

இலங்கையில், நூற்றாண்டு காலமாக தமிழ் ஒரு மொழியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பொழுது சிங்களமும் பெருவழக்காக நடைமுறையில் இருந்து வருகின்றது. மேலும், வேறுபட்ட மொழிகளுக்கிடையே பகிர்ந்து கொள்கின்ற கருத்துக்கள், சமூக மற்றும் கலாசார சகவாழ்வுக்கு விசேடமாக, பன்மொழிப் பயன்பாட்டிலுள்ள சமூகங்களுக்கு மிகப் பரந்தளவில் துணை புரியுமென்பதை அறிந்து கொள்ள வேண்டியதாகவும் இருக்கின்றது.

ஒரு மொழியாக, தமிழ்மொழி சீர்மை மேலோங்கி இருப்பதோடு மட்டுமல்லாமல், இலக்கியமாக செழுமை மிக்கதாக திகழ்ந்தும் வருகின்றது. இன்னும், இதனுடன் தொடர்புடையதாக தமிழ்மொழியின் தகவற் பொக்கிசமானது கலாசாரங்களுக்கிடையேயான புரிந்துணர்வை மேலும் மேம்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை பெருமளவில் கொண்டிருப்பதற்கான அநுகூலத்தையும் கொண்டுள்ளது.

தமிழ்க் கலாசாரத்தின் கலை, இலக்கியம் மற்றும் காட்சிப்படுத்தல்கள் ஆகியவை மூலம் அறிவுப் பகிர்வுக்காக ஏற்படுத்தக் கூடிய இவ்வாறான தமிழ்க் கலாசார நிகழ்ச்சிகளின் ஆரம்பமானது, கலாசார வேறுபாடுகளால் ஏற்படக்கூடிய இடைவெளியை நீக்குவதற்கு துணை புரிவதோடு மட்டுமல்லாமல், இலங்கையின் அதி உத்தம சனாதிபதி தலைமையின் கீழான நல்லாட்சியில் அதன் குறிக்கோள்களில் மிகத்தெளிவாகக் குறித்துரைத்தபடி இலங்கை மக்களிடையே கலாசார இணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் துணை புரியுமென நான் திடமாக நம்புகிறேன்.

உங்களது காலங் கருதியதும் நன்கு உணரப்பட்டதுமான கருத்துகளுக்கும் இன்னும், குறிப்பாக அவற்றின் நடைமுறையாக்கலுக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலூக்கா ஏக்கநாயக்க
ஆளுநர்
மத்திய மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



நுவரெலியா மாவட்டத்தில் நடைபெறும் மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவிற்கும் அதனை முன்னிட்டு வெளியிடப்படும் சாகித்திய விழா சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிகழ்ச்சியடைகின்றேன்.

மலையகத்தின் தமிழ்க்கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப்பேணி வளர்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு நடைபெறும் தமிழ் சாகித்தியவிழா மக்கள் மத்தியில் அவர் தம் பாரம்பரிய இலக்கிய மரபுகளைப் பேணுவதற்கும் நவீன இலக்கிய முயற்சிகளை வளர்த்தெடுப்பதற்கும் அடிப்படையாக அமைகின்றது. தொடர்ச்சியான இத்தகு நடவடிக்கைகள் இளம் சந்ததியினரிடையே ஒரு ஆர்வத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் என்பது வெள்ளிடைமலையாகும்.

அமைச்சு ரீதியாக நடைபெறும் இத்தகைய நடவடிக்கைகள் மக்கள் மனதில் மொழி, இனம், கலாசாரம், பண்பாடு தொடர்பான உணர்வுகள் வேரூன்றித் திளைப்பதற்கு வழிசமைக்கும் என்பதில் ஐயமில்லை. தமிழ் சாகித்திய விழா ஒன்றினை ஒழுங்கமைத்து நடத்த முன்வந்துள்ள மத்திய மாகாண விவசாய மற்றும் இந்துகலாசார அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சின் ஏனைய அலுவலர்களுக்கும், பிரதேச புத்திஜீவிகளுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

சாகித்திய விழா சிறப்பு மலர் சிறந்த ஆக்கங்களைக் கொண்ட தொகுப்பாக அமைய எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

டி.எம். சுவாமிநாதன்
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு,
மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



மத்திய மாகாணத்தின் தமிழ் இலக்கியம் மற்றும் நடனம் சார்ந்த படைப்புகளை வருடாந்தம் கணிப்பீடுகளுக்கு உட்படுத்தி அவற்றை அபிவிருத்தி செய்வதற்காக தமிழ் சாகித்திய விழாக்கள் வருடாந்தம் நடாத்தப்படுகின்றது. மத்திய மாகாணத்தைப் பொறுத்தவரையில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொரு நிகழ்வாகும்.

இலங்கை வரலாற்றில் கி.மு.3ம் நூற்றாண்டு காலப்பகுதிக்குரிய அநுராதபுர யுகம் முதற்றே இறுதி இராசதானியான கண்டி இராசதானி வரையான காலப்பகுதிக்குரிய இலக்கியப் படைப்புக்கள், கலாசார மற்றும் வரலாற்றுக் குறிப்புக்கள் என்பனவற்றை பாதுகாப்பதற்கான ஒரு சுவடி காப்பகமாக ஆங்கிலேயர் இந்நாட்டை ஆக்கிரமிக்கும் வரையில் மத்திய மாகாணம் இருந்து வந்துள்ளது. எழுத்து மூலமான தகவல்களுக்கு மேலதிகமாக வாய்மொழி மூலமாகவும் வரலாற்றுக் கதைகளாகவும் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது.

பல்வகையான இனம், மதம் சார்ந்தவர்களும் ஒன்றாக கலந்து சமாதானமாகவும், புரிந்துணர்வுடனும் வாழ்க்கை நடாத்துகின்ற மாகாணம் என்ற ரீதியில் மத்திய மாகாணத்திற்கு தனிச் சிறப்புண்டு. எமது மத மற்றும் கலாசாரப் புரிந்துணர்வு மற்றும் அதன் விளைவாக உருவாகும் நல்லிணக்கம் என்பன இதற்கு அடித்தளமாக அமைகின்றது.

மத்திய மாகாணத்தில் மரபுரிமைமிக்க தலதா மாளிகை சார்ந்த அம்சங்களை இதற்கு சிறந்த உதாரணமாகக் குறிப்பிடலாம். நாகம், விஷ்ணு, முருகன், அம்மன் எனும் நான்கு இந்து மதம் சார்ந்த தலங்கள் தலதா மாளிகைச்சூழலில் அமைந்திருப்பது மற்றும் அவ்வாலயங்களில் பின்பற்றப்படும் சம்பிரதாயங்கள் என்பன ஊடாக ஆதி காலம் முதலே இன நல்லுறவு பேணப்பட்டு வந்துள்ளமைக்குச் சான்றாக குறிப்பிடலாம்.

கண்டி தலதா மாளிகையை தரிசிக்க வரும் பௌத்த அடியார்கள் அதனை தரிசித்துவிட்டு அடுத்ததாக மேற்கூறப்பட்ட நான்கு தலங்களையும் தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அதேநேரம் இந்துக்கள் நாகம், விஷ்ணு, முருகன் மற்றும் அம்மன் போன்ற தெய்வங்களிடம் பாதுகாப்பை வேண்டி நிற்கின்றனர்.

அநுராதபுரக் காலப்பகுதியில் ஒரு பௌத்த நிகழ்வாக அறிமுகமாகி பெரஹரா எனும் நிகழ்வு யாபஹுவ, குருணாகலை காலப்பகுதியில் இந்து ஆலயங்களில் இடம் பெற்றுவந்த நிகழ்வுகளுடன் இணைக்கப்பட்டது. அந்த அடிப்படையில் கண்டி காலப்பகுதியில் மேற்படி நான்கு தேவாலயங்களுடனும் தொடர்புடைய சம்பிரதாயங்கள் பெரஹரா சம்பிரதாயத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. விசேடமாக கொடிமரம் நாட்டுதல், தேவாலயங்களில் உட்பகுதியில் நிகழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரஹரா, நீர் வெட்டுதல் என்பன இந்து மதம் தழுவிய சம்பிரதாயங்களாகும். சமகாலத்தில் இது பௌத்த அமைப்பிலான மாற்றங்களை ஏற்படுத்தி சமூகமயமாக்கப்பட்டுள்ளது. விசேடமாக தலதா மாளிகையின் நான்கு வைபவங்களில் கார்த்திகை வைபவம் கதிர்காம கந்தனின் பிறப்பை ஒட்டியே நிகழ்கின்றதென்பது ஐதீகமாகும். சம்பிரதாய மற்றும் மத அடிப்படையில் சிங்கள, தமிழர்களது தொடர்பு இருந்து வந்தது போன்றே கலை இலக்கியங்களிலும் தொடர்புகள் இருந்தே வந்துள்ளது. சங்கீதம் மற்றும் மொழிகள் ஊடாக இத்தொடர்பை அடையாளம் கண்டுகொள்ளலாம்.

எமது பரஸ்பர உறவுகளை புதுப்பிப்பதற்காகவும் கலாசார ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்காகவுமான ஒரு வைபவமாக வருடாந்தம் கொண்டாடப்படும் சிங்கள, தமிழ் புத்தாண்டைக் குறிப்பிடலாம். சிங்கள தமிழ்ப் புத்தாண்டு வைபவத்தின் அநேகமான சம்பிரதாயங்களும் இனிப்புப் பண்டங்களும் பெரும்பாலும் ஒரேமாதிரியானதாக அமைவதுண்டு.

அந்தவகையில் நோக்கும் போது தமிழ் இலக்கிய நிகழ்வுகளில் எமது கலாசாரம் பிரதிபலிப்பதுடன் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் பங்களிக்கின்ற அடிப்படையிலான மாகாண நிகழ்வாகவும் திகழ்கின்றது.

இவ்வருட மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவினை வெகு விமர்சையாக ஏற்பாடு செய்வதற்கு ஆலோசனை வழங்கிய மத்திய மாகாண கௌரவ விவசாய, இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் எம். ராமேஸ்வரன் மற்றும் செயலாளர் திரு. ரத்னாயக்க உட்பட இந்த நிகழ்வை ஏற்பாடு செய்வதற்காக பாடுபட்ட ஏற்பாட்டுக் குழுவின் அங்கத்தவர்கள் அனைவருக்கும் மத்திய மாகாணத்தின் பிரதான மற்றும் கலாசார அமைச்சர் என்ற வகையில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் எமது கலாசாரப் பிணைப்பு மென்மேலும் ஒற்றுமையுடன் அபிவிருத்தியடைய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
மத்திய மாகாண பிரதான மற்றும் கலாசார அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



"எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்"இதைப் போன்றதே எமது கலையும், கலாசாரமும். உலக மானுடத்தின் வரலாற்றுப் பாதையில் வேட்டையாடுதலையும், நாடோடியாக திரிதலையும், கடல் வள பயன்பாட்டையும், விலங்கு வளர்த்தலையும், பயிர் செய்தலையும் வாழ்வாதாரமாகக் கொண்டு; குறிஞ்சி, பாலை, நெய்தல், முல்லை, மருதம் என பூமிப் பரப்பை வகுத்துக் கொண்டு; நாகரிகத்தையும் பண்பாட்டையும் இரு கரத்தில் ஏந்தி உலக இருட்டுக்கு வெளிச்சத்தினை தந்த மொழியாகவும் இனமாகவும் தமிழர் இனமும் தமிழ் மொழியும் காணப்படுகின்றது.

குமரிக் கண்டத்தின் கலைகளையும் தொன்மையையும் ஒட்டி விளங்கும் அம்சங்களில் ஒன்று மலையக வாழ்வியலாகும். எனவே மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா என்பது எமது பண்பாட்டினதும் கலையினதும் வழிபாட்டினதும் ஆதார அம்சமாக அமைவதுடன் அடுத்த பரம்பரைக்கான கடத்தலாகவும் அமைகின்றது.

பழந்தமிழரின் தொன்மையையும், நாகரிக மாற்றத்தின் வாழ்வியலையும் நிதர்சனப்படுத்தும் இவ்விழாவின் மணி மகுடமாக மலரும் இவ்விதழ்; ஒரு ஆவணப் பெட்டகமாகவே கணிக்கப்பட வேண்டும் என்பது எனதெண்ணம்.

இம்மலரில் பதிந்துள்ள பதிப்புகளும், சாகித்திய விழாவின் கலை நிகழ்வுகளும் எமது மலையக வாழ்வியலின் குறுக்கு வெட்டுமுகமாக அமைந்திருப்பதனால், நவீனத்தின் மத்தியில் எப்படி எம் தனித்துவத்தினை பேணிக் கொள்வது என்பதற்கான ஓர் வழிகாட்டியாகவும் காணப்படுகின்றது.

"கனவுகள் மெய்ப்பட வேண்டின் காரியம் ஆற்றிட வேண்டும்", என்ற வகையில் பலரினது உணர்வுமிக்க உழைப்பில் உருவம் கண்டுள்ள 2017 ஆம் ஆண்டு மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவும், அதனையொட்டிய சாகித்திய விழா மலரும் சிறப்பாக நடைபெறவும், வெளிவரவும் மத்திய மாகாண இந்து கலாசார மற்றும் தமிழ் கல்விக்கு பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் எனது உளப்பூர்வமான வாழ்த்துக்களை எல்லாம் வல்ல இறைவனை வேண்டி பதிவிடுவதிலே பெருமிதமும், பேருவகையும் அடைகின்றேன்.

**மருதபாண்டி ராமேஸ்வரன்,**
அமைச்சர்.
மத்திய மாகாண விவசாய, சிறிய நீர்ப்பாசன, விலங்கு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி,
கமநல அபிவிருத்தி, நன்னீர் மீன்பிடி, இந்து கலாசாரம்,
தமிழ் கல்வி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



மத்திய மாகாண சபையின் விவசாய மற்றும் இந்து கலாசார அமைச்சு இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை ஏற்பாடு செய்து நடத்துகின்ற "மத்திய மாகாண சாகித்திய விழா" விற்கு இம்முறையும் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

பன்மைத் தேசிய மற்றும் மதச் சமூகத்தினர் வாழ்கின்ற இலங்கைச் சமூகத்தினுள் சமாதானத்துடன் வாழக்கூடிய சமூக விழுமியத்தினை எமது சமயம் மற்றும் கலாசாரத்தின் ஊடாகவே பெற்றுள்ளோம். எந்தவொரு சமயமும், கலாசாரமும் இந்தச் சமூகத்தின் நல் இருப்பிற்குத் தேவையான பழக்க வழக்கங்கள், ஆலோசனைகள், வழிகாட்டுதல்கள் என்பனவற்றை வழங்கியுள்ளதுடன் ஏனைய சமூகங்களுடன் நட்புறவுடன் வாழவேண்டியதன் தேவையையும் உறுதி செய்துள்ளது. மனித வாழ்வின் நல் இருப்பிற்கான ஓர் அற்புதமான காரணி கலாசாரமாகும். தற்போதைய சமூகப் பிரச்சினைகளின் முன் சகல இனங்களுக்குமுரிய கலாசாரங்கள் தொடர்ந்து நிலைத்திருப்பதனை உறுதி செய்தல் வேண்டும் என நான் நம்புகின்றேன். சமயம், இலக்கியம், வரலாறு, பழக்க வழக்கங்கள் ஊடாக கட்டி எழுப்பப்படுகின்ற கலாசாரமானது மானுடநேயம் மிக்க மனிதனை சமூகத்திற்கு உரித்தாக்குகின்றது. கலாசாரமே பொறுமை, இரசனை, பாராட்டுதல், மரியாதை செலுத்துதல், படைப்பாற்றல், தலைமைத்துவம் ஆகிய பண்புகளில் மனிதனை போஷிக்கின்றது.

இலங்கை மக்கட் சமூகத்தில் தமிழ் சமூகத்தினர் இந்து சமயத்தினதும், கலாசாரத்தினதும் கற்பித்தல், ஆலோசனை, வழிகாட்டல் என்பனவற்றிற்கேற்ப தத்தமது வாழ்க்கை முறையினை ஏனையோருக்கு பிரச்சினைகளற்ற வகையில் அகிம்சை ரீதியில் அமைத்துக் கொண்டு ஏனையோருடன் ஒற்றுமையுடனும், ஒருங்கிணைந்தும் வாழ்தலானது உலகச் சமூகத்திற்கு ஒரு முன்னுதாரணமாகும். தமிழ் சமூகத்தினரது இந்து சமயம் மற்றும் கலாசாரத்தின் அம்சங்களை தற்கால சந்ததியினர் கண்டறிவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் வகையிலும், வருங்கால தலைமுறையினரின் பொருட்டு பாதுகாத்து முன்னெடுத்துச் செல்லும் வகையிலும் மத்திய மாகாண விவசாய மற்றும் இந்து கலாசார அமைச்சர் கௌரவ எம்.ராமேஸ்வரன் அவர்கள் மற்றும் செயலாளர் உள்ளிட்ட ஆளணியினரால் ஏற்பாடு செய்யப்படுகின்ற "மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா" விற்கு எனது வாழ்த்துக்களை ஒன்று சேர்ப்பதுடன் இத்தகைய நல் முயற்சிகளை எதிர்வரும் காலங்களிலும் முன்னெடுப்பதற்கு வலிமையும் ஆற்றலும் கிடைத்திட பிரார்த்திக்கின்றேன்.

**L.D. நிமலசிரி**
தலைவர்,
மத்திய மாகாண சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழாக்குழுத் தலைவரது வாழ்த்துச் செய்தி



இலங்கைத் திருநாட்டிலே நமது சுய அடையாளத்தையும் கலாசாரப் பண்புகளையும் தக்கவைத்துப் பேணி, ஒரு சமூகமாகக் கூடி வாழ்ந்து வருகின்ற வல்லமையை இன்று நாம் பெற்றுள்ளோம். சற்றேறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களால் தென்னிந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட உழைப்பு - கோப்பித் தோட்டத் தொழிலாளர்களாகவும் பின்னாளில் தேயிலை, இறப்பர் தோட்டத் தொழிலாளர்களாவும் எமது முன்னோரை அடையாளப்படுத்தி வந்துள்ளது. தேயிலைத் தோட்டங்களாலும் இறப்பர் தோட்டங்களாலும் சூழப்பட்ட தீவுகளிலே ஒடுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்டு இன்னும் தேசிய நீரோடையிலிருந்தும் தனிமைப்படுத்தப்பட்ட நிலைமையிலும் ஒரு சமூகமாகக் கூடிவாழ்ந்து வருவதற்கான தகவை எமது முன்னோர்கள் எமக்கு ஏற்படுத்தித் தந்திருக்கின்றார்கள். இதற்காக அவர்கள் மேற்கொண்ட தியாகமும் அர்ப்பணிப்பும் முயற்சியும் உழைப்பும் அளவிடக்கரியனவாகும்.

தோட்டங்களிலே அடைபட்டும் உழைப்பும் சுரண்டப்பட்ட நிலைமையிலே வாழ்ந்து கொண்டு ஆரம்பக் கல்வியையேனும் பெறுவதற்கு போராட்டம் நடத்த வேண்டிய நிலையிலிருந்த எமது பெருந்தோட்ட தமிழ் மக்களின் பிள்ளைகள் இன்று பல்கலைக்கழகங்களிலே உயர்கல்வி வசதிகளைப் பெறுவதற்காக போராட்டம் நடத்த வேண்டிய நிலையிலிருக்கின்றார்கள். 1945களில் வாக்குரிமையும் குடியுரிமையும் பறிக்கப்பட்டு, நாடற்றவர்களாகவும் ஆக்கப்பட்ட ஒரு சமூகம் தேசிய நீரோடையில் தனித்துவத்தைப் பேணியவாறு சங்கமித்துள்ளது. இதனால் பாராளுமன்றத்திலும் மாகாணசபைகளிலும் பிரதேச சபைகளிலும் இன்னும் நகரசபை, மாநகரசபைகளிலும் நாம் நமது பிரதிநிதிகளை தெரிவு செய்து கொள்கின்ற நிலைமையைப் பெற்றுள்ளோம். பெருந்தோட்ட தமிழ்ச் சமூகமும் நிலைமாற்றம் அடைந்துள்ளது. ஆதலாலேயே எமது தமிழ்க் கலாசாரப் பாரம்பரிய அம்சங்களைப் பேணிப் பாதுகாக்கவும் அதனை அரச விழாவாக ஊர் கூடி கொண்டாடவும் வழியேற்பட்டிருக்கின்றது.

இலக்கண வரம்பு கண்டு இலக்கிய வளம் படைத்த நமது தமிழ் அன்னைக்கு எடுக்கின்ற சாகித்திய விழாவுக்கு, விழாக்குழுத் தலைவர் என்ற வகையிலே வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். பன்னெடுங் காலமாக தமிழ்க் கலையும் கலாசாரமும் திறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையாது, சீர்மை மேவியது போலவே இனிவரும் காலமெல்லாம் தமிழிலக்கியமும் தமிழர் வாழ்வும் செழித்தோங்க நாம் அயராது உழைக்க வேண்டும். மேலும், தமிழ்க் கலாசாரப் பண்புகள் அதன் செறிவு குன்றாது இளஞ்சமூகத்தினர்க்கு ஊடுகடத்தப்பட வேண்டியதும் அவசியமானதாகும்.

"அறிவு பெருக்கி, ஆற்றல் மிகுவோம்" எனுந்தொனிப் பொருளிலே இவ்வருட மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா அனைவரினதும் குறிப்பாக பாடசாலை மாணவர், பொதுமக்கள் பங்களிப்புடனும் ஒத்துழைப்புடனும் அரச விழாவாக நடைபெறவுள்ளது. இதனை சாத்தியமாக்கிய கௌரவ அமைச்சர் எம். ராமேஸ்வரன் அவர்களுக்கும் எனது சக கௌரவத்திற்குரிய மாகாணசபை உறுப்பினர்களுக்கும் அரச அதிகாரிகள் குறிப்பாக கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர் பெருமக்கள், ஆசிரியர் ஆலோசகர்கள் இன்னும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினர்க்கும் எனது நன்றியறிதலை இத்தருணத்திலே தெரிவித்துக் கொள்வதில் உளமார மகிழ்ச்சியடைகின்றேன்.

மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா வெற்றிகரமாக நடைபெற்று, அதன் நற்பயன்கள் யாவும் சமூகத்தைச் சென்றடைய வேண்டுமென அப்பொருளைப் பிரார்த்தித்து, வாழ்த்துகிறேன்.

மனநிறைந்த நல்லாசிகளுடனும் வாழ்த்துக்களுடனும்,

பழனி சக்திவேல்
விழாக்குழுத் தலைவர்
மத்திய மாகாண சபை உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



தமிழ், கலை கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் பண்பாட்டு அம்சங்களை பேணி பாதுகாக்கும் வகையில் எமது அமைச்சின் ஏற்பாட்டில் எழில் கொஞ்சும் நுவரெலியா நகரில் ஒக்டோபர் மாதம் 7ம், 8ம் திகதிகளில் நடைபெறும் மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவிற்கு இணையாக வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதனையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நாட்டின் ஐக்கியத்திற்கு பாலம் அமைக்கும் இவ்வாறான விழாக்கள் எமது தாயகத்தை முன்னேற்றப் பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்கு வழிவகுக்கும் என்பது திண்ணமாகும்.

தமிழ் மக்களின் கலை, இலக்கிய, கலாசார துறைகளின் அபிவிருத்திக்காக உழைப்பையும் காலத்தையும் அறிவையும் வழங்கும் கலைஞர்களுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் வழங்குவதற்காகவும் தமிழர்களின் பாரம்பரிய கலை, கலாசார உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் அக்கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டு சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்குவதற்காகவும் தமிழ் சாகித்திய விழா நடத்தப்படுகின்றது.

இயந்திரமயமான உலகில் கால் பதித்துவிட்ட நமது மாணவ மற்றும் இளைஞர் சமுதாயம் தமது பாரம்பரியத்தையும் தனித்துவத்தையும் இழந்துவரும் இன்றைய காலகட்டத்தில் இத்தகைய கலாசார நிகழ்வுகள் "வாடிய பயிருக்கு வான்மழையாக" அமைகின்றது எனில் அது மிகையாகாது.

மத்திய மாகாண விவசாய, சிறிய நீர்ப்பாசன,விலங்கு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, கமநல அபிவிருத்தி, நன்னீர் மீன்பிடி, இந்து கலாசாரம், தமிழ் கல்வி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினால் முன்னெடுக்கப்படும் இவ்வாறான காத்திரமான முயற்சிகள் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவையாகும். இன, மத பேதம் கடந்த சமத்துவமான மலையகத்தினை கட்டியெழுப்பும் முயற்சியாக இத்தகைய விழாக்கள் எதிர்காலத்திலும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எனது பேரவாவாகும்.

மேலும் இவ்விழா சிறப்புற அமைய எனது நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இதற்காக முன்னின்று உழைத்த அனைவருக்கும் பாராட்டுக்களையும், நன்றிகளையும் உரித்தாக்குகின்றேன்.

**R.M.P.S. ரத்நாயக்க,**
செயலாளர்,
விவசாய, சிறிய நீர்ப்பாசன மற்றும் இந்து கலாசார அமைச்சு,
மத்திய மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தமிழ் சாகித்திய விழா இவ்வருடம் ஒக்டோபர் மாதம் 7ம்,8ம் திகதிகளில் நடைபெறவிருப்பதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். அதற்கு இணையாக வெளியிடப்படுகின்ற சாகித்திய விழா சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் நான் மிகவும் பெருமிதம் கொள்கின்றேன்.

கலை எனப்படுவது ஒரு நாட்டு மக்களின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் ஒன்றாகும். இது எமது அன்றாட வாழ்வில் சாந்தியையும், சமாதானத்தையும் தரக்கூடிய ஒன்றாகும். இக் கலையானது தமிழ் மக்களின் உணர்வுகளில் தழைத்தோங்கிக் காணப்படுகின்றது. இதன் ஒரு வெளிப்பாடாகவும் எமது பாரம்பரிய கலையம்சங்களை பாதுகாப்பதற்கும் வாய்ப்பாக அமையக்கூடிய மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவில் கலைஞர்கள், எழுத்தாளர்கள் என்போரை கௌரவிப்பதும் கூட ஒரு கலையம்சமாக இருப்பதை எண்ணி நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அத்தோடு இளம் இலக்கிய ஆர்வலர்களை ஊக்கப்படுத்துவதோடு, மேலும் பல தரமான இலக்கியப் படைப்புகள் எதிர் காலத்திலே வெளிவருவதற்கான திடமான அடித்தளத்தையும் இவ்வாறான நிகழ்வுகள் ஏற்படுத்தியுள்ளமை சிறப்பம்சமாகும்.

மேலும் இப்பொன் நிகழ்வு இம்முறை நுவரெலியா மாநகரில் நடைபெறுவது மலையக சமுதாயம் மட்டுமன்றி ஒட்டுமொத்த தமிழினமே பெருமைப்படும் ஒரு நிகழ்வாக அமைந்துள்ளது என்பதில் எவ்வித ஐயப்பாடும் எனக்கு இல்லை. அந்தவகையில் இவ்விழா மிகச் சிறப்பாக வெற்றி பெற வேண்டுமென்றும், எமது நாட்டில் மலையகத்தின் பாரம்பரிய, கலை, கலாசாரங்கள் தழைத்தோங்கி இன்னும் சிறப்புற வேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து மனதார வாழ்த்துகின்றேன்.

**திருமதி. ஏ. ஆர். சத்தியேந்திரா,**
உதவி செயலாளர் தமிழ்ப்பிரிவு,
மத்திய மாகாண கல்வி அமைச்சு,
கெட்டம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



மத்திய மாகாண இந்து கலாசார, தமிழ்க்கல்வி அமைச்சு அன்னைத் தமிழை அணி செய்யும் வகையிலே மாகாண சாகித்திய விழாவை நடாத்துவதையிட்டு பெருமையடைகின்றோம். அத்துடன் இவ்விழாவினை மேலும் மெருகூட்டுவதற்காக வெளியிடப்படுகின்றதமிழ் சாகித்திய விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ்த்தாயின் புகழை தரணியெங்கும் பரப்ப வேண்டும், இளைய தலைமுறை சங்கம் வளர்த்த தமிழின் அருமை பெருமைகளை அறிய வேண்டும், மொழிகளிலே இலக்கியச் செறிவு மிக்க மொழி எம் தமிழ் மொழியே என்பதை பாமரனும் அறிய வேண்டும் என்ற நன்நோக்குகளை கருத்திற் கொண்டு ஈராண்டுக்கொருமுறை தமிழ் சாகித்திய விழாவை தவறாது நடாத்தி வருவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

இவ்வாறு நடாத்தப்படும் தமிழ் சாகித்திய விழாவானது ஓரிடத்தை மையப்படுத்தாது மாகாணம் தழுவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பல்வேறு இடங்களில் நடத்தப்படுவது சிறப்பம்சமாகும். தமிழ் சாகித்திய விழாவின் பெருமையை சகல மக்களும் அறிந்து கொள்வதற்கு கிடைக்கும் வாய்ப்பானது ஓர் வரப்பிரசாதமாகும்.

அந்தவகையில் மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவினை முன்னின்று நடாத்துகின்ற கௌரவ அமைச்சர் எம்.ராமேஸ்வரன், அமைச்சின் செயலாளர் திரு.R.M.P.S. ரத்நாயக்க உள்ளிட்ட அனைத்து விழாக்குழு உறுப்பினர்களுக்கும் மற்றும் சாகித்திய விழா மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் எமது சமூகத்தின் சார்பாக பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதமடைகிறேன்.

விழா சிறப்பாக நடந்தேற நல்வாழ்த்துக்கள்.

**P.S. சதீஸ்**
மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



நுவரெலியா மாநகரிலே ஒக்டோபர் 7ம், 8ம் திகதிகளில், மத்திய மாகாண இந்து கலாசார, தமிழ் கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவின் சிறப்பு மலர் இவ்வருடமும் வெளியிடப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மிகநெடுங்காலம் தொட்டு நாட்டின் வருமானத்திற்கு முதுகெலும்பாக விளங்கும் இந்திய வம்சாவளி மக்கள் பெரும்பான்மையாக வாழும் நுவரெலியா மாநகரிலே மிகவும் கோலாகலமாக நடைபெறும் இவ்விழாவானது எமது சமூகத்தின் கலை, கலாசார பாரம்பரியங்களை முன்னெடுத்துச் செல்லவும், எதிர்கால சமூகத்தினரின் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் அவற்றை பேணிப் பாதுகாக்கவும் துணைபுரியும் என்பதுடன் மலையக இலக்கியத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

மாற்றமடைந்துவரும் இன்றைய நவீன உலகத்தில் எங்களுடைய சமூகத்தின் பெருமைமிக்க பாரம்பரியத்தினை நினைவு கூறுவதற்கும், தமிழ்க் கூறுகின்ற நல்லுலகில் மலையக இலக்கியம் அடையாளமிடப்படுவதற்கும், நாட்டின் தமிழ்க் கலாசார இலக்கியங்களை வளர்ப்பதற்கும் இவ்வாறான விழாக்கள் உந்து சக்தியாக அமைகின்றன என்றால் அது மிகையாகாது.

எங்கள் பாரம்பரிய கலாசாரங்களை நினைவுகூர்ந்து எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துகாட்டாகவும் முன்மாதிரியாகவும் அமையும் மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்று, அது எமது சமூகத்தின் நிலைப்பிற்கு வழிவகுக்க வேண்டுமென நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**திருமதி. கிருஸ்ணவேணி ரட்ணகுமார்**,
கலாசார உத்தியோகத்தர்,
மத்திய மாகாண இந்து, கலாசார அமைச்சு,
கெட்டம்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் வாழ்த்துச் செய்தி



இயற்கை எழில் நிறைந்த இலங்கை திருநாட்டின் மலையத்தின் தமிழ் வளம் நிறைந்த நுவரெலியா மாநகரில் இவ்வருடம் நடைபெறவிருக்கும் மத்தியமாகாண தமிழ் சாகித்திய விழாவினை முன்னிட்டு சிறப்பு மலர் வெளிவருவது யாவரும் அறிந்ததே. அவ்வகையில் இவ்வருடம் வெளிவரும் சிறப்பு மலரின் ஆசிரியர் என்ற வகையில் எனது வாழ்த்துக்களை பதிவு செய்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இலக்கியப் படைப்புகள் ஒரு சமூகத்தின் வாழ்வியல் நடத்தை கோலங்களை காலத்தின் வளர்ச்சிக்கேற்பவும், காலத்தின் கலை, பண்பாட்டு மாற்றங்களுக்கு இசைந்தாற் போலவும் யதார்த்த சிந்தனைகளையும், உணர்வுகளையும், எழுச்சிகளையும் பிரதிபலிப்பதாகவே அமைந்திருக்கின்றன.

இந்தவகையில் மலையகச் சமூகத்தின் தனித்துவமான அடையாளங்கள், பாரம்பரிய நிகழ்வுகள், மரபுகள் என்பவற்றைக் கொண்டுள்ள இந்திய வம்சாவளி தமிழர்களின் வாழ்வியலானது பன்நெடுங்காலமாக பல்வேறு அடையாளங்களையும், பண்பாட்டு அம்சங்களையும் தன்னகத்தே கொண்டதோர் பாரம்பரிய இனக்குழுவாக இந்நாட்டில் இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகின்றது.

மேலும் மலையக மக்கள் என்ற தனிச்சிறப்புடன் தமக்கேயுரிய பாரம்பரிய கலையம்சங்களையும், இலக்கியப் படைப்புக்களையும் காலத்தின் தேவை கருதியும் சமூகத்தின் பரிணாம வளர்ச்சிக்கேற்பவும் வளர்த்து வந்துள்ளார்கள் என்றால் அது மிகையாகாது.

தமிழ் சாகித்திய விழாவினை மெருகூட்டும் வகையிலே பிரசுரிக்கப்படுகின்ற சாகித்திய விழா சிறப்பு மலரிலே தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ள இக்காலத்திலும் எமது சமூகத்தைச் சேர்ந்த மூத்த கல்விமான்களினதும், வளர்ந்து வருகின்ற கல்வித்துறைச் சார்ந்தவர்களினதும், சமூக ஆய்வாளர்களினதும், இலக்கியப் படைப்பாளிகளினதும், மாணவர்களினதும் ஆக்கங்களையும், கட்டுரைகளையும் உள்ளடக்கியதாக வெளிவருவது இச்சமூகத்தின் வளர்ச்சிப்பாதையில் ஒரு மைல்கல்லாக விளங்குகின்றது.

எமது வேண்டுகோளை ஏற்று மலருக்கான வாழ்த்துச் செய்திகளையும், தரமான கட்டுரைகளையும், ஆக்கங்களையும் தந்துதவிய அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அத்தோடு இம்மலராக்க செயற்பாட்டில் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மலையகத் தமிழ் சாகித்திய விழா சிறப்பாக அமைய பிரார்த்திப்பதுடன், நல்வாழ்த்துக்களையும் உரித்தாக்குகின்றேன்.

**திரு. எம்.பீ. சந்திரசேகரன்,**
உதவி கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி காரியாலயம்,
வத்தேகம.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரில்

"அறிவு பெருக்கி ஆற்றல் மிகுவோம்"


**வாழ்த்தியல்**

**I.** மலைய மக்களின் சமூக அடையாளம் குறித்து :

1. மலையக மக்கள் சமூகம் : பலமும் பலவீனமும் 01-05

2. மலையக மக்களும் சமூக குடியுரிமையின் நிலையும் 06-12

3. அரச தோட்டங்களும் மலையக மக்களின் இருப்பு பற்றிய பிரச்சினையும் 13-18

4. தென்னிலங்கையில் வாழும் மலையகத் தமிழரிடையே மாறிவரும் சமூக, கலாசார, அரசியல், அடையாளங்கள் 19-25

5. மலையகத்தின் நிலச்சரிவு இடர்மிக்க பகுதிகளில் பாதுகாப்பாக வாழ்வதற்கான கலாசாரத்தினை கட்டியெழுப்புதல் 26-30

**II. மலையக மக்களின் கல்வி குறித்து:**

6. மலையகச் சிறுகதைகளில் கல்வி உரிமைக்கான பிரக்ஞைகள் 31-36

7. 21ம் நூற்றாண்டில் வாழ்க்கை நீடித்த கல்வி 37-39

**III. மலையகக் கலை, இலக்கியம் குறித்து :**

8. காமன் கூத்தின் கலையம்சங்கள் 40-44

9. மீனாட்சியம்மாள் நடேசய்யர் 45-51

10. முனியாண்டியும் சமகால வெளியீடுகளும் 52-56

11. மலையக நாட்டுபுறவியலும் நிகழ்த்துக்கலைகளும் 57-60

12. வாழிய என் மொழியே 61

13. மலையகத்தின் முதல் சிறுகதைத் தொகுப்பு 62-65

14. நாட்டுப்புற இலக்கியமும் அதன் செழுமையும் 66-68

**IV. இதழியலின் எதிர்காலம் குறித்து :**

15. நவீன தொழில்நுட்பம் இதழியலை காப்பாற்றுமா? 69-71

**V. ஆக்கவியல்**

16. யார் நாம் 72

17. தந்தையும் ஒரு தெய்வம் 73-76

18. தொலைந்த வானம் 77-78

19. மனித வாழ்வில் வரங்களும் சாபங்களும் 79-80




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்கள் - சமூகம் : பலமும் பலவீனங்களும்

பேராசிரியர் சோ.சந்திரசேகரம்

மலையக மக்களின் சமூக, பொருளாதார, கல்வி, கலாசார மேம்பாடு பற்றிய செயற்றிட்டங்களையும் அவற்றுக்கான கொள்கைகளையும் வகுக்கும் போது இன்றைய நிலையில் அவர்களுடைய பலம், பலவீனங்கள், வாய்ப்புக்கள் பற்றிச் சிந்திப்பது முக்கியமானது. இன்று பொதுவாகவே, திட்டமிடல் செயற்பாட்டில் இவ்வாறான ஒரு அணுகுமுறை கையாளப்படுகின்றது. இவ்விடயம் பற்றி ஆராயும் போது பலதரப்பட்டவரின் சிந்தனைகளும் பங்களிப்பும் அவசியமாகின்றது. தனியொருவராக இத்தகைய பயிற்சியில் கட்டுரையாளர் ஈடுபட்டு முழுமையாக சகலவற்றையும் இனங்காண முடியும். ஆயினும் இவ்வாறான ஒரு பணியைச் செய்ய ஒரு தளத்தை இக்கட்டுரை வழங்கும் எனக் கருதுகின்றோம்.

**பின்புலம்**

1950 களில் அல்லது 1960 களில் இருந்த மலையகச் சமூகத்தில் இற்றை வரை பல மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதை மறுக்க முடியாது. எல்லா சமூகங்களுமே எப்போதும் தேங்கி நிற்பதில்லை. என்பது ஒரு சமூகவியல் விதி. சமூகத்தின் உறுதிப்பாட்டைப் பேண அதன் விழுமியங்கள், கலாசாரம், நம்பிக்கைகள் என்பன அப்படியே பேணப்படல் வேண்டும். எனவே சமூகமானது தன்னை அப்படியே பேணிக் கொள்ள தனது விழுமியங்களையும் கலாசாரத்தையும் அப்படியே குடும்பங்களினூடாகவும் கல்வி ஏற்பாடுகளினூடாகவும் இளந் தலைமுறையினரிடம் வழங்க வேண்டும். இல்லாவிடில் சமூகம் பல நெருக்கடிகளுக்கும் பதற்றத்துக்கும் உள்ளாகி, உறுதிப்பாடின்மைக்கு இட்டுச்செல்லும் எனப் பல சமூகவியலாளர்கள் (Emali Durkhim and Talcot Parsons) தெரிவித்தனர். இவர்களுடைய இந்த சமூகத்தேக்கம் பற்றிய கருத்து பின்னர் கைவிடப்பட்டு, சமூகம் என்பது கால ஓட்டத்தில் மாறிச்செல்வது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இப்பின்புலத்தில், காலங்காலமாக சகல துறைகளிலும் பின்தங்கியிருந்த மலையக சமூகத்தில் பல மாற்றங்களை அடையாளங்காண முடிந்தது. அம்மாற்றங்கள் அவர்களுக்குப் பல்வேறு வகையான பலமான அம்சங்களைத் தந்தவிடத்து ஒரு பின்தங்கியுள்ள சமூகத்திற்குரிய பலவீனங்களையும் அவதானிக்க முடிகின்றது. பலமான அம்சங்கள், ஒரு சமூகம் முன்னேறிச் செல்வதற்கான ஒரு அடிப்படைத்தளத்தையும் உந்து சக்தியையும் வழங்குகின்றன என்பதில் ஐயமில்லை. பலவீனமான அம்சங்கள் எங்கெங்கே மேம்பாட்டுக்கென வேலைத்திட்டங்கள் தேவை என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. வாய்ப்புகள் என்ற அம்சம் மலையக மக்களுக்கு உள்ள எதிர்கால முன்னேற்றத்துக்கான சந்தர்ப்பங்களைச் சுட்டிக்காட்டுகின்றன. நான்காவதாக உள்ள 'ஆபத்துக்கள்' என்ற அம்சம் அவை பற்றி எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.

**பலமான அம்சங்கள்**

தனித்துவமான இனக்குழு

இந்திய வம்சாவளித் தமிழரான மலையக மக்கள் இந்நாட்டில் ஏறத்தாழ 200 ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். எவ்வாறாயினும் பெருமளவுக்குத் தமது மொழி, கலாசார மரபுகளைக் கைவிடாது தனித்துவமான ஒரு தேசிய இனமாக வாழ்ந்து வருவது ஒரு வலுவான அம்சமாகும். எங்காவது அவர்கள் தமது தனித்துவத்தைப் பேணிக் கொண்டனர்? அதற்கான காரணங்கள் என்ன? என்பவையெல்லாம் தனித்து ஆராயப்பட வேண்டிய விடயங்கள்.

இவ்வாறான நிலைமைக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. இன்று தேசிய ரீதியான பல பிரச்சினைகள் (உதாரணமாக வாழ்க்கைத்தரம், வேலையின்மை மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள்) இருந்தாலும் மக்கள் தமது இனக்குழுவினருக்குரிய விசேடமான பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திக்கின்றனர். அதற்காகவே போராட்டங்களையும் நடத்துகின்றனர். ஒரு தனித்துவமான இனக்குழுவினர்களாக இருப்பதால் அவர்கள் தமது குடியுரிமை, வாக்குரிமை, வீட்டுவசதிகள், சம்பள உயர்வு போன்ற பிரச்சினைகளில் ஒன்றுபட்டுப் போராட முடிந்தது. இம்மக்களின் பிரச்சினைகளையும் அரசாங்கம் செவிமடுக்க வேண்டியிருந்தது. இந்த அடிப்படையில் குடியுரிமைப் பிரச்சினை படிப்படியாகத் தீர்க்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு நிறுவப்பட்டது. கல்வியியல் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, தொண்டமான் தொழில்நுட்ப நிறுவனம் என்பன அமைக்கப்பட்டன. சுமார் 10000 ஆசிரியர்களும், பல கல்வி அதிகாரிகளும், அதிபர்களும் பணிபுரிகின்றனர். மலையக மக்களுக்கென்று ஒரு பல்கலைக்கழகம் தேவை என்ற கோரிக்கையும், வீட்டுவசதி, ஏழு பேர்ச் காணி மற்றும் பலவற்றைக் கூறலாம். இவற்றுக்கு இம்மக்கள் ஒரு தனித்துவமான இனமாகத் தம்மை அடையாளப்படுத்தியிருப்பது ஒரு முக்கிய காரணமாகும்.

அரசியல் யாப்புச் சீர்திருத்த யோசனைகளை இம்மக்களின் பிரதிநிதிகள் முன்வைத்தபோது பிரதேச தொடர்பற்ற இம்மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாட்டில் அக்கறை செலுத்தினர். இன்றும் கூட மலையக மக்கள் செறிந்து வாழும் நுவரெலியா போன்ற மாவட்டங்களில் மேலதிகமான உள்ளுராட்சி சபைகள், பிரதேச சபைகள் என்பவற்றை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு அவற்றில் வெற்றியும் கண்டு வருகின்றனர்.

மலையக மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு அவர்கள் தமது அடையாளங்களைப் பேணி, தனித்துவமான ஒரு இனக்குழுவினராக வாழ்ந்து வருவதே காரணமாகும். இன்று மட்டுமில்லாது என்றென்றும் அவர்கள் தமது மொழி, கலாசாரத்தைத் தொடர்ந்து பேணும் வகையில் உணர்வுடன் செயற்பட வேண்டிய அவசியமும் உண்டு.

## குடியுரிமையும் வாக்குரிமையும்

1948 இல் கொண்டு வரப்பட்ட குடியுரிமை மற்றும் வாக்குரிமைச் சட்டங்களின் படி தமது உரிமைகளை இழந்த மக்கள் (ஏறத்தாழ 15 இலட்சம்) இன்று அவ்வுரிமைகளைப் பெற்று வாழ்வது ஒரு வலுவான அம்சமாகும். இதனால் காலப்போக்கில் அவர்கள் தேசிய நீரோட்டத்துடன் இணைந்து கொள்ள முடிந்தது. இந்திய வம்சாவளியினரான அவர்கள் இன்று தம்மை இலங்கைத்தமிழர் என்றே அழைத்துக்கொள்ள விரும்புகின்றனர். இதன் காரணமாக 2011 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி இந்தியர்களின் விகிதாசாரம் 5 வீதமாக வீழ்ச்சி பெற்றுள்ளது. மலையக மக்கள் தொகை ஆய்வாளர்கள் (அ.சந்திரபோஸ், ச. விஜயசந்திரன்) இந்தியர்கள் 7.5% (15 இலட்சம் பேர்) என மதிப்பீடு செய்துள்ளனர்.

குடியுரிமை காரணமாக இன்று அவர்கள் தமது கல்வி உரிமை, வீட்டுவசதி உரிமை, வீட்டுரிமை, உள்ளூர் மட்டத்தில் தம்மைத்தாமே ஆளுகின்ற உரிமை என்பவற்றை கோரிக்கைகளாக முன்வைக்கின்றனர். குடியுரிமை பெற்ற மக்கள் என்ற முறையில் எக்கட்சி அரசாங்கமாயினும் அவற்றை செவிமடுக்க வேண்டியுள்ளது.

## அரசியல் பிரதிநிதித்துவம்

1947 ஆம் ஆண்டு தேர்தலில் ஏழு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளர்கள் வெற்றி பெற்றுப் பாராளுமன்றம் சென்றனர். மலையக மக்கள் குடியுரிமையையும் வாக்குரிமையையும் இழக்க நேரிட்டமையால் 1977 தேர்தல் வரை, 30 ஆண்டுகளாக ஒரு மலையக உறுப்பினரும் தெரிவு செய்யப்படவில்லை. இடைக்காலத்தில் சௌமியமூர்த்தி தொண்டமான், ஏ.அசீஸ் போன்றவர்கள் நியமன உறுப்பினர்களாகவே பணியாற்றினர். ஆனால் காலப்போக்கில் பாராளுமன்றத்தில் அவர்களுடைய பிரதிநிதித்துவம் அதிகரித்தது. கடந்த காலங்களில் தலைவர்கள் சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான், பெ.சந்திரசேகரன் ஆகியோர் மந்திரிசபை உறுப்பினர்களாக பணியாற்றினர். இன்று ப.திகாம்பரம், மனோ கணேசன் ஆகியோர் மந்திரிசபை அமைச்சர்களாகவும் வே.இராதகிருஸ்ணன் கல்வி இராஜாங்க அமைச்சராகவும் பணியாற்றுகின்றனர். இவ்வாறான பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தின் அதிகரிப்பும் மலையக மக்களைப் பொறுத்தவரையில் ஒரு பலமான அம்சமாகும்.

அவ்வாறே 1987 இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் விளைவாக அமைக்கப்பட்ட மாகாண சபைகள் (மத்திய, ஊவா மாகாண சபைகள்) மற்றும் பிரதேச சபைகள், உள்ளுராட்சி சபைகள் என்பவற்றில் மலையக மக்களின் பிரதிநிதிகள் இருப்பது ஒரு பலமான அம்சமாகும். மலையக மாகாண சபைகளில் இப்பிரதிநிதிகள் வேறு சில பொறுப்புக்களுடன் தமிழ் கல்வி அமைச்சர்களாகவும் பதவி வகிப்பது இன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நடைமுறையாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான அரசியல் பிரதிநிதித்துவமும் அமைச்சு பதவிகளும் மலையக மக்களுக்கு ஓர் இனக்குழுவினர் என்ற முறையில் ஒரு கௌரவத்தையும் அங்கீகாரத்தையும் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். அமைச்சுப் பதவியை வகித்தவர்கள் மலையக மக்களுடன் நேரடித் தொடர்புடைய விடயங்களுடன் (உதாரணமாக, தோட்ட உட்கட்மைப்பு, தமிழ்கல்வி) மட்டுமன்றி தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அமைச்சர்களாகவும் இருந்தனர், இருந்தும் வருகின்றனர். ஆறுமுகன் தொண்டமான், வீட்டு வசதிகள் அமைச்சராக இருந்துள்ளார். மனோ கணேசன் தேசிய கலந்துரையாடல், சகவாழ்வு, அரசகரும மொழிகள் அமைச்சராகப் பணியாற்றுகின்றார். ஒரு முறை மு.சச்சிதானந்தன் பாராளுமன்றத்தில் துணை சபாநாயகராகவும் பணியாற்றியுள்ளார்.

இத்தகைய அரசியல் பிரதிநிதித்துவம் தேசிய அரசியலில் அவர்களுடைய அரசியல் செல்வாக்கையும் பலத்தையும் பிரதிபலிக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் அரசாங்கமொன்று அமைக்கப்படவும் இப்பிரதிநிதிகள் உதவியிருக்கின்றார்கள். இதனால் தலைவர் தொண்டமானுக்கும் 'கிங்மேக்கர்' என்ற ஒரு பட்டமும் உண்டு.

**கல்வி நிறுவனங்கள்**

வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் தமிழர் கல்விக்குப் பொறுப்பான தமிழ் அமைச்சர்கள் இருப்பது 13 ஆம் யாப்புச் சீர்திருத்தத்தின் விளைவு என்பதால் அதனையும் ஒரு சாதகமான அம்சமாகவே கொள்ள வேண்டும். இது ஒரு வகையான நிறுவன அமைப்பாகவே கொள்ள வேண்டும். அவ்வாறே கல்வித்துறைக்குப் பொறுப்பான மாகாணப் பணிப்பாளர்கள், வலயத்திலும் கோட்டத்திலும் பணியாற்றும் பணிப்பாளர்கள் தமிழர்களாக இருப்பதும் சாதகமான அம்சமேயாகும். பிரதானமாக தமிழ்மொழிவழிப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மொழிப்பிரச்சினையின்றி மேல் மட்டத்துடன் இலகுவாகத் தொடர்புகொள்ள இந்த ஏற்பாடுகள் உதவும்.

அவ்வாறே இன்று மலையத்தில் உள்ள தமிழ்மொழிப் பாடசாலைகளையும் கொள்ள வேண்டும். பெரும்பான்மையினருடன் கலந்து பயிலும் பாடசாலைகள் ஒரு சில மட்டும் நகர்ப்புறங்களில் உண்டு (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம் - 29 பாடசாலைகள் - 2007) மலையகத்தில் இன்று 21 1AB பாடசாலைகளும் நூற்றுக்கணக்கில் 1C பாடசாலைகளும் கணிசமான க.பொ.த உயர்தர மாணவர்களும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை முறைமைக்கு அப்பால் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி, கொட்டகலை அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, தொண்டமான் தொழில்நுட்ப நிறுவனம் போன்றவை முக்கியத்துவம் வாய்ந்த மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களாகும். 1960, 1970 களில் மலையகத்தில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சிபெற கோப்பாய், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இருந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டியிருந்தது. இன்று மலையகத்தின் மையப்பகுதியில் இவ்வாறான மூன்று நிறுவனங்களுடன் திறந்த பல்கலைக்கழகக் கிளையொன்றும் அமைந்திருப்பது ஒரு பலம், நல்ல வாய்ப்பு என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

இந்நிறுவனங்கள் மூன்றாம் நிலைக் கல்விக்கான ஒரு உந்துதலையும் உத்வேகத்தையும் இளைஞர்களுக்கு வழங்கக்கூடியவை. இவை அமைக்கப்பட்டதன் பின்புலத்தை நோக்குமிடத்து இப்பகுதி மக்களின் கல்வி மேம்பாட்டுக்காக சௌமியமூர்த்தி தொண்டமானின் முயற்சியில் அரசாங்கம் மற்றும் வெளிநாட்டு ஆதரவுடன் இவை அமைக்கப்பட்டன. ஜேர்மனி, நோர்வே, சுவீடன் முதலிய நாடுகளின் பங்களிப்பு சிலவற்றின் உருவாக்கத்தில் இருந்தது.

மற்றொரு சிறப்பு அம்சம், இந்நூற்றாண்டின் முதலாம் தசாப்தத்தில் மலையக மக்களின் இன, கலாசார அடையாளத்துடன் ஒரு மலையகப் பல்கலைக்கழகத்தை அமைக்கும் முயற்சியும் ஒரு புறம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பது தான். தமிழகத்தின் அழகப்பா பல்கலைகழகக் கற்கை நெறிகள் அண்மையில் ஹட்டன் நகரில் நடாத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான 'பலமான' அம்சங்கள் பற்றி மலையகக் கல்விமான்கள் குழுவொன்று ஆராய்ந்து, செம்மைப்படுத்தி ஒரு முழுமையான ஆவணத்தைத் தயாரிக்க வேண்டிய அவசியத்தை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்துகின்றோம். கீழே தரப்பட்டுள்ள பலவீனங்களுக்கும் இக்கூற்று பொருந்தும்.

**பலவீனங்கள்**

1. **சமூகத்தின் புலம்பெயர்வு:** 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் இந்நாட்டில் நிரந்தரமாகக் குடியேறிய மலையக மக்கள், காலப்போக்கில் சிதறுண்ட சமூகமாக மாறினர். 1948 இல் குடியுரிமை இழந்த மக்களை மீண்டும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பும் பணியில் ஈடுபட்ட சிறிமாவோ அரசாங்கம் இரு ஒப்பந்தங்களின் மூலம் (1964, 1970) அதனைச் செய்தது. இதனால் முதலாவது ஒப்பந்தத்தின்படி 525000 மலையக மக்களையும் அவர்களுடைய அதிகரிப்பையும் இந்தியா ஏற்றுக்கொண்டது. 1981 அளவில் 500,000 பேர் இந்தியக்குடியுரிமையைப் பெற்றனர். 375000 பேர் இந்தியா திரும்பினர். எவ்வாறாயினும், மலையகப் பகுதியில் நிகழ்ந்த இன ரீதியான வன்செயல்களைத் தொடர்ந்து (1958, 1977, 1983) பல்லாயிரக்கணக்கானோர் வடபகுதிக்குச் சென்று குடியேறினர். தற்போது அவர்கள் தொகை 2 - 3 இலட்சமாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது. அத்துடன் இந்த வன்செயல்கள் காரணமாக தமது இந்தியத் தொடர்புகளைப் புதுப்பித்து கொண்ட பலர் தாமாகவே இந்தியா சென்றனர். வடபகுதியில் குடியேறியவர்களில் சிலர் அகதிகளாகப் படகுகளில் ஏறி இந்தியா சென்றனர்.

இவ்வாறான குடியகல்வுகள், இடம்பெயரல்கள் காரணமாக மலையக மக்கள் தொகை வீழ்ச்சியடைந்து, அவர்கள் இன்று இலங்கைத் தமிழர்கள், முஸ்லீம்கள் ஆகியோருக்கு அடுத்த எண்ணிக்கையிலே உள்ளனர். இதற்கு முக்கிய காரணம் இவ்வாறான புலப்பெயர்ச்சியும் அவர்கள் தம்மைக் கணக்கெடுப்பின் போது இலங்கைத் தமிழர் என்று அடையாளப்படுத்துவதும் தான். (இது வேறு விடயம்) மொத்தத்தில் புலப்பெயர்ச்சி காரணமாக மலையகத் தமிழர் குறைவடைவதனால் அவர்களுடைய அரசியல் பிரதிநிதித்துவம் பாதிக்கப்பட வழியுண்டு. நுவரெலியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய மலையக மாவட்டங்களில் (கண்டி, பதுளை போன்றன) இவர்கள் சதவீதம் 20க்கும் குறைவாகவே உள்ளது.

2. **குறைந்த சமூக நகர்வு:** நவீன உலகில் சமூக மாற்றங்களுக்கும் சமூக நகர்வுகளுக்கும் கல்வியே பிரதான உந்து சக்தியாக உள்ளது. சமூக நகர்வு என்பது ஒரு சமூக வகுப்பைச் சேர்ந்தவர்கள். (உதாரணமாகத் தொழிலாளர்கள்) தாம் பெற்ற கல்வியினூடாக அல்லது வேறு வழிமுறைகளினூடாகவோ (வர்த்தகம், அரசியல், தொழிற்சங்கம்) மத்திய, உயர்மத்திய வகுப்புக்குரிய அந்தஸ்தைப் பெறுவதைக் குறிக்கும். மலையக மக்கள் தொகை 15 இலட்சம் என்றால் (சந்திரபோஸ், விஜயசந்திரனின் கணிப்பீடு) அவர்களில் 60 சதவீதமானவர்கள் பெருந்தோட்ட மக்களாகவே உள்ளனர். அவர்களில் 2 இலட்சம் பேர்வரை தொழிலாளர்கள் ஏனையோர் தங்கி வாழும் முதியவர்களும் பிள்ளைகளுமாவர்.

மலையக மக்களின் கல்வியினூடாக உயர்வடைந்த 10000 பாடசாலை ஆசிரியர்கள், கல்வியதிகாரிகள், சில நூறு மருத்துவர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள் எனக் கொள்ள முடியும். ஏனைய சமூகங்களில் ஏற்பட்டுள்ள கணிசமான சமூக நகர்வு மலையகச் சமூகத்தில் ஏற்படவில்லை, ஏற்பட்டிருப்பது போதாது என்பது மலையக சமூகத்தின் பலவீனமாகக் காண்கின்றோம். இது விரிவாக ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

3. **கலாசார அம்சம் :** எமது நோக்கில், இந்நாட்டில் மலையக மக்கள் எவருமே பெரும்பான்மைக் கலாசாரத்தைப் பின்பற்ற வேண்டும் என்ற எந்த ஒரு அரச கொள்கையும் இல்லை. பலநாடுகளில் (ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா) இவ்வாறான ஒன்று கலக்கும் கொள்கைகள் ஒரு காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டன. ஆனால் இன்று அந்நாடுகளில் மட்டுமல்லாது இலங்கையிலும் இது ஒரு பன்மைச் சமூகம், பல இனங்கள் வாழ்கின்ற நாடு என்ற கொள்கை அரச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்மொழி ஒரு அரசகரும மொழியாக கற்க, சட்ட ஏற்பாடுகளும் உண்டு. இவ்வாறான அரசின் அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்த ஒரு அரசகரும மொழிகள் ஆணைக்குழுவும் உண்டு. இதுபற்றி இவ்விடத்து விபரித்து கூற வேண்டியதில்லை. ஒரு சமூகம் தனது தனித்துவத்தையும் பேணிக் கொள்ள மொழி, கலாசாரப்பற்று மிகமுக்கியமானது. எமது மொழி, கலைகள், மரபுகள், நாட்டார் வழக்குகள் அனைத்துமே எமது இனத் தனித்துவத்தைப் பிரதிபலிப்பன. ஆயினும் எமது மக்கள் எந்த அளவுக்கு இந்த உணர்வு முழுமையாக உள்ளது என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவில்லை. அவர்களிடம் பெரும்பான்மையினருடன் ஒன்று கலக்கும் போக்கு தென்படுவதாக கூறப்படுகின்றது. (இது விரிவாக ஆராயப்பட வேண்டிய விடயம்)

ஒரு சில மலையகக் கற்றறிவாளர்களுடன் நடத்திய கலந்துரையாடலில் பெறப்பட்ட சில விடயங்கள்:

1. 1960களிலும் 1970களிலும் மலையக நகர்ப்புறங்களில் கலை, இலக்கிய விழாக்கள் நடைபெற்றன. பாரதி விழா, பாரதிதாசன் விழா, ஔவை விழா எனப் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தற்போது இவை நடைபெறுவது குறைவு.
2. இந்தியாவிலிருந்து பல பேச்சாளர்கள் வந்தனர். தற்போது அவ்வாறு வருபவர்களை மலையகத்துக்கு அழைத்துச் செல்ல முன்பு போல் கலை இலக்கிய மன்றங்கள் போதிய அளவு இல்லை.
3. பெருந்தோட்டப்பகுதிகளில் சமயச் சடங்குகள், காமன்கூத்து போன்ற கலை வடிவங்களை முன்னெடுத்துச் செல்லப் போதிய ஆட்கள் இல்லை.
4. சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் காரணமாகத் தாயகம் திரும்பியோரில் பலர் இவ்வாறான ஆற்றல்களைப் பெற்றவர்கள்.
5. மலையகத்தில் இசை, நடனம் என்பவற்றைக் கற்பிக்கும் தனியார் நிறுவனங்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள் ஆகியோரின் பற்றாக்குறை.
6. அரச, மாகாண மட்டங்களில் நடைபெறும் சாகித்திய விழாக்கள் முக்கியமானவை.
7. அதிக அளவில் இந்து சமய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. கலை, இலக்கிய மன்றங்களை விட இவை சிறப்பாக இயங்குகின்றன.

**நிலத்தொடர்பற்ற சிறுபான்மையினர்**

வட மாகாணத்தில் தமிழர்கள் செறிந்து வாழ்வது போன்ற நிலை மலையக மக்களுக்கில்லை. இருபத்தைந்து மாவட்டங்களில் நுவரெலியாவில் மட்டுமே அவர்கள் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். ஏனைய மலையக மாவட்டங்களில் அவர்களுடைய சதவீதம் 20க்கும் குறைவு. இவ்வாறான சிறுபான்மையினர் நிலத்தொடர்பற்று வாழ்வதால், அவர்களுடைய மக்கள் தொகைக்கு ஈடான அரசியல் பிரதிநிதித்துவம் கிடைப்பதில்லை. அத்துடன் வடமாகாண சபை போன்ற அதிகாரப் பரவலாக்க ஏற்பாட்டைச் செய்ய முடியாது. இவ்வாறான நிலத்தொடர்பற்ற சிறுபான்மையினரின் அரசியல், பொருளாதார உரிமைகளைப் பாதுகாக்க விசேட ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இது இலகுவானதல்ல. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தீர்வுகளைச் சமர்பித்த ஒரு நிபுணர் குழு சகல மாவட்டங்களிலும் வாழும் மலையக மக்களுக்கான கலாசாரப் பேரவை ஒன்றைப் பரிந்துரைத்திருந்தது. எவ்வாறாயின் மலையக மக்கள் ஏராளமான மாவட்டங்களில் பரந்த ரீதியில் நிலத்தொடர்பற்ற மக்களாக வாழ்வது ஒரு பலவீனமான அம்சமாகும்.

**உயர்கல்வி, திறன், பயிற்சிப்பற்றாக்குறை**

கடந்த மூன்று தசாப்தக்கால கல்வி வளர்ச்சியின் விளைவாக மலையக மக்களின் பாடசாலைக்கல்வி தராதரம் உயர்வடைந்துள்ளது. எவ்வாறாயினும் இன்னும் ஏனைய சமூகங்களின் தராதரங்களை எட்டவில்லை. பல்கலைக்கழகக் கல்வி வாய்ப்புக்கள் இன்னும் குறைவாகவே உள்ளன. பத்தாயிரம் ஆசிரியர்கள் வரை இருந்தபோதிலும், கணித, விஞ்ஞானப் பட்டதாரிகளுக்குப் பற்றாக்குறை உண்டு. இன்று 14 பல்கலைக்கழகங்களில் பயிலும் 85000 மாணவர்களில் மலையக மாணவர்கள் 400 பேருக்கும் குறைவு, 5000 விரிவுரையாளர்களில் மலையகத்தவர்கள் 25 பேர் என மலையகத்தைச் சேர்ந்த மூத்த விரிவுரையாளர்களின் தகவல்கள் கூறுகின்றன.

சுருங்கக்கூறின், தகவல்களின்படி மலையகத்தில் க.பொ.த. சாதாரணத் தரம் வரை படித்தவர்கள், சித்தியெய்தியவர்கள் போன்றோர் பெருந்தோட்ட வேலைகளை நாடுவதில்லை. அவர்கள் பெரிய அளவில் தொழில் பயிற்சி பெறாததன் காரணமாக நகர்ப்புறங்களில் சாதாரண தொழில்களையே செய்கின்றனர். (அத்தொழில்களை விபரிக்கவில்லை) இதன் காரணமாக இப்படிப்பட்டவர்களுக்குத் தொழிற்பயிற்சி வழங்கும் வேலைத்திட்டங்கள் தேவைப்படுகின்றன.

மேற்கண்டவாறு பலம், பலவீனம் எனப் பலவற்றை இனங்கண்டாலும் இவை பற்றி நுணுகி ஆராய்ந்து முழுமையான பட்டியலைத் தயாரிக்க அறிவோர் உள்ளடங்கிய செயலமர்வுகள் தேவை. இத்தகைய பட்டியலுக்கான ஒரு சிறு முயற்சியே இக்கட்டுரை. இங்குக் கூறப்பட்டுள்ள விடயங்களும் ஆராய்ந்து செம்மைப்படுத்தப்பட வேண்டியவை என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களும் சமூக குடியுரிமையின் நிலையும்

இரா. ரமேஷ், விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

சர்வதேச ரீதியாக பொது நிர்வாக சேவைகளைப் பெற்றுக்கொள்வது ஒரு சமூக பிரஜாவுரிமையாகவும் (social citizenship rights) அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. காரணம் பொது நிர்வாக சேவைகள் மனித நல்வாழ்வு (subjective human well-being), அபிவிருத்தி மற்றும் சமூக உரிமைகளுடன் நேரடித் தொடர்புக் கொண்டிருப்பதனாலாகும். சிறுபான்மை மக்கள் அல்லது ஒடுக்கப்பட்ட மக்கள் சட்ட ரீதியான குடியுரிமையினைப் பெற்றுக்கொண்டாலும், அவர்கள் குடியுரிமையின் முழுமையான பயன்களை அனுபவிப்பதில்லை என்பது பல ஆய்வுகளின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது (Houtzager & Acharya, 2010; Blitz & Lynch, 2010; Bass, 2012). விசேடமாக, சமூக குடியுரிமையினை அனுபவிப்பதில் சட்ட, கொள்கை மற்றும் நிறுவன ரீதியான கட்டுப்பாடுகள், கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் பாகுபாடுகள், கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களின் மற்றும் அதிகாரிகளின் பாகுபாடான செயற்பாடுகள் இதில் பெரிதும் பங்களிப்பு செலுத்தும் காரணிகளாகக் காணப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. இந்நிலை இலங்கைவாழ் இந்திய வம்சாவளி மலையக மக்களுக்கும் பொருந்தும். அவர்கள் இன்னும் சமூகப் பிரஜா உரிமையின் முழுமையான பயன்களை அனுபவிக்க முடியாதவர்களாகவே உள்ளனர் என்பது அண்மைய ஆய்வுகளின் மூலம் அடையாளங்காணப்பட்டுள்ளன (Hittinayake,2008; Shunshuke; 2013; Ramesh, 2016).

பொதுவாக பிரஜாவுரிமையினை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை அரசியல், சிவில், சமூக மற்றும் கலாசாரப் பிரஜாவுரிமை என்பனவாகும். இதில் அரசியல் பிரஜாவுரிமை என்பது அரசியல் சார்ந்த உரிமைகளையும், சிவில் பிரஜாவுரிமை என்பது சிவில் உரிமைகளையும், கலாசாரப் பிரஜாவுரிமை கலாசாரம் சார்ந்த உரிமைகளையும் வலியுறுத்துகின்றது. சமூகப் பிரஜாவுரிமை என்பது கல்வி, சுகாதாரம், வீட்டுரிமை, காணியுரிமை, போக்குவரத்து, சமூக பாதுகாப்பு, தொழில், ஓய்வூதியம் மற்றும் அரச பொதுசேவைகளை பெறுவதற்குள்ள உரிமையினை வலியுறுத்துகின்றது. இவை சமூக உரிமைகள் எனவும் அழைக்கப்படுகின்றன (Marshall, 1950). ஒரு மனிதன் சமூகப் பிரஜா உரிமையினை அனுபவிக்கும் பொழுதே ஏனைய சிவில், அரசியல், கலாசார உரிமைகளை அனுபவிக்க முடியும் எனவும் அதற்கான கொள்திறனை (capability) பெறமுடியும் எனவும் ஆய்வுகளின் மூலம் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது (Uyangoda, 2013, Lister, 1995). அந்த வகையில் இக்கட்டுரையானது சமூக பிரஜாவுரிமையின் முக்கியத்துவம், மலையக மக்கள் சமூக பிரஜாவுரிமையினை அனுபவிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் என்பவற்றை ஆராய்வதாக அமைந்துள்ளது.

மலையக மக்களும் சமூக பிரஜாவுரிமையும்

மலையக மக்கள் 1980களின் இறுதிப்பகுதியிலிருந்து படிப்படியாக சட்ட ரீதியான பிரஜாவுரிமையினை பெற்றுக்கொண்டனர். ஆயினும் அது அவர்களின் சமூக நிலையை, சமூக உரிமைகளை, மானிட நல்வாழ்வினை மேம்படுத்தவில்லை. சட்ட பிரஜாவுரிமை இம்மக்களுக்கு ஒரு வகையான முழுமையற்ற அல்லது ஆகக் குறைந்த உத்தரவாதத்தினை (minimum quarantee) மாத்திரமே வழங்கியது எனப் பேராசிரியர் ஜயதேவ உயன்கொட குறிப்பிடுகின்றார் (2013). இதனடிப்படையில் பார்க்கும்போது, பெருந்தோட்ட மக்கள் சமூக அபிவிருத்தியில் பின்னடைந்திருப்பதற்கு அவர்கள் சமூகப் பிரஜா உரிமையினை அனுபவிப்பதில் காணப்படுகின்ற பல்மட்டக் கட்டுப்பாடுகள் பெரிதும் பங்களிப்பு செய்கின்றன என வாதிடலாம். இதன் விளைவாக சிவில், அரசியல் மற்றும் கலாசார உரிமைகளையும் பூரணமாக அனுபவிக்க முடியாதுள்ளனர். மேற்கூறிய வாதமானது சமூக பிரஜாவுரிமைக்கும் ஏனைய சிவில், அரசியல், கலாசார உரிமைகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதனை வெளிக்காட்டுகின்றது. மேலும் அரச நிறுவனங்களின் மூலம் காட்டப்படும் தொடர்ச்சியான பாகுபாடு, புறக்கணிப்பு, அரச நிர்வாக சேவை மறுக்கப்படல் ஆகியன மலையக மக்கள் மத்தியில் பொருளாதாரம் சாராத வறுமையினை (Non-Economic form of Poverty) ஏற்படுத்தியிருப்பதுடன் (Vijesandiran & Ramesh, 2013), அவர்களின் சமூக மூலதனத்தையும் (social capital) பெரியளவில் மட்டுப்படுத்தியுள்ளது அல்லது இல்லாது செய்துள்ளது எனலாம். சமூக மூலதனம் பிரஜைகள் தமது சிவில் ஆற்றல்களை, பண்புகளை வளர்க்க, ஆட்சிமுறை செயன்முறையில் செயலூக்கத்துடன் பங்கேற்க பெரிதும் அவசியம் என ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது (Rothstein & Teorell, 2008; Ramesh, 2016). அதனடிப்படையில் பார்க்கும் போது மலையக மக்கள் மீதான சட்ட ரீதியான புறக்கணிப்புகள் மற்றும் ஆட்சி முறைக்கட்டமைப்புகளில் இருந்து அவர்கள் ஓரங்கட்டப்பட்டமையானது அவர்களின் சமூக மூலதனத்தை இல்லாது செய்துள்ளது என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதிடலாம். இதனால் சட்ட பிரஜாவுரிமைக் கிடைத்தப்பின்னரும் அவர்களால் சட்ட ரீதியாக உரித்துடைய அரச சேவைகளைக்கூட பெறுவதில் பல கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. சட்ட பிரஜாவுரிமை சமூக உரிமைகளை அனுபவிப்பதற்கான கதவுகளை திறந்தாலும் கூட, அதனை அனுபவிக்க பிரஜைகளுக்கு தமது சிவில் ஆற்றல்கள், உரிமைகள், கடமைகள் தொடர்பான விழிப்புணர்வினை வளர்த்தல், சிவில் சமூக செயற்பாடுகள், அமைப்புகளில் ஈடுபடுதல் ஆகியன அவசியமாகும். இது சமூக மூலதனத்தை அதிகரிப்பதற்கும் உதவும். எவ்வாறாயினும் அண்மைக்காலங்களில் இதில் சில மாற்றங்கள் ஏற்பட்டு வருவதனையும் குறிப்பிட்டாக வேண்டும்.

இன்று மலையக மக்களும் ஆட்சி முறை செயற்பாடுகளில் பங்கேற்றல், சிவில் அல்லது சமூக மட்ட அமைப்புகளை உருவாக்கி பல செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், அரச சேவைகளுக்கான கோரிக்கைகளை முன்வைத்தல், உரிமைக் கண்ணோட்டத்தில் தமது பிரச்சினைகளை அணுகுதல், கல்வி வளர்ச்சி, அரச நிறுவனங்களுடனான தொடர்பு போன்ற விடயங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதனையும் மறுப்பதற்கில்லை. ஆயினும் நிறுவன, சட்ட மற்றும் கொள்கை ரீதியாக தடைகள் மற்றும் கட்டுப்பாடுகள் முழுமையாக தீர்க்கப்படாததால் சமூக பிரஜாவுரிமையின் நிலை தொடர்ந்தும் ஆபத்தான நிலையிலேயே காணப்படுகின்றது எனலாம். மேலும் இன மற்றும் சமூக அடையாளம், கல்விப் போன்ற காரணிகளும் சமூக குடியுரிமையின் பயனை மட்டுப்படுத்தியது என்பது ஒரு சிலரின் வாதமாகும்.

உண்மையில், பொதுத்துறை நிர்வாகம் சமூக குடியுரிமையின் பலன்களை பிரஜைகள் அனுபவிப்பதற்கான பரந்த சட்டகத்தை வழங்குகின்றது. மேலும் அது சமூக நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு பொது சேவைகளை வழங்குகின்றது. இப்பணியினை தனியார் அமைப்புகளாலோ அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட சிவில் சமூக அமைப்புகளாலோ நிர்வகிப்பது கடினமான காரியமாகும். குறிப்பாக பொது நிர்வாகமானது பிரஜைகளின் தேவைகளுக்கு அல்லது கோரிக்கைகளுக்கு வினைத்திறன் மிக்க வகையிலும், பொறுப்புடனும் சேவை வழங்குவதனை குறித்து நிற்கின்றது. இங்கு சமத்துவம், பாகுபாடின்மை, பக்கச்சார்பின்மை, நேர்மைத்தன்மை, நியாயமான நிர்வாக ஒழுங்கு விதிகளை கையாளுதல் மற்றும் யாவரையும் உள்வாங்கிச் செயற்படுதல் ஆகியன அடிப்படைத் தத்துவங்களாக பின்பற்றப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றன. ஆயினும் நடைமுறையில் அரச நிறுவனங்களும் அதிகாரிகளும் தமது பணிப்பொறுப்புகளை நிறைவேற்றும் போது தனிப்பட்ட விருப்பங்கள், இன, மத, மொழி, பிரதேசம், அரசியல், சாதி போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கி வருவதனால் அவர்கள் மேற்கூறிய அடிப்படைத் தத்துவங்களை அலட்சியம் செய்யும் நிலையினை நாளாந்த நிர்வாக செயற்பாடுகளில் இருந்து அவதானிக்க முடிகின்றது. இது முடிவில் பல் மட்ட பாகுபாடுகள், விசேட கவனிப்புகள், ஊழல் போன்ற பல விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்திவிடுகின்றது. இப்பிரச்சினைகள் இலங்கையில் மாத்திரமன்றி பல அபிவிருத்தி அடைந்து வருகின்ற, பல்லினத்தன்மைக் கொண்ட நாடுகளிலும் காணப்படுகின்றன.

இப்பின்புலத்திலேயே 1996ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் அரச உத்தியோகத்தர்களுக்கான சர்வதேச நடத்தைக் கோவை ஒன்று வெளியிடப்பட்டது. அதில் அரச பதவிகள், அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் என்பன பொதுமக்களின் மேம்பாடு, நல்வாழ்விற்காக பிரயோகிக்கப்பட வேண்டும் எனவும், வினைத்திறன் மிக்க வகையில் வளப் பயன்பாட்டை மேற்கொண்டு பாரபட்சமற்ற அரசாங்க சேவை வழங்கலை உறுதி செய்ய வேண்டும் எனவும், அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டுமாயின் அதன் சேவைகள் நீதியான, பக்கச்சார்பற்ற வகையில் நடுநிலையானதாக அமைய வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலாக, ஒரு நாட்டில் வாழும் சகல பிரஜைகளும் அந்நாட்டு அரசின் பொதுச்சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையினைப் பெற்றுள்ளனர், அது ஓர் அகில ரீதியான மனித உரிமை என 1948ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்ட அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தின் 21ம் உறுப்புரையின் மூலம் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இவ்வுறுப்புரையானது ஒவ்வொருவருக்கும் தத்தமது நாட்டின் ஆட்சியியல் நடவடிக்கைகளில், நிர்வாக செயற்பாடுகளில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமாகவோ அல்லது தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமோ பங்குபற்றுவதற்கு உரிமையுண்டு எனக் குறிப்பிடுகின்றது. இப்பிரகடனத்தின் 25ஆம் உறுப்புரையானது ஒவ்வொருவரும் போதிய உணவு, உடை, வீட்டு வசதி, சுகாதார வசதிகள், சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகள் மற்றும் தமது நல்வாழ்வுக்கு அவசியமான சேவைகளைப் பெற உரித்துடையவர்கள் எனவும் வேலையின்மை, முதுமை, இயலாமை போன்ற சூழ்நிலைகளில் அரசாங்க சமூக பாதுகாப்புக்கு உரித்துடையவர் எனவும் குறிப்பிடுகின்றது. இது பொதுச் சேவைகள் மனித மற்றும் சமூக அபிவிருத்தியில் எத்தகைய தாக்கம் செலுத்துகின்றது என்பதனைக் காட்டுகின்றது.

கல்வி, அபிவிருத்திப் பணிகள், வறுமை நிவாரணம், சுகாதாரம், தொழில், சிவில் ஆவணங்களைப் பெறுதல், தபால் சேவை, போக்குவரத்து, மின்சாரம், தொடர்பாடல், நீதி, வங்கிச்சேவை என பொதுச்சேவைகளை அட்டவணைப்படுத்தலாம். இவை மனித வாழ்விற்கு பெரிதும் அவசியமாகவுள்ளன. விசேடமாக, சுதந்திரத்திற்கு பின்னர் மாறி, மாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் பொதுச் சேவை வழங்குவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளன என்பது மறுப்பதற்கில்லை. இதற்கு பல அரசியல் காரணங்களும் காணப்பட்டன. ஆயினும், அவற்றின் தரம், அளவு, சமவாய்ப்புகள், சமமாக அணுகுதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக பல விமர்சனங்கள் காணப்படுகின்றன. அதில் இனத்துவக் காரணிகள், கட்சி அரசியல் அல்லது தேர்தல் போட்டி, அரசியல், நிறுவன ரீதியான காரணிகளும் செல்வாக்கு செலுத்தியுள்ளன. இது பாகுபாடுகள், ஒதுக்கல்கள், சமத்துவமின்மை, நேர்மையின்மை, ஊழல், பக்கச்சார்பு, அதிகார துஸ்பிரயோகம் போன்ற விளைவுகளை ஏற்படுத்தின. இது மறுபுறமாக அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்கள் மீதான பிரஜைகளின் நம்பிக்கையினை இழக்கச் செய்தது. பொதுவில், பெருந்தோட்ட மக்கள் மத்தியில் விசேடமாக அரச நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் நியாயமாகவும், நேர்மையாகவும், பக்கச்சார்பின்றியும், எத்தகைய பேதங்களுமின்றியும் அனைவரையும் சமமாக கவனிக்கும் போதே பிரஜைகள் அவற்றின் மீது நம்பிக்கை வைப்பர். ஆட்சி முறையொன்றின் வெற்றிக்கும், அரசக் கொள்கைகளின் வெற்றிக்கும் பிரஜைகளின் நம்பிக்கை பெரிதும் அவசியமாகும். அண்மைக்கால ஆய்வொன்றின் மூலம் மலையக மக்கள் ஏனைய சமூகங்களைவிட, அரச மற்றும் அரசியல் நிறுவனங்கள் மீது குறைந்தளவிலான நம்பிக்கை கொண்டிருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது.

**அரச சேவை வழங்கலும் மலையக மக்களும்**

அரசின் நிர்வாக நிறுவனங்களை மக்களுக்கு அண்மித்தவகையில் தாபித்து, அதன் மூலம் பொதுச்சேவையினை இலகுப்படுத்தல், அவற்றை மக்களிடம் கொண்டு செல்லல் போன்ற நடைமுறைகள் இலங்கையில் நீண்ட காலமாக காணப்பட்டு வருகின்றன. உதாரணமாக, கச்சேரி முறை, பிரதேச செயலகம், கிராமிய சபை, பட்டின சபை, நகர சபை, மாநகர சபைகள் ஆகியவற்றினைக் குறிப்பிடலாம். இதன் மூலம் மிக இலகுவாக கிராமிய மக்களுக்கு அரசாங்க சேவைகளையும், அபிவிருத்திசார் தேவைகளையும் அடையும் வாய்ப்பு கிட்டியது. மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் 1991ம் ஆண்டு உள்ளூர் மட்டங்களில் நிர்வாக அதிகாரத்தை பரவலாக்கும் (Administrative Decentralization) வேலைத்திட்டத்தை ஆரம்பித்ததுடன், மக்களின் காலடிக்கு அரச சேவையினை கொண்டுசெல்ல வேண்டுமென குறிப்பிட்டார். இதனால் மக்களுக்கு மிகவும் அண்மித்தவகையில் புதிதாக பிரதேச செயலகங்கள், கிராம சேவகர் பிரிவுகள் என்பன உருவாக்கப்பட்டன. இந்நிறுவனங்கள் பொது நிர்வாக சேவைகளை பெரிதும் இலகுபடுத்தியதுடன், அவை மக்கள் மைய நிறுவனங்களாக செயற்பட்டன. ஆயினும் இத்தகைய நிர்வாக விஸ்தரிப்புக்கள், நிர்வாகப் பரவலாக்கம் மலையக மக்களின் சமூக பிரஜாவுரிமையினை மேம்படுத்துவதில் பெரியளவிலான தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை எனலாம். அரசியல் மற்றும் நிர்வாக விருப்பமின்மை இதில் பெரியளவிலான தாக்கத்தினை ஏற்படுத்தியது.

இவற்றுக்கப்பால் இம்மக்கள் நீண்டகாலம் தோட்ட முகாமைத்துவத்தின் கட்டுப்பாட்டில் வாழ்ந்து வருவதனால் அரச நிறுவனங்களுக்கும் இவர்களுக்குமிடையில் சீரான உறவு காணப்படவில்லை. மலையக மக்கள் பொது நிர்வாக சேவைகளை பெற்றுக் கொள்வதில் பாதிப்புச் செலுத்தும் மற்றுமொரு காரணி உயர் மட்ட நிர்வாக பதவிகளில் மலையகத் தமிழர்கள் இன்மையாகும். சிங்கள அரச அதிகாரிகளுடன் தொடர்புக்கொண்டு தமது சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் அச்சம், தயக்கம் மற்றும் மொழி ரீதியான தடைகள் காணப்படுகின்றன. தொடர்ந்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் மலையக மக்களை ஓரங்கட்டியமையால் இத்தகைய மனப்பாங்கு ஏற்பட்டிருக்கலாம். அண்மைக்காலங்களில் மலையகத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் அரச நிறுவனங்களில் உள்வாங்கப்பட்டுள்ளமையால் ஒரு சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆயினும் உயர் மட்ட நிர்வாக செயற்பாடுகளில் மாற்றம் ஏற்படவில்லை என்பது பொதுவான அவதானிப்பாகும். நாட்டின் மொத்த சனத் தொகையில் இந்திய வம்சாவளியினரின் விகிதாசாரம் 5% ஆகும். இதில் 0.5% மானோர் மாத்திரமே அரச தொழில் துறையில் அங்கம் வகிக்கின்றனர். குறிப்பாக ஆசிரியர் தொழில் துறையிலேயே அதிக எண்ணிக்கையினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றனர். அதேபோல், மத்திய அரசாங்கத்திலும் மாகாண அரசாங்கத்திலும் முகாமைத்துவ உதவியாளர்களாகவும்,இலிகிதர்களாகவும், சிற்றூழியர்களாகவும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகவும் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் பணியாற்றுகின்றனர். 2000 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆசிரியர் சேவைக்கு அப்பால் ஏனைய தொழில் வாய்ப்புகளையும் பெற்றுக்கொள்ளும் நிலை படிப்படியாக அதிகரித்தது. இதற்கு கல்வி ரீதியான வளர்ச்சி, பல்கலைக்கழக அடைவு மட்டம் அதிகரித்தமை, சிங்கள மொழிப் பரீட்சியம், வெளி உலகத் தொடர்பு எனப் பல காரணிகள் பங்களிப்புச் செய்கின்றன. இதனால் அரச சேவையில் மலையக இளைஞர்களின் விகிதாசாரம் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் கண்டுள்ளது. இவர்கள் உயர் பதவிகளுக்கு செல்லும் வாய்ப்பு இன்னும் கிட்டவில்லை என்றாலும், இவர்களின் பிரசன்னமானது அரச சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை அதிகரித்துள்ளது எனலாம். ஒரு மொழி ஆதிக்கம் (monolingual domination) கொண்ட நிறுவனக்கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு இவர்கள் தாம் சார்ந்த சமூகத்துக்கு சேவை செய்யும் வாய்ப்பு கிடைத்துள்ளது. உண்மையில் நிர்வாக நிறுவனங்களில் மலையகத்தமிழ் மக்களின் பிரசன்னம் அதிகரிக்கும் போது அது அரசக் கொள்கை அமுலாக்கம், பொதுச்சேவை வழங்கல், சீரான உறவினைக் கட்டியெழுப்புதல் போன்ற விடயங்களில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தும். பொதுவாகவே ஒரு நாட்டின் சிவில் சேவையானது அந்நாட்டின் குடிசனப் பரம்பலை முழுமையாக பிரதிபலிக்குமாயின் அது அனைத்து சமூகத்தவரும் அரச சேவைகளை சமமாக பெற்றுக்கொள்வதற்கு வழி செய்யும் என்பது பல ஆய்வுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மொழிப்பிரச்சினை அரச சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் பிரிதொருத் தடையாக காணப்படுவதாக பல ஆய்வுகள் அடையாளம் கண்டுள்ளன. 1978ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பின் அத்தியாயம் IV இலும், 1987ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் அரசியல் யாப்பிற்கு கொண்டு வரப்பட்ட 13 வது திருத்தச் சட்டத்தின் ஊடாகவும் பிற்காலத்தில் கொண்டு வரப்பட்ட 16வது திருத்தச் சட்டத்தின் மூலமாகவும் தமிழ் மொழி, முழு இலங்கைக்குமான ஆட்சி மொழியாக உறுதி செய்யப்பட்டுள்ளது. அதன்படி இன்று இலங்கையில் தமிழும், சிங்களமும் தேசிய மொழிகளாகவும், ஆட்சி மொழிகளாகவும் இருப்பதுடன் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் உள்ளது. ஆனால் நடைமுறையில் தமிழ் மொழியின் அமுலாக்கம் உரிய முறையில் இடம் பெறுவதில்லை. இலங்கையில் மொத்தமாக 331 பிரதேச செயலகங்கள் உள்ளன. சுமார் 55 வீதத்திற்கு மேற்பட்ட தமிழ் பேசுவோர் வட - கிழக்கு மாகாணங்களுக்கு வெளியிலேயே வாழ்கின்றார்கள். ஆனால் வட - கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் நிர்வாக ரீதியாக தமிழ் மொழி அமுலாக்கம் உரிய விதத்தில் அமுலாக்கப்படுவதில்லை. பின்வரும் அட்டவணை சில தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் மலையக மக்களின் சனச் செறிவினைக் காட்டுகின்றது.

அட்டவணை - 01: மலையக மக்கள் செறிந்து வாழும் பிரதேச செயலகப் பிரிவுகள் சிலவற்றின் சனத்தொகைப் பரம்பல்

| மாவட்டம் | பிரதேச செயலகம் | மொத்த சனத் தொகை | நகரங்களில் வாழும் மக்கள் | கிராமங்களில் வாழும் மக்கள் | தோட்டங்களில் வாழும் மக்கள் |
|---|---|---|---|---|---|
| நுவரெலியா | நுவரெலியா | 212,094 | 26,085 | 39,692 | 146,317 |
| | அம்பகமுவ | 205,723 | 14,066 | 49,160 | 142,497 |
| பதுளை | லுணுகலை | 31,381 | - | 13,855 | 17,526 |
| | பசறை | 48,807 | - | 30,235 | 18,572 |
| | அப்புத்தளை | 49,798 | 3,395 | 28,956 | 17,447 |
| | ஹல்துமுல்லை | 37,558 | - | 22,931 | 14,627 |
| கண்டி | பன்விலை | 26,294 | - | 12,725 | 13,569 |

**மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் - இலங்கை (2012)**

**பெருந்தோட்டப் பகுதிகளில் அரச சேவைக்கான தேவைப்பாடு: சில குறிப்புகள்**

இன்று பெருந்தோட்டப் பகுதிகளுக்கு பொது நிர்வாக நிறுவனங்களின் தலையீடு மற்றும் சேவைகள் காலத்தின் தேவையாக உள்ளது என்பது பலரின் வாதமாகும். இன்று பெருந்தோட்டக் கைத்தொழில் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. அதற்கு பல காரணிகள் செல்வாக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துகின்றன. தொழிலாளர் பற்றாக்குறை, போதிய சம்பளம் இன்மை, சர்வதேச சந்தையில் தேயிலை விற்பனையில் அதிகரித்த போட்டி, தொழில் கௌரவம், இலங்கைத் தேயிலையின் தரவீழ்ச்சி, இலங்கைத் தேயிலையை கொள்வனவு செய்யும் நாடுகளில் தொடரும் அரசியல் அமைதியின்மை, வெளிநாட்டுக் கொள்கைகள் ஆகிய காரணிகளைக் குறிப்பிடலாம். இதன் காரணமாக தோட்ட முகாமைத்துவம் அல்லது பெருந்தோட்ட கம்பனிகள் தோட்ட தொழிலாளர்களின் அபிவிருத்திக்காக அதிக பணத்தை முதலீடு செய்வதில்லை. அதிகமான சேமநல வேலைத்திட்டங்கள் தோட்டங்களில் கைவிடப்பட்டுள்ளன. பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியத்தின் (PHDT) ஊடாக மேற்கொள்ளப்பட்ட ஒரு சில சேமநல வேலைத்திட்டங்களும் நிதிப்பற்றாக்குறையால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இன்று தோட்டங்கள் காடாகி வருவதுடன் தொழிலாளர் பற்றாக்குறை, தொழிற்சங்க அரசியல், தொழிலாளர் போராட்டம் ஆகியனவும் இடம்பெற்று வருகின்றன. பெருந் தோட்டங்களின் உற்பத்தி திறன், பயிரிடும் நிலத்தின் அளவு தொடர்ந்து குறைவடைந்துச் செல்கின்றன. இவை ஒட்டுமொத்த பெருந்தோட்ட கைத்தொழில் துறையிலும் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்ற கருத்து அதிகமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக தோட்டப்புற மக்களின் எதிர்காலம் அச்சத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. பெருந்தோட்டக் கட்டமைப்புக்குள் சுமார் 800,000 பேர் வாழ்ந்தாலும், தோட்ட தொழிலாளரின் எண்ணிக்கை இன்று சுமார் 197,000 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இங்கு குறிப்பிட வேண்டிய முக்கிய விடயம் யாதெனில் சேமநல வேலைத்திட்டங்களில் தோட்டத்தில் தொழில் செய்வோருக்கே அதிக முக்கியத்துவம் வழங்கி வருவதாகும். தோட்டத்தில் தொழில் செய்யாத மக்களுக்கு தோட்ட முகாமைத்துவத்தால் பெரியளவிலான முக்கியத்துவம் அல்லது சேவைகள் வழங்கப்படுவதில்லை. ஆயினும் இவர்களும் இந்நாட்டின் பிரஜைகளாவர். இவர்களின் நலன்கள், அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு குறித்து சிந்திக்க வேண்டும். இதில் அரசாங்கத்திற்கு முக்கியப் பங்குண்டு. மறுபுறமாக கைவிடப்பட்ட தோட்டங்கள் மற்றும் அங்கு வாழும் மக்களின் நிலைக் குறித்து ஆராய வேண்டும். இவர்கள் எத்தகைய சமூக பாதுகாப்பும் அற்ற அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது நிரந்தர வருமானமின்றி நிச்சயமற்ற வாழ்க்கையினை அனுபவித்து வருகின்றனர். கைவிடப்பட்ட தோட்டங்களில் வாழும் மக்கள் தோட்ட முகாமைத்துவத்தாலும் அரசாங்கத்தாலும் ஓரங்கட்டப்பட்ட அல்லது கைவிடப்பட்ட மக்களாக வாழ்ந்து வருவது அதிகம் பேசப்படாத ஒரு விடயமாகும்.

தோட்டப்புறங்களில் நிறுவனக்கட்டமைப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தியடையாமையும் அரச சேவைகளை வழங்குவதில் தடையாக அமைந்துள்ளன. கிராமப்புறங்களை பொறுத்தவரை உள்ளூராட்சி அமைப்புக்கள் மற்றும் அமைச்சு திணைக்களங்கள், பிரதேச செயலகம் என்பன அபிவிருத்தி வேலைத்திட்டங்களை பதிவு செய்யப்பட்ட கிராமிய அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக மேற்கொள்கின்றன. இத்தகைய பதிவு செய்யப்பட்ட அமைப்புகள் தோட்டப்புறங்களில் பெரிதும் குறைவாகும். மறுபுறமாக அரசாங்க சேவைகள் தோட்ட முகாமைத்துவத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தோட்ட முகாமைத்துவம் எதிர்பார்க்கின்றது. தோட்ட முகாமைத்துவத்திடம் அனுமதி பெற்று தமது கடமைப் பொறுப்புக்களைச் செய்ய அரச அதிகாரிகள் விரும்புவதில்லை. மறுபுறமாக தோட்டங்களில் காணப்படும் மரபு ரீதியான, இறுக்கமான நிர்வாகக் கட்டமைப்பு அரசாங்க சேவைகளை தடுத்துவிடுகின்றது. தோட்டங்களில் பெரும்பாலான அடிப்படைச் சேவைகளை வழங்க தோட்ட சுகாதார உத்தியோகத்தர்கள் பொறுப்பாக உள்ளனர். இவர்கள் அரச நிறுவனங்களின் சேவைகள் தோட்டப்புறங்களுக்கு வருவதனை விரும்புவதில்லை. காரணம் இவர்களுக்குள்ள கௌரவம், மதிப்பு இல்லாமல் போகும், தமது அதிகாரப் பிடியில் இருந்து தோட்ட மக்கள் விலகிவிடுவர் என்ற அச்சம், சுயமாக சிந்தித்து செயற்படும் சமூகமாக மாறுவதனை விரும்பாமை என்பனவும் இதில் செல்வாக்கு செலுத்துகின்றன. புவியியல் ரீதியான தனிமைப்படுத்தலும் அரச நிறுவனங்களின் சேவைகள் தோட்டங்களை சென்றடைய தடையாக உள்ளது. தோட்டங்களையும் கிராமங்களையும் இணைத்த வகையில் அரச நிறுவனங்களை அமைப்பதன் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம்.

**முடிவுரை**

மேற்கூறிய விடயங்கள் மலைய மக்களின் சமூக குடியுரிமையினைக் கட்டுப்படுத்தும் காரணிகளை விளக்குகின்றது. மேலும் அரசாங்கம் பாகுபாடற்ற பொதுச் சேவையினை வழங்க கொள்கை, சட்ட மற்றும் நிறுவன ரீதியான மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டியதன் தேவையினையும் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக மக்களுக்கு ஆட்சி முறைக்கட்டமைப்புகளில் காட்டப்படுகின்ற பாகுபாடுகளை ஆராயும் போது ஒரு முடிவுக்கு வரலாம். அரசாங்கம் இம்மக்களுக்கு சட்ட பிரஜாவுரிமையினை வழங்கியப்போதும் அதன் பயன்களை முழுமையாக அனுபவிப்பதற்கு ஏற்ற சட்ட, நிர்வாக, கொள்கை ரீதியான சீர்த்திருத்தங்களை செய்வதில் இருந்து அரசாங்கம் விலகிக்கொண்டது எனலாம். நீண்ட காலம் அரச சட்டங்கள் மற்றும் நிர்வாக நிறுவனங்களின் மூலம் பாகுபாடுகளை அனுபவித்த ஒரு சமூகப்பிரிவினர் சட்ட குடியுரிமையினைப் பெறும்போது அவர்கள் காலம் காலமாக பாகுபாடுகளை அனுபவிப்பதற்கு காரணமாகவிருந்த சட்டங்கள், கொள்கைகள் மறுசீரமைப்பது, நிர்வாக மறுசீரமைப்புகளை மேற்கொண்டு அம்மக்களை ஆட்சிமுறையில் உள்வாங்க நடவடிக்கை எடுப்பது பெரிதும் அவசியமாகும். ஆயினும் அத்தகைய ஏற்பாடுகளை இலங்கையில் மாறி, மாறி வந்த அரசாங்கங்கள் மேற்கொள்ளவில்லை என்பது வருந்தத்தக்க விடயமாகும்.

இன்று நாட்டில் அரச மறுசீரமைப்புக்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன - இவை மலையக மக்களை ஆட்சிமுறைக் கட்டமைப்பில் முழுமையாக உள்வாங்குவதற்கான சட்டகத்தினை உருவாக்குவதாக அமைய வேண்டும். அரசியல் அதிகார பரவலாக்கத்துடன் இணைந்த வகையில் நிர்வாக அதிகாரப்பரவலாக்கத்தை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய உபாயங்களின் மூலம் மலையக மக்களும் முழுமையாக சமூக பிரஜாவுரிமையின் பயன்களை அனுபவிக்க வாய்ப்புண்டு. ஒரு பிரஜை முழுமையான பிரஜை என்ற அந்தஸ்தினை அடைவதில் சமூக பிரஜாவுரிமை மிகவும் அடிப்படையானதாகும் என்பதனை இக்கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது. சட்ட ரீதியான பிரஜாவுரிமை வழங்கப்பட்டப்போதும் சமூக பிரஜாவுரிமையினை அனுபவிக்க கொள்ளை ரீதியான, நிர்வாக ரீதியான ஏற்பாடுகளை காலம் காலமாக பதவிக்கு வந்த அரசாங்கங்கள் பெரிதும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொண்டன. அதனால் ஏனைய சமூகங்களைவிட மலையக மக்கள் சமூக அபிவிருத்தியில் பின்னடைந்துள்ளனர். சமூக பிரஜாவுரிமையினை முழுமையாக அனுபவிக்கும் நிலை ஏற்படும் போது சமூக அபிவிருத்தியில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்ய முடியும். மிக முக்கியமாக எல்லோரையும் உள்வாங்கும் ஜனநாயகப் பண்புகள் (inclusive democracy) கடைப்பிடிக்கப்பட வேண்டும். அவை மலையக மக்களும் சமூக பிரஜாவுரிமை உள்ளிட்ட பிரஜாவுரிமையின் முழுமையான பயன்களை அனுபவிப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தும். இவை எல்லாவற்றுக்கும் அப்பால் அரசாங்கத்தின் தரம் சிறுபான்மை மக்கள் சமூக குடியுரிமையினை அனுபவிப்பதில் பெரிதும் செல்வாக்கு செலுத்துகின்றது. ஆகவே அரசாங்கத்தின் தரத்தினை முன்னேற்றுவது காலத்தின் தேவையாகக் காணப்படுகின்றது. அரசாங்கத்தின் தரம் (the quality of governenment) என்பது சில அடிப்படைத் தத்துவங்களைக் கொண்டுள்ளது - அந்தவகையில் பக்கச்சார்பின்றி நடுநிலையாக, நியாயமான முறையில் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற உயர் தத்துவத்திற்கு முன்னுரிமையளித்து வினைத்திறன் மிக்க வகையில் அரச நிறுவனங்களும் அதிகாரிகளும் சட்டத்திட்டங்களை, கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் அதிகாரத்தினை பிரயோகித்தல் என்பதே இதன் அடிப்படைத் தத்துவமாகும். இதன் போது எத்தகைய தனிப்பட்ட விடயங்களையும் (இனம், மதம், மொழி, அரசியல், சாதி போன்ற) கவனத்தில் கொள்ளக்கூடாது என வலியுறுத்தப் படுகின்றது.

மேற்குறிப்பிட்ட எண்ணப்பாங்கு அரச அதிகாரிகளின் மன நிலையில் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதன் மூலம் அரசாங்கத்தின் தரத்தினை உயர்த்த முடியும் - அது அனைத்து பிரஜைகளும் சமூக குடியுரிமையினை சமமாக அனுபவிக்க வழி செய்யும். மறுபுறமாக அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்கள் மீதான பிரஜைகளின் நம்பிக்கையினை அதிகரிக்கச் செய்யும். பல்லினத்தன்மைக் கொண்ட பல ஐரோப்பிய நாடுகளில் அரசாங்கத்தின் தரத்தினை பேணுவது அனைத்து வகையான பாகுபாடுகளுக்கும் ஏனைய நிர்வாக சீர்கேடுகளுக்குமான தீர்வாக நோக்கப் படுகின்றது (Rothstein & Teorell, 2008). அரசாங்கத்தின் தரம் வீழ்ச்சியடையும் போது அது பல் மட்ட பாகுபாடுகள், புறக்கணிப்புகள், அரசியல் ஆதாய முறை, ஊழல், பக்கச்சார்பு, சட்டத்தின் ஆட்சியை அலட்சியம் செய்தல் போன்ற முற்றிலும் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்துகின்றது. இது எல்லா சமூகத்தவருக்கும் ஜனக்குழுக்களுக்கும் சமூக உரிமைகளை, அரச சேவைகளை சமமாக சட்டரீதியாக அனுபவிப்பதனை பெரிதும் மட்டுப்படுத்தி விடுகின்றது. இதனையே நாம் இன்று இலங்கையில் அவதானித்து வருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## References


Bass, D. (2012). *Everyday ethnicity in Sri Lanka*. London: Routeledge.

Blitz, K. B. & Lynch, M. (2010). Statelessness and the Deprivation of Nationality. In:Blitz, K.B.& Lynch, M. (eds). *Statelessness and Citizenship: A Comparative study on the Benefits of Nationality*. London: Edward Elgar.

Hitinayake, G., (2009). Root Causes for Poor Delivery of Government Services to the Estate Community and Present Status of their Social Security, *LST Review*, 19 (258).

Houtzager, P.P. & Acharya, A.K. (2010). *Associations, active citizenship and the quality of democracy in Brazil and Mexico*. London: Springer.

Marshall, T.H. (1950).*Citizenship and Social Class and other Essays*. The Syndics of Cambridge, University Press, London,

Ramesh, R. (2017). *Citizenship rights, public service delivery and the Quality of Government in Sri Lanka: The case of the Plantation people*. Unpublished PhD thesis. University of Bergen, Norway.

Rothstein, B., & Teorell, J. (2008). What is the quality of government: theory of impartial government institutions. *Governance*, Vol,21 (2), 165-190.

Uyangoda, J. (2013).. Re-politicising Local Governments for Politics of Transfromation: An Argument from Sri Lanka. In:Stokke, K.&Tornquist, O. (eds).*Democratization in the Global South: The Importance of Transformative Politics*. London: Palgrave Macmillan.

Vijesandiran, S., & Ramesh, R. (2013). *Local Goverment Service Delivery and the Plantation Community in Sri Lanka: A Human Rights Aspect*. Hatton: Estate Community Solidarity.

Sunshuke, Kurihara. (2012) *Governance over Estate Tamils in the Tea Plantation community of the Upcountry Sri Lanka*. Japan: Yokohama National University.


"நல்ல முடிவுகள் அனுபவத்திலிருந்து பிறக்கின்றன,
ஆனால் அனுபவமோ,
தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கிறது."
டாக்டர் அப்துல் கலாம்

"மனமே!
எல்லாம் நீயே
நீ எதனை எண்ணுகிறாயோ,
அதுவாகவே ஆகிறாய்...."
கௌதம புத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச தோட்டங்களும் மலையக மக்களின் இருப்பு பற்றிய பிரச்சினையும்

சுகுமாரன் விஜயகுமார், சமூக ஆய்வாளர்

## 1. பின்னணி

அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான உண்ணஸ்கிரிய ஹெயர் பார்க் தோட்ட மக்கள் இவ்வருடம் ஆரம்பத்தில் மேற்கொண்ட போராட்டம் அரச தோட்டங்களில் உள்ள மலையக மக்களின் இருப்பு, வாழ்வாதாரம் பற்றிய பிரச்சினையை மேற்கிளம்பச் செய்திருந்தது. இப்போராட்டம் இடம்பெற்றிருக்கவிட்டால் மீளமைப்பு (restructure) நடவடிக்கை என்ற பெயரில் அத்தோட்டம் உட்பட ஏனைய பல அரச தோட்டங்கள் தனியாருக்கு (மூலதனமுடைய தனி நபர்களுக்கு) வழங்கப்பட்டிருக்கலாம். அரச தோட்டங்களை தனியாருக்கு வழங்கும் தற்போதைய அரசாங்கத்தின் முயற்சிகள் முடங்கிவிட்டன எனக்கூறமுடியாது. தங்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் அல்லது தங்களின் அனுசரனையுடன் இடம்பெறும் "போராட்டங்கள்" தவிர மற்ற போராட்டங்கள் அனைத்தும் சதிவேலை என ஆளும் தரப்பினரால் முத்திரைக்குத்தப்படும் நிலையில், மலையக மக்களின் இருப்பு சார்ந்த பிரச்சினைகள் தொடர்பான மக்களின் போராட்டங்கள் நேர்மையாக அணுகப்படும் என எதிர்பார்க்கமுடியாது. அதேவேளை அரச தோட்டங்கள் தனியாருக்கு வழங்கப்படுவதற்கு எதிராக மலையகத்தின் மைய நீரோட்ட தொழிற்சங்கங்களோ பாராளுமன்றவாத அரசியல் அமைப்புகளோ உருப்படியான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை, அவற்றில் பல அமைப்புகள் அந்நடவடிக்கை தொடர்பில் எவ்விதமான கருத்தைக்கூட பதிவு செய்யவில்லை என்பது கவனிக்கத்தக்கது. கருத்துக்களை வெளியிடாமை என்பது அமைதியாக இருந்து அரசின் நடவடிக்கைக்கு ஆதரவு என்பதை விளங்குவது கடினமல்ல.

அண்மைக்காலத்தில் எல்கடுவ பெருந்தோட்டத்தினால் நிர்வகிக்கப்படும் அரச கம்பனிக்கு சொந்தமான காணிகளும் தனியாருக்கு வழங்குவதற்காக அளவை (Survey) செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. இந்த நடவடிக்கைகள் இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்திற்கும் (SLSPC), மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கும் (JEDB) சொந்தமான மற்றும் எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியினால் நிர்வகிக்கப்படும் அரச தோட்டங்களில் உள்ள மக்கள் தமக்கு என்ன நடக்கப் போகிறது என்பது தொடர்பாக அவதானமாக இருக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. பொதுவில் மலையக மக்கள் அனைவரும் அரச தோட்டங்களில் உள்ள மக்களின் நிலை என்னவாக போகிறது என்பது தொடர்பில் உரிய கவனத்தைச் செலுத்தி ஏற்புடைய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். அவ்வாறு எடுக்கப்படாதவிடத்து குடியுரிமை மற்றும் வாக்குரிமை பறிப்பு தொடங்கி இந்தியாவுடன் ஒப்பந்தங்கள் மூலம் பலாத்காரமாக நாடுகடத்தல், எழுபதுகளில் தேசியமயமாக்கல் செயற்பாடுகளில் இடம்பெற்ற இன அடக்குமுறைகள், அபிவிருத்தி திட்டங்கள் என்ற பெயரிலான இடப்பெயர்வுகள், இன வன்செயல்களின் காரணமான உள்நாட்டு இடப்பெயர்கள் என்பனவற்றின் தொடர்ச்சியாக மலையகத்தில் மீண்டும் ஒரு அவலநிலை அரச தோட்டத் தொழிலாளர்களுக்கும் பொதுவில் அங்குள்ள மலையக மக்களுக்கும் ஏற்பட வாய்ப்புள்ளது. அதன் தொடர்ச்சியாக அந்நிலைமை பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் தோட்டங்களிலும் இடம்பெறலாம்.

இந்தப் பின்னணியில் அரச தோட்டங்கள் பற்றியும், அங்குள்ள தொழிலாளர்கள் நிலையை பற்றியும், அரசாங்கம் அரச தோட்டங்களில் செய்யப்பட உள்ள மாற்றங்கள் பற்றியும் ஆராய்ந்து அதனடிப்படையில் தற்போதைய நிலையில் சாத்தியமான மக்கள்சார் தீர்வுகள் முன்வைக்கப்படுவதும் அதற்காக அனைவரும் ஒத்துழைத்து செயற்படுவதும் அவசியமாகும்.

## 2. அரச தோட்டங்களின் தோற்றம்

1972ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட காணிச் சீர்திருத்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு[1] அமைய ஒரு நபர் 50 ஹெக்டயருக்கும் அதிகமான காணியை உடமையாக கொண்டிருப்பின் அரசு அவற்றை சுவீகரித்துக் கொண்டது. இதன் காரணமாக பிரித்தானிய கம்பனிகள் மற்றும் உள்ளூர் கம்பனிகளுக்கும் அத்துடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியாருக்கு சொந்தமாக தோட்டக் காணிகள் காணி உச்ச வரம்பு கொள்கைக்கு அமைய காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உடமையாக்கப்பட்டன. அத்தோட்டக்

(1).1972ஆம் ஆண்டு 1ஆம் இலக்க காணி சீர் திருத்தச்சட்டத்தின் பிரிவு 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிகளை நிர்வகிப்பதற்கான பொறுப்பு மாத்திரம் நியதிச் சட்ட நிறுவனங்களான இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்திற்கும் (SLSPC)[2] மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கும் (JEDB)[3] வழங்கப்பட்டன. எனினும் 1978ஆம் ஆண்டு பதவியேற்ற ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல்கள் ஊடாக 1980ஆம் ஆண்டு மேற்குறித்த இரு சபைகளுக்கும் அவைகள் நிர்வகிக்கும் தோட்டங்களின் சொத்துக்கள் உரித்துடையதாக்கப்பட்டன.

1993ஆம் ஆண்டுக்கு பின்னர் இரு அரச சபைகளுக்கு சொந்தமான தோட்டங்களை பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு (Regional Plantation Companies) நீண்ட கால குத்தகைக்குவிடும் தனியார் மயப்படுத்தும் முயற்சிகள் பெருந்தோட்ட மீளமைத்தல் அலகினால் (Plantation Restructure Unit) இடம்பெற்றது. கண்டி, மாத்தளை மாவட்டங்களில் மற்றும் நாவலப்பிட்டி பிரதேசத்தில் உள்ள சில தோட்டங்களின் உற்பத்தி குறைவாக இருந்தமையினால் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் அவற்றை குத்தகைக்கு பெற முன்வரவில்லை. எனவே, அவ்வாறான தோட்டங்கள் தொடர்ந்தும் இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுதாபனத்தினாலும், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினாலும் நிருவகிக்கப்பட்டன. இந்த இரு அரச நிறுவனங்களிடமும் எஞ்சியிருந்த தோட்டங்களில் சிலவற்றை நிருவகிப்பதற்காக கடைசி பெருந்தோட்டக் கம்பனியாக எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது. இது பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் போன்றே கம்பனி சட்டம் மற்றும் 1987ஆம் ஆண்டு 22ஆம் இலக்க சட்டத்தின் உருவாக்கப்பட்ட போதும் திறைசேரியின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுக் கம்பனி (Public Company) என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரச தோட்டங்கள் எனும்போது இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 12 தோட்டங்களையும், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தான 9 தோட்டங்களையும் (இச் சபைக்கு சொந்தமான யாழ்ப்பாணத்தில் உள்ள தோட்டமொன்றினை தவிர்த்து), தனியார் கம்பனியாக இருந்து பின்னர் திறைசேரியினால் நிர்வகிக்கப்படும் எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கு சொந்தமான 10 தோட்டங்களையும் உள்ளடக்கியதாகும். எனவே, குறித்த மூன்று அரச நிறுவனங்களின் கீழ் 31 தோட்டங்களில் உள்ள தோட்டத் தொழிலாளர்களும் ஏனைய மலையக மக்களும் வாழ்ந்து வருகின்றனர்.

### 3. 1990களின் பின்னர் அரச தோட்டங்கள்

இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை என்பன உடைமைக் கொண்டிருந்த தோட்டங்களை பெருந்தோட்டங்கள் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு தனியார் மயப்படுத்துவதற்குக் காரணமாக பின்வரும் மூன்று காரணிகள் முன்வைக்கப்பட்டதாக கலாநிதி காமினி ஹிட்டினயகே குறிப்பிடுகிறார்:

1. இந்த இரு சபைகளும் தோட்டங்களை வர்த்தக முயற்சிகள் என உணர்ந்து செயற்படாமல் அரச திணைக்களம் போல கொள்கைகள் மற்றும் நடவடிக்கை முறைகளை கொண்டு முகாமை செய்யப்பட்டு வருகின்மை,
2. மேற்குறித்த இரு அரச நிறுவனங்களும் முகாமை செய்வதற்கு சிக்கலானதாகவும் மற்றும் பாரிய தன்மையைக் கொண்டும் இருக்கின்றமை, மற்றும்
3. அரச சபைகளின் முகாமைத்துவ முறையானது தொழிலாளர்களின் உற்பத்தித்திறனை ஊக்குவிக்கும் முறைமையைக் கொண்டிருக்காமை.

2.1958ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபன சட்டத்தினால் தாபிக்கப்பட்டதாகும்.

3.1972ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க அரச கமநல கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதாகும்.

4.1982ஆம் ஆண்டு 17ஆம் இலக்க கம்பனிச் சட்டம். இது திருத்தப்பட்டு 2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிச் சட்டம் என அமுலில் உள்ளது.

5.1987ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க பொது கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சியான்மைகளை பொது கம்பனிகளாக

Changes introduced in the Management System in the Tea Plantation – Net Impact & Important Issues, Economic Review, July/August 2001, p. 26 and 26.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் குறைபாடுகள் இருந்தமை உண்மை என்ற போதும் அவை பெருந்தோட்டத் துறையை தனியார் மயப்படுத்தும் நோக்கத்திற்காக சொல்லப்பட்டவை என்பது பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் நிர்வாகத்தின் கீழும் தோட்டங்கள் முறையாக நிர்வகிக்கப்படாமையில் இருந்தது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. மேற்குறித்த குறைபாடுகள் உடைய இரு அரச சபைகளிடமும், அதேவகை நிர்வாக முறைமையை பின்பற்றிய பொதுக் கம்பனியொன்றின் (எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி) ஊடாகவே குறித்த அரச தோட்டங்கள் அனைத்தும் 1993ஆம் ஆண்டில் இருந்து நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

**4. அரச தோட்டங்களின் தோல்விக்கு காரணம் யார்?**

தோட்டங்களை நிர்வகிப்பதிலும் அதனை உற்பத்தித் திறன் கொண்ட தொழிற்துறையாக மாற்றுவதிலும் மேற்குறித்த மூன்று நிறுவனங்களும் தொடர்ச்சியாக தோல்வியடைந்துள்ளன. தொழிற்படையை எடுத்துக் கொள்ளுமிடத்து உத்தியோகபூர்வ தகவல்களின்படி, இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய தோட்ட அபிவிருத்தி சபை ஆகியவற்றில் 1996ஆம் ஆண்டில் 20,895[7] தொழிலாளர்கள் இருந்துள்ள நிலையில் 2015ஆம் ஆண்டில் 8495[8] தொழிலாளர்கள் மாத்திரமே தொழிலாளர்களாக எஞ்சியுள்ளனார். இந்தத் தரவானது அரச அழிவு நோக்கிய வேகமான நகர்வை பிரதிபளிக்கின்றது.

அதேவேளை தொழிலாளர்கள் எண்ணிக்கை குறைவிற்கு சமாந்திரமாக ஒரு ஏக்கர் நிலத்தில் பெறப்படும் தேயிலை உற்பத்தி (உற்பத்தித் திறன்) அரச தோட்டங்களில் வீழ்ச்சியடைந்துள்ளது. 1996ஆம் ஆண்டில் தேசிய மட்டத்தில் 1380 கிலோவாக இருக்கையில் அரச தோட்டங்களில் அது வெறும் 798 கிலோவாகும்[9]. 2015ஆம் ஆண்டில் தேசிய அளவில் தேயிலை உற்பத்தித் திறன் 1239 கிலோவாக இருந்த நிலையில் அரச தோட்டங்களில் 488 கிலோ[10] மாத்திரமே உற்பத்தி செய்யப்படுகிறது.

இப்பின்னணியில் இந்த நிறுவனங்கள் மூன்றும் பாரிய நட்டத்திலேயே இயங்கி வருவதாக கூறப்படுகிறது. பெருந்தோட்டக் கம்பனிகளினால் நிர்வகிக்கப்படும் தோட்டங்களில் உள்ள குறைந்த சமூக நல வசதிகளும்கூட பல அரச தோட்டங்களில் இருப்பதில்லை. மிகவும் குறிப்பாக நட்டத்தை காரணம் காட்டி தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்ற சட்டரீதியாக உரித்துக்களை வழங்காது இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. இப்பிரச்சினைக்கான தற்காலிக தீர்வாக அரச தோட்டங்களில் உள்ள பெறுமதி மிக்க மரங்கள் வெட்டப்பட்டு இயற்கை மீது பாரிய எதிர்வினையாற்றப்பட்டு வருகின்றது.

அரச தோட்டங்களின் இந்த நெருக்கடி நிலைமைக்கு தொழிலாளர்கள் காரணம் எனக் கூற விளையும் எவரும் அதற்கு ஆதாரங்களைக் காட்டத் தயாராக இருக்கவேண்டும். தோட்டத் தொழிலாளர்கள் நிர்வாகத்தில் எவ்வித பொறுப்பையும் கொண்டில்லாத நிலையில் தொழிலாளர்களை இந்த நெருக்கடி நிலைக்கு காரணம் என கூறுவது அபத்தமாகும். பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளில் காணப்படும் உற்பத்தித்திறனுக்கும் அரச தோட்டங்களில் உள்ள உற்பத்தித் திறனுக்கும் இடையில் பாரிய வித்தியாசங்கள் இல்லை. எனினும் அரச தோட்டங்கள் பாரிய நட்டத்திற்கு உள்ளாகி இருக்கின்றமை நிருவாகத்தில் ஊழல்கள் இருப்பதற்கான வாய்ப்புள்ளதையே காட்டுகின்றன.

அரச தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதற்கு இலங்கையை ஆண்ட ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசாங்கம் மற்றும் சுதந்திர கட்சி தலைமையிலான அரசாங்கங்களின் கீழ் இருந்த குறித்த நிறுவனங்களின் நிருவாகிகளின் திறன் இன்மை மற்றும் ஊழல் என்பன காரணமாகும். பெருந்தோட்ட உற்பத்திமுறையை விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப முன்னெடுத்துச் செல்லாது தொழிலாளர்களை மிகையாக சுரண்டுவதனூடாகத் தொழிற்துறையை பேணியமை. அத்துடன் காணிகளை முறையாக பயன்படுத்துவதற்கு எவ்வித திட்டத்தையும் கொண்டிருக்காமை என்பன இன்றைய நெருக்கடிக்கும் அரச தோட்டங்களின் அழிவுக்கும் காரணமாகும்.

7 Sri Lanka Economic and Social Statistics , 2006, p51

8 Sri Lanka Economic and Social Statistics, 2017, p55

9 Sri Lanka Economic and Social Statistics, 2006, p51

10 Sri Lanka Economic and Social Statistics, 2017, p55



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் மலையக அரசியல்வாதிகளில் சிலர் அரச தோட்டங்கள் எதிர்நோக்கியுள்ள நெருக்கடி நிலைக்கும் அழிவு நிலைக்கும் கடந்த ஆட்சியைக் காரணமாக காட்டி, கடந்தகால ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கங்களின் பங்கினை வலிந்து அகற்றும் வகையில் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

**5. அரசாங்கத்தின் தீர்வு என்ன?**

தற்போதைய கூட்டு அரசாங்கத்தில் பொருளாதார நடவடிக்கைகள் ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கை நடைமுறையான நவ தாராளவாத பொருளாதார கொள்கைக்கு உட்பட்டதாக இடம்பெறுவது இரகசியமன்று. எனவே, ஐக்கிய தேசிய கட்சி பெருந்தோட்ட பொருளாதார பிரச்சினையில் ஏனைய பொருளாதார பிரச்சினைகள் போன்றே முன்வைக்கும் ஒரே ஒரு சூத்திரமான மீள் கட்டமைத்தல் நிகழ்ச்சித்திட்டம் (Restructure programme) என்ற தனியார் மயப்படுத்தலை அரச தோட்டங்கள் தொடர்பான பிரச்சினையிலும் முன்வைத்துள்ளது.

அதனடிப்படையிலேயே தற்போது அரச தோட்டங்களை தனியாருக்கு குத்தகைக்கு வழங்கும் அதாவது அரச தோட்டங்களில் முதலீடுகளை செய்யக்கூடிய தனி நபர்களுக்கு தோட்டக் காணிகளை பிரித்துக் கொடுக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது. அதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அத்தோடு ஏற்கனவே வெளிவளப் பெறுகைமுறை (Out-grower model) ஒரு தீர்வாக முன்வைக்கப்பட்டுள்ளது. வெளிவளப் பெறுகைமுறை என்பது "காணி சொந்தக்காரர் ஒருவர் அல்லது காணியை குத்தகைக்கு பெற்றிருக்கும் ஒருவர் விவசாய உற்பத்தியோடு தொடர்புடைய நிறுவனத்திடம் (பல்தேசிய கம்பனிகள், அரசசார்பு நிறுவனங்கள், தனியார் கம்பனிகள்) இருந்து குறித்த உற்பத்தி பயிர் ஒன்றை தனது சொந்த காணியில் அல்லது குத்தகைக்கு பெற்ற காணியில் குறித்த நிறுவனத்திடம் இருந்து தொழில்நுட்ப உதவிகளையும், உற்பத்திக்கான ஏனைய பொருட்களையும் பெற்று பயிர் இட்டு, பராமரித்து அதன் விளைச்சலை குறித்த நிறுவனத்திடமே விற்பதற்கான ஒழுங்குபடுத்தும் ஒரு எழுத்துமூலமான அல்லது வாய்மொழிமூலமான ஒப்பந்தத்தை அடிப்படையாக கொண்டு இயங்கும் உற்பத்தி முறையாகும்" இந்த முறைமையானது அரச தோட்டங்கள் சிலவற்றில் முழுமையாக இடம்பெற்று வருகிறது. அதாவது இங்கு தோட்டத் தொழிலாளர்கள் என்ற முறையில் விடுமுறை நாட்களில் உழைப்பை வழங்குதல் என்றல்லாது, தோட்டத் தொழிலாளர்கள் முழுமையாக குத்தகை விவசாயிகளாக மாற்றப்பட்டு எல்லா நாட்களும் குத்தகைக் காணியில் வேலை செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

**6. திணிக்கப்படும் தீர்வுகளும் தொழிலாளர்களின் எதிர்காலமும்**

**6.1 தனியாருக்கு காணிகள் குத்தகை கொடுப்பதன் மூலம் ஏற்படக்கூடிய பிரச்சினைகள்**

தனியாருக்கு தோட்டக் காணிகள் குத்தகைக்கு வழங்கப்படும் போது அவர்கள் எவ்வகை முதலீடுகள் செய்வர்கள் என்ற வரையறைகள் வழங்கப்படுவதில்லை. அது முதலீட்டாளரின் விருப்பு வெறுப்பின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும். அவை தொழிலாளர்களின் வாழ்வாதாரம் அவர்கள் இதுவரை தோட்டத் தொழிற்துறையில் பெற்றுள்ள திறன்களை அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும் என்றோ இல்லை. எனவே, இந்த தனியார் மயப்படுத்தும் திட்டத்தினூடாக அரச தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரம் நிச்சயமற்ற நிலைக்குத் தள்ளப்படும்.

வாழ்வாதார பிரச்சினை ஏற்படும் போது தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத்திற்காக வாழ்விடங்களை விட்டு முதலில் தற்காலிகமாகவும், பின்னர் நீண்டகாலத்தில் நிரந்தரமாகவும் தமது சொந்த இடங்களைவிட்டு வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவர். இது மலையக மக்கள் குறிப்பிட்ட பிரதேசங்களில் செறிவாக வாழும் நிலைமையை குறைக்க வாய்ப்பளிக்கும். திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாக கொண்டு மலையக மக்களின் அனுமதி இன்றி ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இதில் உள்ளது. அத்துடன் இது சிங்கள தமிழ் மக்களிடையே இன கூர்வுணர்வு சார்ந்த விடயம் என்ற வகையில் இன விரிசல்களுக்கும் வித்திடலாம்.

தனியாருக்கு தோட்டக் காணிகள் குத்தகைக்கு வழங்கப்படும் தோட்டங்கள் என்ற கட்டமைப்பு சிதைக்கப்படும். தோட்டக் குடியிருப்புகள் அரசின் சிவில் நிர்வாகத்தினுள் மற்றும் அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகுகளுக்குள் முழுமையாக உள்வாங்கப்படாதிருக்கும் நிலையில் இப்போது பெயரளவில் அரச தோட்டங்களில் உள்ள தோட்ட நிர்வாகத்தையும் எவ்வித மாற்றும் இன்றி இல்லாமல் செய்வது மக்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தக்கூடியதாகும். வெளிவளப் பெறுகை முறையின் கீழ் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் தோட்டங்களில் தோட்ட நிருவாகங்கள் இல்லாமல் போனமையால் மக்கள் பாதிப்படைந்து வருகின்றமையை காணலாம்.[11] தோட்டங்களின் உற்பத்திக்கான காணிகளில் இருந்து மலையக மக்கள் வாழும் இடங்களை பிரித்து குடியிருப்பு பிரதேசங்களாக மாற்றுவது மலையக மக்களை இலங்கையில் பூரண சிவில், அரசியல் உரிமையுடைய பிரஜைகளாக மாற்றுவதற்கான அத்தியாவசிய முன்நிபந்தனையாகும். எவ்வாறாயினும் அரச தோட்டங்கள் தனியாருக்கு குத்தகைக்கு கொடுக்கப்படும் போது குடியிருப்பு பிரதேசங்களாக அரசு அங்கீகரிப்பதில் தற்போதுள்ள நிலைமையை மேலும் சிக்கலுக்குள்ளாக்கும்.

### 6.2 வெளிவளப் பெறுகை முறையும் பிரச்சினைகளும்

இம்முறையானது தற்போது அரச தோட்டங்கள் பலவற்றில் பிராந்திய பெருந்தோட்டங்களைப் போலல்லாது முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனூடாக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் யதார்த்தத்தில் சிறுவுடைமையாளர்களாக இல்லாத போதும் சிறுவுடைமையாளர்கள் மன நிலை ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தங்களின் தொழிற்சங்க, சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்காக கூட்டாக போராடிய பண்பாடு சிதைவடையும்.

தொழிலாளர்கள் என்ற வகையில் இலங்கையில் உள்ள தொழில் உரிமைச் சட்டங்கள்[12] மற்றும் சமூக பாதுகாப்புச் சட்டங்களின்[13] கீழான பாதுகாப்புகள் அனைத்தையும் தொழிலாளர்கள் இழக்க வேண்டி வரும். அத்துடன் தற்போது பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பில் செய்து கொள்ளப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்த ஏற்பாடுகளின் கீழுள்ள குறைந்த பட்ச உரிமைகளையும் தொழிலாளர்கள் இழக்க வேண்டிய வரும். அத்தோடு மேலே குறிப்பிட்டது போல் இம்முறையின் கீழ் தோட்ட நிர்வாகம் மாற்று முறைகள் இல்லாமல் சிதைக்கப்படக்கூடியதாகும்.

### 7. தீர்வுகள் பற்றிய சில முன்மொழிவுகள்

அரச தோட்டங்கள் தனியாருக்கு கொடுக்கப்படுவது போராட்டங்களினூடாக தடுப்பதற்கு தோட்டத் தொழிலாளர்களுக்கு முடிந்துள்ள போதும் தோட்டங்கள் நிர்வாக சீர்கேடுகள் காரணமாக ஏற்பட்டுள்ள அழிவை சீர்செய்வது கடினமாகும். மக்கள் களத்தில் ஒரு பரந்த ஐக்கியத்துடன் ஜனநாயக முற்போக்கு சக்திகளினால் அணித்திரட்டப்பட்டு இப்பிரச்சினைக்கு முகம்கொடுக்கும் சூழலும் இல்லை. இப்பின்னணியில் இப்பிரச்சினைத் தொடர்பாக அரசாங்கத்திற்கும் மலையகத்தின் மைய நீரோட்ட தொழிற்சங்க மற்றும் பாராளுமன்றவாத அரசியல் அமைப்புகளுக்கும் பின்வரும் விடயங்களை அமுல்படுத்த அழுத்தத்தைக் கொடுக்கவேண்டிய தேவை காணப்படுகிறது.

1 .தோட்டக் கட்டமைப்பு மாற்றம் எதுவுமின்றி சிதைக்கப்படுவதைத் தடுக்கும் வகையில் உடனடியாக பெருந்தோட்ட காணிகளில் பெருந்தோட்ட உற்பத்திக்கான காணிகளில் இருந்து குடியிருப்பு காணி (மக்கள் வாழும் வீடு, ஏனைய சமூக தேவைகளுக்கான காணி) பிரிக்கப்பட்டு அவை அரசின் குடியிருப்புகளாக அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

2. அரச தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களுக்கும், அதேபோல் அங்கு வாழும் தோட்டத் தொழிலாளர்கள் அல்லாதவர்களுக்கும் தனி வீடுகளை அமைப்பதற்காக 20 பேர்ச் காணி உறுதியுடன் வழங்கப்படல் வேண்டும். அரச தோட்டங்களில் உள்ள தொழிலாளர் குடும்பங்கள் உட்பட பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழ் உள்ள தோட்டங்களில் உள்ள ஒவ்வொன்றும் 20 பேர் காணியை தமக்கான வீடுகளை நிர்மானித்துக் கொள்வதற்கான உரிமையை பெற்றுள்ளனர். காணி சீர்திருத்த சட்டத்தின் பிரிவு 3(3)ஆ வின் பிரகாரம் பயிர்ச் செய்கை காணியின் உச்ச வரம்பை அளவிடும் போதும் தோட்டங்களில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 20 பேர்ச் காணி எனக் கணக்கிட்டு அவற்றை நீக்க வேண்டும் என

11 பார்க்க எஸ். றொஷாந்தினி, மரணச் சான்றிதழைக்கூட பெற முடியாது தவிக்கும் மகா ஊவா தோட்ட மக்கள் தோட்டம் துண்டாடப்பட்டதன் விளைவு!, உதய சூரியன், 09.02.2017. பக். 03.

12 எடுத்துக்காட்டாக தொழிற்சங்க கட்டளைச் சட்டம், தொழில் பிணக்குச் சட்டம், தொழில்பெறுநர் நட்டஈட்டுச் சட்டம்

13 எடுத்துக்காட்டாக ஊழியர் சேமலாப நிதியச் சட்டம், ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம், ஊழியர் சகாய நிதிச் சட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டுள்ளது. எனவே, இதனூடாக அரச தோட்டங்களில் உள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் 20 பேர்ச்சஸ் காணியை வழங்குவதற்கான சட்ட அடிப்படை கிடைக்கிறது. இதற்கு மேலதிகமாக வசிப்பிடத் தேவைக்காக கிராமப்புறங்களில் (நகரங்களில் அல்ல) உள்ள மக்களுக்கு 20 பேர்ச்சஸ் காணியை வழங்கும் நடைமுறை காணப்படுகிறது. காணி கச்சேரி முறை மற்றும் அரசின் ஏனைய விசேட ஏற்பாடுகள் ஊடாக வழங்கப்படும் போது 20 பேர்ச்சஸ் காணியே வசிப்பிடத்திற்காக வழங்கப்படுகிறது. எனவே, காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் இருந்த தோட்டக் காணிகள் தற்போது அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைகளிடம் உள்ள போதும், மக்களின் குடியிருப்பு தேவைக்கான காணியை காணி சீர்திருத்த ஆணைக்குழு மீண்டும் பெற்று அல்லது வேறு ஏற்புடைய நடவடிக்கை முறையை பின்பற்றி தொழிலாளர் குடும்பங்களுக்கும் மலையகத்தில் வாழும் மக்களுக்கும் ஒரு குடும்பத்துக்கு 20 பேர்ச் காணியை பெற்றுக் கொடுத்தல் வேண்டும். 7 பேர்ச்சஸ் வழங்குவது என்பது மலையக மக்களை மீண்டும் பாரபட்சமாக நடாத்தும் நடவடிக்கையாகும்.

3. விவசாயத்திற்காக பிரஜைகளுக்கு காணிகளைப் பகிர்ந்தளிக்கும்போது விவசாயத்திற்கும் வசிப்பதற்குமாக அரை ஏக்கர் (80 பேர்ச்சஸ்) காணி வழங்கும் நடைமுறை இலங்கையில் உள்ளது. அத்தோடு, வருடாந்த பெரும் போகச் செய்கைக்காக ஒரு ஏக்கர் காணி வழங்கும் நடைமுறையும் உண்டு. அதன் அடிப்படையில் அரச தோட்டங்களில் வாழும் தொழிலாளர்களுக்கு விவசாய நடவடிக்கைகளுக்காக அரை ஏக்கர் காணி வழங்கப்படல் வேண்டும். இது அரசாங்கத்தின் கையளிப்பாக (grant) வழங்கப்படலாம். இக் காணியில் தேயிலை அல்லது வேறு பயிற்செய்கையை மேற்கொள்வதற்கான மானியங்கள் உட்பட உதவிகளையும், தேயிலை மற்றும் ஏனைய விளைச்சலை உத்தரவாத விலையில் அரசு அல்லது கம்பனிகள் கொள்வனவு செய்வதற்கும் ஏற்பாட்டை செய்யவேண்டும்.

## 8. முடிவுரை

அரசின் பொதுவான நடைமுறையாக உள்ள விடயங்களையும் அல்லது உரிமைகளையும் மலையக மக்கள் போராடி பெற வேண்டிய நிலையிலேயே உள்ளனர். அரச தோட்டங்களில் உள்ள தோட்டத் தொழிலாளர்களின் இருப்பையும், தொழில் உரிமைகளை உறுதி செய்வதற்கும், வாழ்வாதாரத்துக்கான ஏனைய கோரிக்கைகளை வெற்றி கொள்வதற்கும் அரச தோட்டங்களில் குடியிருப்புகள் வரையறுக்கப்படுவதும், காணியுரிமையுடனான வீட்டுரிமை உறுதி செய்யப்படுவதும், வாழ்வாதாரத்திற்கான காணியைப் பெற்றுக்கொள்வதும் அத்தியாவசியமாகும். இதனை உணர்ந்து செயற்படும் போதே மலையக மக்களுக்கு சரியான மார்க்கத்தை எட்ட முடியும்.


துணைநின்றவை

ஆய்வு சஞ்சிகை கட்டுரைகள்

Gamini Hettinayage, Changes introduced in the Management System in the Tea Plantation – Net Impact & Important Issues, Economic Review, July/August 2001.

நியதிச்சட்டங்கள்

1972ஆம் ஆண்டு 1ஆம் இலக்க காணி சீர்திருத்தச்சட்டம்

1958ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபன சட்டம் தாபிக்கப்பட்டதாகும்.

1972ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க அரச கமநல கூட்டுத்தாபனங்கள் சட்டம்

அறிக்கைகள்

Sri Lanka Economic and Social Statistics , 2006, Central bank of Sri Lanka

Sri Lanka Economic and Social Statistics, 2017, Central bank of Sri Lanka

கூட்டு ஒப்பந்தங்கள்

2003ஆம் ஆண்டு 13ஆம் இலக்க கூட்டு ஒப்பந்தம்.

2016ஆம் ஆண்டு 35ஆம் இலக்க கூட்டு ஒப்பந்தம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கையில் வாழும் மலையகத் தமிழர்களிடையே மாறிவரும் சமூக, கலாசார அரசியல் அடையாளங்கள்

ஏ.ஆர்.நந்தகுமார் (ஆய்வாளர், சமூக செயற்பாட்டாளர்)

பின்னணி

மலையக மக்கள் 200 வருடகால வரலாற்றைக் கொண்டபோதிலும் இந்நாட்டின் குடிமகனாக எவ்வித நிபந்தனைகளுமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டு 14 வருடங்களே ஆகின்றன. அகதிகளாக தஞ்சம் கோருபவர்களுக்கும் தொழில் நிமித்தம் வெளிநாடு செல்பவர்களுக்கும் 5 வருடத்தில் குடியுரிமை கிடைக்கும்போது நாட்டின் தேசிய அபிவிருத்தியில் பாரிய பங்குவகித்த இம்மக்களுக்கு பூரண குடியுரிமைபெற பல சகாப்தங்கள் கடந்தும் அவர்களுடைய குடியியல் உரிமைகளை பெற பல போராட்டங்களை தடைகளை தகர்த்தெரிய வேண்டியிருந்தது வேதனைக்குரிய வரலாறு. நாட்டின் பொருளாதாரத்திற்கும், வாக்கு வங்கிகளுக்கும் இம்மக்கள் பயன்படுத்தப்படுகின்றார்களே தவிர ஒரு நாட்டின் குடிமகனுக்குரிய அதிகமான சலுகைகளில் இவர்கள் அந்நியப்படுத்தப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். அரசொன்றை நிறுவுவதற்கு இம்மக்களின் வாக்குகள் இலாபகரமாக வஞ்சனையுடன் பயன்படுத்தப்படுகிறது. இலங்கை வரலாற்றில் முதன்முதல் இன அடக்குமுறைகளுக்கு உட்பட்டவர்கள் மலையக மக்களே. குடியுரிமை பறிக்கப்பட்டது, வாக்குரிமை மறுக்கப்பட்டது, நாடு கடத்தப்பட்டது, நாடற்றோராக்கப்பட்டது, இனவெறித்தாக்குதல்களுக்கு உட்பட்டது, அரசியல் அநாதைகளாக்கப்பட்டது, உள்நாட்டு வெளிநாட்டு இடப்பெயர்வுகள், அடிப்படைத் தேவைகள் கூட கிடைக்கப்பெறாமை, இலாபமான கூலிகளாக நடத்தப்பட்டமை, இவர்களுடைய வதிவிடங்கள் அரசநிர்வாக கட்டமைப்புக்குள் உள்வாங்கப்படாமை, பல வருடங்களாக இலவசக்கல்வி, சுகாதாரம் போன்ற சமூகநலன் ஓம்பல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி திட்டங்களில் தேசிய நீரோட்டத்திற்குள் உள்வாங்கப்படாமல் இருந்தமை, யுத்தத்தினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல இன்னல்களுக்கும் இழப்புக்களுக்கும் ஆளானமை என அடுக்கிக்கொண்டே போகலாம். இவ்வாறான சூழமைவில் எம்மக்களின் இருப்புகுறித்து ஆழந்து சிந்திக்கவேண்டிய நிலையில் உள்ளோம்.

ஒரு சிறுபான்மை இனத்தின் இருப்பு என்பது அந்நாட்டின் தேசிய அரசியல், பொருளாதார, சமூக, கலாசார அசைவியக்கத்தில் தாக்கம் செலுத்துவதாகவும் அவற்றினைத் தீர்மானிக்கும் சக்தியில் ஒன்றாக இருத்தலே அச்சிறுபான்மை இனத்தின் இருப்பினை தீர்மானிக்கும். இலங்கையில் 20 இனங்கள் பதிவிலிருந்தும் பல இனங்களின் அடையாளங்கள் இயங்குதன்மையற்றுபோயுள்ளமைக்கு காரணம் அது அந்நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார அசைவியக்கத்தில் அவ்வினத்தின் தாக்கம் மிகக்குறைவாக இருக்கின்றமையே காரணமாகும். இலங்கையினுடைய பொருளாதாரத்தில் மலையக மக்கள் சரித்திர பங்களிப்பினை வழங்கியிருக்கின்றார்கள். தேயிலை மற்றும் பெருந்தோட்ட பயிர்கள் மூலம் இலங்கைக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்ததுடன் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கியவர்கள் மலையக மக்களே. அத்துடன் சுதந்திரம் முதல் இன்றுவரை ஆட்சியமைப்பதற்கும், ஆளும் கட்சியின் பெரும்பான்மையை தீர்மானிப்பதிலும் மலையக அரசியல் பெரும் பங்கை வகிக்கின்றது. அத்துடன் மலையக கலை, கலாசார அம்சங்கள் இன்றளவிலும் தனித்தன்மையுடையதாக பின்பற்றப்பட்டு வருகின்றமை அவ்இனத்தின் இருப்பிற்கு அச்சாணியாக விளங்குகின்றது.

பொதுவாக, பெரும்பான்மை மக்களின் சமூக, கலாசார நியமங்கள், விழுமியங்கள் மற்றும் வழக்காறுகள் எப்போதும் மேலெழுந்து செயல் துடிப்புள்ளதாயும் ஏனைய இன, மொழி, மத வழக்காறுகளின் மீது ஆதிக்கம் செலுத்துவதாக அமையும். காலப்போக்கில் அதன் ஆதிக்க செல்வாக்கினால் சிறுபான்மை மக்களின் வழக்காறுகளில் இயல்பாகவே வீழ்ச்சி ஏற்பட்டு பெரும்பான்மை இன, மத, கலாசாரத்திற்குள் உள்வாங்கப்படுவார்கள். பெரும்பான்மையின் செல்வாக்கானது அரசியற் கொள்கையிலும் ஊடுருவி சிறுபான்மையின் இருப்பினை கேள்விக்குறிக்குள்ளாக்கும் தன்மையுடையது. பெரும்பான்மையின் அடையாளங்கள் யாவும் தேசிய அடையாளங்களாக மாற்றப்பட்டு அதனை நாட்டின் குடிமகனாக சிறுபான்மையின் மக்களும் அதனை கட்டாயம் பின்பற்றவேண்டும் என்ற சட்டதிட்டங்களை உருவாக்கிக்கொள்வதும் இதன் வடிவம் ஒன்றே. இன்று பல இனங்கள் வழக்கொழிந்துபோக இவ்வாறான செல்வாக்கே காரணமெனலாம். உதாரணமாக, பிரான்சில், ஜேர்மனிய அல்சேஸ் (Alcase) என்ற தனித்துவமான இனம் பிரென்ச் இனமாக பலவந்தமாக மாற்றப்பட்டமையைக் குறிப்பிடலாம். டெனிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணத்தை சுவிஸ் தோல்வியுறச் செய்தபின் அங்குவாழ்ந்த டெனிஸ் மக்கள் அதாவது டென்மார்க் மக்களுக்கு சுவிஸ் தனது கலாசாரத்தை பலவந்தமாக புகுத்தியது. ஜப்பான் மற்றும் கொரியா ஆகிய நாடுகளிலும் இத்தகைய நிகழ்வுகள் நடந்துள்ளன.

இலங்கையைப் பொறுத்தளவில் இங்கு ஏற்பட்டிருக்கும் இனச்சுத்திகரிப்பு, இனக்கலப்பு மற்றும் ஓரினமாதல் செயற்பாடானது இயல்பாக ஏற்படுபவை அல்ல. பெரும்பான்மை அரசும், பேரினவாதிகள், மதவாதிகள், பிரிவினைவாதிகள் மற்றும் தேசியவாதிகளால் திட்டமிட்ட வகையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் மற்றும் பலவந்தமாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. சட்டத்தின்முன் யாவரும் சமன் என்ற அரச கொள்கை பௌத்தத்திற்கு முன்னுரிமை என்ற கொள்கையில் முரண்பட்டு இல்லா தொழிக்கப்படுகின்றது. சிறுபான்மை இனங்கள், மொழிகள் மற்றும் மதங்கள் தேசிய ரீதியில் பெயரளவில் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் சிறுபான்மை மக்களின் இருப்புக்களை பேணிக் கொள்வதற்கான நடைமுறைச் சிக்கல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்ட சூழ்ச்சிகளாகவே தென்படுகின்றன.

மலையக மக்களின் பண்பாட்டு அடையாளங்களை பேணிப் பாதுகாத்து அன்றாட வாழ்வில் ஒரு சாதாரண மலையக இனத்தவனாக மார்தட்டி வாழக்கூடிய சூழலும், இந்நாட்டின் குடிமகனாக அபிவிருத்தியை எவ்வித பாகுபாடுமின்றி அனுபவிப்பதற்குரிய சூழல் மிக அரிதாகவே காணப்படுகின்றது. மலையக மக்கள் அதிகமாக வாழும் நுவரெலியா மாவட்டத்திலும் பொது நிறுவனங்களில் சிங்கள மொழியையே பயன்படுத்தவேண்டியிருக்கின்றது. சிவனொளிபாதமலை/ ஆதாமின்மலை இன்று ஸ்ரீபாத என பௌத்த புனித ஸ்தலமாக மாறியிருக்கின்றமையும் அப்புனித பூமியிலும் அதனைச் சுற்றியும் எம் மக்கள் வாழ்ந்தாலும் இன்று எம் இன அடையாளங்களுடன் அங்குசென்று வழிபட முடியாத அளவிற்கு கையகப்படுத்தப்பட்டுள்ளமை வருத்தத்திற்குரியது. மலையக அடையாளத்தைப் பாதுகாக்கக்கூடிய சூழல் ஏனைய மாவட்டங்களை விட ஒப்பீட்டளவில் நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. ஆனால் மலையக மக்கள் செறிவு குறைவாக இருக்கின்ற மாவட்டங்களான கண்டி, மாத்தளை, கேகாலை, மொனராகலை, காலி, மாத்தறை, கம்பஹா, களுத்துறை, குருநாகல், வடகிழக்கு பிரதேசம் என பார்க்கும் போது அவர்கள் பேரின பொதுப் பண்பாட்டுமயமாதலுக்குள்ளாகி அவர் தம் பண்பாட்டு அடையாளங்களை பிரயோகப்படுத்த முடியாதளவிற்கு அந்நியமயப்படுத்தப்பட்டுள்ளமை ஓரினமாதல் மற்றும் இனசுத்திகரிப்பிற்கு வழிசமைக்கின்ற ஒன்றாகவே இருக்கின்றது. இந்தக் கட்டுரையானது மலையக மக்கள் சிதறிவாழும் மாவட்டங்களில் அவர்கள் எவ்வாறு சமூக, கலாசார மற்றும் அரசியல் ரீதியாக அந்நியப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்பது பற்றி ஆராய்கிறது.

## மக்கள் தொகையும் இருப்பும்

1911 ஆம் ஆண்டிலிருந்து 1953ஆம் ஆண்டுவரை மேற்கொள்ளப்பட்ட 5 சனத்தொகை கணக்கெடுப்புக்களிலும் இலங்கையின் இரண்டாவது பெரும்பான்மை இனமாக இருந்தது மலையக மக்களே. அது மொத்த சனத்தொகையில் 12-15 சதவிகிதமாகும். அதற்கு அடுத்தடுத்ததாக மேற்கொள்ளப்பட்ட இரண்டு கணக்கெடுப்புக்களிலும் 3வது பெரும்பான்மையாகவிருந்த மலையக மக்கள் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட 3 கணக்கெடுப்புக்களிலும் 4வது இடத்தில் இருக்கின்றமை இவ்வினத்தின் வீழ்ச்சியைக் காட்டுகிறது.

கடந்த 130 வருடங்களில் முஸ்லிம் மக்களின் சனத்தொகை 6 இல் இருந்து 9 சதவிகிதமாக உயர்ந்துள்ளது, சிங்களவர்களின் சனத்தொகை 18,46600 இல் இருந்து 15,250,081 ஆக அதிகரித்துள்ளதுடன் அவர்களின் வரலாற்று இலட்சியமான இரண்டில் மூன்று பெரும்பான்மையை நோக்கி நகர்ந்தவண்ணம் உள்ளது. அதாவது, சதவிகிதத்தில் 66 இல் இருந்து 74 ஆக திட்டமிட்டவகையில் அதிகரித்துள்ளது. இலங்கைத் தமிழரின் சனத்தொகை 25 சதவிகிதத்தில் இலிருந்து 11 ஆக குறைந்துள்ளது. மலையகத் தமிழரின் சனத்தொகையோ அதன் சதவிகிதத்தில் 15 இல் இருந்து 4 ஆக சடுதியாக குறைக்கப்பட்டுள்ளது கண்கூடு. இலங்கைத் தமிழரின் சனத்தொகை 14 சதவிகிதத்திலும் மலையக மக்களின் சனத்தொகை 11 சதவிகிதத்தாலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்ற பிரேரணையான இந்தியவம்சாவளியின் மக்களை நாடற்றவராக்கி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அடையும் பேரினவாதத்தின் இலட்சியம் அடையப்பெற்றிருப்பதை அவதானிக்கமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிவரும் கணக்கெடுப்புக்களிலும் அதன் சதவிகிதம் குறையும் அல்லது குறைக்கப்படும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. மலையக மக்கள் மீதான தொடர்ச்சியான வரலாற்று பாகுபாடுகள், பாரபட்சங்கள், காழ்ப்புணர்ச்சி, புறமொதுக்கல்கள், இனவெறித்தாக்குதல்கள் என அவர்கள் முழுமையாக அந்நியப்படுத்தப்பட்டமையால் தொடர்ச்சியாக தாயகம் திரும்பியவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சனத்தொகை கணக்கெடுப்பில் 1971-1981 வரையான காலப்பகுதியில், அதாவது 10 ஆண்டுக் காலப்பகுதியில் 355,950 பேராக குறைந்து மிகப்பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. அத்தோடு உள்நாட்டு இனவன்முறைகளால் வடக்கு கிழக்கிற்கு இடம்பெயர்ந்தவர்கள் ஏறத்தாழ 150,000 பேர் என அறிக்கையொன்று கூறுகிறது. ஆனால், கடைசியாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் வடக்கு கிழக்கில் வாழும் மலையக மக்கள் வெறுமனே 11,940 என குறிப்பிடப்பட்டிருக்கின்றது. வடகிழக்கில் ஏறத்தாழ 5இலட்சம் மலையக மக்களின் இனஅடையாளங்கள் மறைக்கப்பட்டிருக்கின்றது. கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகம் செய்த ஆய்வொன்றில் வவுனியாவில் 40% கிளிநொச்சியில் 45%, முல்லைத்தீவில் 30% மலையக மக்கள் வாழ்கின்றமை அறியமுடிகின்றது. புதிய தலைமுறைகளையும் தங்களையும் சமூக அங்கீகாரம் கருதி இலங்கைத் தமிழர்களாக பதிவுசெய்துள்ளமை சனத்தொகை வீழ்ச்சிக்கு காரணமாகும். அத்துடன் வெளிநாட்டு இடப்பெயர்வுகளை தவிர்த்து பார்க்கும் போது உள்நாட்டில் வாழும் மலையக மக்களின் சனத்தொகை வளர்ச்சியில் எதுவித முன்னேற்றங்களும் ஏற்படாமல் குறைந்துகொண்டு போவது மலையகமக்கள் இன்று திட்டமிட்ட வகையில் சனத்தொகை கணக்கெடுப்புக்களில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளமை கண்கூடு.

மலையக சனத்தொகை வீழ்ச்சிக்குரிய காரணிகளுள் மிகப்பிரதானமானது ஏற்கனவே கூறியது போல, தாயகம் திரும்பியோர், வெளிநாட்டு இடப்பெயர்வுகள், ஏனைய நாடுகளுக்கு புகலிடம் கோரியோர் மற்றும் இடம்பெயர்ந்தோர் என்பனவாகும். அத்துடன், வடகிழக்கில் வாழும் மலையக மக்கள் அங்கீகாரம் வேண்டி தங்களுடைய பிள்ளைகளை இலங்கைத் தமிழர்களாக பதிவுசெய்தமை, கணிசமானோர் தாங்களாகவே சனத்தொகை கணக்கெடுப்புக்களில் இலங்கைத் தமிழர்களாக பதிவுசெய்தமை, மலையகத்தில் தொழில் மற்றும் ஏனைய நலன்களை பெற்றுக்கொள்வதற்காக இலங்கைத் தமிழர்களாக பதிவுசெய்கின்றமை, வெளிநாட்டுத் தொழில்களுக்காகச் சென்றவர்களின் வீடுகளில் உள்ளவர்கள் கணக்கெடுப்புக்கு உள்வாங்கப்படாமையும், வெளி மாவட்டங்களில் தொழில் புரிகின்றவர்களின் வசிப்பு புதுப்பிக்கப்படாமையும் வீழ்ச்சிக்குரிய காரணிகளாகும். மேலும் சிவம் பிரபாகரனின் குறிப்பின்படி தென் மாகாணத்தில் காணப்படுகின்ற அநேகமான சிறு தேயிலை உற்பத்தியாளர்களின் தோட்டங்களில் வசித்து வரும் பெரும்பாலான தமிழர்கள் சூழ்நிலையின் நிமித்தம் தங்களை சிங்களவர்களாகக் காட்டிக் கொள்கின்றமை அல்லது கட்டாயத்தின் பேரில் அடையாளத்தை மாற்றி சிங்களவர்களாக பதிந்தமை, கணக்கெடுப்பின்போது பல தமிழர்கள் கணக்கெடுப்பாளர்களினாலேயே சிங்களவர்களாகப் பதியப்பட்டுள்ளமையும், தென் மாகாணத் தோட்டங்களிலிருந்து வெளியேறி தென் மாகாண நகரங்களில் குடியேறி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்போரும், மீன்பிடித் தொழில் செய்வோரும், அரச உத்தியோகத்திலுள்ளவர்களும் தங்களை முழுமையாக சிங்களவர்களாக மாற்றிக் கொண்டமை, நகர சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்ட மாவட்ட நகரங்களில் தொழில் புரிகின்ற தமிழர்கள் முழுமையாக சிங்களவர்களாக மாறுகின்ற நிலைமையும் வீழ்ச்சிக்குரிய காரணிகளுள் கவனத்தில் கொள்ளத்தக்கது. பேராதனைப் பல்கலைக்கழகப் புள்ளிவிபரவியல் மற்றும் பொருளியல் துறைத்தலைவர் எஸ்.விஜேசந்திரன் அவர்களின் கூற்றின்படி கடந்த சனத்தொகை கணக்கெடுப்பில் தமிழர்களின் சனத்தொகை 20% ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. மறைமுக குடும்ப கட்டுப்பாட்டு திட்டங்கள், அதிகரித்த கல்வியறிவும் தனிக்குடும்ப மனப்பாங்குகளும், பிந்திய திருமணங்கள், மதமாற்றங்களுக்கும், இனமாற்றங்களுக்கும் இவை போன்ற இதரபல காரணங்களாலும் சனத்தொகையில் சடுதியாக வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றன.

**மொழிப்பயன்பாடும் இருப்பும்**

மொழி என்பது அத்தியாவசியமான ஒரு சமூக அடையாளமாக இருந்து வந்துள்ளது. எந்தவொரு சமுதாயத்தினதும் அக உறவாடல்களில் மொழியின் பங்கு முதன்மையானது. தமிழர்கள் வாழும் தென்னிலங்கை தோட்டங்களில் குறிப்பாக காலி, மாத்தறை, இரத்தினபுரி, கம்பஹா, களுத்தறை, மாத்தளை மற்றும் குருநாகல் பகுதிகளில் அதிகமான அறிவிப்புப் பலகைகள் கூட சிங்கள மொழியிலேயே உள்ளன. இவற்றை வாசிப்பதற்கும், அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் சிங்கள மொழி இங்கு மறைமுகமாக கட்டாயமாக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, குருநாகல், அனுராதபுரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கம்பஹா, மொனராகலை போன்ற மாவட்டங்களில் கிராமங்களில் சிங்கள மக்களுடன் வாழும் கணிசமான தமிழ் மக்களின் ஆடைகள் இன்று சீத்தை, ஹெட்ட (ப்லவ்ஸ்) அணிந்து, பொட்டு வைக்காமல் தலைமுடியை கொண்டையிட்டு சிங்களத்தை சரளமாக பேசிக்கொண்டு சிங்களத்தமிழராக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். மொனராகலை மாவட்டத்தில் உள்ள தமிழர்கள் பாடசாலை, நகர்புறங்கள் மற்றும் பொதுவிடங்களுக்கு கிராமத்தை ஊடுறுத்தே செல்லவேண்டியிருக்கிறது. அவர்கள் சாரி கட்டிச் சென்றாலோ, பொட்டு வைத்துச் சென்றாலோ அல்லது ஏதோவொரு தமிழ் அடையாளங்களுடன் சென்றால் சிங்கள மக்கள் கல்லெறிவது இன்றும் வழக்கமாகவுள்ளது. இது அலியாவத்தை தோட்டத்தில் அதிகமாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஆகவே, தமிழ் மக்கள் சிங்களவர்கள் போல் ஆடையணிந்து சிங்களத்தை கற்று, சிங்களத்திலேயே பேசி, தங்களுடைய பெயர்களையும் சிங்கள பாணியில் சூட்டிக்கொண்டு வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

“எங்களுக்குக் குழந்தைகளை தொட்டிலில் இட்டுத் தமிழில் தாலாட்டுவதற்குக் கூட உரிமை கிடையாது” என மாத்தறை மாவட்டத்தில் சமூகப் பணியில் ஈடுபட்டுள்ள ஒரு இளம் யுவதி குறிப்பிட்டுள்ளார். மாத்தறை மாவட்டத்தில் கிருவானகங்க தோட்டத்தில் ஞாயிறு 'தஹம் பாசல' (பௌத்த அறநெறி பாடசாலை) முடிந்து அந்த பௌத்த அறநெறி பாடசாலை ஆடையில் தோட்டத்திலுள்ள வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது சிறுமிகளுடனான உரையாடலில் அவர்கள் கூறியதாவது “என் அம்மாவின் பெயர் புஸ்பகலா, அப்பாவின் பெயர் விஸ்வநாதன், எனது வீட்டுப் பெயர் அனுசா, பாடசாலையில் எனது பெயர் திலினி” - இது ஒரு சிறுமியின் பதில். “என் அம்மாவின் பெயர் சரோஜா, அப்பாவின் பெயர் பெருமாள், எனது வீட்டுப் பெயர் சோபா, பாடசாலைக்கு கிசானி” - இது மற்றொரு சிறுமியின் பதில். “அம்மாவின் பெயர் குமாரி, அப்பா செல்லமுத்து, மஞ்சு என என்னை வீட்டில் அழைப்பார்கள், ஆனால், பாடசாலையில் நான் தேசாணி” - இது இன்னுமொரு சிறுமியின் பெயர் பற்றிய விளக்கம். (குறிப்பு-சி.பிரபாகரனின் கட்டுரையிலிருந்து)

**மத அடையாளங்கள்**

அன்றாட வாழ்விலும் பண்பாட்டிலும் மத நம்பிக்கைகள், மதஞ்சார்ந்த விழாக்கள் மற்றும் சடங்குகள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொண்டுள்ளன. இந்துக் கோவில்களும் தமிழரின் குல தெய்வங்களும் இன்று சிங்கள வடிவம் பெற்று படிப்படியாக பௌத்தத்தின் ஒரு பிரிவாக மாறி வருகின்ற நிலையையும் காணலாம். கதிர்காமம் முற்றுமுழுதாக சிங்கள அதிகாரத்துகுட்பட்டதல்லாமல், இந்துக்கடவுள்கள் பௌத்தக்கடவுள்களாக பெயர்மாற்றம் பெற்று இன்று பௌத்தபூமியாக மாறிவந்திருக்கின்றது. இன்னும் சில வருடங்களில் தமிழர்கள் அனுமதி மறுக்கப்படும் என்பதற்கும் ஐயமில்லை. 2011 வரை இலங்கையில் 2500 இந்து ஆலயங்கள் மற்றும் 400 கிறிஸ்தவ தேவாலயங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இரத்தினபுரியில் கோணகும்புர தோட்டமக்கள் 2015 இல் காமன்கூத்தினை அனுஸ்டிக்கும் வேளை மன்மதனை எரிக்கும் தருவாயில் மன்மதன் என்பது துட்டகெமுனு மன்னன் என தவறான புரிதல்கள் அங்கு வாழும் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டு தமிழ்மக்கள் மீது தாக்குதல் சம்பவங்கள் ஏற்படுத்தப்பட்டு அது ஒரு பெரிய இனக்கலவரமாக மாறிய சம்பவங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அதன்பின்னர் அம்மக்கள் காமன்கூத்து அனுஸ்டிப்பதில்லை என்ற தகவலும் கிடைத்துள்ளது.

மொனராகலை முப்பணிவெளி தோட்டத்தில் உள்ள பெரிய கோயிலில் யுத்தத்தின் போதும் பின்னரும் 2015 வரை எதுவித திருவிழாக்களும் நடைபெற்றதில்லை. அவர்களுடைய மொழியும் மதமும் வீட்டிற்குள்ளேயே அனுஸ்டிக்கப்படுகின்றன. மொனராகலை புத்தலைப் பகுதியின் யுதகனாவ விகாரைக்கென, குமாரவத்தை பெருந்தோட்டத்தில் 120 ஏக்கர் காணியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், குமாரவத்தை பெருந்தோட்டத்தில் பாராவிலை தோட்டப் பிரிவில் இராணுவ சிப்பாய்களுக்காக பத்து ஏக்கர் காணி ஒதுக்கிக் கொடுப்பதற்கு, துரித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

களுத்துறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் கூறப்பட்ட சம்பவம் 'மத்துகமையில் காளி கோயிலில் வழமையாக நடத்திவரும் திருவிழாவை ஒரு இனவாத அமைப்பு ஒன்று தடுக்க முன்வந்தது. பொலிஸாரும் இதற்கு துணை நின்றனர். இந்தியாவின் தம்பதிவயில் பிக்குமார் உட்பட சிங்கள மக்கள் தாக்கப்பட்டதற்கு பழிவாங்கவே அதனை தடுக்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அவ்அமைப்பு காரணம் தெரிவித்தது. அத்தோடு திருவிழா இடம்பெறுமாயின் இம்மக்களை சவப் பெட்டியிலே தான் எடுத்துச் செல்வோம் என இனவாதம் கக்கினர். அத்துடன் நீதிமன்ற தடை உத்தரவையும் எடுத்து வந்து, கண்ணீர்ப் புகை குண்டுகள், நீர் பீச்சும் வண்டிகள் என்பவற்றை கொண்டு வந்து பீதி காட்டினர்' என பதிவுசெய்யப்பட்ட சம்பவமானது மதச்சுதந்திரத்திற்கு ஊறுவிளைவிப்பதாக இருக்கின்றமையை அறியலாம்.

**கல்வி**

தென் மாகாணத்தில் 38 தமிழ் பாடசாலைகள், 10 தமிழ், சிங்கள பாடசாலைகள் காணப்படுகின்றன. மற்றும் சப்ரகமுவா மாகாணத்தில் 189 தமிழ் பாடசாலைகள் காணப்படுகின்றன. தமிழரின் சனத்தொகைக்கேற்க தமிழ் பாடசாலைகள் தென்னிலங்கையில் குறைவாக இருக்கின்றமையால் தமிழ் மாணவர்கள் சிங்கள பாடசாலைகளில் கல்வி கற்கவேண்டிய நிர்பந்தம் ஏற்பபட்டுள்ளன. எ.கா: கலவான, ஹேலியகொட பிரதேசத்தில் அமைந்துள்ள வேவில சிங்கள வித்தியாலயத்தில் மொத்தம் 64 மாணவர்களுள் 50 மாணவர்கள் தமிழ்பேசும் எம் பிள்ளைகள், கலவானை தபஸ்பரகந்த பாடசாலையில் மொத்தம் 54 பிள்ளைகளில் 40 பிள்ளைகள் எம்மவர். மேலும் பல தமிழ் பிள்ளைகள் சிங்கள மொழிமூலமாகவே உயர்தரத்தை கற்கின்றனர். அவ்வகையான பாடசாலைகளில் சமயபாடம் பௌத்தமாகவே காணப்படுகிறது, தெனியாயவில் கொட்டபொல சிங்கள பாடசாலையில் 4 இல் 3 பங்கினர் அதாவது 300 பிள்ளைகள் தமிழர்களாக இருந்தபோதும் பௌத்தசமயமே கற்பிக்கப்படுகின்றது. தெனியாய தொகுதியின் பஸ்கொட பிரதேச செயலகப் பிரிவில் கணிசமான தமிழர்கள் வாழ்ந்தாலும் அங்கு தமிழ் மொழி மூல பாடசாலை ஒன்றுகூட இல்லாதது மிகவும் வருந்தத்தக்க விடயமாகும். இந்த ஆறு பாடசாலைகளும் கூட பெரும் வளப் பற்றாக்குறையுடனேயே இயங்குகின்றன. இது ஒரு அடிப்படை மனித உரிமை மீறலென தெனியாயவில் 10 பெற்றோர்கள் இணைந்து ஒரு அரசசார்பற்ற நிறுவனத்தின் அனுசரணையுடன் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளனர். தமிழ்ப்பிள்ளைகள் கல்விகற்கும் சிங்கள பாடசாலைகளில் தமிழ்மொழியை பிரதிபலிக்கும் கலாசார நிகழ்வுகள் நடைபெறுவதில்லை. எம் பிள்ளைகள் வீட்டைத்தவிர வெளியே முற்றுமுழுதாக சிங்கள கலாசாரத்துடனே வாழ்கின்றனர். பாடசாலை நிகழ்வுகளிலிலும் உடரட, பாதரட நடனங்களையும், பெர அடித்து விழாக்களை கொண்டாடும் வழக்கத்திற்கு மாறியிருக்கின்றனர். ஹோமாகம சாலாவ தோட்ட தமிழ் வித்தியாலயத்தில் 4 ஆசிரியர்களும் 14 மாணவர்களுமே காணப்படுகின்றனர். 5ஆம் ஆண்டில் 15 வயது பிள்ளைகளும் கற்கின்றனர். ஏந்துபிரதேச மாணவர்களுக்கு அயலில் உள்ள சிங்கள பாடசாலையான சித்தார்த்த பாடசாலையே வசதியாக உள்ளது. அதிகமான மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாமலும் உள்ளனர்.

ஊவா, சப்ரகமுவ, தென் மாகாணங்களில் அதிகமான தமிழ் பாடசாலை பெயர் பலகைகள் சிங்கள மொழியில் உள்ளன, குறிப்பாக ஓப்பவத்தை பாடசாலை பெயர்ப்பலகை ஓபாவத்த தெமல வித்தியாலய என தமிழில் எழுதப்பட்டுள்ளது. சில தமிழ் பாடசாலைகளில் சிங்கள அதிபர்கள் இருக்கின்றமையும் பதிவாகியுள்ளது. அத்துடன் அதிபர், ஆசிரியர்கள் சிங்கள மொழி மூலமாகவே ஆவணங்களையும் பேணுகிறார்கள். அத்துடன் பாட வளவாளர்கள் யாவரும் சிங்களவர்களாக இருப்பதால் சரியான முறையில் வழிகாட்டல்களை பெறமுடியாதுள்ளது. அத்துடன் வலயத்தில் நடைபெறும் பயிற்சிகள், கருத்தரங்குகள், கூட்டங்கள் யாவும் சிங்கள மொழிமூலம் நடைபெறுவதால் பாடசாலை, மாணவர்கள் மற்றும் அதுசார்ந்த சமூகம் இலவசக் கல்வியின் நன்மைகளை பெறமுடியாதவர்களாக இருக்கின்றனர்.

இம் மாவட்டங்களில் உள்ள மக்கள் தேயிலையை விடவும் சிங்கள கிராமங்களில் நாட்கூலிகளாகவே அதிகமாக வேலைசெய்கின்றனர். லயன் அறைகளில் இருந்தாலும் தோட்டங்கள் கிராமங்களாக மாறிவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. ஆகையால் இங்குள்ள தமிழ் மாணவர்கள் உயர்தரம் சித்தியடையும் போதும் இந்திய புலமைப்பரிசில்கள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளுக்கான அனுமதிகளை பெறுவதில் பல சவால்கள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக அலியாவத்தை. சிரிகலை தோட்டங்கள் காடாகி விட்ட நிலையில் தோட்டத் தொழிலை நம்பி வாழ்ந்து வந்த 650 தொழிலாளர்கள் தமது அன்றாட தேவைகளுக்காக அயலிலுள்ள கிராமங்களில் தினக்கூலிகளாக இருந்து வருகின்றனர்.

கம்பஹா மாவட்டத்தில் பல போராட்டங்களுக்கு மத்தியில் வத்தளை தமிழ் பாடசாலை நிர்மாணிப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேபோல களுத்தறை மாவட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்துகமையில் தமிழ் பாடசாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கு அனுமதி கிடைத்திருக்கின்றமை வரவேற்கத்தக்கது.

**அரசியல்**

மொனராகலை மாவட்டத்தின் மொத்த தமிழ் சனத்தொகை 13,207 ஆகும். அவர்களால் பாராளுமன்ற மற்றும் மாகாண உறுப்பினர் ஒருவரை தெரிவுசெய்ய முடியாது. கடந்த காலத்தில் பிரதேச சபைத் தேர்தலில் ஒரு தமிழர் (வைத்தியர்) தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியமையடுத்து தமிழ் மக்கள் அவரை ஊர்வலமாக அழைத்துச் சென்றிருக்கின்றனர். அதன் மறுநாள் அவ் உறுப்பினரை சிங்கள பிரதிநிதிகள் சுட்டுக் கொலை செய்துள்ளனர். அதன் பின்னர் அரசியலில் பங்கேற்க யாரும் முன்வருவதில்லை. யாவரும் அச்சத்திலேயே இருக்கின்றனர்.

அடுத்துவரும் பாராளுமன்ற தேர்தலில் பதுளை மாவட்டத்தில் ஒரு உறுப்பினரை இழக்கவேண்டிய துர்பாக்கிய நிலையில் உள்ளோம். இதற்குரிய பிரதான காரணம் தமிழரின் சனத்தொகையும் வாக்காளர் எண்ணிக்கையுமே. பதுளை மாவட்டத்தில் 886,000 மக்களில் 183,000 தமிழ்மக்களில் 130,000 பேரே வாக்காளர்கள். உண்மையில் வாக்காளர்கள் 155,000 ஆக இருக்கவேண்டும். ஆனால் கிட்டத்தட்ட 25,000 பேர் வாக்காளர்களாக பதிவுசெய்யப்படவில்லை என தெரியவருகிறது.

காலியில் மொத்த சனத்தொகையில் 10,36,334 இல் 20,099 (2%) 900 இல் 592 கி.சே.பி களில் தமிழர்கள் சிதறி வாழ்கிறார்கள் ஆகையால் உள்ளூராட்சி சபைக்கு ஒருவர் கூட தெரிவாகும் வாய்ப்பில்லை.

சிறுபான்மை கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து ஒரு கூட்டணியாக செயற்படுமிடத்து செறிவுகுறைவான இடங்களில் அரசியல் பிரதிநிதித்துவம் பெறமுடியும் என்பதற்கு சப்ரகமுக மாகாணம் ஒரு சாட்சி. கடந்த காலத்தில் சகல கட்சிகளும் ஒன்றிணைந்து வேட்பாளர்களை களமிறக்கியதால் இரத்தினபுரியில் ஒருவரும் கேகாலையில் ஒருவரும் மாகாண சபைக்கு தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது. இம்முறையும் ஒன்றிணையுமானால் எம் விகிதாசாரத்திற்கேற்ற ஆசனங்களைப் பெறலாம்.

களுத்துறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பான்மை இனத்தைச்சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் மற்றும் மாகாணசபை உறுப்பினர் ஒருவரும் அங்குள்ள தமிழ் மக்களுடைய வாக்கு பலத்தாலே தெரிவானவர்கள். அவர்களுடைய அரசியல் இருப்பினை தக்கவைத்துகொள்ள தமிழ் அரசியல் பிரதிநிதிகளை இம்மாவட்டத்தினுள் அனுமதிக்காமல் தமிழ் மக்களை தங்களுடைய அரசியல் கட்டுக்குள் வைத்திருக்கின்றார்கள். அவர்கள் ஐ.தே.க இன் பிரதிநிதிகளாகவும் வேட்பாளர்களாகவும் இருப்பதால் வெற்றிவாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றன. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக களத்தில் இறங்கி செயற்படக்கூடிய பிரதிநிதிகளாக இருப்பினும் மக்கள் சுதந்திரமாக அரசியலில் ஈடுபடமுடியாதுள்ளது. மேற்குறிப்பிட்ட பிரதிநிதிகள் இருவரும் அவர்களுடைய வாரிசுகளை அடுத்த மாகாணசபை மற்றும் பாராளுமன்ற தேர்தலுக்கு தயார்செய்துவருவதானது இம்மாவட்டத்தில் தமிழ் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு மிகப்பெரிய இடையூறாக இருக்கின்றது.

கம்பஹாவில் உள்ளூராட்சி சபைகளில் ஐந்துக்கும் அதிகமானோர் தெரிவாகக்கூடிய உச்சகட்ட வாய்ப்புக்கள் உள்ளன. தற்போது ஐ.தே.க மற்றும் இ.சு.க சார்பாக மூன்று தமிழர்கள் உள்ளனர். அம்மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த ஒருவரின் வழிகாட்டலின் கீழ் தமிழர்கள் அதிகமாக வாழும் கல்வெட்டி, கொவலப்பிட்டி, ஹேகித்த, எட்டம்பொல மற்றும் பலகல ஆகிய பிரதேசங்களில் அவருடைய பிரதிநிதிகள் எதிர்வரும் தேர்தலை நோக்கி துரிதமாக செயற்பட ஆரம்பித்துள்ளனர். தமிழ் அரசியல் கட்சிகள் இப்பிரதேசங்களில் தங்களை இருத்திக்கொள்வதில் பலவாறான அழுத்தங்களும் தடைகளையும் எதிர்கொண்டிருப்பதாக அறியக்கிடைத்துள்ளது.

தோட்டப்பகுதிகள் சிங்கள அரசியல்வாதிகளுக்கு இலாபகரமாக ஏமாற்றக்கூடிய வாக்குவங்கிகளாக இருப்பதால், தேர்தல்கள் காலத்திலும் தேர்தலுக்கு முந்தைய நாளிலும் இம்மாவட்டங்களில் உள்ள தோட்டப்புறங்களில் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் அதிகமாக இருக்கின்றன. பல தோட்டங்கள் ஒன்றிணைந்து செறிவாக வாழும் பகுதிகளில் இச்சம்பவங்கள் மிகக்குறைவு. ஆனால், பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களுக்கு மத்தியிலும் தனித்தும் அல்லது எல்லைகளில் இருக்கும் தோட்ட மக்களின் வாக்குச் சீட்டுக்கள் பறிக்கப்படுகின்றன, அவர்கள் அச்சுறுத்தப்படுகின்றார்கள் அல்லது வாக்குகள் பேரம் பேசப்படுகின்றது. மக்கள் சுயாதீனமாக தங்கள் பிரதிநிதியை தெரிவுசெய்யும் சுதந்திரம் பறிக்கப்பட்டிருக்கின்றது. ஊவா, சப்ரகமுவ மற்றும் தென் மாகாண வாக்குச் சாவடிகளுள் அநேகமானவை சிங்கள பாடசாலைகளை நிலையங்களாக கொண்டுள்ளன. ஆகவே, தமிழ்மக்கள் யாவரும் கிராமத்தைக் கடந்துசென்று வாக்களித்துவிட்டு பாதுகாப்பாக திரும்பிவரவேண்டும் என்றால் அவர்கள் பல நிபந்தனைகளுக்குக் கட்டுப்படவேண்டியதாய் இருக்கின்றது. பொதுவாக, தென் மாகாணங்களில் புதிய தலைமைத்துவம் ஒன்று உருவாகும் போது அதனை இல்லாதொழிப்பதற்கான பல வேலைகள் நடைபெறுகின்றன. (எ.கா) அவர்களை கடத்திச் சென்று அச்சுறுத்துவது போன்றன. தடைகளை மீறி போட்டியிடும்போது அவர்களுடைய தேர்தல் பிரசாரங்களுக்கு பலவகையில் தீங்கிழைப்பது வழமையாக நடைபெறுகின்றன. அத்துடன் தமிழர்களுடைய வாக்குகளை சிதைப்பதற்காக பல்வேறு கட்சிகளில் தமிழ் போட்டியாளர்களை அதிகமாக களமிறக்குவது, தோட்டங்களில் உள்ள சில முக்கிய புள்ளிகளுக்கு கையூட்டுக்களை வழங்கி வாக்குகளை சிதைப்பது போன்ற பல காய்நகர்த்தல்களுக்கு மத்தியில் போட்டியிடவேண்டியிருக்கின்றது.

அரசியல் தொடர்பாக தமிழ் மக்கள் மற்றும் இளைஞர் யுவதிகளிடமிருக்கும் கசப்பான எதிர்மறையான மனப்பாங்குகள், பொருளாதார நெருக்கடிகள், கூட்டணியாக செயற்படாமையும் பொது இணக்கப் பாட்டிற்கு வரமுடியாதிருப்பதை கருத்திற்கொண்டு தொழிற்சங்க அரசியலில் இருந்து நிலைமாற்றம் பெற்று வெகுஜன அரசியலுக்கும் மற்றும் பௌதீக அபிவிருத்தியைக் காட்டிலும் கட்டமைப்பு மாற்றங்களுக்கான ஆர்வம் ஆகியவை எம் இனம் தேசிய அரசியலில் ஆழமான மற்றும் காத்திரமான பங்களிப்பினை வழங்க தடைகளாக இருக்கின்றன. எதிர்வரும் உள்ளூராட்சி, மாகாண மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் இன விகிதாசாரத்திற்கேற்ற பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு ஒன்றிணைந்து செயற்படுதலே மலையக அரசியல் இருப்பிற்கு வழிகோலும்.

ஆகவே, தென்னிலங்கை மலையக மக்களின் சமூக, அரசியல், கலாசார இருப்பினை பேரினவாதப் பிடியிலிருந்தும், பொதுப்பண்பாட்டுமயமாதலில் இருந்தும், அந்நியப்படுத்தப்படுவதிலிருந்தும் பாதுகாக்க வழிவகைகளைச் சமைத்துக்கொள்வது ஒரு சமூக உணர்வாளனாக இருக்கும் ஒவ்வொருவருக்கும் உரிய கடமை என்பதை உணர்ந்து செயற்பட யாவரும் முன்வருவோம்.

“நம் அனைவருக்கும் ஒரே மாதிரி திறமை இல்லாமல் இருக்கலாம்,
ஆனால் அனைவருக்கும் திறமையை வளர்த்துக்கொள்ள
ஒரே மாதிரியான வாய்ப்புகள் உள்ளன.”

“மீனாக பிறந்து சாவது என்று முடிவெடுத்துவிட்டால்,
பொழுதுபோக்கிற்கு மீன் பிடிப்பவனின் தூண்டிலில் சிக்காதே....
பிழைப்பதற்காக மீன் பிடிப்பவனின் வலையில் சிக்கிடு,
உன் மரணமும் ஒருவனை வாழவைக்கும்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் நிலச்சரிவு இடர்மிக்க பகுதிகளில் பாதுகாப்பாக வாழ்வதற்கான கலாசாரத்தினை கட்டியெழுப்புதல்

திருமதி. S. வசந்தகுமாரி, விரிவுரையாளர்,
புவியியற்றுறை, கிழக்கு பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

அண்மைக் காலமாக இயற்கை அனர்த்தங்களின் அதிகரிப்பு மற்றும் அவற்றின் வேறுபட்ட பரிமாணங்கள் உலக நாடுகளை போலவே இலங்கைக்கும் பாரிய சவாலாக மாறி வருகின்றன. பரப்பில் சிறிய நாடாக இருப்பினும் கூட பருவப் பெயர்ச்சிகளின் (Monsoons) பாதையில் அமையப் பெற்றுள்ளமை, பல்வகைப்பட்ட பௌதீக நிலத்தோற்றம், தீவுத்தன்மை போன்ற பல்வேறு காரணிகளின் விளைவாக காலநிலை மற்றும் நீரியல் சார்ந்த அனர்த்தங்களை (Disasters) அதிகளவு எதிர்கொள்ள நேரிடுகின்றது. இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ சட்டத்திற்கு (இல 13, 2015) இணங்க 21 முக்கிய இடர்கள் (Hazards) தேசிய மட்டத்தில் முக்கியம் பெறுகின்றன. எனினும் இவற்றுள் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு, இடி மின்னல், சுனாமி, வரட்சி, சூறாவளி, புயல்காற்று, தொற்று நோய்கள் ஆகிய இடர்களினாலேயே அதிக ஆபத்தினை (Risk) இலங்கை எதிர்கொண்டு வருகின்றது. இப்பின்னணியில் இலங்கையின் ஒவ்வொரு பகுதியும் குறைந்தது ஏதோ ஒரு இயற்கை அனர்த்தத்திற்கான ஆபத்தினைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிகரித்துச் செல்லும் இயற்கை அனர்த்தங்களுள் நிலச்சரிவு

பல்வகை இயற்கை அனர்த்தங்களுக்கு தொடர்ச்சியாக முகம் கொடுத்து வரும் நாடாக இலங்கை விளங்கினும் காலநிலை மாற்றத்தின் விளைவுகளாலும் மானிட செயற்பாடுகளாலும் இந்நிலமை இன்னும் துரிதமாகியுள்ளது. உலகில் கடந்த 40 வருடங்களுள் அனர்த்தங்களுக்கு உட்படும் குடித்தொகையும், கட்டமைக்கப்பட்ட பகுதிகளும் அதிகரித்துள்ளன என ஐரோப்பிய ஆணைக்குழுவின் Atlas of Human Planet-2017 இனங்கண்டுள்ளது. இப்போக்கானது இலங்கைக்கும் சாலப் பொருந்துவதாக அமைகின்றது. குறிப்பாக இலங்கையில் கடந்த இரண்டு தசாப்த காலப்பகுதியில் அனர்த்தங்களின் அதிகரித்த போக்கு இனங்காணப்பட்டுள்ளது, (NBRO, 2010).


கடந்த வருடம் மே மாதம் 15 ஆம் திகதி இலங்கையைத் தாக்கிய சூறாவளியினால் அதிகளவிலான நிலச்சரிவுகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு 301,602 பேர் பாதிக்கப்பட்டதுடன் ஏறத்தாழ 104 பேர் இறக்க நேரிட்டது, (OCHA Situation Report-2016). மீண்டும் இவ்வருடத்தில் (2017) ஜூன் மாதம் வரையிலான காலப்பகுதியில் மாத்திரம் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு அனர்த்தங்களால் 212 இறப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் 175,660 குடும்பங்களைச் சேர்ந்த 683,831 மக்கள் பாதிக்கப்பட்டனர். இரத்தினபுரி மாவட்டத்தில் 87 உயிரிழப்புக்களும், களுத்துறை மாவட்டத்தில் 66 உயிரிழப்புக்களும் பதிவு செய்யப்பட்டுள்ளமையானது நிலமையின் தீவிரத்தன்மையினை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு அடிக்கடி ஏற்படுகின்ற அனர்த்தங்களும் அவற்றின் மோசமான விளைவுகளும் கடந்த சில வருடங்களில் முக்கிய அதிகரிப்பினைக் காட்டி நிற்கின்றன. அத்துடன் இவற்றின் பண்பும் தொடர்ச்சியாக மாறிக் கொண்டு வருவதனால் குறிப்பாக இலங்கையின் மலைநாட்டுப் பகுதிகள் அதிகரித்து வரும் ஆபத்து நிலையினை எதிர்கொண்டு வருகின்றன. வெள்ளம், வரட்சி போன்ற அனர்த்தங்களால் பாதிக்கப்படும் பரப்பு மற்றும் குடித்தொகையின் அளவுடன் ஒப்பிடும் போது நிலச்சரிவு அனர்த்தம் மிகக் குறைந்த முக்கியத்துவத்தினைக் கொண்டிருப்பினும் உயிரிழப்புக்களை பொறுத்தவரையில் முக்கிய அனர்த்தமாக கருதப்படுகின்றது.

இவ்வாறு மலைநாட்டில் அதிகரித்துச் செல்லும் நிலச்சரிவு அனர்த்தம் காரணமாக "Global Landslide Hotspots" பட்டியலில் இலங்கை சேர்க்கப்பட்டமையானது தற்போது மாத்திரமன்றி எதிர்காலத்திலும் நிலச்சரிவு மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பினைக் கொண்டுள்ளது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. மலைநாட்டை பொறுத்தவரையில் 2002 ஆம் ஆண்டு வரையும் இலங்கையில் நிலச்சரிவு நிகழ்வுகளின் வருடாந்த சராசரி 50 நிகழ்வுகளுக்கு அதிகமாக காணப்படவில்லை. எனினும் 2003 மற்றும் 2008 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் துரித அதிகரிப்பினை நிலச்சரிவு நிகழ்வுகள் காட்டின. 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தம் ஏற்படுத்திய இறப்புக்களை தவிர்த்து நோக்கின், 2000 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் மாத்திரம் அதிகளவிலான இறப்புக்களை (650 பேர்) நிலச்சரிவு ஏற்படுத்தியுள்ளதுடன் 142,680 க்கு மேற்பட்டோர் இப்பகுதியில் பாதிக்கப்பட்டவர்களாக கருதப்படுகின்றனர் (South Asian Disaster Report, 2016). அத்துடன் எதிர்காலத்தில் இதைவிட அதிகளவானோர் இத்தகைய பாதிப்பிற்கு உள்ளாகுவதற்கான வாய்ப்புள்ளது என எதிர்பார்க்கப்படுகின்றது, (ibid). இத்தகைய பின்னணியுடன் கடந்த சில வருடங்களாக நிலச்சரிவுகள் மலைநாட்டில் சாதாரண நிகழ்வுகளாக மாறி மலையக மக்களை பல்வேறு வழிகளிலும் அச்சுறுத்தி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலங்கையில் நிலச்சரிவினால் ஏற்பட்ட இறப்புக்கள் - 2011 - 2016




இயற்கை காரணிகளுக்கு அப்பால், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் பல்வேறு ஆய்வுகளில் சுட்டிக்காட்டப்படுகின்ற முறையான திட்டமிடல் இன்றி முன்னெடுக்கப்படுகின்ற கட்டுமான பணிகள், விவசாய நடவடிக்கைகள், அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் ஏனைய ஜீவனோபாய நடவடிக்கைகள் மற்றும் அதிகரித்து வரும் காடழிப்பு செயற்பாடுகள் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் மலைநாட்டில் நிலச்சரிவு அதிகரித்து வருவதில் தாக்கம் செலுத்தும் முக்கிய காரணிகளாக தொழிற்படுகின்றன. ஆரம்ப காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பாரியளவிலான காடழிப்பு மற்றும் திட்டமிடப்படாத மானிட செயற்பாடுகளின் மோசமான விளைவுகளையே மலையக மக்கள் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் கூட அனர்த்தங்களினால் ஏற்படும் ஆபத்துக்களைக் கருத்தில் கொள்ளாது மேற்கொள்ளப்படுகின்றன என்பதும் நிரூபணமாகியுள்ளது (NBRO, 2010). இவற்றின் விளைவால் இன்று பெரும்பாலான இடங்கள் நிலச்சரிவு இடர்மிக்க பகுதிகளாக மாறிவருகின்றன.

இலங்கையில் நிலச்சரிவு பிரதேசங்கள்



இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாழ 30% மான நிலப்பரப்பு நிலச்சரிவு இடர்மிக்க பகுதிகளாக NBRO வினால் இனங்காணப்பட்டுள்ளதுடன் நுவரெலியா, பதுளை, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, கண்டி, மாத்தளை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களே இதில் முக்கியம் பெறுகின்றன. இம்மாவட்டங்களிலேயே மலையக மக்களும் வாழ்வதன் காரணமாக மலையக மக்களை பொறுத்தவரையில் நிலச்சரிவு பிரதான அனர்த்தமாகவும் முக்கியமானவொரு நடைமுறைசார் பிரச்சினையாகவும் நோக்கப்படுகின்றது. இது மக்களின் அன்றாட வாழ்விலும், மக்களின் வாழ்வாதாரத்திலும் மாத்திரமன்றி நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தி செயன்முறைகளிலும் தாக்கம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலச்சரிவுடன் இணைந்து வாழ்வதற்கான கலாசாரத்தின் அவசியமும் அதற்கான வழிமுறைகளும்

அதிகரித்து வரும் நிலச்சரிவுகள் மற்றும் தீவிர நிலைக்கு அப்பால் இன்று அதிகளவிலான மலையக மக்கள் நிலச்சரிவு நலிவுறுநிலை மிக்க பகுதிகளில் வசிக்கின்றனர். பின்னடைவான சமூகப் பொருளாதார பின்னணியின் கீழ் நலிவுறுநிலைமிக்க சமூகமாக விளங்கும் மலையக மக்கள் தமது சமூகப் பொருளாதார தேவையின் நிமித்தமே தொடர்ச்சியாக நிலச்சரிவு ஏற்படக்கூடிய இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். எனினும் அனைத்து மக்களையும் பாதுகாப்பான இடங்களில் குடியேற்றுவது என்றால் எங்கு குடியேற்றுவது என்பது பாரிய கேள்வியாக எம் முன்னிற்கின்றது. இவற்றுடன் நீண்டகால குடியேற்றத் திட்டங்களை அவசியமான சமூகப் பொருளாதார கட்டமைப்புக்களுடன் மேற்கொள்வது என்பது அதிக செலவினை வேண்டி நிற்பதுடன் மலையக மக்களின் சமூகப் பொருளாதார, கலாசார அம்சங்களின் அடிப்படையில் பொருத்தமான இடத்தினை தெரிவு செய்வதும் சிக்கலான விடயமாக உள்ளது. எவ்வாறாயினும் நிலச்சரிவு அபாயமிக்க பகுதிகளில் வாழும் மலையக மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாதது. குறிப்பாக உயர் நிலச்சரிவு இடர்மிக்க பகுதிகளில் வாழும் மக்கள் தொடர்ந்தும் குறித்த இடங்களில் வாழ முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே நிலச்சரிவு ஆபத்து மட்டத்தின் அடிப்படையில் செயற்படவேண்டிய தேவை எழுந்துள்ளது.

### உயர் நிலச்சரிவு ஆபத்து மிக்க பகுதிகள்

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள நிலச்சரிவு இடர்மிக்க பகுதிகளை காட்டும் நிலச்சரிவு இடர் படங்களையும் (Landslide Hazard Map) ஆபத்து படங்களையும் (Landslide Risk Map) பயன்படுத்தி உயர் இடர் பகுதிகளை இனங்காணுவது மட்டுமன்றி அப்பகுதிகளில் மக்கள் குடியேறுவது முற்றாக தவிர்க்கப்பட வேண்டும். அத்துடன் இத்தகைய பகுதிகளில் ஏற்கனவே வாழ்ந்து வரும் மக்களை பாதுகாப்பான இடங்களில் குடியேற்றுவது கட்டாயமாகியுள்ளது. மலையகத்தின் சில பகுதிகளில் இவ்வாறான இடங்கள் இனங்காணப்பட்டு மீள்குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றமை அனர்த்த அபாயநிலை குறைப்பில் முக்கிய முன்னெடுப்பாகும். இதேபோல் ஏனைய உயர் ஆபத்து மிக்க பகுதிகளிலும் மற்றுமொரு நிலச்சரிவு ஏற்படும் வரை காத்திருக்காமல் மக்கள் பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்றப்படுவது கட்டாய தேவையாகும்.

### நடுத்தர மற்றும் குறைந்த நிலச்சரிவு ஆபத்தினைக் கொண்ட பகுதிகள்

நடுத்தர மற்றும் குறைந்த ஆபத்தினைக் கொண்ட பகுதிகளில் வாழும் மக்களிடையே நிலச்சரிவுடன் இணைந்து வாழ்வதற்கான கலாசாரத்தினை (Culture of Living With Landslides) கட்டியெழுப்புதல் அவசியமாகும். இதன் பொருட்டு மலையக மக்கள் சிறந்த தயார்நிலையுடன் நிலச்சரிவு அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளல் வேண்டும். இவை தவிர நிலச்சரிவு அனர்த்தம் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அவற்றை ஈடு செய்வதற்கும் மக்களை மீளக்கட்டியெழுப்புவதற்கும் அதிகளவிலான பொருளாதார நலன் தேவைப்படுகின்றது.

விருத்தியடைந்து வரும் நாடு என்ற நிலையினையும் மீறி நீண்ட காலமாக நிலச்சரிவு இடர் குறைப்பு, அபாயநிலை குறைப்பு, நிவாரணம், மீள்குடியேற்றம் என பல்வேறுபட்ட இடர்முகாமைத்துவ முயற்சிகள் மலைநாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் திடமான பொருளாதாரம் மற்றும் ஒதுக்குகளைக் கொண்ட நாடுகளுடன் ஒப்பிடும் போது, அனர்த்தங்களை குறைத்துக் கொள்வதற்கும் அவற்றில் இருந்து மீளெழுவதற்குமான வல்லமையானது மலையக மக்களிடம் இன்றுவரையிலும் குறைவாகவே காணப்படுகின்றது என்பதனை கடந்த கால நிலச்சரிவு அனர்த்தங்கள் புலப்படுத்துகின்றன. எனவே நீண்ட கால நோக்கில் நன்மை தரும் நுட்பமாக நிலச்சரிவுடன் இணைந்து வாழ்வதற்கான கலாசாரத்தினை கட்டியெழுப்புதலே மலையக மக்களுக்கு பொருத்தமாக அமைகின்றது. எனினும் இதனை இலகுவில் அடைய முடியாது. அதற்கான விசேட முன்னெடுப்புக்கள் அவசியமாகும். அவற்றுள் முக்கிய சில முன்னெடுப்புக்கள் பின்வருமாறு,

### எளிய முறைகள் மூலம் சிறிய நிலச்சரிவுகளை கட்டுப்படுத்தல்

எளிய சில முறைகளை கையாண்டு சிறியளவில் ஏற்படக்கூடிய நிலச்சரிவுகளை தடுக்க முடியும். நடைமுறையில் உள்ள முறைகள் செலவு மிக்கவையாக விளங்குவதனால் சமூகஞ் சார்ந்த சில இசைவாக்க நடைமுறைகளை குறைந்த செலவில் மேற்கொள்ளக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சாய்வினை பாதுகாக்கும் முறைகளுள் மரங்கள் மற்றும் பொருத்தமான தாவரங்களின் ஊடாக சாய்வினைப் பாதுகாத்தல் முக்கியம் பெறுகின்றது. விசேட வலயங்களுக்கு பொருத்தமான மரங்கள் மாத்திரமன்றி சவேந்திரா, மூங்கில், துத்திரி, கோதாமாலா, பாலதன ஆகிய புல் மற்றும் செடி இனங்களும் பொருத்தமான தாவர இனமாக இனங்காணப்பட்டுள்ளன. இவற்றை மக்களுக்கு அறிமுகப்படுத்தலும் அவற்றின் நன்மை தொடர்பில் அறிவுறுத்தலும் அவசியமாகும். இதே போல் நீர் வழிந்தோடக் கூடிய வகையில் சிறந்த வடிகாலமைப்பு முறையினை உறுதிப்படுத்தலும் முக்கிய செயற்பாடாகும். ஏனெனில் மண்ணினுள் ஊடுருவும் நீரைக் கட்டுப்படுத்துதல் நிலச்சரிவினை கட்டுப்படுத்துவதற்கான அடிப்படையாகும். இவற்றுடன் சூழலில் கிடைக்கக்கூடிய பொருட்களை கொண்டு (கற்கள், டயர்கள், மூங்கில், கூழாங்கற்கள், கழிக்கப்பட்ட பீப்பாய்கள்) கல்வேலிகள் போன்ற குறைந்த செலவிலான பாதுகாப்பு அணைகளை அமைக்க முடியும். இவ்வாறான சில இசைவாக்க நடைமுறைகள் இயல்பாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக மக்களால் பின்பற்றப்படுகின்றன. எனினும் இம்முறைகளைக் கையாள்வதற்கும் உறுதியற்ற சாய்வினை வெளிக்காட்டுகின்ற சூழற் காரணிகள் தொடர்பில் பூரண அறிவினைக் கொண்டிருத்தல் அவசியமாகும். இவை தொடர்பில் மக்கள் நிறுவனங்களின் ஊடாக வழிப்படுத்தப்பட வேண்டியதுடன் இவை மேலும் சில நுட்பங்களின் ஊடாக விருத்தி செய்யப்படவும் வேண்டும்.

**மலையக மக்களை மையப்படுத்திய இடர் குறைப்புத் திட்டம்**

மலையகப் பகுதிகளில் நிலச்சரிவு அபாய நிலையினை சிறந்த முறையில் முகாமை செய்வதற்கு மலையக மக்களின் சமூகப், பொருளாதார மற்றும் கலாசார காரணிகளை மையப்படுத்திய விசேடமானவொரு இடர் குறைப்புத் திட்டமொன்று (Disaster Risk Reduction Plan) அவசியமாகும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிலச்சரிவு அனர்த்தங்களை எதிர்கொள்கின்ற முதலாவது குழுவாக மக்கள் விளங்குவதனால் தாமாகவே நிலச்சரிவிற்கு சிறந்த முறையில் பிரதிபலிப்பினைக் காட்டுவதற்கும், தாக்கங்களை குறைத்துக் கொள்வதற்கும் அவர்களது இயலுமையினை கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகின்றது. தாம் வாழும் பகுதியில் சாத்தியமான நிலச்சரிவு இடர் மற்றும் அவற்றின் ஆபத்து நிலை, குறித்த பிரதேச நிலச்சரிவுகளில் தாக்கம் செலுத்தும் காரணிகள், நிலச்சரிவு நிகழ்வதற்கு வாய்ப்புள்ள காலம், முகாமைத்துவ வழிமுறைகள் ஆகியன தொடர்பில் மலையக மக்களுக்கு விழிப்புணர்வூட்டல் அவசியமாகும்.

**நிலச்சரிவின் அறிகுறிகள் தொடர்பில் அறிவுறுத்தல்**

உள்ளூர் மட்டத்தில் தமது சூழலில் நிலச்சரிவின் வாய்ப்புத்தன்மையினை இனங்கண்டு கொள்வதற்கு நிலச்சரிவின் அறிகுறிகள் தொடர்பில் அறிந்து கொள்ள வேண்டியது அடிப்படையாகின்றது. ஏனெனில் குறித்த மக்களே தமக்கு ஏற்பட வாய்ப்புள்ள இடரை பற்றி அறிந்திருப்பின் சிறந்த முறையில் அவற்றை எதிர்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது. முன்கூட்டியே நிலச்சரிவுகளின் அறிகுறிகளை இனங்கண்டால் நிலச்சரிவின் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்ள முடியும். குறிப்பாக நிலச்சரிவு இடர்மிக்க பகுதிகளில் வாழும் மக்கள் பின்வரும் அறிகுறிகள் தொடர்பில் அவதானமாக இருத்தல் அவசியமாகும்.

i. சாய்வுகளில் திடீரென வெடிப்புக்கள் தோன்றுவதும் ஏற்கனவே காணப்படும் வெடிப்புக்கள் விரிவடைதலும்
ii. வீடுகளின் தரை மற்றும் சுவர்களில் வெடிப்பு ஏற்படுதல் அல்லது வெடிப்புக்கள் விரிவடைதல்
iii. சாய்வுகளின் அடிவாரங்களில் திடீரென நீர் ஊற்றெடுத்தல், அல்லது நீர் ஊற்றுக்கள் வற்றுதல்
iv. நீர் ஊற்றெடுக்கும் போது சேற்றுநீர் உட்புகுதல் அல்லது நீர் மூலங்களில் உள்ள நீர் கலங்கல் தன்மையடைதல்
v. மலைச்சாய்வுகளில் காணப்படும் கற்கள் அல்லது மண் சிறிது சிறிதாக கீழ் நோக்கி வருதல்
vi. திடீரென வீடுகளின் கீழ் பகுதியில் நீர் பாய்கின்ற சத்தம் கேட்டல்
vii. சாய்வுகளில் காணப்படும் மரங்கள், மின்கம்பங்கள், இணைப்புத் தூண்கள் ஆகியன நிலத்தினை நோக்கி சாய்ந்திருத்தல் அல்லது மரங்களின் அடிப்பகுதி வளைந்திருத்தல்
viii. நிலத்தின் ஒரு பகுதி திடீரென தாழிறங்குதல்

இத்தகைய அறிகுறிகளில் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அறிகுறிகள் தென்பட்டால் மக்கள் விரைந்து பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டியதுடன் கிராம சேவகர்கள் அல்லது பிரதேச செயலகங்களுக்கு அறியப்படுத்துவதும் அவசியமாகும்.

**நிலச்சரிவு ஏற்படும் காலம் தொடர்பில் அறிவுறுத்தல்**

மலைச்சாய்வுகளில் ஒரு தடவை நிலச்சரிவு ஏற்பட்டதும் ஆபத்தினை எதிர்கொள்கின்ற மலையக மக்கள் அடுத்து இடம்பெறக்கூடிய அனர்த்தத்தினையிட்டு அஞ்சுகின்றனர். இதனால் குறித்த பிரதேசத்தில் வாய்ப்புள்ள நிலச்சரிவுகள் மற்றும் அவை ஏற்படக்கூடிய காலம் தொடர்பில் மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் அவசியமாகும். மலையகப் பகுதிகளில் பொதுவாக மே மற்றும் ஜூன் மாதங்களிலும் டிசம்பர் தொடக்கம் ஜனவரி மாதங்களிலுமே பெரும்பாலான நிலச்சரிவுகள் இடம்பெறுகின்றன. குறிப்பாக நவம்பர் மாதத்திலேயே அதிகளவிலான நிலச்சரிவுகள் பதிவாகியுள்ளன. இவற்றை மக்களுக்கு தெளிவுப்படுத்துவதன் மூலம் மழை பெய்யும் போதெல்லாம் மக்கள் தேவையற்ற நிலையில் நிலச்சரிவினை எண்ணி அஞ்சுவதனை தவிர்த்துக் கொள்ள முடியும்.

**சமூக மட்டத்திலான முன்னெச்சரிக்கை செய்திகள்**

நிலச்சரிவு ஆபத்துக் குறைப்பிற்கான பல்வேறு நுட்பங்களுள் சமூக மட்டத்திலான முன்னெச்சரிக்கை செய்திகள் விளைதிறன்மிக்க நுட்பமாகக் காணப்படுவதுடன் சமூகம், நிலச்சரிவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து வாழ்வதற்கான சிறந்த தெரிவாகவும் அமைகின்றது. இலங்கையை பொறுத்தவரையில் NBRO வினால் முழுப் பிரதேசத்திற்கும் விடுக்கப்படும் முன்னெச்சரிக்கை செய்திகளை விடுத்து உள்ளூர் மயப்படுத்தப்பட்டதாகவோ அல்லது குறித்த நேரம் சார்ந்ததாகவோ முன்னெச்சரிக்கை செய்திகளை விடுப்பதற்கான ஒழுங்குமுறை நடைமுறையில் இல்லை. இதனால் சமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட முன்னெச்சரிக்கை செய்தி முறைமை மூலம் நிலச்சரிவுடன் இணைந்து வாழ்வதற்கு மலையக மக்களை தயார்படுத்த முடியும். இத்தகைய செய்திகள் நிலச்சரிவினைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படாவிடினும் மனித உயிர்களுக்கு ஏற்படும் இழப்புக்களை குறைத்துக் கொள்வதற்கு வாய்ப்பாக அமைகின்றது.

**விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்**

விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களைப் பொறுத்தவரையில் கடந்த சில வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு சில திட்டங்கள் பொதுமக்கள் மற்றும் பாடசாலை சிறுவர்கள் மத்தியில் மீளெழும் திறனை அதிகரிப்பதற்கான அடித்தளமாக அமைந்தாலும் கூட ஆபத்து நிலையினை குறைப்பதில் இவற்றின் பங்களிப்பு குறைவாகவே காணப்படுகின்றது. எனவே மலையக மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கும் போது அவர்களது கல்வி மட்டத்தினைக் கருத்தில் கொள்வதுடன் தாய் மொழியில் எளிய நடையில் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுத்தல் அவசியமாகும். அத்துடன் இவை தொடர்ச்சியாக இடம்பெற வேண்டியதுடன் காலத்திற்கு காலம் இற்றைப்படுத்தப்பட்டு பிரயோக ரீதியாக மக்கள் வழிப்படுத்தப்பட வேண்டும்.

**முடிவுரை**

மலையகத்தில் அடுத்தடுத்து ஏற்பட்டு வரும் நிலச்சரிவுகளுக்கு தயாராகாத நிலையிலேயே மக்கள் முகம்கொடுக்கின்றனர். இதன் விளைவாக பாரிய அனர்த்தங்களை எதிர்கொண்டதுடன் அவற்றின் தாக்கங்கள் இன்று வரை துயரமாய் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. மறுபுறம் நிலச்சரிவு இடரும் அவற்றின் ஆபத்து நிலையும் அதிகரித்துக் கொண்டு வருவதனால் எதிர்கால நிலச்சரிவுகளுக்கு ஈடுகொடுப்பதற்கும் மக்கள் தயாராக வேண்டியுள்ளது. இந்நிலையில் நிலச்சரிவு அபாயமிக்க பகுதிகளில் வாழும் மலையக மக்கள் தமது பிரதேசத்திற்கான ஆபத்து மட்டத்தின் அடிப்படையில் நிலச்சரிவின் குறைந்த தாக்கங்களை எதிர்கொள்வதற்கு மேற்சொன்ன விடயங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். நிலச்சரிவு இடரினை சிறந்த முறையில் எதிர்கொள்வதற்கும் பாதிப்புக்களில் இருந்து விரைவில் மீளுவதற்குமான இயலுமை கட்டியெழுப்பப்படும் பட்சத்திலேயே நிலச்சரிவு அனர்த்தமாக உருவெடுப்பதனை தவிர்க்க முடியும்.

## References:


Dahanayake, K. (1994) **Towards understanding and living with Landslide.** *In: Proceeding of the National symposium on landslide in Sri Lanka.* Landslide Studies and Services Division. Colombo. 1994. Vol.1. Sri Lanka: NBRO & Ministry of Housing, Construction & Urban Development. pp. 220-228.

Dahanayake, K. (2009) ***Approaches for landslide disaster risk reeducation and making community resilient.*** In: Proceedings of the national symposium on creating disaster free safer environment. NBRO. Colombo. 2009. Sri Lanka: NBRO & Ministry of Disaster Management. pp. 55-58.

Hemachandra D. (2009) ***Community based strategies for management of landslide disasters. A case study on Napitienna village in Nuwaraeliya District.*** In: Proceedings of the national symposium on creating disaster free safer environment. NBRO. Colombo. 2009. Sri Lanka: NBRO & Ministry of Disaster Management. pp. 103-112.

Katupotha. K.N.J. (1998) ***Socio- economic aspects of disaster related victims and vulnerable communities.*** In: Proceeding of the workshop on the role of research & development. Institution in Natural disaster managements. Colombo. 1998. Sri Lanka: Centre for housing planning & Building.

Longstaff, P.H. et al. (2010) ***Building resilient communities. A Preliminary framework for Assessment.*** Homeland security Affairs. September 2010 Vol. VI, (3)

Menake Wijesinghe (2016), **Build Back Better and the Expereince of Landslide Management in Sri Lanka,** South Asia Disaster Report, Duryog Nivaran Secretariat, pp.111-122.

OCHA, (2016) **Sri Lanka: Floods and landslides Situation Report No. 2**, United Nations Office for the Coordination of Humanitarian Affairs (OCHA), 26 May, 2016. [online] Available from: https://reliefweb.int/sites/reliefweb.int/files/resources/ OCHA%20ROAP_SL_Sitrep2.pdf. [Accessed: 18th September, 2017].

Willie Mendis. (2009) ***Living safely in areas prone to vulnerability.*** In: Proceedings of the national symposium on creating disaster free safer environment. NBRO. Colombo. 2009. Sri Lanka: NBRO & Ministry of Disaster Management and Human Rights. pp. 5-10.

Aslam Saja, 2017, Washed Away, Daily News June 1, 2017. [online] Available from: http://dailynews.lk/2017/06/01/features/117594/washed-away [Accessed: 18th September, 2017].




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகச் சிறுகதைகளில் கல்வி உரிமைக்கான பிரக்ஞைகள்

சு.முரளிதரன், பணிப்பாளர், கல்வி அமைச்சு

பொதுவாக நோக்கும்போது பின்காலனிய இலக்கியங்கள் அதிகார நடவடிக்கைகளை எதிர்ப்பதோடு தமது உண்மைகளை அந்த அதிகாரத்திடம் சொல்ல முயற்சி செய்வதாக இருக்கும். எழுத்தின் பலத்தின் மீது வெகுவான நம்பிக்கை கொண்டதாகவும் அதனை ஒரு கலாசார ஆயுதமாகவும் கையிலேந்தி எதிர்ப்புக் குரல்களாக உருவெடுக்கும். அடக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் உள்ளாக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை சர்வதேசமயப்படுத்த பின்காலனிய இலக்கியங்கள் முயலுகின்றன எனச் சொல்லலாம்.

அந்தவகையில் கல்விக்கான உரிமையை குறித்து போராடுதலும் பின்காலனித்துவ இலக்கியத்தின் பண்புகளில் ஒன்று எனக் கூறவேண்டும். கல்விக்கான உரிமை காரணமாக தனிநபர்களும் சமூகமும் பலவாறாக பயன்பெறுகின்றன. எனவே நிலைபேறான அபிவிருத்தியையும் சமாதானத்தையும் அடைவதற்கான மானிட, சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு அடிப்படையாக கல்வி விளங்குகின்றது. கல்வியானது சமூக நல்வாழ்க்கைக்கு ஆதாரமாக அமைந்து விளிம்பு நிலையிலிருந்தும் வறுமையிலிருந்தும் மக்களை விடுவித்து முழுமையான ஆளுமை விருத்திக்கு பங்களிக்கின்றது. 1948ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதவுரிமைகள் சாசன 26ம் பிரிவு ஒவ்வொருவருக்கும் இலவச, கட்டாய ஆரம்பக்கல்விக்கு பின் உத்தரவாதப்பட்ட தொழிற்கல்வி மற்றும் உயர் கல்வி வாய்ப்பு இருக்க வேண்டுமென்கின்றது. பெரும்பாலான நாடுகளில் கல்விக்கான உரிமையை அங்கீகரிக்கும் சர்வதேச உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டாலும் உலகெங்கிலும் பல்வேறு காரணங்கள் குறித்து அதுவும் அரசியல் விருப்பமின்மை காரணமாக கல்விக்கான உரிமை மறுக்கப்படுகின்றது. இதற்கு காலனிய செல்வாக்கும் வழிவகுத்திருக்கின்றது என்பதற்கு இலங்கை பெருந்தோட்ட தொழிலாளர் வாழ்வியலும் கட்டியம் கூறும்.

கல்விக்கான உரிமையை முழுவதுமாக அனுபவிக்காத சமூகங்கள் தொடர்ந்து பின் தள்ளப்பட்டுக்கொண்டிருப்பதாகவும் விளிம்பு நிலையிலிருந்து வெளியேற முடியாததாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இலங்கையின் மலையக தமிழ் சமூகம் கடந்த காலங்களில் பலவிதமான உரிமை மறுப்புகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்பது உலகறிந்த உண்மை. கூலிகளாக வந்தோர்கள் பல போராட்டங்கள் வாயிலாக இன்று ஓரளவு சமூக அந்தஸ்து பெற்றவர்களாக மாறிவருகின்றார்கள். அதிலே கல்வியின் பங்களிப்பும் காரணமாகியிருக்கின்றது எனலாம். பிரஜாவுரிமை, வாக்குரிமை, காணி உரிமை, வீட்டுரிமை, கண்ணியமான தொழிலுக்கான உரிமை, உழைப்புக்கான ஊதிய உரிமை எனப் போரடிக்கொண்டிருக்கும்போது கல்விக்கான உரிமைக்கும் போராட வேண்டியதாக இருக்கின்றது. மலையகப் படைப்பாளிகளில் சிலர் இந்தக் கல்விக்கான உரிமை மறுக்கப்படுவது தொடர்பில் அவ்வுரிமையை பெற்றுக்கொள்வதற்காக செயற்படுவோர்கள் தொடர்பில் கவனங் குவிப்பவர்களாக இருந்திருக்கின்றார்கள்.

மலையகச் சிறுகதைகளில் கல்விசார் பகைப்புலம் எனும் போது, தெளிவத்தை ஜோசப் அவர்களின் 'சோதனை' எனும் கதையே மலையகக் கல்வியின் ஒரு கட்டத்தைச் சிறப்பாக படம்பிடித்துக்காட்டும் அம்சத்தினை கொண்டிருக்கின்றது எனலாம். தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கல்வி வழங்குதல் அரசின் கடப்பாடு என்பதை முழுவதுமாக ஏற்றுக் கொள்வதற்கு மலையக மக்கள் நீண்டகாலம் காத்திருக்க வேண்டியிருந்தது. லயன் பாடசாலைகளாக கங்காணிமார்களால் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை முறைமை ஆமை வேகத்தில் வளர்ச்சி கண்டது. 1903 ஆண்டுக்குப்பின் தோட்ட நிர்வாகம் அரசிடமிருந்து கல்விக்கான நன்கொடை பெறவேண்டுமாயின் தாமே கட்டிட, தளபாட, ஆசிரியர் முதலிய வசதிகளை பெற்றுக்கொடுத்து 3 மணி நேர கல்வி வழங்கலை வரவு இடாப்பு போன்ற ஆவணங்கள் காட்டி உறுதிப்படுத்த வேண்டும் என்ற சுற்றறிக்கை வெளிவந்தது. இது கட்டாயமான ஒன்றல்ல என்பதால் 3 மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர கல்வி வழங்கலை விரும்பாது தோட்ட நிருவாகம் தாமே கல்வி வழங்கல் நடைமுறையை மேற்கொண்டது. ஆனால் 1907ம் ஆண்டு கிராமப்புற கல்வி வழங்கல் கட்டளைச் சட்டமெனும் அரச தீர்மானம் அமுலுக்கு வந்தது. இது தோட்ட புற மாணவர்களுக்கு கல்வி வழங்குவது தோட்ட மேலதிகாரியின் கடப்பாடு என்பதைக்கூறி, அவ்வாறு நிறைவேற்றத்தவறினால் கல்விப்பணிப்பாளர் கல்வி வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு ஏற்படும் செலவீனத்தைத் தோட்டத்திடமிருந்து அறவிடமுடியும் என்பதாக இருந்தது. இதன் காரணமாக பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவது கட்டாயமாகியது. தோட்டப்பாடசாலைகள் தேசியமயமாகும் வரை இந்தச் சட்டமே சிறுசிறு திருத்தங்களை அவ்வப்போது ஏற்றுக்கொண்டு நடைமுறையிலிருந்தது.

இது இலங்கை வரலாற்றில் ஒரு முரண்நகை என்பதை எல்லோரும் புரிந்து கொள்ளலாம். தோட்டக்கம்பனிகள் தமது தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களுக்கு தொழிலாளிகளையே வேண்டிநிற்கும் போது அது எவ்வாறு தனது கட்டுப்பாட்டிலிருக்கும் பாடசாலைகளில் ஒரு முறையான கல்வி வழங்கி தோட்டத்தொழிலில் இருந்து மேம்பட்ட தொழிலுக்கான தலைமுறையை உருவாக்க வழிசமைக்கும் எனும் கேள்வி இயல்பாக எழுகின்றது. இதையே இந்தக் கதையில் "வருடத்துக்கு ஒரு தடவை வந்து தோட்டத்துப் பிள்ளைகளுக்கு மாஸ்டர் படிப்பித்திருக்கின்றாரா என்பதைப் பரீட்சித்துப் பார்க்கும் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர் இன்று வருகின்றார். இரண்டாவதிலிருந்து மூன்றாவதற்கும், மூன்றாவதிலிருந்து நான்காவதுக்குமாக தோட்டத்துப் பிள்ளைகளை வகுப்பேற்றிவிட இன்ஸ்பெக்டர் தான் வரவேண்டுமென்பது ஒரு வெறும் 'இது' தான். மாஸ்டருக்கு இயலாததா அல்லது தெரியாததா?" என ஆரம்பத்திலேயே முன்னோட்டமாக சொல்லும் போது தோட்ட பாடசாலைக் கல்வி முறையில் வகுப்பேற்றங்களை செய்ய ஒரு கண்துடைப்பு முயற்சி அரங்கேறுகின்றது என்பதைச் ஜோசப் சொல்லத்தலைப்படுகின்றார்.

'சோதனை' என்ற கதை பல அம்சங்களை சொல்ல வருகின்றது. அக்காலப் பின்னணியில் தோட்ட பாடசாலைக்கு தனியே ஆசிரியராக மட்டும் ஒருவர் ஆட்சேர்க்கப்படமாட்டார். அவர் பகுதி நேரமாக தோட்ட அலுவலகத்திலும் வேலை செய்ய வேண்டியிருக்கின்றது என்பதைச் சொல்லும் போது தோட்ட நிர்வாகங்கள் ஆசிரியத்துவம் தொடர்பாக கொண்டிருக்கும் எண்ணக்கரு எத்தகையது என்பதையும் கல்விக்கான உரிமையை வழங்குவதில் பின் நிற்பதையும் புலப்படுத்துகின்றது. மற்றும் யாழ்ப்பாணத்தவர்களே பெரும்பாலும் ஆசிரியர்களாக வருவதற்கு எவ்வாறு ஒரு வலையமைப்பு செயற்பட்டுள்ளது என்பதை தெரிவிப்பதோடு இதன் காரணமாக தோட்டத்திலே பிறந்து கல்வி கற்ற ஒருவன் ஆசிரியனாகும் அபிலாசை எப்படி தவிடுபொடியாகின்றது என்பதையும் காட்டுகின்றார்.

"ஸ்கூல் இன்ஸ்பெக்டர் இப்படி வந்து குறுக்கே விழுவார் என பெரிய துரை எதிர் பாத்திருக்கவில்லை. அவர் கூறிய ஆளை எடுத்துப் போடாவிட்டால் சோதனைக்கு வரும் போது அது நொட்டை இது நொட்டை என எழுதிக்கொண்டே இருப்பார். எதிர்கால இடைஞ்சல்களுக்கு ஏன் இடம் வைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இன்ஸ்பெக்டருக்கு ஓகே சொல்லிவிட்டார் துரை. தன்னை வந்து பார்த்த இளைஞனுக்கு "சரி போ" என்று கூறும் உரிமை உள்ளது போலவே "இல்லை போ" என்று கூறும் அதிகாரமும் அவருக்கு உண்டு தானே" என எழுதும் போது வரிகளுக்கிடையே வாசிப்பதற்கு ஏராளமான செய்திகளை விட்டிருக்கின்றார்.

சிறுகதையில் இன்ஸ்பெக்டர் தன்னவராக இருந்தாலும் உள்ளூர ஒரு பயத்தில் அந்த ஒரு நாள் நாடகத்துக்கு முஸ்தீபாக ஆசிரியர் மேற்கொள்ளும் முனைப்புகளில் - இன்ஸ்பெக்டர் வரும் நாளில் மட்டுமே கற்பித்தல் உபகரணங்கள் காட்சிப்படுத்தப்படுதலும் பாடநூல்களும் உபகரணங்களும் வழங்கப்படுதலும் நகர பாடசாலைகளில் திறமையான மாணவர்களை அன்று மாத்திரம் பாடசாலைக்கு வரச்சொல்லுதல் என்பவற்றைக் கூறி கண் துடைப்பாக நடத்தப்படும் சோதனையில் தன்னை மாத்திரே வெற்றிபெற்றுக் கொண்டவனாக ஆசிரியர் காட்டிக்கொள்ளும் பிரயத்தனங்களை பட்டியல் போடுகின்றார்.

"நூற்றுக்கு தொண்ணூற்று ஐந்து வீதம் பேர் சோதனையில் சித்தியடைந்துள்ள மகிழ்ச்சிகரமான செய்தியை ஆபீசுக்கு அறிவிக்க வேண்டும். சோதனைக்கு தோற்றும் மாணவர்களின் தொகைக்கும் சித்தி பெற்றுள்ள வீதத்துக்கும் ஏற்பத்தான் டிப்பார்ட்மெண்ட் கொடுக்கும் உபகாரம் தோட்டத்து பாடசாலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கும்." "அவருக்கு சோதனை முடிந்துவிட்டது. ஆனால் தோட்டத்துப் பாடசாலையை தங்களது கல்விக்காக நம்பி இருக்கும் ஒரு உழைக்கும் சமுதாய குழந்தைகளுக்கு....? இளமையிலே கண்ணைக் குத்திவிடும் இந்தச் சோதனை முடிவதில்லை" எனக் கதையை முடிக்கும் போது இந்தக் கதையினூடாக கல்விக்கான உரிமை குறித்த பெரும் பாரத்தை இறக்கிவைத்திருப்பதை உணரக்கூடியவாறு இருக்கின்றது. இந்தக் கதையில் இத்தனை நுணுக்கங்களை சொல்வதற்கு தானும் ஒரு காலத்தில் பகுதி நேர ஆசிரியராக ஜோசப் பணியாற்றிய அனுபங்களையும் அவதானிப்புகளையும் துணை கொண்டிருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தக் கதை 1977ஆம் ஆண்டு மல்லிகையில் வெளிவந்திருந்தது.

இதேகால கட்டத்தில் மாத்தளை சோமு "அவன் ஒருவனல்ல" என்ற தனது சிறுகதையூடாக அர்ப்பணிப்பான தோட்ட பாடசாலை ஆசிரியனை காட்ட வருகின்றார். தோட்டத்தில் பிறந்து பின்னர் நகரத்துக்கு சென்ற குடும்பத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் நகரிலிருந்து தூரத்தே உள்ள தோட்ட பாடசாலையில் ஆசிரியனாக பணி புரிய வந்து இலட்சிய நோக்கு கொண்டவனாக மூடப்படவிருந்த பாடசாலையை மீண்டும் உயிர்ப்பெறச்செய்து மாணவர்களை ஆர்வமுடன் கற்கச்செய்கின்றான். ஆனால் அந்த பின்தங்கிய பாடசாலையில் கற்பிப்பது அவனின் பெற்றோர்களுக்கு உகந்ததாகபடுவதற்கு அவர்களின் சமூகக் கௌரவம் இடமளிக்கவில்லை. எப்படியோ மனச்சாட்சிக்கு முரணாக பெற்றோர் நிர்ப்பந்தத்தில் தொழிலை விட்டுச்செல்ல முடிவெடுக்கின்றான். அந்தச் செய்தி தோட்டத்துக்கு பரவுகின்றது.

"மெல்ல தலை தூக்கிப் பார்த்தான். அந்த கூட்டத்தில் தலைவர், கங்காணி, தபால்காரர், பூசாரி இப்படி பலர். அதில் ஒரு கிழவி இரண்டு கைகளையும் ஆகாயத்தை நோக்கி விரித்துக்காட்டி பேசினாள் - மூடப்போன ஸ்கூல நீங்க தான் மூடாம காப்பாத்தனீங்க! நல்லா படிச்சும் கொடுத்திங்க..! உங்கள மாதிரி பொறுப்போட பாரத்தோட படிச்சி கொடுக்கின்ற மாஸ்டர்மாருங்க கெடைக்கோனுமே!"

தோட்ட மக்கள் அந்த ஆசிரியனை பொறுத்து, வைத்த எதிர்ப்பார்ப்புகள் தகர்ந்து போய் மறுபடியும் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு போகாதவர்களாக மாற்றிய கோலத்தைக் காணுகின்றான்." துள்ளி ஓடிய வாண்டுப்பயல் சற்று தூரம் போய் "இனி எங்கே சேர் படிப்பு ? நீங்க ஸ்கூல விட்டு போறீங்கலாம். அதனால் என்னுடைய ஆயா இனி படிக்க போகாதே என சொன்னுச்சி..இனி ஆட்டுக்கு குலை வெட்டணும்! வெறகு பொறுக்கணும்" அவன் அப்படியே நின்றான். கால்கள் நடுங்கின." சிறுவர்களின் கல்வி உரிமை மறுக்கப்பட தான் காரணமானதை உணர்கின்றான். தனது முடிவினை அதிரடியாக மாற்றி அனைவரின் வயிற்றில் பாலை வார்க்கின்றான். இது புனைவுக்கான கதையாக இருந்தாலும் கல்விக்கான உரிமை கண்ணை திறப்பதற்கு கதை சொல்லும் பாங்கு அக்காலத்தில் வரவேற்கப்பட்டிருக்குமெனலாம்.

மாத்தளை வடிவேலன் தனது 'உரிமை வேண்டும்' கதையில் வேதநாயகம் ஆசிரியரை அறிமுகப்படுத்துகின்றார். இந்தக் கதையில் இந்திய வம்சாவளியினர் தமது பிரஜாவுரிமை இழப்பினால் படும் வேதனையை காட்டுவதையே அடிநாதமாக கொண்டிருந்தாலும் மலையகக் கல்வி வரலாற்றின் ஒரு காலகட்டத்தைப் படம் பிடிக்கின்றார். கண்டியில் கல்வி பயின்று பின் தோட்ட உத்தியோகத்தவராக மாறும் பதுளையைச் சேர்ந்த வாலிபனான வேதநாயகம் தோட்ட தொழிலாளர்கள் மீது கட்டவிழ்க்கப்படும் அடக்குமுறைகளைக் கண்டு மனம் வெதுப்பி பின் அத்தொழிலை கைவிடும் நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றார். இந்த சிறுகதை 1904 ஆண்டு தோட்டப்புறங்களில் கல்வியை குறித்து வெளியிட்ட பரோஸ் அறிக்கையையும் 1905 ஆண்டின் வேஸ் அறிக்கையினையும் ஞாபகப்படுத்துகின்றது. அந்த அறிக்கைகளில் தோட்ட பிள்ளைகளுக்கு மேனிலை அடையக்கூடியவாறான கல்வி வழங்கப்பட்டால் அச்சமூகத்துக்கு பொருத்தமடைபவர்களாக இருக்க மாட்டார்கள் எனும் பொருட்பட கருத்து தெரிவிக்கப் பட்டிருந்தது. இதையே, "தோட்டம் தோறும் பாடசாலை நடக்கின்றது என்பதை காட்டிக்கொள்ள மாட்டுத்தொழுவத்தை போன்று ஓர் ஆரம்ப பாடசாலை. அதன் உள் நோக்கம் சிறார்களை தன்னிச்சையாக தோட்டத்தில் அலைந்து திரிந்து பயிர்களை நாசம் செய்து விடாமல் காப்பது. இதில் தானே: " சர்வ சகலகலா வல்லவனாக விளங்கி" வன்மேன் ஷோ நடத்தக்கூடிய தமிழ் வாத்தியார். இது தான் ஆதி ஆரம்ப தோட்ட பாடசாலையின் சராசரி வரைவிலக்கணம்" எனக்கூறி வேதநாயகம் தனது சமூகம் அடிமைகளாக தலை குனிந்திருப்பதற்கு காரணம் சரியான கல்வி இல்லாமல் இருப்பதே என்பதையுணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே வழிகாட்டியாகி பெருநகர பாடசாலைகளுக்கு ஒப்பாக ஒரு பாடசாலையை உருவாக்கும் கனவோடு புறம் போக்கு நிலத்தில் பாடசாலையை கொட்டில் அமைத்து ஆரம்பிக்கின்றார். தன்னலமற்ற அப்பழுக்கில்லாத அவரது சேவையைக் கண்டு மக்களும் பரோபகாரிகளும் தாராளமாக உதவ யாவரும் வியக்கும் வண்ணம் தனது கனவுப்படியே பாடசாலையை உருவாக்கிவிடுகின்றார். இப்போது அரசியல்வாதிகளின் கவனம் பாடசாலையின் மீது குவிகின்றது. அந்த பாடசாலையை சுவீகரித்து அரச பாடசாலையாக ஆக்குவது தேர்தல் வாக்குறுதியாகின்றது. இதற்கும் பச்சை கொடி காட்டி தானும் தன்னை சேர்ந்த ஆசிரியர்களும் அரசாங்க பாடசாலை ஆசிரியர்களாகிவிடுவோம் என்ற கனவில் திளைக்கின்றார். எல்லாமே நினத்தபடி கைகூடி விடுகின்றது. ஆனால் அவனை பதவியில் சேர்த்துக்கொள்ள இலங்கை பிரஜாவுரிமை தகுதியில்லை என்ற பேரிடி விழுகின்றது. பதினைந்து வருடங்களுக்கு மேலாக அந்த பாடசாலைக்காகவே அர்ப்பணித்த வேதநாயகம் அவரின் முதுமை கனியும் பருவத்தில் அப்பாடசாலையில் இடமின்றி வெளியேற வேண்டிய அவலநிலையை அழகாக வடிவேலன் காட்டுகின்றார். அதேநேரம் வேதநாயகம் பிரஜாவுரிமை பெறுவதற்காக ஈடுபட்ட முயற்சில் இருந்த தடைக்கற்களையும் காட்டுவதும் கவனத்துக்குரியது.

தேர்ந்த சிறுகதையாளர் மு.சிவலிங்கம் அவர்களும் தெளிவத்தை ஜோசப் போலவே பகுதி நேர ஆசிரியராக பணியாற்றியவர். அவரது 'ஒரு விதை நெல்' சிறுகதையும் ஆறுமுகம் எனும் பாடசாலை அதிபரை ஒட்டியதாக நகர்கின்றது. "அவன் தோட்டத்திலிருந்து டவுன் பாடசாலைக்கு வருவதற்கு தினமும் ஏழு மைல் நடந்து..... டிரெயின் பிடிக்க வேண்டும். கரடு முரடான காட்டுப்பாதையில் ஏறி இறங்கி ஓட்டமும் நடையுமாக வரவேண்டும். ட்ரெயினை பிடிக்க முடியாவிட்டால் பதினைந்து மைல் பாடசாலைக்கு நடக்க வேண்டும். அவன் வாங்கும் சப்பாத்து அந்த பாதைக்கு.. ஒரு மாதத்துக்குக் கூட தாக்கு பிடிக்காது!" இது அந்த அதிபர் தான் ஒரு பாடசாலை மாணவனாக இருந்த போது கண்ட அனுபவம். இது போல கதையில் இடைநிலை உயர் கல்விக்காக நகரத்துக்கு அக்காலத்தில் வந்த ஏழை மாணவர்கள் கல்விக்கான உரிமையை பெற்றுக்கொள்ள பட்டபாட்டை பதிவுசெய்கின்றார். அந்த ஆறுமுகம் அதிபரும் தன் பாடசாலையில் படிக்கும் கெட்டிக்கார மாணவர்களில் தன்னைக் காண்பவராக இருக்கின்றார்.

பெருந்தோட்ட பாடசாலைகள் யாவும் அரசினால் எழுபதுகளின் இறுதியில் தொடங்கி படிப்படியாக சுவீகரிக்கப்பட்டன. அதன் போது ஆசிரியர்களும் அரச ஊழியர்களானார்கள். கல்வி அமைச்சின் ஆட்சேர்ப்பு அடிப்படையில் மலையகத்தில் கற்ற இளைஞர்களும் சிறிது, சிறிதாக ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டார்கள். பின் அதிபர்களும் ஆனார்கள். அரச நிதி தட்டுப்பாடு காரணமாக வெளிநாட்டு நிதியுதவி கோரப்பட்டு கடனாகவும் நன்கொடையாகவும் பெற்றுக்கொள்ளப்பட்டவை தோட்ட பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் மனித வள விருத்தி பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு நிதி வழங்கிய நாடுகளில் சுவீடனும் ஒன்று. அது Swidish International Development Agency (SIDA) எனும் பெயரில் கல்வி அமைச்சோடு சேர்ந்து இயங்கியது. இதில் செயற்பட்ட அதிகாரிகள் தோட்ட நிர்வாகத்திடமிருந்து பாடசாலைகளை அமைக்க இரண்டு ஏக்கர் காணியை பெற்றுக்கொள்ள முடியாமல் அவர்கள் தரும் ஒதுக்குப்புற பயன்பாட்டுக்கு உதவாத காணித்துண்டுகளை பயன்படுத்த வேண்டியிருந்தது. அதற்கு அவர்கள் பெரும்பாடுபட வேண்டியிருந்தது. அத்தகைய உரிமை மறுப்பு விடயங்களை பாடசாலை வளர்ச்சிக்கு தன்னை முழுமையாக அர்ப்பணிக்கும் ஆறுமுகம் எண்ணங்களை அசை போடுவது காட்டுகின்றது.

"...அவர் தெய்வீகமாக நினைக்கும் 'சீடா' நிறுவனத்தின் காலத்தால் அழியாத உதவிகள்... அரசாங்கத்தின் மாற்றாந்தாய் மனப்பான்மை... 'பெருந்தோட்ட பொருளாதாரம் இருக்கும் வரை தொழிலாளர்கள் தேவைப்படுவார்கள்' என்பதற்காக தொழிலாளர்களை நிலைமாறாத மனிதர்களாகவே ஒடுக்கி வைக்க வேண்டும் என்ற உலக வங்கியின் பொருளாதார உபதேசம்.. தோட்ட சமூகத்தின் கல்வியை திட்டமிட்டு ஒடுக்கும் அரசியல் கடமைகள்.. அவர்களுக்கு கல்விக்கூடங்களை கட்டிக்கொடுக்க முன்வரும் நிறுவனங்களுக்கு காணி வழங்க மறுக்கும் தேசிய துரோகங்கள்...அந்த நிறுவனங்கள் வழங்கும் நிதிகளை சூறையாடி வீடுவாசல் கட்டி, தங்கள் வாழ்க்கையை அபிவிருத்திசெய்துகொள்ளும் சமூக துரோகிகள்... தாய்மரத்தையே கொல்லும் புல்லுருவிகள்... இப்படி யாவரும் வந்து போனார்கள்" எனக் காட்டும் போது மலையகம் கல்விக்கான உரிமையை பூரணமாக அடைந்து கொள்வதில் ஏராளம் தடை இருக்கின்றது என்பதை உணர்த்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆறுமுகம் சக ஆசிரியர்களோடு பணி விடயத்தில் கெடுபிடி காரணமாக உள்ளேயும் பகை. உள்ளே மட்டும் பகைகளை தேடவில்லை தன் வாயால் யதார்த்தவாதியாகி அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரினதும் வெறுப்புக்களை வாங்கிக்கொண்டவர். இப்படியானவர் தனது பாடசாலையில் புதிய கட்டிடம் அமைக்கப்பட்டு திறப்பு விழாவினை அரசியல்வாதிகளை அழைக்கமால் நடத்திவிடுகின்றார். இதுவே அவரை இடமாற்றத்துக்கு ஆளாக்கிவிடுகின்றது. இது மலையகக் கல்வி சூழலில் அரசியல் ஆடும் ஆடுபுலியாட்டத்துக்கு உதாரணமாக அமைகின்றது.

"புதிய பாடசாலைக்கு போறது எனக்கு பிரச்சனை இல்ல.. அங்கேயும் நம்ம பிள்ளைகள்தானே.. ஆனா…பரீட்சை காலத்தில..அந்த மாணவர்களை அந்தரமா விட்டு போகிறோமே..' என்று அவர் மனம் அழுதது. இந்த பாடசாலையோடு கலந்துவிட்ட அவரது உடல்…உயிர்…ஆத்மா அத்தனையும் வேரோடு பிடுங்கப்படுவதை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஜடமாக எழும்பி நின்று.. அந்த இடமாற்றக் கடிதத்தை பணிப்பாளரிடமிருந்து ஆறுமுகம் சேர் வாங்கினார்." என கதை முடியும் போது மறுக்கப்பட்ட கல்வி உரிமையை பெற்றுக்கொடுக்க பாடுபட்டும் புண்படுத்தப்பட்ட ஆறுமுகங்கள் எத்தனை பேர் இருக்கின்றார்களோ என எண்ணத்தோன்றுகின்றது.

இதை போலவே அவரின் மற்றுமொரு கதையான 'நாசமாய்ப் போக' மலையகத்தின் மற்றுமொரு கல்வி சூழலை காட்ட தலைப்படுகின்றது. நுவரெலியா, கண்டி, பதுளை மாவட்டங்களில் காணப்படுவது போன்று சற்றே ஆரோக்கியமான நிலை களுத்துறை மாவட்டத்தில் உள்ள தோட்டப் பாடசாலைகளில் காணப்படுவதில்லை. பெரும்பான்மை மக்கள் அடர்ந்து வாழும் ஹொரணை பகுதியில் றப்பர் தோட்டமொன்றின் பாடசாலையில் பணியாற்றும் சிவாஜி எனும் ஆசிரியனை முன்னிறுத்தி அப்பிரதேச கல்விநிலை மற்றும் ஆசிரியர்களின் அந்தரிப்புகளை படம்பிடிக்கின்றார்.

"நூத்தி எண்பத்தியாறு பிள்ளைகள் சேர்… ஆனால் தினமும் வாறது நூற்றி பத்து போலத்தான் இருக்கும். எல்லாப் பிள்ளைகளும் வருவாங்க. ஆனா இன்னைக்கு வந்த புள்ளைங்க நாளைக்கு வராது.. இன்னைக்கு வராத புள்ள நாளைக்கு வரும் சேர்.."

"சேர்..கடந்த ஏழு வருசமா நான் தான் ஆசிரியர்.. நான் தான் அதிபர்.. அதிபர் கூட்டமென்றா பாடசாலை மூடணும். சம்பள பேசீட் கொடுக்கப்போக பாடசாலை மூடணும். சம்பளம் எடுக்க போக பாடசாலை மூடணும். எனக்கு சொகமில்லையென்னா பாடசாலை மூடணும்… எப்படி சேர் ஒழுங்கான படிப்பு நடக்கும் ? எப்படி சேர் புள்ளைங்க ஆர்வத்தோடு பாடசாலைக்கு வருவாங்க..? இவங்களோட கத்தி, கத்தி எனக்கு வயிற்று வலி வந்திட்டுது. பொய் இல்ல சேர். உண்மை .."

பாடசாலை மேற்பார்வைக்கு வந்த அதிகாரியிடம் நடக்கும் உரையாடலாகவே கதை முழுதுமாக நகர்கின்றது. மாணவர்களுக்கான கல்வி உரிமை தொடர்பில் வெகுவாக அக்கறை கொண்டதாகவும் தொடர்கின்றது. தனது திருமண வயது கடந்து போன நிலையில் தனி ஆசிரியனாக படும் வேதனைகள் மற்றும் பிரதேச மாணவர்கள் எதிர்க்கொள்ளும் பிரச்சனைகள் என முக்கியமான மையங்களைத் தொட்டு அவற்றுக்கு இந்த யுகத்தில் விமோசனம் கிடைக்காது என்றவாறாக கதை முடிகின்றது. 1997ம் ஆண்டு எழுதப்பட்ட இந்தக் கதையில் உரத்து உரையாடிய விடயங்கள் 2017யிலும் அவ்வாறாக இருக்கின்றது என்பதை நினைக்கும் போது வேதனையாக இருக்கின்றது.

இப்படி சிவாஜி என்ற தன்னலமில்லா ஆசிரியரை இப்பிரதேசத்தில் காட்டும் போது, "அட்டைகள்" எனும் கதையில் பதுளை சேனாதிராஜா இதே பிரதேசத்தில் பெட்டிசன்களை ஆதாரமாகக் கொண்டு பாடசாலை மேற்பார்வைக்கு செல்லும் கல்வி அதிகாரியின் பிடிக்குள் சிக்கும் புல்லுருவி ஆசிரியர் அகப்படுகின்றார். மத்துகம நகரிலிருந்து தொலையிலுள்ள சிரமான பாதை வழியே காரிலும் பின் கால்நடையாகவும் சிங்கள பிரதேசத்தை ஊடறுத்து அந்த பின்தங்கிய பாடசாலையை நோக்கி செல்லும் போது ஒருவரைக் கண்டு பாடசாலையைப் பற்றி விசாரிக்க " இப்ப மழ காலமில்ல. இந்த ஏரியாவில அட்ட நெறய வந்திருச்சாம். அதனால முன்னெச்சரிக்கையா ஸ்கூல மூடிட்டாங்களாம்" எனக்கூறிவிட்டுச் சென்றுவிடுகின்றார். இது கேட்டு அதிர்ச்சி அடைந்த அதிகாரி பாடசாலைக்குச் சென்று மக்களை சந்திக்கின்றார். "இங்க.. பிரின்சிபல் ஸ்கூல ஒழுங்கா பார்த்துகிறது இல்ல. அந்தா தெரியுதே ஒரு கட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுல வீடியோ, கெசட் எல்லாம் விக்கிறாரு. பகலுக்கு பெறகு ஸ்கூல் பொடியன்களை அங்கே வைச்சிப்பாரு. அங்க போய் பாருங்க." என்பதும் மழ காலத்தில அட்ட வாரது பெரிய விசயமா? இல்லயே அத காரணமா வச்சிக்கிட்டு நாங்க வேலக்கி போகாமையா இருக்கோம். நல்ல கத இது. அவரு ஸ்கூல மூடுறதுக்கு ஒவ்வொரு காரணொம் வச்சிருக்காரு" இப்படியான நிலைமையை கண்ட அதிகாரி பிள்ளைகளின் கல்வி உரிமை பறிக்க காரணமான ஆசிரியர் மீது எடுக்கும் நடவடிக்கையோடு கதை முடிகின்றது.

இவ்வாறு மேற்பார்வைகள் சரியாக நடைபெறாத பாடசாலைகளில் கற்கும் தோட்டத்து பாடசாலை மாணவர்கள் அப்பாடசாலைகளில் இருக்கும் தனி ஆசிரியர்களால் எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றார்கள் இந்தக் கதையூடாக காட்டும் அதேவேளையில் சேனாதிராஜா தனது 'இன்னொரு ஹிரோஷிமா' எனும் சிறுகதையில்,

"பாடசாலையை மேட்டுநிலத்தில் அந்த காலத்து வெள்ளைக்காரன் அமைத்திருக்கான். கல்வி மட்டமாக இருந்தாலும் கல்விக்கூடமாவது உயரத்தில் இருக்க வேண்டும் என்று நினைத்தானோ என்னவோ. சாணத்தால் பூசி மெழுகிய அடுப்பங்கரை நிறத்தை போலவோ சுரைக்காய் முட்டியை போலவோ பழுப்பு நிறத்தில் சாயல் அடிக்கும் பாடசாலை..." என பாராமுகமாக இருந்து பாழடைந்து கொண்டிருக்கும் பாடசாலை கட்டிடத்தை புதுப்பிக்க பல்வேறு முயற்சிகள் எடுத்தும் பலிதமாகாத நிலையில் விரக்தி அடைந்த ரவி மாஸ்டர் தான் கதையின் நாயகர். சக ஆசிரியர் ஒருவரோடு மாணவர் முன்னேற்றத்துக்காக அல்லாடும் அவர் ஒரு நாள் கடும் மழையில் தனது பாடசாலை கட்டிடம் சரிந்து விழுந்ததையிட்டு ஒரு வகையில் ஆறுதல் கொள்கின்றார். இதனை தோட்ட சமூகம் அவர் இதனை சாட்டாக வைத்துக்கொண்டு வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெறப்போகின்றார் என எண்ணுகின்றார்கள். ஆனால், "புதிய கட்டடம் தரச் சொல்லி எத்தனைத் தரம் ஏறி இறங்கி களைச்சிப் பொயிட்டேன். ஒவ்வொரு முறையும் ஏதாவது காரணத்த சொல்லி சமாளிச்சிக்கிட்டே வந்தாங்க. நம்ம ஊரு மந்திரி ஸ்கூல ஒடச்சிட்டா பெறகு புள்ளைங்க எங்க படிக்குமுனு எங்கிட்டையே கேள்வி கேட்கின்றாரு. ஸ்கூலுக்கு வேற எடம் இருந்தா அதிலயாவது ஏதாவது செய்திருக்கலாம். இவ்வளவு காலமும் இந்த விஷயமா ஒன்னும் பண்ண முடியலனு கையை கசக்கிக்கிட்டு இருந்த எனக்கு இப்படி ஒரு நல்ல நிலமை வருனுமுனுதானே எதிர்பார்த்தேன். இனி செய்யிறத சட்டுபுட்டுனு செஞ்சிட வேண்டியது தான்" - என இந்த இயற்கை அனர்த்தத்தை தனக்கும் பாடசாலைக்கும் சாதகமானதாக சிந்திக்கின்றார். இது தோட்ட பாடசாலைகளுக்கு தோட்ட நிர்வாகம் போதிய காணியை பெற்றுக்கொடுக்காமல் இருப்பதும் அதற்கு அரசியல்வாதிகள் அழுத்தம் கொடுக்காமல் இருப்பதும் குறித்த உரிமை தொடர்பில் வாசகர்கள் கவனத்தை கோருகின்றார் எனலாம்.

மொழிவரதன் தனது 'நிலப்பசி' எனும் நெடுங்கதையில் தோட்டப்பிள்ளைகள் கல்வி பெறும் சிறுநகர பாடசாலை ஒன்றுக்குரிய காணி எவ்வாறு அரசியல் ஆதிக்கம் பெற்ற வெளியாரினால் அத்துமீறி பயன்படுத்தப்பட்டு பாடசாலை சிரமத்துக்குள்ளாகின்றது என்பதைச் சித்தரிக்கின்றார்.
மல்லிகை சி.குமாரும் தனது 'ஸ்டோர் ஒன்று ஸ்கூலாகின்றது' எனும் சிறுகதையில் சிங்கள பாடசாலையொன்றோடு பகுதி நேர பாடசாலையாக இயங்கிய தமிழ் பாடசாலை அனுபவித்த சிரமத்தைக்காட்டி பின்னர் அது தனித்தமிழ் பாடசாலையாக பழைய தேயிலை தொழிற்சாலைக்கு மாற்றப்பட்டு எழுச்சி பெறுவதைக் காட்டியுள்ளார்.

21ம் நூற்றாண்டில் எழுத தொடங்கிய புதிய மலையக எழுத்தாளர்களான சிவனு மனோகரன், சுதர்மமகாராஜன், தவச்செல்வன் போன்றோர்கள் சமகால கல்விசார் உரிமைகள், சிறுவர் உரிமைகள், பெண் உரிமை மற்றும் பாடசாலையில் மாணவர் துஷ்பிரயோகம் போன்றவைகளை குறித்து எழுதுவது அவதானிக்கப்படுகின்றது. விரிவஞ்சி அவைகள் இங்கு தவிர்க்கப்படவேண்டியதாகின்றது.

எது எவ்வாறாயினும் மலையகத்தைப் பொறுத்தவரை பின்நவீனத்துவ எழுத்துக்களை விட, பின்காலனித்துவ எழுத்துகளே அவர்களை எழுச்சி நோக்கி சிந்திக்க வைக்கின்றன என்பதற்கு இந்தக் கல்விக்கான உரிமை குறித்து எழுப்பும் குரல்கள் சான்றுபடுத்துகின்றன எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21ஆம் நூற்றாண்டில் வாழ்க்கை நீடித்த கல்வி - ஒரு சமூகப்பார்வை

விஜயானந்தன் மழவராயர்

வாழ்க்கை நீடித்த கற்றல் எனும் எண்ணக்கருவானது புதியதொன்றல்ல. வாழ்க்கை முழுவதும் கற்றல் என்ற கருத்து தற்கால கல்விச் சிந்தனைகளில் நீக்கமற நிறைந்து, கல்வி அமைப்புகளிலும் கல்விக் கொள்கைகளிலும் பல நூற்றாண்டு காலமாக செல்வாக்கு செலுத்தி வந்துள்ளது. உலகெங்கினும் காணப்படக் கூடிய பழங்கால கலாசாரங்கள், புராதன நாகரீகங்கள் என அனைத்திலும் வாழ்க்கை நீடித்த கற்றலுக்கான சுவடுகளைக் கண்டறியக் கூடியதாகவுள்ளது. ஆயினும், வாழ்க்கை நீடித்த கற்றல் எனும் எண்ணக்கரு மற்றும் அது சார்ந்த நடைமுறை ஆகியவற்றிற்கான முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் வரலாற்றுரீதியாக பார்க்கும் போது அது அநேகமாக நான்கு பிரதான காலப்பகுதிகளை குறிப்பாக சுட்டி நிற்கின்றது.

முதலாவதாக, தனி மனித வளர்ச்சியையும் அதன் மூலம் சமூக முன்னேற்றத்தையும் போசிக்கக் கூடியவாறான கற்றல், சுற்றாடலை நிரந்தரமாக வழங்க வேண்டுமென 18ஆம் நூற்றாண்டில் எழுந்த அறிவியல் மற்றும் தத்துவார்த்த சிந்தனைகள் வலியுறுத்தி நின்றன. இரண்டாவதாக, 19ஆம் நூற்றாண்டின் கைத்தொழில் புரட்சியின் பின்னர் உருவாகியிருந்த இயந்திரமய உற்பத்தி நிலைமையானது புதிய தொழினுட்பத்தில் பயிற்சி பெற்று பணியாற்றவும் மேலும் தொடர்ந்து கற்றலில் ஈடுபாடும் அவாவும் உடைய தொழிற்படையின் தேவையை வலியுறுத்தி நின்றது.

மூன்றாவது காலப்பகுதியாக 20ஆம் நூற்றாண்டின் முதல் அரைவாசி அமைந்திருந்தது. இக்காலப்பகுதி இரு பிரதான உலக யுத்தங்களைக் கண்டுள்ளதுடன் நாளும் பொழுதும் உருவாகி வருகின்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க ஏற்றவாறான தொடர் கல்வியைப் பெற்றுக் கொள்வதில் வளர்ந்தோரிடையே காணப்பட்ட உத்வேகத்தையும் வெளிப்படுத்துவதாக இருந்தது. இக்காலப்பகுதியிலேயே ஜோன் டுயி அவரது சனநாயகமும் கல்வியும் என்ற நூல் பிரசுரமானது (John Dewey's Democracy and Education, 1916). இது வாழ்க்கை நீடித்த கல்விக்கு கற்போரை தயார்படுத்துதலே கல்வியின் நோக்கமெனக் குறிப்பிட்டிருந்தது. இன்னுஞ்சில வருடங்களுக்குப் பின் பசில் யாக்சிலி என்பவர் வாழ்க்கை நீடித்த கல்வி எனும் நூலைப் பிரசுரித்தார் (Basil Yeaxlee published Lifelong Education, 1929). இது வாழ்க்கையினதும் கல்வியினதும் பல பரிமாணங்கள் பற்றிக் குறிப்பிட்டிருந்தது.

நான்காவது காலப்பகுதியாக 20ஆம் நூற்றாண்டின் இறுதி அரைவாசி அமைந்திருந்தது. இக்காலப்பகுதியிலேயே கல்வி முயற்சிகளுக்கு வழிகாட்டற் தத்துவமாக வாழ்க்கை நீடித்த கல்வி முனைப்படையத் தொடங்கியது எனலாம். 1945இல் தோற்றம் பெற்ற ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பானது (UNESCO) நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பை கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அம்சங்களுக்கூடாக மேம்படுத்தி மனித உரிமைகள், உலக சமாதானம், பாதுகாப்பு போன்றவற்றை உறுதி செய்து கொள்ள இன்றளவு முயன்று வருகின்றது. இம்முயற்சியானது சகலருக்கும் சமத்துவமும் சமமானதுமான சந்தர்ப்பங்கள் என்ற தத்துவத்தை அடியொற்றியதாக இருப்பதுடன் வாழ்க்கை நீடித்த கற்றல் (Life long Learning) மற்றும் வாழ்க்கை முழுவதும் கற்றல் (Life-wide Learning) ஆகிய எண்ணக்கருக்களை ஆதாரமாகவும் கொண்டுள்ளது.

ஆரம்ப காலத்தில் வாழ்க்கை நீடித்த கற்றல் எனும் எண்ணக்கருவானது கல்வியினதும் வாழ்க்கையினதும் விரிந்து, பரவிய பல்வேறு பரிமாணங்களிலும் செல்வாக்கு செலுத்தியிருப்பினும், 1970இற்குப் பின் இதனது கவனம் பிரதானமாக பொருளாதார செயலாற்றுகையை மையப்படுத்தியதாக குறுகிவிட்டது. இக்காலப் பகுதிகளில் எழுந்த பொருளாதார வளர்ச்சி, மனித மூலதனம் ஆகியவை பற்றிய தத்துவங்கள் இதற்கு காரணமாக அமைந்ததாக குறிப்பிடப்படுகின்றன (ஆதாரம்: Desjardins, 2009). இவ்வாறாக பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட முறைமையானது காலங்காலமாக இருந்து வந்த சமூக பாரம்பரியத்துடன் அதாவது தேசிய அடையாளம், குடியுரிமை, மானுட விழுமியங்கள் போன்றவற்றுடன் முரண்படுவதாக இருந்தது (ஆதாரம்: Green, 1990). தொழிற்படைக்குக் கிடைக்கக்கூடிய நல்ல வேதனம், சமூகத்தின் மேல் நோக்கிய நகர்வு ஆகியவற்றிற்கு பொருளாதார அபிவிருத்தியும் தனியாள் வளர்ச்சியும் அவசியமானதாகும். இதனால் உலக நாடுகளின் கல்விக் கொள்கைகள் பெரும்பாலும் பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டமைந்தன எனலாம். எவ்வாறாயினும், தொழினுட்பம் மற்றும் சமூக மாற்றம் ஆகியவை உருவாக்கிய சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் வாழ்க்கை நீடித்த கற்றல் எனும் எண்ணக்கரு மீளவும் இப்போது உத்வேகம் அடையத் தொடங்கியுள்ளது.

உலகளாவிய ரீதியில் கல்வி பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அறிவுச் சமூகம், அறிவுப் பொருளாதாரம் பற்றிய விழிப்புணர்வு எமக்கு தேவையாகிறது. அறிவுத் தொழிலாளர்களை உருவாக்கும் (Knowledge Workers) ஒரு வழிமூலமாக இன்று கல்வி வழங்கல் மாற்றம் அடைந்து வருகின்றது. அறிவுச் சமூகம் பற்றிய கருத்தும் சமூகப் பொருளாதார மாற்றங்களுக்கேற்ப எங்ஙனம் கல்வி மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டுமென்பதும் இன்றைய உலக ஒழுங்கில் அத்தியாவசியமாகிறது. மேலும், தேசிய எல்லைகளுக்கு அப்பாலான கற்றல் பற்றியும் கவனஞ் செலுத்த வேண்டியதாகிறது.

உலகளாவிய பொருளாதார வளர்ச்சிக்கும் அதன் போட்டித்தன்மைக்கும் ஆதாரமாக அமைந்திருப்பது கல்வியும் கற்றலும் ஆகும். மேலும், மாறிவருகின்ற வேலையின் தன்மையானது தொடர்ந்து கற்றலையும் திறன் அடைவையும் மானுட வாழ்க்கை முழுவதும் வேண்டி நிற்கின்றது. இதனால் அறிவுப் பொருளாதாரம் என்ற புதியதொரு உலக ஒழுங்கு மலர்ந்து வருகிறது. மேலும், உலக நாடுகளும் தத்தமது கல்வி சீர்திருத்தங்களை அறிவுப் பொருளாதாரம் அல்லது அறிவு சமூகம் சார்ந்ததாக மேற்கொண்டு வருவதுடன் வாழ்க்கை நீடித்த கற்றலை மேம்படுத்தும் பொருட்டான வேலைத்திட்டங்களையும் உபாயங்களையும் கடைபிடித்து வருகின்றன. இருந்த போதிலும், இவை உண்ணாட்டு அபிலாசைகளையும் மரபுகளையும் உள்ளடக்கியதாக இருந்தால் மட்டுமே வாழ்க்கை நீடித்த கல்வியினால் பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக இணக்கப்பாட்டுக்கும் இடையே முரண்பாடுகள் உருவாகாமல் தடுக்க முடியும். சமூக சகவாழ்வும் குடியியல் விழுமியங்களும் மேலோங்கிய நிலையில் பொருளாதார வளர்ச்சியை சாத்தியமாக்கிக் கொள்வதற்கு ஒரு வழிமூலமாக வாழ்க்கை நீடித்த கற்றல் அமைந்துள்ளதென உறுதியாகக் கூற முடியும்.

பல உலக நாடுகள் தமது கல்விக் கொள்கைகளில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிநெறியை வேலைவாய்ப்பின்மைக்கு ஒரு தீர்வாக விதந்துரைத்து வருகின்றன. இதன் பொருட்டு நாடுகள் பலவும் தொழிற்கல்வி நெறிகளும் தொழிற்றிறன்களும் வேலை வாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை உருவாக்கித் தரும் என்ற எண்ணத்தில் தத்தமது கல்விக் கொள்கைகளில் உள்ளடக்கி வருகின்றன. இதைப்போலவே 21ஆம் நூற்றாண்டுக்கான திறன்களுக்கும் விஞ்ஞானம், தொழில்நுட்பம், கணிதம் மற்றும் இயந்திரவியல் ஆகியவற்றிற்கும் கல்விக் கொள்கைகளில் அதிகரித்த முக்கியத்துவத்தை வழங்க வேண்டியுள்ளது. இதன் மூலம் அறிவுப் பொருளாதாரம் சார்ந்து உருவாகின்ற புதிய சந்தர்ப்பங்களை கையகப்படுத்துவதற்கான அனுகூலம் ஏற்படுவதுடன் தேசிய உற்பத்திக்கு பங்களிக்கக் கூடியதாகவும் இருக்கும்.

எனவே, 21ஆம் நூற்றாண்டை நோக்கி மாணவர் வெற்றிகரமாக முன்னேற வேண்டுமாயின், மரபுவழி கல்விக்கு மேலதிகமான கற்றலில் ஈடுபட வேண்டியது அவசியமாகிறது. இது சமூக மற்றும் மனவெழுச்சி சார்ந்த கற்றலிலிருந்து விருத்தியாகிய தொடர்பாடல், பிரச்சினை விடுவித்தல், கூட்டிணைவு ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது. மரபுவழி பாடங்கள் மூலம் கிடைக்கப் பெறுகின்ற தேர்ச்சிகளுடன் சமூக மற்றும் மனவெழுச்சி சார்ந்த தேர்ச்சிகளையும் மாணவர் பெற்றுக்கொள்ளலானது அறிவுப் பொருளாதாரத்திலும் (Knowledge Economy) எண்ம பொருளாதாரத்திலும் (Digital Economy) அவர்கள் வெற்றிகரமாக பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித்தரும்.

இதேவேளையில், 2015ஆம் ஆண்டு உலக பொருளாதார மையம் வெளியிட்ட "21ஆம் நூற்றாண்டு திறன்கள் இடைவெளியும் தொழினுட்பத்திற்கூடாக அவற்றிற்கு முகங்கொடுத்தலும்" என்ற தலைப்பிலான அறிக்கையானது 21ஆம் நூற்றாண்டு கல்விக்கான 16 அடிப்படை தேர்ச்சிகளை இனங்கண்டுள்ளது (World Economic Forum: "21st-century skills gap and ways to address it through technology"). இவை 6 அடிப்படை எழுத்தறிவுத் திறன்களையும் தேர்ச்சிகள் அல்லது குணப்பண்புகள் எனக் குறிப்பிடப்பட்ட 10 திறன்களையும் உள்ளடக்கியுள்ளன.

அடிப்படை எழுத்தறிவுத் திறன்களாக - 1. எழுத்தறிவு, 2. எண்ணறிவு, 3. விஞ்ஞான எழுத்தறிவு, 4. தகவற்றொடர்பாடல் தொழினுட்ப எழுத்தறிவு, 5. நிதிசார் எழுத்தறிவு, 6. கலாசார மற்றும் குடிமைசார் எழுத்தறிவு என மாணவர் எங்ஙனம் நாளாந்த வாழ்க்கையில் திறன்களை பிரயோகிக்க முடியுமென்பதாக இனங்காணப்பட்டுள்ளன. இவ்வாறே மாணவர் எவ்வாறு சிக்கலான சவால்களுக்கு முகங்கொடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுமென்பதாக 7. பிரச்சினை விடுவித்தல் / தர்க்க சிந்தனை, 8. ஆக்கம், 9. தொடர்பாடல், 10. இணக்கமுறுதல் ஆகிய தேர்ச்சிகள் இனங்காணப்பட்டுள்ளன. மேலும், நாளும் மாறும் சுற்றாடலை மாணவர் எங்ஙனம் அணுக முடியுமென்பதாக 11. அவா, 12. முயலுதல், 13. நிலைத்திருத்தல், 14. இயைபாக்கம், 15. தலைமைத்துவம், 16. சமூக மற்றும் கலாசாரம் பற்றிய விழிப்புணர்வு ஆகிய தேர்ச்சிகள் இனங்காணப்பட்டுள்ளன.

இன்னும் 21 ஆம் நூற்றாண்டு வேண்டி நிற்கின்ற மேற்குறிப்பிட்ட 16 திறன்களையும் வாழ்க்கை நீடித்த கற்றலுக்கூடாக மாணவர் பெற்றுக் கொள்ளல் அத்தியாவசியமாகிறது. மேலும், நுகர்வுத் தேவைகளுக்கும் உற்பத்திக்கும் இடையேயான இடைவெளியும் தொழிலாளர் ஒடுக்கப்படுதலும் சுரண்டப்படுதலுமான நிலைமையும் பொருளாதார மாற்றமும் உற்பத்தி முறையில் ஏற்படுகின்ற மாற்றமும் இன்னும் அதிகரித்து வரும் வேலைவாய்ப்பின்மை, அதிகரித்து வரும் ஏழைக்கும் செல்வந்தருக்குமான இடைவெளி என்றவாறு எதிர்கொள்ள வேண்டிய சவால்களும் தொடர்ந்து 21ஆம் நூற்றாண்டிலும் காணப்படக்கூடும்.

வேலைவாய்ப்புக்காக கல்வி கற்றல் என்பது ஒரு கட்டத்தில் கல்வி கற்றோர் எண்ணிக்கை கூடுதலாக இருக்க வேலைவாய்ப்புக்கான இடங்கள் குறைவாக இருக்கின்ற நிலைமையுடன் முரண்படுகின்ற நிலை உருவாகிறது. அரசியல் மற்றும் குடிமை உரிமைகளுக்கூடாக சனநாயகம் மேலோங்கினும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் இன்னும் வலுப்படுத்தபட வேண்டிய நிலையிலேயே இருக்கின்றன. இந்த அசமநிலை உலக சமூகக் கட்டமைப்பில் பரவலாகக் காணப்படினும், சமூகப் பொருளாதார மற்றும் கலாசார நிலையில் பின்தங்கிய மக்கட் சமூகத்தை இது பெரிதும் பாதிக்கும். ஆதலால் பின்தங்கிய இம்மக்கட் சமூகத்தை இலக்குப்படுத்தியதாக வாழ்க்கை நீடித்த கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் கொள்கை தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இது வேலைவாய்ப்புக்கும் அப்பால் தனியாள் விருத்தியையும் சமூக முன்னேற்றத்தையும் கருத்திற் கொண்டதாக வாழ்க்கை நீடித்த கற்றல் நடவடிக்கைகள் அமைய வேண்டுமென்பதை வலியுறுத்தி நிற்கின்றது.

எழுந்து நடந்தால் இமயமலையும் வழி கொடுக்கும்.....
உறங்கிக் கிடந்தால் சிலந்தி வலையும் நம்மைச்
சிறைபிடிக்கும்.

விழுவதெல்லாம்
எழுவதற்குத்தானே தவிர
அழுவதற்காக அல்ல...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமன் கூத்தில் கலையம்சங்கள்

கலாநிதி சோதிமலர் ரவீந்திரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

மலையகத்தில் இடம்பெறும் கூத்துக்களிற் சிறப்புப் பெற்ற கூத்தாகக் காமன் கூத்துக் கொள்ளப்படுகின்றது. பொதுவாக மலையகத்திலுள்ள எல்லாத் தோட்டங்களிலும் நடைபெறுவது காமன் கூத்தேயாகும். இக்கூத்து காமன் - ரதியாட்டம் எனவும் சேடியாட்டம் என்றும் அழைக்கப்படுகின்றது. இளம் வயதினர் தமது பருவத்திற்கேற்ப, எதிர்ப்பாலாரிடம் அன்பு கொள்வதுண்டு. அவ்வாறு அன்பு கொள்வதை "மலர்க்கணை எய்துதல்" எனச் சொல்வதுண்டு. அன்புக்கு உருவம் கிடையாது. இது ஒரு வகைப் பாசமாகும். உணருதலின்றி, இதற்கு விளக்கமோ, வடிவமோ கிடையாது. வடிவற்ற அந்த அன்பை விளக்கவே காமனாட்டம் இடம் பெறுகின்றது.

காமன் கூத்தானது கலையம்சங்கள் பல கொண்ட ஆட்டமாகும். இக்கூத்தின் கலையம்சத்தை களரியமைப்பு அல்லது மேடை அமைப்பு, ஆட்டமுறை, பாடல் அமைப்பு, பாத்திரங்களின் ஒப்பனை, அலங்காரங்களிலும், ரதி – காமன் திருமணம், காமனின் தகனம் போன்றவற்றிலும் காணலாம்.

## களரியமைப்பில் கலையம்சங்கள்

காமன் கூத்திற்கான களமானது, ஒரு விளையாட்டு மைதானம் போன்ற திறந்த வெளியில் அமைக்கப்பட்டிருக்கும். களத்தைச் சுற்றி வாழை மரங்கள் குலைகள் சகிதம் நடப்பட்டிருக்கும். களத்தின் மத்தியில் படிகள் கட்டப்பட்ட மேட்டின் மேல் காமனுக்கு ஊன்றப்பட்ட கம்பம் காணப்படும். இக் கம்பத்தினைச் சுற்றிவர சாணியால் பிடிக்கப்பட்ட பிள்ளையார் உருவங்கள் காணப்படும். அவ்வுருவங்களின் மேற்புறத்தில் அறுகம் புல் செருகப்பட்டிருக்கும். இது தவிர காமனுக்கான கூத்து நடைபெறும் தினத்தில் விளக்குகள் ஏற்றி வைக்கப்படும்.

## காமனாட்ட பாத்திரங்களும் ஒப்பனை அலங்காரங்களும்

காமன் கூத்தில் இடம் பெறும் பாத்திரங்களுள் இரதி முக்கியமானவள். இவள் ஒரு சாதாரணப் பெண்ணைப் போன்று தான் இருப்பாள். உருவத்திற்கேற்றபடி உடையலங்காரங்களைக் கொண்டிருப்பாள். பல தினங்களில் காமனாட்டம் இடம்பெறுமாயின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிறச் சேலையை அணிந்திருப்பாள். அநேகமான தோட்டங்களில் காமனை எரிக்கின்ற தினத்தில் மட்டும் இவளுக்கு பச்சை நிறச் சேலை அணிவிக்கப்படுவதுண்டு. ஏனெனில், காமனின் தந்தையான விஷ்ணு பச்சை நிறத்தவனான படியால் அவன் மருமகளும் பச்சை நிறமணிவிக்கப்படுகிறாள் என்று கூறப்படுகின்றது. இது தவிர, ஒட்டியாணம், கடகம், மயிர்மாட்டி, கொலுசு, குஞ்சம் என்பனவும் அணிந்திருப்பாள். மல்லிகைப் பூவால் அல்லது அரளிப் பூவால் செய்யப்பட்டதொரு மலர் மாலையையும் கழுத்தில் அணிந்திருப்பாள். இரதியின் கையில் ஒரு வில் காணப்படும். ஆட்ட வசதிக்காக அதனை ஒரு பக்கம் சரித்து வைத்திருப்பாள். இது அவளது சண்டை சச்சரவுகளை எதிர்நோக்கும் போக்கினையும் அவளது முரட்டுக் குணத்தையும் வெளிப்படுத்துவதாகவும் அமையும். இரதி கண்ணுக்கு கண் மையும் உதட்டுக்குச் சிவப்பு நிறச் சாயமும் பூசியிருப்பாள். இதைத் தவிர கண் புருவத்தின் மேற்புறத்தில் வெள்ளை நிறத்தில் பொட்டுப் பொட்டாக வைக்கப்பட்டிருக்கும். தலையின் இரு புறமும் சின்னக் கிளிப்புகள் குத்தப்பட்டிருக்கும். அவை மின்னக் கூடிய மினு மினுப்பாகவும் சிவப்பு அல்லது பச்சை நிறத்திலும் அமைந்து காணப்படும். காமனும் வேட்டியை அணிந்திருப்பார். அதாவது வேட்டியை மடித்து பஞ்சகச்சம் போல அணிவிப்பதுண்டு. சில இடங்களில் கரையிடப்பட்ட (Border Saree) சேலைக் கரைகள் தெரியும்படி அணிவிப்பதுண்டு. இவை தவிர, காமன் மார்புக் கவசம், கரும்பால் செய்யப்பட்ட வில் என்பனவும் கொண்டிருப்பார். வில் அரளிப்பூவால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இரதியைப் போலவே காமனும் வில்லை ஒரு பக்கம் சரித்து பிடித்துக் கொண்டிருப்பார். இவ்வில்லானது காமன்-இரதி திருமணத்தின் போது அன்பளிப்பாக வழங்கப்பட்ட பரிசுப் பொருளாகக் கொள்ளப்படுகின்றது. தலையில் கிரீடம் அணிந்திருப்பார். காலிற் சலங்கையும் கழுத்தில் வெள்ளையும் சிவப்பும் கலந்த அரளிப்பூ மாலையையும் அணிந்திருப்பார். அத்தோடு, காமனின் பரம்பரையை நினைவுபடுத்துவதற்காக பச்சை நிறத்தை முகத்தில் பூசியிருப்பார். இவ்வாறு பூசப்படும் பச்சை நிறம் "அரிதாரம்" எனப்படும் இயற்கை மூலிகையாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமன் கூத்தில் இடம்பெறும் முக்கிய பாத்திரமாகத் தூதன் கொள்ளப்படுகிறான். அவனின் அலங்காரங்கள் பார்ப்போரைப் பயமுறுத்துவதாக அமையும். முதுகில் முப்பத்திரண்டு பந்தங்களும் வலது கையில் ஒரு பந்தமும் இடது கையில் ஏழு பந்தங்களும் கட்டப்பட்டிருக்கும். தலையில் அலர் அல்லது சீர் விசிறி போன்ற ஓர் விரிந்த அமைப்பு காணப்படும். உடை கறுப்பு நிறமாக அமைந்திருக்கும். முகத்தில் மட்டும் சிவப்பு நிறம் பூசப்பட்டிருக்கும். தலையில் ஒரு கிரீடமும் அணிவிக்கப்பட்டிருக்கும். நாக்கானது வெளியே தொங்கிக் கொண்டேயிருக்கும். நடிப்பிற்காக இது நீண்ட காட்போட்டினால் (Card board) செய்யப்பட்டு நாக்கின் மேல் ஒட்டப்படுவதுண்டு. இவன் நீண்ட தூரத்திலிருந்து வந்த ஒருவனைப் போல ஆவேசத்துடன் காட்சியளிப்பான். இவனுக்கென்றே விசேட தப்பொலியும் தட்டப்படும். காமனாட்டத்தின் போது இறுதியாகக் காமன் ஆடி, ஆடி ஈஸ்வரனிடம் போகும் காட்சி மிக அழகானது.

சிவன் புராணக் கதைகளில் கூறப்படுவது போல உடம்பு பூராகவும் திருநீற்றைப் பூசிக் கொண்டு நிஷ்டையில் இருப்பவர் போல் காட்சியளிப்பார். றப்பரால் செய்யப்பட்ட பாம்பினை கருங்கழுத்தில் அணிந்திருப்பார். சடையில் கங்கையையும் சந்திரனையும் அணிந்திருப்பார். இவரது உடைகள் பெரும்பாலும் கவர்ச்சியாகக் காணப்படும்.

ஈஸ்வரியைப் பொறுத்தவரையில் வழமையான பெண்களைப் போன்ற ஆடையலங்காரத்துடன் பூவோடும் பொட்டோடும் காட்சியளிப்பாள். கூத்தாடும் தினத்தில் கவர்ச்சியான தோற்றத்திற்காகப் பட்டுச்சேலை அணிவிக்கப்படும். அத்துடன் காலில் சலங்கையும் கை நிறைய வளையல்களும் அணிந்திருப்பாள். கவர்ச்சிக்காக கண் மை, உதட்டுச்சாயம், அட்டியல், பெரிய தோடுகள் என்பனவும் அணிவிக்கப்படுவதுண்டு. சுப்பிரமணியர் தலையில் கிரீடத்துடன், கையில் வேலை ஏந்திக் கொண்டு, கழுத்தில் உருத்திராக்க மாலையுடன் காட்சி கொடுப்பார். இவரின் உடைகள் வெள்ளை வேட்டியாலான பஞ்சகச்சமாகவே இருக்கும். உடம்பின் மேற்பகுதி முழுவதும் திருநீறு பூசப்பட்டிருக்கும். இவர் சிரித்த முகத்துடன் காட்சியளிப்பார். விநாயகர் புராணக் கதைகளில் குறிப்பிடப்படும் அலங்காரங்களுடனேயே இருப்பார். இவரின் கண்கள் கறுப்பாக இருக்கும். வயிறு முட்டி போல் இருக்கும். இவரின் தும்பிக்கை யானையின் தும்பிக்கையை ஒத்திருப்பதுடன் அழகாக இருக்கும். நெற்றியில் திருநீற்றை அணிந்த இவர் வேட்டியை மட்டும் அணிந்திருப்பதுடன் மேலாடையின்றி இருப்பார்.

காமன் கூத்தில் இடம்பெறும் விசித்திரமான பாத்திரம் நந்தி தேவர் ஆவார். இவருடைய ஒப்பனை அலங்காரங்கள் மிகப் பயங்கரமானவை. இவரின் தலை எருதுவின் தலையைப் போன்ற அமைப்பைக் கொண்டிருக்கும். தலையின் மேற்புறம் கறுப்பாகவும் முகப்பகுதி கண், மூக்கு என்பன கறுப்பாயிருக்க ஏனைய பகுதிகள் வெள்ளையாகவும் இருக்கும். நந்தி தேவரின் காதுகள் எருதினது காதைப் போன்றே கறுப்பாக வளர்ந்து தொங்கும். அந்தக் கறுப்புக் காது காட்போட்டால் (Card board) செய்து ஒட்டப்படும். அதன் மீது நீண்ட கரிய மயிர்கள் ஒட்டப்பட்டிருக்கும். காலில் சலங்கை அணிவிக்கப்பட்டிருக்கும். மூக்கிற் துவாரம் கேலிக் கூத்துக்களிற் போன்று கறுப்பாக மிகப் பெரிய துவாரத்துடன் விளங்கும். இவை எல்லாவற்றையும் விட சிறப்பாக விளங்குவது அவரின் கறுப்புத் தலை மேலுள்ள வெள்ளைக் கொம்பாகும். இது பாரமற்ற இரு கட்டைகளால் செதுக்கி ஒட்டப்பட்டதாக அமைக்கப்படும். தலையும் அவ்வாறே பாரமற்ற கட்டையால் செதுக்கப்பட்டதாக அமைக்கப்படும். உதாரணமாக முருங்கைக் கட்டைகளை குடைந்து செதுக்கி சில இடங்களில் இவ்வுருவங்கள் செய்யப்படுகின்றன.

குறத்தியும் காமன் கூத்தில் இடம்பெறும் ஒரு பாத்திரமாகும். இவள் வழமையான குறத்தியைப் போன்றே காணப்படுவாள். கூத்து நடைபெறும் தினத்தன்று சற்றுக் கவர்ச்சியாக அணிந்து கொண்டு சேலையை இழுத்துச் செருகியிருப்பாள். வாயில் நிறைய வெற்றிலையை மென்றுக்கொண்டிருப்பாள். தலையில் கோழியின் சிறகைக் குத்தியிருப்பாள். பொதுவாக, குறத்தி என்ற பாத்திரம் தடித்த கறுத்த உருவமாக இருக்கும். அடிக்கடி கண்ணை உருட்டி விழித்துக் கொண்டு எல்லா இடங்களிலும் சுற்றித் திரிவாள். கையை நீட்டியவர்களுக்கு சாஸ்திரமும் சொல்லுவாள். இது அவளது குலத் தொழிலை ஞாபகப்படுத்துவதுடன் காமன் கூத்திற்கே கவர்ச்சியைத் தருவதாகவும் அமைகின்றது.

ஆட்டமுறை

காமன்கூத்து முழுவதுமே ஆட்டமாகத்தான் அமைகின்றது. உரையாடல்கள் இடம்பெறும் இடங்களில் கூட அவை பாடல் கலந்த ஆடல்களாகவே அமைவதைக் காணலாம். காமனும் இரதியும் ஆண், பெண் என்று வேறுபட்டாலும் இவ்விருவரும் ஆடும் ஆட்டமும் ஒரே விதமாகத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருக்கின்றது. ஒருவருக்கொருவர் எதிராக நின்று ஒரு காலை முன்வைத்து மறு காலைப் பின்னால் வைத்து வளைந்து கால்களை மாற்றிக் கொண்டு ஆடுவர். ஆடும் போது ஆடும் வசதிக்காக வில்லை ஒரு பக்கமாகச் சரித்து வைத்துக் கொண்டு சரித்தும் உயர்த்தியும் ஆடும் ஆட்டம் மனதைக் கவரவல்லது.

காமன் கூத்தின் ஆரம்பத்தில் ஆடும் ஆட்டம் மிக மெதுவாகவே அமைகின்றது. இரதி – காமன் திருமணத்தின் பின்பு ஆடுகின்ற ஆட்டங்களில் கோப உணர்வுகளையோ துரித போக்கினையோ காணமுடியாது. தூதனின் செய்தி கிடைக்கப் பெற்றதும் ஆடும் ஆட்டத்தின் வேகமும் அதிகரிக்கின்றது. அத்துடன் ஒருவருக்கொருவர் முரண்பட்டும் ஆடுவர். காமனுக்கு கோப உணர்வு அதிகரிக்கும் போது அவனை அறியாமலேயே பக்தி உணர்வும் அதிகரிக்கின்றது. அப்போது ஆட்டத்தின் உச்சக் கட்டத்தினையும் காணக்கூடியதாயுள்ளது. கால்களை முன்னும் பின்னும் வைத்து வளைத்தாடிய காமன் கால்களை உதறியும் குதித்தும் ஆடுவான். அவ்வாறு ஆடிக்கொண்டே போகும் போது “மருள்” வருவதையும் காணலாம். இவ்வாட்டம் காமனாட்டத்திற்கே சிறப்பாக அமைகிறது. காமனின் ஆட்டமுறையில் கோபவுணர்வும் சேர்வதால் ஆட்டத்துடன் அவனின் கால்களைப் பூமியில் தட்டுவதால் ஏற்படும் சலங்கையின் ஓசையும் சேர்ந்து ஒலிக்கிறது. ஆட்டத்துக்கேற்றவாறு பாட்டுக்கள் பாடப்படுவதுடன் மேளங்களும் தட்டப்படுகின்றன.

**இசையமைப்பு**

காமன் கூத்தின் இசையமைப்பானது வடமோடி தென்மோடியைப் போலல்லாது வித்தியாசமாக அமைந்துள்ளது. இக்கூத்தில் “லாவணி” முறையில் பாடல்கள் பாடப்படுகின்றன. அவை ஒருவருக்கொருவர் முரண்பட்ட நிலையில் கேள்வி பதிலாக பாடுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இவை ஆசியப்பாவாலும் கலிப்பாவாலும் ஆன பாடல்களாக அமைகின்றன. காமன் - கூத்தில் இடம்பெறும் பாடல்கள் ஒப்பாரிப் பாடல்களை ஒத்துக் காணப்படுகின்றன. எனவே தான் “இரதி - மன்மதன் ஒப்பாரிப் பாடல்கள்” எனவும் காமன் கூத்துப் பாடல்கள் அழைக்கப்படுகின்றன.

கூத்தில் பாடப்படும் பாடல்கள் ஒவ்வொன்றும் இழுத்து இழுத்துப் பாடப்படுகின்றன. இப்பாடலமைப்பு ஒவ்வொன்றும் தென்மோடிப் பாடல்களை ஒத்துள்ளன.
உதாரணம் :-

“பூமானே, சீமானே, கோமானே, மன்மதனே
பூமேகும் சந்திரனே மாமோக சுந்தரனே”

இப்பாடலில் இடம்பெறும் சொற்கள் ஒவ்வொன்றிலும் வரும் “னே” என்ற எழுத்து இழுத்தே பாடப்படுகின்றது. இவற்றின் ஆரம்பப் பாடல்கள் காமனதும் இரதியினதும் பரம்பரைப் புகழைக் கூறும் பாடல்களாகவே அமைந்துள்ளன. இடையில் இடம்பெறும் பாடல்கள் குலவடிப்படையில் தாழ்த்திப்பாடும் பாடல்களாகவும், இறுதியில் இடம்பெறும் பாடல்கள் சோகப்பாடல்களாகவும் அமைகின்றன.

காமனாட்டத்தின் இசைக்கருவிகளாக மத்தளமும் தப்பும் மட்டுமே பயன்படுத்துகின்றன. மத்தளத்தை ஆரம்பத்தில் மெதுவாக கைகளால் தட்டியடித்தும் முரண்பட்டுப் பாடுமிடங்களில் முன்னர் அடித்த வேகத்தை விட இரு மடங்காக்கித் தடியால் தட்டியும் அடிப்பதுண்டு. பாடல்களுடன் மத்தளமும் சேர்ந்து ஒலிக்கும். சில சமயம் உரையாடல்கள் பாடல் ரீதியாக இடம் பெறும் போது பாட்டு முடிந்தவுடனேயே மத்தளத்தை அடிப்பதுண்டு. பாடலைத் தொடர்ந்து மத்தள ஒலியானது “டண்டணக்கு, டண்டணக்கு, டண்டணக்கு” என்று மூன்று முறை ஒலிக்கும். கட்டங்கள் மாறும் சந்தர்ப்பங்களில் இவ்வாறு பல தடவை உரத்துத் தட்டப்படுவதையும் காணலாம். ரதி, காமனை இழந்து நிற்கும் நிலையில் அவளால் பாடப்படும் ஒப்பாரிப்பாடல்களுக்கும் மத்தளம் மிக வேகமாக உரத்த சத்தத்துடன் தட்டப்படுவதுண்டு. மத்தளத்தைத் தவிர, இசையமைப்புக்கு தப்பும் பயன்படுவதைக் காணலாம். இது “சாவு தப்பு” என அழைக்கப்படுகிறது. காமனை எரித்த பின்பு இதனைப் பறையர் என்ற சமூகத்தவர் ஒப்பாரி பாடிக் கொண்டு தட்டுவதுண்டு. அதே வேளையில், காமன் எரிக்கப்படும் போது சங்கு ஊதுவதும் கூத்தாடும் மக்களிடையே நிலவும் ஒரு வழக்கமாகவுள்ளது. வீரபத்திரனின் வருகையின் போது அடிக்கப்படும் மத்தள ஓசை மிகவும் மெதுவாகவே அமையும். அச்சூழ்நிலையில் மயான அமைதி நிலவுவதால் அதற்கேற்ப மத்தளமும் சோக தாளமிசைப்பது போலமையும். உதாரணமாக,
“டும்……டும்………டும்………”
என ஏதோ அறிவித்தல்களைக் கொடுப்பதுபோல அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணாடியின் பயன்பாடு

காமன் கூத்தில் கண்ணாடி பயன்படுத்தப்படுவதும் அதன் கலையம்சங்களில் ஒன்றே. கூத்தில் பங்கு பெறுகின்ற பாத்திரங்கள் ஆடிக் கொண்டே போகும் போது பக்தியுணர்வும் அதிகரித்துக் கொண்டே செல்வதுண்டு. அதனால் ஆடுபவர்கள் சுயவுணர்வை இழக்கின்றனர். எனவே, வெட்டப்போகும் ஆட்டைப் போல் தலையசைத்துக் கொண்டு வேகமாகக் குதிக்கத் தொடங்கி விடுகின்றனர். பலபேர் அவரை மன்றாடிப் பிடித்தாலும், ஆடுபவர்கள் தமது நிலைக்குத் திரும்புவதில்லை. இவ்வாறான சந்தர்ப்பத்தில் அவர்களின் பழைய நிலைமையை நினைவு கூர்ந்து மருளை நீக்கவே கண்ணாடி பயன்படுத்தப்படுகின்றது. அவர்கள் "இது நான்" என்ற உணர்வைப் பெற்று பழைய நிலைமைக்குத் திரும்புவர். எங்கேயோ இருக்கும் நிலாவைக் கண்ணாடியில் பிடித்துக் கொள்வது போல எங்கேயோ பக்தியுணர்வால் சஞ்சரித்துக் கொண்டிருப்பவரை அந்நிலையிலிருந்து மாற்றி கண்ணாடி மூலமாகத் தம் நிலையை உணர்ந்து கொள்வதற்கு இது வழி வகுக்கும்.

## இரதி - காமன் திருமணம்

இரதி – காமன் திருமணமானது சாதாரணமாக நடைபெறும் திருமணம் போன்று கலையம்சங்கள் பலவற்றைக் கொண்டதாக அமையும். காமதகனம் நடைபெறும் தினத்தில் விழாவின் முதல் நிகழ்ச்சியாக இவர்களின் திருமணம் நடைபெறும். திருமண நிகழ்ச்சியானது நள்ளிரவு ஒரு மணியளவிலேயே இடம்பெறும். எனவே, அதுவரை இரவில் மக்களை விழிக்கச் செய்வதற்காக வேறு நாடகங்களையும் நடித்துக் காட்டுவதுண்டு. நிகழ்ச்சியைச் சிறப்பிப்பதற்காக, இசை கருவிகளை மீட்டி, வேறு நடனங்களையும் மேடை ஏற்றுவதுண்டு. அத்தினத்தில் இரதிக்கும் காமனுக்கும் உண்மையான திருமணத்திற்கான உடைகள் அணிவிக்கப்படும். பொதுவாக, திருமணங்களின் போது அணியப்படும் ஆபரணங்களும், பூமாலைகளும் அணிவிக்கப்படும்.

இரதியும் காமனும் தனித் தனியே திருமண மேடைக்கு அழைத்து வரப்படுகின்றனர். திருமணச் சடங்குகளில் மணமகளின் சடங்குகள் முதலில் செய்யப்படுவது போலவே அங்கும் நடைபெறும். பின்பு இரதி திருமண மேடைக்கு அழைத்து வரப்பட்டு அவளுக்கான சடங்குகள் செய்யப்படும். மீண்டும் தம்பதிகளாக இரதியும் காமனும் மேடையில் காட்சி தருவர். பின் காமன், இரதியின் கழுத்தில் தாலியை கட்டுவான். காமன் கூத்தின் போது கட்டப்படும் தாலி பெரும்பாலும் ஐம்பொன்னால் செய்யப்பட்டதாக இருக்கும். வருடா வருடம் நடைபெறும் கூத்தின் போது ஒரே தாலியையே கட்டுவதுண்டு. திருமண ஆயத்தங்கள் செய்யப்பட்ட பின்னர் இரதி, காமன் ஆகிய இருவருமே "மருள்" நிலையிலேயே மேடைக்கு வருவதுண்டு. அவர்களை அறியாமலே திருமண வைபவத்தின் போதும் கூட மருள் வருவதுண்டு. சாதாரண வைபவத்தின் போது உற்றார், உறவினர் கலந்து கொள்வதைப் போன்று மக்கள் இவர்களின் திருமணத்திற் கலந்து கொள்வர். இந்நிகழ்ச்சியை சிலர் நாடகப் பாங்கிலும் நடித்துக் காட்டுவதுண்டு. சாதாரண திருமணங்களில் புதிய தம்பதிகளுக்கு அன்பளிப்புக்கள் வழங்குவது போலவே காமன் இரதி திருமணத்தின் போதும் மக்கள் மொய் கொடுக்கின்றனர்.

காமன், இரதியின் திருமண நிகழ்ச்சிக்குப் பின்பு காமன் கூத்தைத் தயாரித்து அளிக்கும் அண்ணாவியார், தம்பதிகள் இருவருக்கும் கரும்பாற் செய்யப்பட்ட வில்லைத் திருமணப் பரிசாகக் கொடுப்பதுண்டு. வில்லானது அரளிப் பூவால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். வில் வழங்கும் நிகழ்ச்சியானது இரதி – காமனின் எதிர்கால நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. விசேடமாக, இரண்டுபேரிடமும் உள்ள முரண்பாடான கொள்கைகளையும், எதிர்த்துப் போராடும் இயல்பினையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

## காமனுக்கான நேர்த்தியை நிவர்த்தி செய்தல்

காமனின் நேர்த்தியை நிவர்த்தி செய்யும் நிகழ்ச்சியானது காமன் பொட்டலில் இடம்பெறுகின்றது. இது கலையம்சங்களை கொண்ட ஒரு நிகழ்வாகவும் அமைகின்றது. இவர்கள் கொண்டு வரும் பொருட்களுள் மாவிளக்கு முக்கியமானதாக அமைகின்றது. இம் மாவிளக்கானது இரவு நேரங்களில் விளக்கின் ஒளியுடன் காணப்படும் போது சிவப்பு நிறமான ஒரு பூவைப்போலக் காணப்படும். இனம் புரியாத ஒரு வகை அழகு இவற்றின் மூலம் வெளிப்படுகின்றது. இத்தகைய மாவிளக்கேற்றிப் பூசை செய்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாவிளக்குப்பூசை எனப்படும். மாவிளக்கு வைக்கப்பட்ட தட்டில் பூ, பத்தி, பாக்கு, வெற்றிலை, வாழைப்பழம் என்பவற்றுடன் உடைக்கப்பட்ட தேங்காயின் ஒரு பாதியும் காணப்படும். இத் தேங்காய் பாதியானது தோட்ட மக்களின் வெள்ளை உள்ளத்தைப் பிரதிபலிப்பதுடன் பக்திப் பரவசத்தையும் எடுத்துக் காட்டுவதாக அமையும். இப் பூசையில் கலந்து கொள்ளும் மக்களின் போக்கு அவர்களின் கலை ஈடுபாட்டையும் பக்தியையும் காட்டுவதாக உள்ளது.

## இரதி - காமனின் ஆட்டம்

இரதி - காமனாட்டமானது கலையம்சம் பொருந்தியதாக அமையும். இவ்வாட்டமானது காமன் பொட்டலில் நடைபெறும். அங்கே அவர்கள் இருவரதும் புகழ் மரபு ரீதியாகப் புராணக்கதைகளின்படி எடுத்துரைக்கப்படும். அப்போது இரதியும் காமனும் ஆடுவர். பாடல்கள் அண்ணாவியரால் பாடப்பட்டுக்கொண்டேயிருக்கும்.

## இரதி - காமனின் கல்யாண ஊர்வலம்

திருமணமான தம்பதிகளின் கல்யாண ஊர்வலம் வருவதும் கலையம்சம் பொருந்தியதாக அமையும். சாதாரண மக்கள் கல்யாண ஊர்வலம் வருவதை விட இத்தம்பதியினரது ஊர்வலமானது இசை வாத்தியக் கருவிகள் இசைத்து வரும் ஊர்வலமாக அமையும். இரதியினதும் காமனினதும் ஆடை, அணிகள் பார்ப்போரின் கண்ணைக் கவரும்படி ஜொலித்துக் கொண்டேயிருக்கும். காமன் கூத்தினைக் காணவரும் பக்தர்களின் ஆடைகள் பல வர்ணங்களில் அமைந்திருக்கும். அதேநேரம் அவர்களின் படையல் தட்டுகளிலிருந்து வரும் வாசனை மக்களை ஈர்ப்பதாக அமையும். 'ஹரோஹரா" என்ற சத்தம் பக்தியை மேலும் தூண்டும். இவையனைத்துமே பக்தி கலந்த கலையம்சங்களை வெளிப்படுத்துவனவாக உள்ளன. எனவே காமன் கூத்தின் கலையம்சங்களை மேற்குறித்த பல நிகழ்ச்சிகளினூடாகக் காணலாம்.

## உசாத்துணை நூற்பட்டியல்


தகவல் - துரைசாமி எஸ். ஸ்ரொக்ஹோம் தோட்டம், டிக்கோயா.

தகவல் - பெருமான், ஸ்ரொக்ஹோம் தோட்டம், டிக்கோயா.

தகவல், சின்னையா, எஸ். லபுக்கலைத் தோட்டம், கொட்டகலை டிவிசன்.

மௌனகுரு. இ (1969) "பழைய கூத்துக்களைப் புதிதாக எழுதும் முறை," தினகரன் நாடக விழா மலர், கொழும்பு, பக்கம் 54 – 56

அறிவுநம்பி, அ. (1974) ஆய்வுக்கோவை (தொகுதி-3) சென்னை, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்.

சிவத்தம்பி, கா. (1993) இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும், இலங்கை, உதயம் நிறுவனம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனாட்சியம்மாள் நடேசய்யர்: இலங்கையில் சமூக மாற்றத்திற்கான முதலாவது பெண்குரல்

லெனின் மதிவானம், பிரதி ஆணையாளர் - கல்வி அமைச்சு

திருமதி. மீனாட்சியம்மாள் நடேசய்யர் மறைந்து சுமார் எழுபத்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. இந்த கால இடைவெளியில் மலையகச் சமூகத்திலும் இலங்கையிலும் உலகிலும் எண்ணரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. தற்போது என்றும் இல்லாதவாறு வரலாற்று ஆய்வும் விஞ்ஞானபூர்வமான பார்வைகளும் பல்வேறு விதங்களில் வளர்ந்துள்ளன. ஆயினும் இலங்கை சமூக அரசியலில் - இலக்கிய வரலாற்றில் விரல்விட்டு எண்ணக்கூடிய சமூக மாற்றத்தின் முதல் பெண்குரலாக விளங்கும் மீனாட்சியம்மாள் குறித்த ஆய்வுகளும் தொகுப்புகளும் மிக குறைவாகவே காணப்படுகின்றன.

அம்மையாரின் சமூகப் பணிகள் பற்றியும் கோ. நடேசய்யரின் சமூக அரசியல் பணிகளுக்கு அம்மையார் ஆற்றிய பங்களிப்புகள் பற்றியும் கட்டுரைகளும் குறிப்புகளும் ஓரளவு வெளியாகியுள்ளன என்பது உண்மையே. கலாநிதி குமாரி ஜயவர்தனா அவர்களே நடேசய்யர் மீனாட்சியம்மாள் தம்பதியினரின் பங்களிப்பை முதன் முதலாக வெளிப்படுத்தியவர் என்பதை அறிய முடிகின்றது. மலையக இலக்கிய முன்னோடியான ஸி. வி. வேலுப்பிள்ளை தினகரனில் (1958-1959) மலைநாட்டுத் தலைவர்கள் பற்றிய தொடரான விவரணத்தை எழுதி வந்திருக்கின்றார். அவ்விவரணத்தில் கோ. நடேசய்யர், சிவபாக்கியம் குமாரவேல், கோகிலம் சுப்பையா முதலானோர் பற்றி எழுதியிருப்பினும் மீனாட்சியம்மாள் பற்றி அவ்விவரணத் தொடர் அக்கறை செலுத்தாமை ஒரு துரதிஸ்டவசமானதொரு அம்சமாகவே படுகின்றது. அண்மையில் மு.நித்தியானந்தன் எழுதிய கூலித்தமிழ் என்ற நூல் வெளிவந்தது. மலையகத்தின் வேர்களைத் தேடிப் பயணிக்கின்ற அந்நூலில் கணிகையர் குல வரலாற்றை எழுதிய அஞ்சுகத்தை மலையகத்தின் முதல் பெண் ஆளுமையாக குறிப்பிடுகின்றார். அஞ்சுகம் கொழும்பில் வாழ்ந்தவர். அவ்வாறே சில காலம் யாழ் - கைதடியில் வாழ்ந்ததாகவும் அறிய முடிகின்றது. இவரை பெண் முன்னோடியாக முன்னிறுத்தும் பார்வை, மலையகத்தில் சமூகமாற்றத்திற்கான அடித்தளத்தை அமைத்துத் தந்த மீனாட்சியம்மாள் அம்மையாரின் சமூக பங்களிப்புக்களை நிராகரிப்பதாக அமைந்து காணப்படுகின்றது. திரு. சாரல்நாடன் கோ.நடேசய்யரின் பங்களிப்புகள் பற்றி ஆய்வு செய்த சந்தர்ப்பங்களிலும் சரி மற்றும் மீனாட்சியம்மாள் குறித்து எழுதிய "மலையக விடிவெள்ளி கோ.நா.மீனாட்சியம்மாள்" என்ற நூலிலும் சரி ஒரு வெற்றிகரமான ஆணுக்கு பின்னால் இருக்கும் பெண்ணாகவே அம்மையாரை நோக்குகின்றார். அம்மையாரின் தனித்துவமான ஆளுமை வெளிக்கொணரப்பட்டதாகத் தெரியவில்லை. பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு அம்மையாரின் ஆளுமையை பெண்ணிய நோக்கில் ஆராய்ந்து வெளிக் கொணர்கின்றார் என்ற போதிலும், சமூக விடுதலையை விட்டுப் பிரிந்த பெண்ணிய நோக்கு இவ்வாய்வை பலவீனப்படுத்தவும் தவறவில்லை என்பதனையும் அறிய முடிகின்றது. பேராசிரியர் செ.யோகராசா அம்மையாரின் கவிதைகளை ஒப்பியல் நோக்கில் அணுகி இலங்கையின் முதலாவது பெண் கவிஞர் எனக் குறிப்பிடுகின்றார். இதற்கான ஆதாரங்களையும் அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை. இவ்வாறே திருவாளர்கள், மு.நித்தியானந்தன், அந்தனி ஜீவா, லெனின் மதிவானம், திருமதி.பத்மா சோமகாந்தன் ஆகியோர் இவர் பொறுத்த முக்கியமான தகவல்களை வெளிக் கொணரும் வகையிலான கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

காலத்தின் பின்னணியில் அம்மையாரை ஆராயவும் மதிப்பிடவும் அம்மையாரின் பங்களிப்பைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கும் முதலில் அவரது ஆக்கங்கள் யாவும் முறையாக தொகுக்கப்படல் வேண்டும். அது இலகுவான காரியமன்று. மலையகம் தொடர்பிலான ஆவணக் காப்பகம் ஒன்று இல்லாத நிலையில் வெறும் சுவடிகள் திணைக்களத்தை மாத்திரமே நம்பியிருக்க வேண்டியதாகின்றது. இத்திணைக்களத்தில் மிகப் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்ற ஆவணங்களை பரிசிலிப்பதில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகள் மற்றும் சில ஆவணங்கள் இல்லாதிருப்பதில் ஏற்படக் கூடிய தவறுகள் அனைத்தும் இந்தச் சேகரிப்பு முயற்சியில் தாக்கம் செலுத்தக் கூடிய காரணிகளாக அமைந்திருக்கின்றன. இந்நிலையில் மீனாட்சியம்மாளின் எழுத்துக்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை. அதுவரை நாம் காத்திருக்கவும் முடியாது. எனவே இருப்பவற்றை வைத்துக் கொண்டு இவ்வாய்வுகளை செய்ய வேண்டியுள்ளது. மேலும் தகவல்கள் கிடைக்குமாயின் அவற்றை அடுத்து வரும் ஆய்வுகளில் சேர்த்துக் கொள்ள வேண்டியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. எல்லாவற்றையும் தொகுத்த பின்னர்தான் இது பற்றிய ஆய்வுகளையே தொடர வேண்டும் எனச் சட்டம் போடுவது, இருப்பதையும் இல்லாதாக்குகின்ற முயற்சியாகவேபடுகின்றது. அவ்வாறே திரும்பத் திரும்ப ஒன்றையே செய்யும் முயற்சியாகவும் அவ்வாய்வுகள் அமைந்து விடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

இலங்கையின் மலையகத்தில் சமகால நிகழ்ச்சிப் போக்குகளை அவதானிக்கின்ற போது ஈழத்தவரின் நவீன இலக்கியங்களுக்குப் பின்னணியாக நிற்கும் வரலாற்றை நோக்கும் பொழுதும், அதற்குப் பின்னணியாக இருக்கும் வரலாற்றை நோக்கும்பொழுதும், இந்நாட்டின் சமூக, பொருளாதார அரசியல், கலாசார எழுச்சிகளை நோக்கும் பொழுதும் மீனாட்சியம்மாள் பற்றிய சிந்தனைகள் எழுவது தவிர்க்க முடியாததொன்றாகின்றது. அம்மையார் அரசியலிலும் பண்பாட்டுத் தளத்திலும் இயங்கிய காலம் நமது அரசியல் துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் கடும் சோதனைக்குட்பட்ட காலமாக இருந்தது.

இலங்கையின் வட - கிழக்கில் இலங்கைத் தேசியமே முக்கிய செல்நெறியாக காணப்பட்டது. பிரித்தானிய காலனித்துவம் யாழ்ப்பாணச் சமூகத்தினரிடையே கல்விக்கான வாய்ப்பை விரிவுப்படுத்தி இருந்தமையால் நிர்வாக உத்தியோகத்தில் பெரும் பகுதியை யாழ்ப்பாணத்தவர்களே தமதாக்கிக் கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிட்டியது. பிரித்தாளும் தந்திரோபாயத்துடன் இத்தகைய வாய்ப்புகள் விஸ்தரிக்கப்பட்டமையால் இவர்களிடையே இலங்கைத் தேசிய உணர்வே மேலோங்கியிருந்தது. அதேவேளை, சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் வட - கிழக்குச் சார்ந்து எழுந்த இலங்கைத் தமிழ்த் தேசியம் ஏகாதிபத்தியத்திற்கு காட்டிக்கொடுக்கும் குணாதிசயத்துடன் வளர்ந்தது. மறுபுறமாக, தமிழ் இடதுசாரிகள் பண்ணை அடிமைத்தனமான சாதிய முறைக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். இவ்வம்சம் அன்றைய வரலாற்றுத் தேவையை நிறைவு செய்யும் ஒரு அம்சமாகக் காணப்பட்டது. அன்றைய காலப் பகுதியில் முனைப்புற்று வந்த தமிழின ஒடுக்கு முறை குறித்து மார்க்சிய இடதுசாரி முற்போக்கு சக்திகள் கவனத்திலெடுக்கத் தவறியமை வரலாற்றில் ஓர் இடைவெளியை ஏற்படுத்தியிருந்தது.

சிங்கள மக்களுடன் ஐக்கியப்படுதல் என்பதன் மறுபக்கத்தில் தமிழின ஒடுக்குமுறைக்கு எதிராக போராடுதல் என்ற அம்சத்தினையும் இணைத்து முன்னெடுத்திருப்பார்களாயின் தமிழ் ஜனநாயக சக்திகளின் ஒரு பகுதியேனும் வென்றெடுத்திருக்க முடியும். இது இவ்வாறிருக்க தமிழரசுக் கட்சி தமிழின ஒடுக்கு முறைக்கு எதிரான விழிப்புணர்வை கொண்டிருந்த போதிலும் - முற்போக்கான பார்வையை கொண்டிருந்த போதினும், அதில் அங்கம் வகித்த தலைவர்களின் பழைமைவாதச் சிந்தனைகளின் காரணமாக சாதியத்திற்கு எதிரான விழிப்புணர்வைக் கொண்டிருக்கத் தவறிவிடுகின்றனர். இதன் காரணமாக இவ்வகையான அமைப்புகள் பிற்போக்குவாதிகளின் கூடாரமாக மாறி இறுதியில் சிதைந்து சின்னா பின்னமாகியது.

இந்நிலையில் சிங்கள இடதுசாரிகளின் நிலைப்பாடு எத்தகையதாக இருந்தது என்பதும் சுவாரசியமான கேள்விதான். ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வைக் காத்திரமாக முன்னெடுத்த சிங்கள இடதுசாரிகள் தமிழின ஒடுக்குமுறைக்கெதிரான உருப்படியான எந்த விமர்சனத்தையும் முன்வைக்கத் தவறியிருந்தனர். இத்தகைய ஒரு வரலாற்றுச் சூழலில்தான் அம்மையாரின் அரசியல் பிரவேசமும் இடம்பெறுகின்றது.

மலையக மக்களிடையே பாரதியாரின் பாடல்களையும் கூடவே தாம் மலையக மக்களின் விடுதலை சார்ந்து எழுதிய பாடல்களையும் பாடி தொழிற்சங்க இயக்கத்தைக் கட்டியெழுப்பும் பணியில் தம்மை இணைத்துக் கொண்டு செயற்பட்ட அவர் பேரினவாதத்தை அரசியல் அரங்கில் சரியாக அடையாளம் கண்டு அதற்கு எதிராகவும் போராடத் தொடங்கினார். கீழ்வரும் வரிகள் இதற்கு தக்க எடுத்துக் காட்டாகும்.

லங்கா மாதா நம்ம தாய் தான் - இந்த
நாட்டினி லெல்லோரும் அவளுக்குச் சேய் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என மலையகத்தவர்களை இம்மண்ணுக்குரிய மைந்தர்களாகப் பார்க்கின்ற அவர் இம் மக்கள் மீதான பேரினவாத அடக்கு முறைகளுக்கு எதிராகவும் அவர் கவித் தீ உமிழத் தவறவில்லை என்பதை மேல்வரும் வரிகள் உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

சிங்கள மந்திரிகள் கூற்று மிக
சீருகெட்டதென்று சாற்று
சங்கடமே நேருமென தோற்று திந்திய
சமுகம் நெருப்பாய் வரும் காற்று

நன்றிகெட்டு பேசும் மந்திரி மாரே உங்கள்
நியாயமென்ன சொல்லு வீரே
இன்றியமையாத வொரு போரே செய்ய
இடமுண் டாக்குகிறீர் நீரே

இவ்வகையில் இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழ் இனவாதியாக அல்லாமல், சிங்கள பேரினவாதத்திற்கு எதிரான சிந்தனையை அரசியல் தளத்தில் முதன் முதலாக முன்வைத்தவர்கள் கோ. நடேசய்யர் மீனாட்சியம்மாள் தம்பதிகளாவர். இத்தகைய தெளிவான - தீட்சண்யமான பார்வையைக் கொண்டிருந்த அம்மையாரின் செயற்பாடுகள் குறிப்பிட்ட மத்தியதர வர்க்கத்தோடு மட்டும் மட்டுப்படுத்திக் கொள்ளாமல் பரந்துபட்ட மக்கள் குறித்ததாக வேர் கொண்டு கிளைபரப்புவதாக அமைந்திருந்தமை அவரது தனித்துவமான அம்சமாகும்.

டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவது தொடர்பாக எடுத்துக் கொள்ளப்பட்ட விவாதத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதற்கு எதிரான கருத்துக்கள் சேர்.பொன்.இராமநாதன் முதலானோரால் முன்வைக்கப்பட்டது. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து பெண்களின் வாக்குரிமைச் சங்கம் என்ற அமைப்பு லேடி டேஸி பண்டாரநாயக்காவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வமைப்பில் திருமதிகள். நல்லம்மாள் சத்தியவாகீஸ்வர ஐயர், ஈ.ஆர். தம்பி முத்து முதலிய தமிழ் பெண்களும் அங்கம் வகித்தனர். மீனாட்சி அம்மையார் இவ்வமைப்பில் அங்கத்துவம் பெறவில்லை என்ற போதிலும் பெண்களின் வாக்குரிமையை ஆதரித்து பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இச்சங்கம் குறித்த அம்மையாரின் பார்வை இவ்வாறு பிரவாகம் கொண்டிருந்தது.

“இச்சங்கமானது டொனமூர் கமிஷன் இலங்கைக்கு வந்த காலத்தில் ஆரம்பிக்கப் பெற்றதெனினும் தங்கள் வேலையைச் செவ்வனே செய்து முடித்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இச்சங்கத்தினர் இதுவரை செய்துள்ள வேலை எப்படியிருந்த போதிலும் இனித்தான் அதிக வேலை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மேற்படி சங்கத்திற்கு வருஷ சந்தா ரூபா 50 ஆக வைத்திருக்கின்றபடியால் சாதாரண குடும்பத்தை சேர்ந்தவர்கள் இதில் சேர்ந்துழைக்க வசதியிராது. பணம் படைத்தவர்கள் மாத்திரம் தங்கள் காரியத்தைச் செய்துமுடிப்பது போதுமானதாகாது. எல்லாச் சகோதரிகளும் கலந்துழைக்க வேண்டிய வேளையில் பணம் படைத்தவர்கள் மாத்திரம் தலையிடுவதைக் கொண்டு அதிக பலன் கிடையாது. ஆகவே சகோதரிகள் தாங்கள் கொண்ட காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமானால் ஆங்கிலம் தெரியாத சகோதரிகளிடத்தும் பிரச்சார வேலைகளைத் துவக்க வேண்டும்” (தேசபக்தன் 26-01-1929).

அம்மையார் பெண்களின் வாக்குரிமைச் சங்கத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியதுடன், அவ்வியக்கம் உழைக்கும் மக்களிலிருந்தும் அவர்களின் நலன்களிலிருந்தும் எந்தளவு அந்நியப்பட்டிருந்தது என்பதனையும் சுட்டிக்காட்டத்தவறவில்லை. இவ்வியக்கத்தின் சிந்தாந்தத்தளம், செயற்பாடு என்பன அம்மையாரின் சிந்தாந்தத்தளம் நடைமுறை என்பனவற்றிலிருந்து முரண்பட்டிருந்தமையும் அவர் இவ்வியக்கத்தில் அங்கம் வகிக்காதற்கு ஏதுவான காரணமாக அமைந்திருக்கும் என எண்ணத்தோன்றுகின்றது. இவ்வாறே பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையாக எதிர்த்த சேர். பொன்.இராமநாதன் போன்றோரை கடுமையாக விமர்சனத்திற்குட்படுத்துகின்ற அதேசமயம் பெண் ஆளுமையின் மகத்துவம் குறித்துச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றார்.

அவ்வாறே அரசியலில் பெண்களின் பங்கு எந்தளவு முக்கியமானது என்பதையும் அவர்கள் ஆண்களுக்குச் சமனாக நின்று தமது பணிகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் அம்மையார் அழகுற எடுத்துக் காட்டுகின்றார். ஸ்திரீகளுக்கு சுதந்திரம் என்ற கட்டுரையில்,

"ஸ்திரீகளுக்கு ஓட்டு சுதந்திரம் தேவையில்லையென்றும் அவர்கள் இராஜிய விஷயங்களில் நடந்துக் கொண்டால் வீட்டுக் குடும்பக் காரியங்கள் கெட்டுப் போகுமென்றும் இன்னமும் பல படித்த மேதாவிகளே பிரசுரம் செய்துக் கொண்டு இருக்கிறார்கள் என்றால் படிப்பில்லாத நிலைமையிலுள்ள புருஷர்கள் ஸ்திரீகளை எந்த முறையில் நடத்துவார்கள் என்று யோசிக்க வேண்டியதாய் இருக்கின்றது. குடும்ப காரியங்களை நடத்தாமல் விட்டு விட்டு ஸ்திரீகள் இராஜிய விஷயங்களில் பிரவேசித்து வேலை செய்ய வேண்டுமென்று எந்த ஸ்திரீயும் கருதவே இல்லை. குடும்ப காரியங்கள் எல்லாம் தமக்குச் சொந்தமானவைகள். அதிலுள்ள சங்கடங்களை நீக்கி செவ்வனே அதை நடத்துவதற்கு இராஜிய விசயங்களும் அவசியம்... குடும்பமென்பது ஆணும் பெண்ணும் சேர்ந்து நடத்தும் இல்வாழ்க்கை. அதைப்போலவே பல குடும்பங்கள் சேர்ந்து தான் ஒரு இராஜாங்கமாக வேண்டும். குடும்பத்தை சரிவர நடத்த இருதரத்தாரும் எப்படி ஒற்றுமையாய் நடத்த வேண்டியிருக்கிறதோ அதைப்போல இராஜிய விசயங்களுக்கும் ஸ்திரீகளின் துணை அவசியம் வேண்டும்.

அரசனுக்கு மந்திரி என்று ஒருவர் இருந்து இராஜாங்கத்தை நடத்த வேண்டுமென்ற முறை ஏற்பட்டது போல் புருஷனுக்கு மனைவியே மந்திரி என்ற முறையும் தொன்று தொட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பண்டைய காலத்தில் ஸ்திரீகள் அரசாக இருந்தது. சமீபத்தில் நமது விக்டோரியா மகாராணியார் சர்க்கரவர்த்தினியாய் ஆண்டு வந்தார்கள் என்பது யாரும் மறுக்க முடியாது. ஆனால் அவர்கள் அரசாண்ட காலத்தில் எவ்வளவு அமைதியாகவும் ஒற்றுமையாகவும் இருந்தது என்பதை ஒவ்வொருவரும் உணராமல் இல்லை. இன்னும் இந்திய முகமதிய பெண்மணிகளிலும் பலர் அரசிகளாகவிருந்து இராஜிய பரிபாலனம் செய்து வந்திருக்கிறார்கள். அங்ஙனமிருந்த ஸ்திரீகள் குடும்ப காரியங்களைத் தவிர மற்ற காரியங்களை கவனித்ததேயில்லையென்னும் மனப்பான்மையை நாம் என்னவென்று கூறுவது. ஸ்திரீகள் விஷயத்தில் புருஷர்கள் கொண்டுள்ள தாராளப்புத்தி வெளியாகிவிட்டது (தேசபக்தன் - 05.04.1929) எனக் கூறுகின்றார்.

அவ்வாறே பெண்களின் நிலை குறித்தும் தேசிய சர்வதேச கண்ணோட்டத்துடனும் பல கட்டுரைகளையும் எழுதியிருக்கின்றார் என்பதும் அவதானத்திற்குரியது. சமூக பாரம்பரிய முறை, சமூக வழக்காறுகள் என்பவற்றினடியாகத் தோன்றிய தேவதாசி முறை, மிகவும் பழமையான சமய நடைமுறைகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. தேவதாசி என்பதற்கு இறைவனின் அடிமை என கற்பிதம் செய்யப்பட்டது. இதனடிப்படையில் இப்பெண்கள் கடவுளுக்கு மணப்பெண்ணாக தாரைவார்ப்பு செய்யப்பட்டனர். இப்பெண்களின் திருமண உரிமையோ தமது குடும்பத்தினருடன் உறவு வைத்துக்கொள்ளும் உரிமையோ மறுக்கப்பட்டது. ஆலயக் குருக்கள், கிராம தலைவர்கள், நிலப்பிரபுக்கள் மற்றும் பொருளாதார பலம் படைத்தவர்களுக்கு சேவகம் செய்வதற்காகவும் அதற்கும் மேலாக அவர்களின் பாலியல் உணர்வுகளை தீர்ப்பதற்கும் இப்பெண்கள் பயன்படுத்தப்பட்டனர். இப்பெண்கள் மீதாக திணிக்கப்பட்ட பொருளாதார சுரண்டல், ஆணாதிக்கம் சார்ந்த பாலியல் உறவுகள், இவையாவும் தெய்வத்துக்கு செய்கின்ற தொண்டாகவே கருதப்பட்டது. இந்நிலையிலிருந்து இவர்கள் விடுபட முடியாத வகையில் சமூக பொருளாதார கட்டமைப்பு முறைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இத்தேவதாசியினரிடையும் வர்க்க ஏற்றத் தாழ்வுகள் காணப்பட்டன. ஓரளவு வசதி வாய்ப்புடன் வாழ்ந்தவர்களும் உள்ளனர். அதே சமயம் சமூக ரீதியாக பின்தங்கிய அதிலும் சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து வந்தவர்களும் இருந்தனர். இவர்கள் கடினமான வாழ்வை அனுபவிக்க நேர்ந்துள்ளமையை அறிய முடிகின்றது. காலப்போக்கில் ஏற்பட்ட பெண்விடுதலை சார்ந்த சிந்தனைகளுடன் இணைந்து தேவதாசி முறை ஒழிப்புக் குறித்த விழிப்புணர்வுகளும் எழுந்தது. தேவதாசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக வாழ்க்கை முறையிலிருந்து தோன்றிய இராஜம் அமிர்தம்மாள், மணியம்மை (ஈ.வே.ரா.பெரியாரின் மனைவியல்ல) முதலானோரின் போராட்டங்கள் முக்கியமாக கவனத்திலெடுக்கப்பட வேண்டியவைகளாகும். இவ்வகையில் தேவதாசிகள் தொடர்பில் டாக்டர் முத்துலெட்சுமி அம்மாள் அவர்களின் பங்களிப்புகள் பற்றிய அம்மையாரின் பின்வரும் கூற்று அவதானத்திற்குரியதாகும்.

"டாக்டர் முத்துலெட்சுமி அம்மாள் கொண்டு வந்த தேவதாசிகளிற்கான சட்டம் சென்னை சட்டசபையில் நிறைவேறியது நமக்குச் சந்தோசத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கோவில்களில் தேவதாசிகள் இருக்க வேண்டும் என்ற வழக்கம் எக்காரணம் பற்றி ஏற்பட்டிருந்த போதினும், தற்காலம் அவ்வழக்கம் அடியோடு நின்று போக வேண்டியது அவசியம். இச்சட்டத்தை எதிர்த்துப் பேசிய சில சுயராஜ்ஜியக் கட்சிக்காரர்களுடைய மனோப்பான்மையை நாம் என்னென்று சொல்வது. இந்தியாவில் தேவதாசிகள் இல்லாமல் போனால் விபச்சாரம் குறைந்து போகும் என்று சொல்லிவிட முடியாது. விபச்சார தொழிலையே தண்டனைக்குள்ளாக வேண்டிய அம்சமாகச் செய்துவிட வேண்டியது அவசியமானதாகும். இது தொடர்பாக டாக்டர் முத்துலெட்சுமி அம்மாள் முயற்சியெடுப்பாராக...

கோயில்களில் தேவதாசிகளை ஏற்படுத்தியது எதற்காகவெனில் அங்கு உத்தரவான திருப்பணிகளைச் செய்வதற்காகவேதான். அப்படியிருக்க நாளடைவில் சில சுயநலப் பிரியர்கள் தங்கள் சொந்தமான எண்ணங்களைப் பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டும், அப்பேதையர்களை மயக்கி தேவதாசிகள் விபச்சாரத்தை கைக்கொள்ள வேண்டிய நிலைமையில் கொண்டுவந்து விட்டுவிட்டார்கள். நமது பாரத தேசத்தில் அனேக குடும்பங்கள் கெட்டு பல கொலை, களவுகள் ஏற்பட்டு நமது நாடு அவமதிக்கப்பட்டிருப்பது விபச்சாரத்தின் காரணத்தையே முதன்மையாகக் கூறலாம். தவிரவும் பல பெண்களை ஒரு புருஷன் மணப்பது தனக்கு இஷ்டமானவளுடன் உல்லாசமாய் இருப்பது மற்ற மனைவிகள் கெட்ட கொள்கையை மாற்றி ஸ்திரீகளுடைய மனதை குளிர பண்ணுவதற்கு வேண்டிய ஏற்பாட்டினையும் சட்டபூர்வமாய் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பதை அவர்களுக்கு அறிவித்துக் கொள்வதாகும். அவ்வாறு செய்யாதவகையில் ஸ்திரீகளின் நிலைமை ரொம்பவும் சீர்கேடான நிலையில் வந்து முடியும். (08.02.1929)

இவ்வாறு தேவதாசிகள் கொடூரம் நிறைந்த வாழ்வு குறித்தும் அவர்களின் விடுதலைக்காக குரல் கொடுத்த ஆளுமைகள் குறித்தும் சுட்டிக்காட்டுகின்ற அம்மையார், பெண்களின் சுகாதார நலன் பற்றியும் அது தொடர்பில் கவனமெடுத்த சமூக செயற்பாட்டாளர்கள் பற்றியும் குறித்துக் காட்டத் தவறவில்லை. அவரது மேல்வரும் கூற்று அதனை அழகுற எடுத்துக் காட்டுகின்றது.

"சென்னை சட்டசபையில் ஸ்திரீகளின் வைத்திய வசதிக்காக வேண்டிய சில முக்கியமான விஷயங்களைக் குறித்து ஸ்ரீமதி டாக்டர் முத்துலெட்சுமியம்மாள் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் தோற்றுப் போனது மிகவும் வருந்தத்தக்கது. இந்தியாவிலுள்ள இதர இடங்களில் சரியானபடி சிகிச்சை செய்வாரில்லாமல் எழுத்து வாசனையறியாத நாட்டு மருத்துவச்சிகளைக் கொண்டு சிகிச்சை செய்து கொள்ளும் நமது சகோதரிகள் எவ்வளவு பேர் உயிர் விடுகின்றார்கள். எத்தனை சிசுக்கள் மரணமடைகின்றனர் என்பதை ஒவ்வொருவரும் அறிந்தும் அத்தீர்மானத்தை ஆதரிக்காமல் போனது அவ்ஸ்திரீகளுக்குச் செய்த தீங்கென்றே சொல்ல வேண்டியதாக இருக்கின்றது. நமது மந்திரி டாக்டர் சுப்பராயனவர்கள் இத்தீர்மானத்தை எதிர்த்தது மிக விசனிக்கத்தக்கதாகும்" (தேசபக்தன் 29.03.1929).
அம்மையாரின் பார்வை பரந்துப்பட்ட அவரது இதயத்தை எமக்கு எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

அதேசமயம், பெண்களின் உடைகள் எவ்வகையில் ஆண்களை திருப்திபடுத்துவதற்காக உள்ளது என்பதனையும் தேவதாசிகளின் பாவாடைகள் மற்றும் சட்டைகளின் கைகளின் நீளமும் எவ்வாறு குறைக்கப்பட்டுள்ளன என்பதையும் அவர் தமது கட்டுரைகளில் பதிவாக்கியிருக்கின்றார். அதேபோன்று காலத்திற்குக் காலம் பெண்கள் விழிப்புக் கொள்ளத் தொடங்கியதும் ஆடைகளில் எத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன என்பதையும் அவர் சுட்டிக் காட்டுகின்றார். பல உயர் பதவிகளில் பெண்கள் வகித்த இடம் குறித்தும் குறிப்பிடுகின்றார். எடுத்துக் காட்டாக சட்டசபையில் ஸ்திரீகளுக்கு இடம் வேண்டுமென்பதற்காக போராடிய பெண்கள் பற்றியும் அவர் பல இடங்களில் எடுத்துக் காட்டுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைமன் கமிசன் ரங்கூனில் விசாரணை நடத்தியபோது மிஸ். சந்திரா என்ற பெண்மணி பரிஸ்டர் சட்டசபையில் பெண்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என பெண்களின் உரிமை தொடர்பில் குரல் கொடுத்ததையும் அம்மையார் வலியுறுத்திக் கூறத்தவறவில்லை.

மேலும் மாணவர்கள் அரசியல் அறிவு பெற வேண்டியதன் அவசியம் பற்றியும் அவர் கவனமெடுக்கின்றார். பெண்களின் வாக்குரிமை சங்கம் (ஸ்தீரிகளின் வாக்குரிமை சங்கம் என்றே அம்மையார் குறிப்பிடுகின்றார்) தமது செயற்குழு கூட்டம் ஒன்றில் மாணவர்களுக்குச் சுகாதார நூலைக்காட்டி அதனைப் பாடமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர். அதன் பிரதியை சகல சட்டசபை அங்கத்தினருக்கும் அனுப்பியுள்ளனர். இது குறித்து அம்மையார் எழுதுகின்ற போது சுகாதார பாடம் மட்டுமல்ல அரசியல் பற்றிய ஞானமும் மாணவர்களுக்கு அவசியம் என்பதை சுட்டிக்காட்டி இலங்கை நிர்வாகம் பற்றியும் அது எவ்வாறு இயங்குகின்றது குறித்தும் பொதுமக்கள் தொடர்பில் அவர்களின் கடமைக் குறித்தும், குறிப்பாக அரச உத்தியோகத்தர்கள் பொது மக்களுக்கு எஜமானாக அல்லாமல் ஊழியர்களாக கடமையாற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் மாணவர்களுக்கு தெளிவு பெற வேண்டியுள்ளது எனக் குறிப்பிடுகின்றார். விடேசமாக பொது சனங்கள் அரசின் இலட்சியங்கள் பற்றி தெளிவு பெற வேண்டியதுடன் பெண்களிடத்தே புத்தெழுச்சிகளை ஏற்படுத்தி அவர்களையும் நிர்வாக அம்சங்களில் பங்கு பெற வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்துகின்றார்.

பெண்கள் குறித்து தேசபக்தனில் வெளிவந்த இந்தியாவின் முன்னேற்றம் (03.09.1929 - இதழ் 192, 11.09.1929 இதழ் - 199, 25.09.1929 இதழ் - 207), ஸ்திரீகளுக்குச் சமசுதந்திரம் (28.09.1929 - இதழ் 209,30.09.1929 - இதழ் 210) ஆகிய கட்டுரைகள் முக்கிய கவனிப்புக்குரியவையாகும். இத்தகவல்கள் சாரல் நாடனின் நூலில் குறிப்பிடப்பட்டிருப்பினும் சில தவறுகளையும் கொண்டிருக்கின்றன என்பதும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. "இந்தியாவின் முன்னேற்றம்" என்ற தொடர் கட்டுரை இரண்டு தொடர்கள் மட்டுமே வெளிவந்திருப்பதாக குறிப்பிடுகின்றார். உண்மையில் அத்தொடர் கட்டுரை மூன்று தொடர்களாக வெளிவந்திருப்பதாக அறிய முடிகின்றது. மூன்றாவது தொடரின் இறுதியில் "தொடரும்" என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதன் தொடர்ச்சியை அடுத்து வந்த பத்திரிகைகளில் காணமுடியாதுள்ளது. அதேசமயம் கட்டுரையை முழுமையாக வாசிக்கின்றபோது கட்டுரை முற்றுப் பெற்றுள்ளதாகவும் எண்ணத் தோன்றுகின்றது. அவ்வாறே இக்கட்டுரையின் தலைப்பை மட்டுமே மையமாகக் கொண்டு இந்திய சுதந்திரம், சமத்துவம் பற்றிப் பேசுவதாகவே குறிப்பிடுகின்றார். அக்கட்டுரை முற்று முழுதாக பெண்களின் நிலை குறித்துதான் பேசுகின்றது. மேலும் சாரல்நாடன் தமது நூலில் ஸ்திரீகளுக்குச் சமசுதந்திரம் என்ற கட்டுரையை "பெண்களுக்கு சம சுதந்திரம்" எனக் குறிப்பிடுகின்றார். இத்தலைப்பு மூல பதிப்பிலிருந்து மாறுப்பட்டிருப்பதை அறிய முடிகின்றது.

1929 ஆண்டில் தேசபக்தன் பத்திரிகை தினசரியாக வெளிவரத் தொடங்கியது. நடேசய்யரின் அரசியல் தொழிற்சங்க பொறுப்பு அதிகரித்ததால் அவர் அடிக்கடி வெளியூர் சென்று வந்தார். இதன் காரணமாக பத்திரிகைப் பொறுப்பினை ஏற்க வேண்டிய நிலை அம்மையாருக்கு ஏற்பட்டது. அம்மையார் இப்பொறுப்பினை ஏற்று செயற்பட்ட காலத்தில் அதிகமான பெண்கள் இவரோடு இணைந்து செயற்பட்டமை பற்றி சாரல் நாடன் தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். இக்காலத்தில் தேசபக்தன் பத்திரிகையில் அம்மையார் நிறைய கட்டுரைகளை எழுதியுள்ளார். சில பத்திரிகைகளுக்கு ஆசிரியர் தலையங்கமும் எழுதியுள்ளார். "ஸ்த்திரி பக்கம்" என்ற பகுதிக்குத் தானே பொறுப்பாயிருந்து பெண்கள் தொடர்பில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவர் எழுதிய கட்டுரைகள் யாவும் தொகுக்கப்பட்டு நூலாக வெளிவர வேண்டியது காலத்தின் தேவையாகும்.

மீனாட்சி அம்மையாருக்கு முன்னரும் அவரது காலத்திலும் பல பெண்கள் இயங்கியுள்ளனர். அவர்களில் அம்மையாருக்கு முன் வாழ்ந்த சுன்னாகம் செல்லாச்சி அம்மையார், மங்கம்மாள் மாசிலாமணி முதலானோர் ஆன்மீகத் துறையில் ஈடுபட்டு கொண்டு சமய பணிகளை முன்னெடுத்துள்ளனர். மங்கமாள் மாசிலாமணி அம்மையார் தமிழ் மகள் என்ற பத்திரிகையை வெளியிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2015ஆம் ஆண்டு தமிழ் சாகித்திய விழா நிகழ்வுகளிலிருந்து...


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிக்கை முன்னோடியாகவும் திகழ்ந்துள்ளார். அவ்வாறே பெண்களுக்கு வாக்குரிமை வழங்கக்கூடாது என்ற கருத்துக்கள் பிற்போக்கு நிலைப்பட்டவர்களால் முன்வைக்கப்பட்டபோது அதற்கு எதிராக பெண்களின் வாக்குரிமை சங்கம் என்ற அமைப்பை உருவாக்குவதில் திருமதி டேசி பண்டாரநாயக்கவின் பங்கு கணிசமானது. அதேபோல் தமிழ் மக்கள் மத்தியில் நல்லம்மாள் சத்தியவாகீஸ்வர ஐயர், ஈ.ஆர். தம்பிமுத்து முதலானோர் இவ்வமைப்பு சார்ந்து இயங்கியுள்ளனர். அவர்களின் பங்களிப்புகள் யாவும் குறிப்பிட்ட வர்க்கத்தினரை பிரதிபலிப்பதாக அமைந்திருந்ததுடன் குறித்த எல்லைக்குள்ளேயே முடங்கி விடுவதாகவும் அமைந்திருந்தமை துரதிஸ்டவசமானதாகும். அம்மையாரின் செயற்பாடானது - சமூக பங்களிப்பானது பரந்துப்பட்ட வெகுசனத்தை அடிப்படையாக கொண்டமைந்திருந்தது. அவர் பெண்கள் பொறுத்தும் அவர்களின் விடுதலை பொறுத்தும் அதிக கவனமெடுத்திருந்த போதினும் முழு சமூக விடுதலையே அதனை சாத்தியப்படுத்தும் என்ற சிந்தனையே அவரில் முனைப்புற்றிருந்ததை அவரது எழுத்துக்களில் காணக்கூடியதாக உள்ளது. அவரது கட்டுரைகளோ அல்லது கவிதைகளோ துரைத்தன மனோபாவத்துடன் சமூகத்தில் கற்றவர்களை மாத்திரம் இலக்காக கொண்டு எழுதப்பட்டவை அல்ல. அவை பரந்துப்பட்ட மக்களை தழுவியதாக அமைந்துள்ளமையினால் தான் எளிய பதம், எளிய நடை, பொதுசனங்கள் விரும்பும் மெட்டு ஆகிய பண்புகள் இயல்பாக வந்தமைந்து விடுகின்றன. அவரது கட்டுகைளில் அவர் பொதுசனம் என்ற சொல்லை மிக வலிமையுடனே பாவிக்கின்றார். இந்தவகையில் ஓர் ஒப்பியல் நோக்கில் அக்கால பெண் ஆளுமைகளுடன் பொருத்தி பார்க்கின்ற போது, இலங்கையில் எழுந்த சமூக மாற்றத்திற்கான முதலாவது பெண் குரல் மீனாட்சியம்மாள் என்பதில் இருநிலைப்பட்ட கருத்துகளுக்கு இடமில்லை எனலாம்.

தனது காலத்து சின்னஞ்சிறிய மனிதரிலிருந்து வேறுபட்டு, சமூக விடுதலைக்கான மரபை தோற்றுவித்ததில் அம்மையாருக்கு முக்கிய இடமுண்டு. அவரில் வெளிப்பட்டிருந்த ஒருமுகப்படுத்தப்பட்ட அரசியல் பண்பாட்டு நோக்கு, மக்கள் சார்பு, நாட்டு நல நாட்டம் என்பன சிறப்பானதாயும் தனித்துவமாயும் அமைந்திருக்கின்றது. அவ்வாறு இயங்கி வந்ததொரு வரலாற்றினையும் தொடர்ச்சியினையும் நன்கு விளங்கிக் கொள்வதற்கு அம்மையார் பற்றிய முழு நிறைவான ஆய்வு அவசியமாகும். அவ்வாறே அவரது ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு தொகுப்பொன்று வெளி வரவேண்டியதும் காலத்தின் தேவையாகும்.

> "எல்லாப் பறவைகளும் மழைக்காலங்களில்
> கூடுகளில் அடையும்! ஆனால்
> கழுகு மழையைத் தவிர்க்க மேகத்திற்கு மேலாகப் பறக்கும்."
>
> டாக்டர் அப்துல் கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனியாண்டியும் சமகால வெளியீடுகளும் : ஆவணப்படுத்தல்

இரா. மகேஸ்வரன், கல்விசார் நூலகர், பேராதனைப் பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

முனியாண்டி என்ற சஞ்சிகை 1869 தொடக்கம் 1871 வரை காலாண்டு சஞ்சிகையாக வெளிவந்துள்ளது. இச் சஞ்சிகை தோட்டத் துரைமாரினால் வெளியிட்டிருக்கலாம் என அதிலிருக்கும் விடயங்களை வைத்து அறியக்கூடியதாகவுள்ளது. இச் சஞ்சிகை இதுவரை மலையக மக்கள், இந்திய வம்சாவளித் தமிழர், தோட்டத் தொழிலாளர்கள், இந்தியத்தோட்டத் தொழிலாளர்கள், பெருந்தோட்டத் தமிழ் தொழிலாளர்கள் பற்றிய எந்த ஆய்வுகளிலுமே உசாத்துணையாகக் குறிப்பிடப்படவில்லை. ஆய்வாளர்களுக்கு முனியாண்டி கிடைக்காமையே இதற்குக் காரணமாகும். பலரது தனிப்பட்ட சேர்க்கைகள் பல்கலைக்கழக நூலகங்களுக்கு வழங்கப்படும் போது முனியாண்டி சஞ்சிகையும் பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்திற்கு வழங்கப்பட்டிருக்கலாம். எது எப்படியோ! இது ஒரு பொக்கிஷமாகப் பேணப்பட்டும் வருகிறது.

**ஆய்வின் நோக்கம்**

முனியாண்டி பற்றி வெளியுலகிற்கு காட்டுவதும் பல்வேறு ஆய்வாளர்களினால் முனியாண்டிக்கு சமகாலத்தில் வெளியான அதாவது 19ம் நூற்றாண்டில் வெளியான நூல்கள், சஞ்சிகைகள் பற்றி வெளிக்காட்டப்பட்டவை பற்றியும், இதன் சமகால வெளியீடுகள் பற்றியும், 19ஆம் நூற்றாண்டின் ஏனைய வெளியீடுகள் பற்றியும் ஆவணப்படுத்துவதும் எதிர்கால ஆய்வாளர்களுக்கு வழிகாட்ட உதவுவதுமே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுப் பிரச்சினை**

முனியாண்டி எனப் பெயரிட காரணமென்ன? இதுவரை முனியாண்டியை வெளிகாட்டாது அதிலுள்ள மலையக மக்கள் பற்றிய தோட்டத்துரைமாரது கருத்துக்கள் பற்றி ஆராயப்படாமலுள்ளமை, தோட்டத்துரைமாரது மனநிலையை படம்பிடித்து காட்டும் இந்தக் காலாண்டு சஞ்சிகை பற்றி ஆராயாமை, தோட்டத் துரைகளது உணர்வலைகள், தோட்ட தொழிலாளர்கள் மீது கொண்டிருந்த அனுதாபம், அதேவேளை அவர்களது ஆடல், பாடல், ஒன்றுக் கூடல், விளையாட்டுப் போட்டிகள் பற்றிய தகவல்கள் மூலம் அவர்கள் வாழ்ந்த முறை பற்றி அறிந்து கொள்ளப்படாமல் இருந்தமை போன்றனவோடு, எந்த ஒரு ஆய்விலும் இச் சஞ்சிகை பற்றிக் குறிப்பிடப்படாமை, ஆய்வாளர்கள் 19ஆம் நூற்றாண்டு ஆய்வு சஞ்சிகைகள் பற்றிய ஆய்வுகளில் இது பற்றிக் குறிப்பிடாமை ஆய்வின் பிரச்சினைகளாகும். இவ் ஆய்வு தோட்ட மக்களது துயரங்கள் தொடர்பாக முனியாண்டிக்கு சமகாலத்தில் வெளிவந்த வேறு ஆவணங்களையும் ஆவணப்படுத்துவதோடு 19ஆம் நூற்றாண்டு வெளியீடுகள் பற்றி மட்டுமே ஆராயப்பட்டுள்ளன.

இலங்கைக்கு இந்திய தொழிலாளர் வருகை பற்றிய ஆவணப் பதிவுகள் 1828 இலிருந்து காணப்படுகின்றன. இவற்றுள் 1828இல் கவனர் பார்ன்ஸ் 150 தொழிலாளர்களையும், ஜோர்ஜ்பேட் என்ற தோட்டத்துரை 14 தொழிலாளர்களைக் கொண்டு வந்ததாகவும் பதிவுகள் உள்ளன. இதிலிருந்தே "தோட்டத்துரை" என்ற பதமும் உருவாகியது. இத்தோட்டத்துரையான ஜோர்ஜ் பேர்ட்டே முதலாவது தோட்டத்துரையாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளார்.

ஜோர்ஜ் பேர்ட் 1819ல் வந்தார் எனவும் கம்பளையில் சின்னபிட்டிய என்ற கோப்பித் தோட்டத்தினை ஆரம்பித்துள்ளார் என்பதும் பின்னர் கன்னொருவ, குண்டசாலை, திகன ராஜவத்த (பின்னர் ரஜவல) தோட்டங்களை ஆரம்பித்தார் எனவும் ஆதாரங்கள் காட்டப்படுகின்றன. இவ்வாறு வெள்ளைக்காரர்களில் வந்தவர்களுள் வில்லியம் நைடோன் (William Knighton - 1854) கானக வாழ்வு "Forest Life in Ceylon" என்ற நாவலையும் இக்கால அச்சகரான வில்லியம் எல். எச் ஸ்கீன் (W. L. H. 1968) "நக்கில்ஸ் மலைத் தொடர்கள்" "The Knuckles and other Proems" மற்றும் ஆடம்ஸ் பீக் (Adams peak) "சிவனொலிபாத மலை" கவிதை முதலான நூல்களையும் எழுதியுள்ளனர். இதன் மூலம் இலங்கை மலையகச் சூழலினை தமது பிரித்தானிய நாட்டினருக்கு தமது இலக்கியப் படைப்புகள் மூலம் அறிமுகம் செய்தவர்களாகின்றனர்.

இந்த நூல்களில் இந்திய வம்சாவளி தமிழர்கள் பட்டனுபவித்த துன்பங்கள் பற்றி இவர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவல வாழ்க்கை, பட்ட கஷ்டங்கள் பற்றியும் கூறியுள்ளனர். இக்காலத் தோட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டக்டர் ஏ.ஜோசப் (1869) எழுதிய கிருஷ்ண கும்மி என்ற தமிழ் நூல் இக்காலத்தில் தமிழில் வெளிவந்தாலும் இது விவசாய நூலாகவே குறிப்பிடப்படுகிறது. இதில் தோட்ட தொழிலாளர்களது அவலங்கள் பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

19ஆம் நூற்றாண்டில் வெளிவந்த சஞ்சிகைகள், செய்திதாள்களில் Ceylon observer (1834) Time of Ceylon (1846) Fergusons Ceylon Directory (1859) ஆகியவற்றில் தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய பதிவுகள் உள்ளன. டைம்ஸ் ஒப் நேடால் (1894) என்ற இதழில் இராமசாமி என்ற தலைப்பிலான கட்டுரை, டிரான்டுவெல் அட்டுவேர்டைசர் (1893) கூலிகள் பற்றிய கடித விவாதம் ஆகியனவும் இடம்பெறுகின்றன.

Donovan Moldrich (டொனோவன் மோல்ட்ரிச்) 1840 Bitter berry bondage : The nineteenth century coffee workers of Sri Lanka. மீள்பதிப்பு, Kandy, Sri Lanka : Co-Ordinationg Secretariat for Plantation Areas, (1989) Battaramulla, Sri Lanka : Neptune Publication (Pvt) Ltd. 2016. இதில் தோட்ட மக்களது துயரங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது, J. Capeer ( ஜெ. கெபர்) edited " The Ceylon Magazine. த சிலோன் மெகசின் (1840-42) Picture from the East (1854) பிக்சஸ் புறம் த ஈஸ்ட் (கிழக்கு பாடல்கள்), Old Ceylon : Sketchers of Ceylon life in the olden Time (1877) (இலங்கையின் பழைய படங்களில் இலங்கையின் பழைய வாழ்க்கைமுறை), கட்டுரை எழுத்தாளரான P.D. Mllie மில்லி என்பவர் 1880 - 1893 வரை பூண்டுலோய தெற்கு, பூண்டுலோய வடக்கு ஆகிய தோட்டங்களில் தோட்டத்துரையாக அதன் சொந்தக்காரராக விளங்கியுள்ளார். இவர் தோட்ட வாழ்க்கை பற்றிப்பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

Dr. கிறிஸ்தோபர் எலியட் (Christopher Elliott (1837) எழுதிய சுகாதார நூலில் "மலபார் கூலிகளின் தொற்று நோயை தடுப்பதற்கான வழிவகைகள்" என்ற நூலில் தோட்ட தொழிலாளர்கள் வரும்போது அனுபவித்த நோய்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவர் அயர்லாந்து ஐரிஸ் நாட்டைச் சேர்ந்தவர். ஒப்சவர் பத்திரிகையில் சக ஆசிரியராக கடமையாற்றியவர். துரைமார் சங்கம் 17.02.1854 இல் அமைக்கப்பட்டுள்ளது. கிழக்கிந்தியக் கம்பனி கப்டன் கெயித் ஜோலி இதன் முதல் தலைவரானார். George wali என்பவர் இலங்கைத் தோட்ட துரைமார் சங்கத்தின் ஒன்பது முறை தலைவராகியுள்ளார் J. L. Shand (சான்ட்) 1883, 1884ஆம் ஆண்டுகளில் துரைமார்களை சட்டநிருபன சபையில் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். துரைமார் சங்க பிரதிநிதியான ஆர்.பி.டிரிலெர் (1872) செனல்பேர்லரில் இந்தியத் தொழிலாளிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

சேர். ஜோன் எமர்சன் டெண்ணன்ட் (1860),சேர் றொபட் வில்மட் ஹோட்டன் இலங்கை கவனர் அவர்களை சந்திக்க நுவரெலியா சென்ற miron winslow அமெரிக்க பாதிரியார் (1819) நுவரெலியா போக்குவரத்து பாதை பற்றி எழுதிய நூல், பிரட்ரிக், "இலங்கையில் 64 வருடங்கள்" (1926), மேஜர் தாமஸ் ஸ்கின்னர் "இலங்கையில் 50 வருடங்கள்" (1871),பீ. மில்லி "இலங்கையில் 30 ஆண்டுகளுக்கு முன்பு" (1866), மற்றும் "சிவனொலிபாத மலையிலிருந்து ஆனையிரவு வரை" (1892), "பெரிய துரையின் சுயசரிதை" (1889) "தோட்டப் பகுதிகளில் சைக்கிள் சவாரி" (1889), John Davy (ஜோன்டேவி) (1821) A account of the Interior of Ceylon and of its inhabitants : with travels in the island, W. Levews கவர்ண்மண்ட் ஏஜன்ட் "Notes on tanks ling below the kalawewa" Jonstey. (ஜோன்ஸ்ரி) (1835) Conan Doyle (கொனன் டொயிலி) (1835) "Wanderings of a spiritnelist" (1921), Henry Charles (ஹென்றி சார்ல்ஸ்) (1850) 'Ceylon and the cingalese' (இலங்கையும் சிங்களவர்களும்), The Rifle and the hound, Samuel baker (1885) in Ceylon சமுவல் பேகர் இன் சிலோன் (1885), mojov Jonathan forbes (1840) Eleven years in Ceylon (பதினோரு ஆண்டு அநுபவங்கள்) போன்ற நூல்களில் தோட்டத் தொழிலாளர்களின் உண்மை நிலையை ஆங்கிலத்தில், ஆங்கிலேயருக்கு வெளிபடுத்தினர்.

ஜேம்ஸ் டெயிலர் என்பவர் 1886இல் தேயிலையும் ஹென்றி என்பவர் 1875 இல் இறப்பரையும் அறிமுகப்படுத்தியுள்ளனர். இக்காலத்தில் தேசாதிபதியாக 1798 பிரட்ரிக் நோத் 1805 - 1811 வரை தோமஸ் மெயிட்லாந்து 1812 - 1820 ரோபட் பிரவுன்றிக் 1824 – 1831 எட்வட் பார்ன்ஸ் இருந்துள்ளனர். இக்காலத்தில் எல்பொட Hunters Club (வேட்டை கிளப்) 1838 இலங்கைத் தமிழ்க் கூலி மிஷன் 1815 ஆகியன ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ferguson, john என்பவர் எழுதியுள்ள pioneers of the planting Enterprise in Ceylon from 1830 onward. "இலங்கை பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை முன்னோடிகள் 1830 முதல்" என்ற நூலும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் அதாவது 19ஆம் நூற்றாண்டில் இதுவரை ஆவணப்படுத்தப்பட்ட சிற்றிதழ்களாக சஞ்சிகைகளாக பின்வருவன காணப்படுகின்றன.

1802இல் அரச வர்த்தமானி (Government Gazatte), 1832இல் கொழும்பு ஜேர்னல் (Colombo Journals), 1841 உதயதாரகை, 1869 மெசஞ்ஞர், 1841 உதயாதித்தன், 1845 உரைகல்லு (The Touch Stone), 1848 இலங்கை நேசன் (ஆசிரியர் முத்துசாமி), 1853 வித்தியாதர்பணம் (வைமன் கதிரவேற்பிள்ளை), 1853 உதயபானு, 1853 இலங்காபிமானி, 1859 பாலியர் நேசன், 1862 பறீமன் (நிகலஸ் கூல்ட்), 1863 இலங்காபிமானி (சி. ப. கதிரவேற்பிள்ளை), 1864 பாலியர் நேசன் (வில்லியம் சின்னதம்பி), 1864 இலங்கை காவலன் (றோபட் நியூட்டன்), 1868 இலங்கைப் பாதுகாவலன் (சி. முத்தையாபிள்ளை),1870 புதினாதிபதி (கு.அப்புத்துரை ஐயர்), 1871 யாழ்ப்பாண செய்தி (கோச்சு), 1873 புதினலங்காரி (வாப்பு மரைக்கார்), 1876 சத்திய வேத பாதுகாவலன் (பிலீப் ஏ. முருகப்பா), 1876 பாதுகாவலன், 1877 இலங்கை நேசன் (எச். எம். சின்னத்தம்பி), 1880 உதயபானு (த. கைலாசபிள்ளை), 1881 சைவப் போதினி (வைத்தீக ஐயர்), 1881 விஞ்ஞான வர்த்தினி ((முத்துதம்பி செட்டியார்), 1881 விஞ்ஞான வர்த்தினி ((முத்துதம்பி செட்டியார்), 1882 முஸ்லிம் நேசன் ((மு.கா.சித்திலெப்பை), 1882 சைவ உதய பானு (சரவணமுத்துப் புலவர்), 1883 சைவாபிமானி (பொ.ஞானசபாபதிப்பிள்ளை), 1885 சன்மார்க்க போதினி (ச.தம்பிமுத்துப்பிள்ளை), 1886 இலங்கைத் தின வர்த்தமானி (க.ச.இராசபிள்ளை), 1886 சர்வசன நேசன் (ஏ.எஸ்.சி. மொகைதீன்), 1887 தினவர்த்தமானி (கா. சிதம்பர ஐயர்), 1888 ஞானாமிர்தம் (சபாபதி நாவலர்), 1889 இந்து சாசனம் (கி. பி. செல்லப்பாபிள்ளை, த.கைலாசப்பிள்ளை, ம.வே. திருஞானசம்பந்தபிள்ளை), 1889 சைவ சமயம், 1890 சைபுல் இஸ்லாம் (அ. அப்துல் ரகுமான்), 1890 மாணவன் (எம்.எஸ். பாவா), 1892 ஞானதீபம் (எம்.சி.சித்திலெப்பை), 1892 இலங்கைப் புதினத்தாள், 1893 இஸ்லாம் மித்திரன் (எல்.எம்.ஒத்மன்), 1896 மாணவன் (எம். எஸ். பாவா), 1898 வைத்திய விசயின ( ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை), 1990 முஸ்லீம் பாதுகாவலன் (ஐ. ம. அப்துல் அசீஸ்) ஆகிய சஞ்சிகைள், சிற்றிதழ்கள் தோற்றம் பெற்றுள்ளன. இவற்றுள் முனியாண்டியை காணவில்லை. இதுவரை முனியாண்டி பற்றி ஆராயமைக்கு காரணமென்ன?

முனியாண்டி எனப் பெயர் வைக்க காரணமென்ன? இந்திய வம்சாவளி தமிழர்களின் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வணக்கத்திற்குரிய சிறுதெய்வ வழிபாட்டில் முக்கியமாக முனியாண்டி காணப்பட்டதால் அதனை நையாண்டியாக, பகிடியாகக் கொண்டார்களா? முனியாண்டி, முனியம்மா, காட்டுமுனி, சுடலை முனி, பச்சைகாட்டுமுனி, ரோதமுனி, தவறனைமுனி, கவ்வாத்துமுனி, கம்பிமுனி, தன்னைமுனி, கொழுந்துமுனி, சந்திமுனி, முச்சந்திமுனி, மகாமுனி, வாள்முனி, மயானமுனி, மஞ்சள்முனி எனப் பல பெயர்களில் வழிபட்டனர். கோழி, ஆடுகளை வெட்டி பலிகொடுத்து படைத்தனர். சாராயம், கள்ளு படைத்து வழிபட்டனர். சாமியாடி வழிபட்டனர். எனவே இதனை ஒரு நையாண்டியாக பார்த்தார்களா? கடவுள் மீதான பயம், பக்தி, வழிபாடு காரணமாக இப்பெயரைச் சூட்டினார்களா?

முனியாண்டி சஞ்சிகையின் அட்டைப்படத்தினையே காண்கிறீர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பித் தோட்டத்தில் துரை ஒருவர் தொழிலாளியைத் தாக்குவதையும் மற்றொரு துரை ஒருவர் தொழிலாளியுடன் தோலில் கை கோர்த்து உழைப்பைப் பெறுவதையும் இவ் முனியாண்டி சஞ்சிகையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.






கவர்னர் படைவீரரை காலி கோட்டைக்கு அண்மையில் சந்திக்கும் காட்சி

தோட்டத்துரைக்கு சேவை செய்யும் தொழிலாளர்களின் சம்பளம்





தோட்டத்துரைக்கு சேவை செய்யும் "அப்பு" என்பவரது எதிர்பார்ப்புகள் என்ன? அப்புவின் கீழ் அப்புவுடன் கடமையாற்றும் ஏனைய தொழிலாளர்களின் சம்பளம் எப்படி இருக்க வேண்டும் என அப்புவின் எதிர்ப்பார்ப்பு துரையினரால் வெளியிடப்பட்டுள்ளது. இதன் படி

1. தலைமை அப்பு 2/=
2. இரண்டாம் அப்பு 1/10
3. மூன்றாம் அப்பு 1/=
4. சமையல்காரன் 2/-
5. சமையல் உதவி (மாட்டி) 1/50
6. சமையல் கூலி 1/-
7. வீட்டுவேலை கூலி 1/50
8. வீட்டுவெளிபுற கூலி 1/20
9. ஆயா 1/10
10. டோபி 2/-
11. வீட்டுக்காப்பாளர் 1/50 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தவிர துரைமாருக்கு தேவையான உணவகங்கள், குடிவகைகள், விற்பனை நிலையங்கள் ஆகியவற்றின் விளம்பரங்கள் காணப்படுகின்றன.

முடிவுரை

முனியாண்டி காலாண்டு சஞ்சிகையின் மூலம் துரைமாரது மனநிலை நடைமுறை, சுகபோகம் , கிழமை விடுமுறை அல்லது வார இறுதி விடுமுறை கழிப்பு, ஆர்வமான விளையாட்டு, பொழுது போக்கு, கலை இலக்கிய ஆர்வம், தமிழ் தொழிலாளிகள் மீதான அனுதாபம் போன்றவற்றினை அவதானிக்க முடிகிறது. இச்சஞ்சிகை, ஆய்வாளர்களால் எதிர்காலத்தில் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாக அமைந்துள்ளது. இதனை வெளிக்கொண்டு வருவதிலும் ஆவணப்படுத்துவதிலும் பெருமையடைவதோடு, இதனை பாதுகாத்து வைத்துள்ள பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்திற்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். இந்தத் தகவல்கள் தோட்டத் தொழிலாளர்கள் பற்றி எதிர்காலத்தில் ஆய்வு நடத்துபவர்களுக்கும், ஆய்வுகளுக்கும் துணையாக அமையும் என நம்புகிறேன்.

நாம் எதிர்கொள்ளும் சவால்கள் அனைத்தும்
நல்லபடியாகவே முடியும்!

நல்ல முறையில் முடியவில்லை என்றால்,
நாம் தோற்றுவிட்டோம் என்று பொருள் அல்ல...

சவால்கள் இன்னும் முடியவில்லை என்றே பொருள்!

நீ பட்ட துன்புத்தை விட,
அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது.

சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக நாட்டுப்புறவியலும் நிகழ்த்துக்கலைகளும்

## பயணிக்க வேண்டிய திசைவெளிகள் குறித்து: சில அறிமுகக் குறிப்புக்கள்

பெருமாள் சரவணகுமார், விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

---

இலங்கைத் தமிழரின் நாட்டாரியல் எனும் பெருந்தொகுதிக்குள் மலையக நாட்டாரியல் ஓர் உப பண்பாடாக (Sub Culture) அமைந்துள்ளது. அதற்கான அடிப்படைக் காரணம் இலங்கையின் ஏனைய சமூகங்களின் நாட்டாரியல் உருவாக்கத்திலிருந்து மலையக நாட்டாரியல் வேறுபட்டு அமைந்துள்ளமை எனலாம். இலங்கையின் ஏனைய சமூகக் குழுமங்களின் (வடக்கு, கிழக்கு) நாட்டாரியல் விவசாய பொருளாதார உற்பத்திமுறையின் பின்புலத்திலிருந்து தோன்றியது. ஆனால் மலையக நாட்டாரியல் பெருந்தோட்ட உற்பத்தி உறவுகளின் அடியாகவிருந்து மேற்கிளம்பியது ஆகும். அவ்வகையில் மலையக நாட்டாரியலுக்கு ஏறக்குறைய இருநூறு வருட கால வரலாறு உண்டு. இந்த இருநூறு வருடகாலத்து சமூக அசைவியக்கத்தை அது பல வகைகளில் பதிவுசெய்துள்ளது. காலமாற்றத்துக்கேற்பவும், சமுதாயத்தின் சிந்தனை மாற்றத்துக்கேற்பவும் உள்ளடக்க ரீதியாகவும் உருவ ரீதியாகவும் மாற்றங்களை எதிர்கொண்ட இலக்கியத் தொகுதியாகவும் மலையக நாட்டாரியல் விளங்குகின்றது.

ஒரு சமூகக் குழுவினது பண்பாட்டு அடையாளங்களை சுமந்திருக்கும் அம்சங்களுள் கலைகளுக்கு முக்கிய இடம் உண்டு. கலைகள் என்று சொல்லும்போது அவற்றுள் இலக்கியம், சிற்பம், ஓவியம் முதலான அம்சங்கள் சிறப்பிடம் பெற்றுவிடுகின்றன. 'இலக்கியம்' என்று நாம் பொதுத்தளத்தில் குறிப்பிட்டாலும் அதற்குள் பல வடிவங்கள் இருக்கின்றன. அவ்வகையான வடிங்களுள் நாட்டார் இலக்கிய வடிவங்களுக்கு முக்கிய பெறுமதி உண்டு. நாட்டார் இலக்கிய வடிங்களுள் ஒன்றாக விளங்கும் நிகழ்த்துக்கலை வடிவங்கள் தனித்து நோக்கத்தக்கவை. ஒரு பண்பாட்டினது உயிர்ப்பான பல அம்சங்களை வெளிப்படும் கலையாகவே நிகழ்த்துக்கலை விளங்குகின்றது எனலாம்.

பெருந்தோட்டப் பகுதிக்குள் அறிமுகப்படுத்தப்பட்ட வெவ்வேறுபட்ட பொருளாதார உற்பத்திமுறைகளுக்கேற்ப வளர்ந்துவந்த இலக்கியமாக மலையக நாட்டார் இலக்கியங்கள் அமைவுபெறுகின்றன. குறிப்பாக கோப்பி உற்பத்தி நடவடிக்கையாக இருந்த காலப்பகுதியில் அதன் அடியாகவிருந்து மேற்கிளம்பிய நாட்டார் இலக்கியங்கள், றப்பர் உற்பத்தி நடவடிக்கையாக இருந்த காலப்பகுதியில் அதன் அடியாகவிருந்து மேற்கிளம்பிய நாட்டார் இலக்கியங்கள், தேயிலை பிரதான பயிர்ச்செய்கையாக உருவான காலப்பகுதிகளில் அதன் அடியாகவிருந்து மேற்கிளம்பிய நாட்டார் இலக்கியங்கள் என உற்பத்தி உறவுகளின் மாற்றங்களுக்கேற்ப மலையக நாட்டார் இலக்கியங்கள் வளர்ந்து வந்திருப்பதினை அவதானிக்கமுடிகின்றது. இவ்வகையான உற்பத்தி மாற்றங்களையும் அதன் அடியாகவிருந்த சமூகப் பிரச்சினைகளையும் தொழில் கட்டமைப்புகளையும் 'தொழிற்பாடல்கள்' மிகச் சிறப்பாகவே பதிவுசெய்துள்ளன எனலாம். உதாரணமாக சில எடுத்துக்காட்டுகள்:

**கோப்பி உற்பத்தி இருந்த காலப்பகுதியில் :**

கூனி அடிச்ச மலை
கோப்பிக் கன்னு போட்டமலை
அண்ணனைத் தோத்தமலை
அந்தா தெரியுதடி

கோனக்கோன மலையேறி
கோப்பிப் பழம் பறிக்கையிலே
ஒரு பழம் தப்பிச்சினு
ஒதைச்சானய்யா சின்ன தொரை

**இறப்பர் உற்பத்தி இருந்த காலப்பகுதியில்:**

இறப்பர் மரமானேன்
நாலுபக்கம் வாதுமானேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிக்க விறகுமானேன்
இங்கிலீஸ் காரனுக்கு
ஏறிப் போக காரானேன்.

**தேயிலை உற்பத்தி காலப்பகுதியில்:**

ஓடி நெர புடிச்சி
ஒரு கூட கொழுந்தெடுக்க
பாவி கணக்கப்பிள்ள
பத்து ராத்த போடுரானே.

மேற்குறிப்பிட்ட பாடல்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது மலையக நாட்டார் பாடல்கள் எவ்வாறு உற்பத்திமுறைகளில் ஏற்பட்டுவந்த மாற்றங்களை பதிவுசெய்திருக்கின்றன என்பதை அறியும் அதேவேளை, காலனித்துவவாதிகளின் அடக்குமுறைகள் எவ்வெவ் வகைகளில் வடிவங் கொள்கின்றன என்பதையும் விளங்கிக்கொள்ளமுடிகின்றது. இவ்வாறான பொருளாதார அடிப்படைகளை உள்வாங்கி, நாட்டார்பாடல்களைத் தொகுக்கும் முயற்சிகளை சி. வி. வேலுப்பிள்ளைத் தொடங்கி வைத்தார். அவ்வகையில் அவரது மலைநாட்டு மக்கள் பாடல்கள் (1983) மலையக நாட்டாரியல் புலத்துள் அதிகக் கவனத்துக்குரியது. இத்தொகுப்பு முயற்சியை முன்மாதிரியாகக் கொண்டு, மலையக நாட்டார் பாடல்களை சேகரிப்பதும், தொகுப்பதும், நூலுருவாக்குவதும் காலத்தின் கட்டாயமாகும்.

நாட்டாரியல் தொகுதிக்குள் பல இலக்கிய வடிவங்கள் உள்ளன. நாட்டார் பாடல்கள், நாட்டார் கலைகள், கதைப்பாடல்கள், பழமொழிகள் என்றவகையில் அத்தொகுதி அமைந்துள்ளது. நாட்டார் கலைவடிவங்களுள் நிகழ்த்துக்கலைகள் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. நாட்டுப்புற வாழ்வியலின் உயிர்ப்புத் தன்மையை வெளிப்படுத்தும் கலைவடிவமாகவே நிகழ்த்துக்கலைகளே அமைகின்றன. நாட்டார் இலக்கிய ஆய்வுகளிலும் நிகழ்த்துக்கலைகள் குறித்த ஆய்வுகள் தனித்துவம் மிக்கவை. ஒரு நிகழ்த்துக்கலை எவ்வாறு பிராந்தியத்துக்கு பிராந்தியம் வேறுபட்டிருக்கிறது, வேறுபடுவதற்கான சமூகப் பின்புலம் என்ன என்பது குறித்த ஆய்வுகள் சுவாரசியம் மிக்கவை. மலையகத்தைப் பொறுத்தமட்டில் இந்த நிகழ்த்துக் கலைகள் குறித்த விரிவான ஆய்வுகள் இன்னும் இடம்பெறவில்லை என்றே சொல்லலாம். (நாட்டார் பாடல்கள் குறித்த ஆய்வுகள் ஓரளவு வெளிவந்துள்ளமை மனங்கொள்ளத்தக்கது) இவ்வகையில் மலையகத்தில் நிகழ்த்துக் கலைகள் குறித்து சிந்திப்பது பயனுடையதாகும்.

நாட்டுப்புறவியலில் காணப்படும் கலை வடிவங்களுள் நிகழ்த்துக்கலை வடிவங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. ஒரு கலை நிகழ்த்தப்படும் பொழுதுதான் அர்த்தமும் கலைத்திறன் கொண்டதாக மாறுகின்றது என்பர். நிகழ்த்துக்கலைகளில் சமூகச் சூழ்நிலைகளும் சம்பவங்களும் பார்வையாளர்களின் பங்குகேற்பும் மிக முக்கியமானவை. இக்கலை வடிவங்கள் நாட்டுப்புற மக்களது வாழ்வோடும் சிந்தனையோட்டத்தோடும் பின்னிப்பிணைந்தவை என்றும் சொல்லமுடியும். நாட்டுப்புற இலக்கிய வடிவங்களுள் நிகழ்த்துக்கலைகளே சமய வாழ்வியலிலிருந்து பிரிபடாமல் தொடர்வதையும் அறியலாம். நாட்டுப்புற நிகழ்த்துக்கலைகள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு சில குறிப்பிட்ட இனத்தவர்களால் நிகழ்த்தப்படுபவையாகும். இவை ஒரு காலத்தில் வெவ்வேறு நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டுக் காலப்போக்கில் செழுமைப்படுத்தப்பட்டு நிகழ்த்துக்கலைகள் (Preforming Arts) ஆயின. நிகழ்த்துக்கலை வடிவங்களை சமூகச்சார்புக் கலைகள், சமயச்சார்பு கலைகள் என வகைப்படுத்தி நோக்குவர். இவ்வகைக் கலைகளின் பண்புநிலைகளை அடிப்படையாகக் கொண்டு கதைத் தொடர்புள்ள கலைகள், கதைத்தொடர்பில்லா கலைகள் என்றும் நாட்டாரியல் ஆய்வாளர்கள் வகைப்படுத்தியுள்ளனர்.

மலையக நாட்டாரியல் புலத்துள் நிகழ்த்துக்கலைகள் தனித்துவம் மிக்கன. இக்கலைகளே மலையகத்தின் செழுமைமிக்க கலைகளாகவும் விளங்குகின்றன. மலையக நாட்டாரியல் வளத்தைக் கட்புலக்கலைகளாக (Visual Arts) வெளிப்படுத்தும் வடிவங்களாகவும் நிகழ்த்துக்கலைகள் அமைகின்றன. விவசாய பொருளாதார உற்பத்திமுறைகளுக்குள் பயிலப்பட்ட பல நிகழ்த்துக்கலைகள் அம்மக்களது வாழ்வாதார மாற்றத்துக்கேற்ப உருப்பெற்று வளர்ந்து வருவதையும் காணலாம். அவ்வகையில் மலையகப் பண்பாட்டில் காணப்படும் நிகழ்த்துக்கலை வடிவங்களை அவற்றின் கலைப் பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு மேல்வருமாறு பகுத்து நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இசை வடிவங்களும் நிகழ்த்துக்கலைகளும்
2. ஆட்டமுறைகளும் நிகழ்த்துக்கலையும்
3. கூத்துக்களும் நிகழ்த்துக்கலையும்

இசைக்கருவிகளைப் பயன்படுத்தி அவற்றை நிகழ்கலையாக ஆக்குகின்ற பண்பாடு நாட்டுப்புற மக்களிடம் சிறப்புற்று விளங்குகின்றது. நாட்டார் இலக்கியங்களில் மட்டுமல்லாது செந்நெறிப்பட்ட இலக்கியங்களிலும் இம்மரபு விரிவடைந்து வந்துள்ளதை சங்க இலக்கியங்கள் முதல் அறிந்துகொள்ளலாம். மலையக நாட்டாரியலைப் பொறுத்தவரை, பிரதான இசைக்கருவியாக அமைவது 'தப்பு' எனும் கருவி ஆகும். தமிழர் பண்பாட்டோடு மிக நெருங்கிய இசைக்கருவியாக இது இருந்து வருகின்றது. குறிப்பாக ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு முதல் 'தப்பு' என்ற கருவி விவசாயப் பொருளாதார பண்பாட்டிலேயே செழுமைப்பெற்றிருந்தது. மலையகச் சூழலைப் பொறுத்தமட்டில் இக்கருவி தொழில்கட்டமைப்புக்கேற்ற ஒரு கருவியாக அறிமுகமானது. இக்கருவியின் பிரதான செயற்பாடாகத் தொழிலாளரைத் துயில் எழுப்புதல், பிரட்டுக்களத்துக்குச் செல்ல.. முதலான தொழில் முறையோடு கூடிய வகையிலேயே அறிமுகமானது. அந்தவகையில் தொழில்சார்ந்த செய்திகளை அறிவிக்கும் கருவியாக இது இருந்தது எனலாம். ஒவ்வொரு செய்தியையும் அறிவிப்பதற்கு ஒவ்வொரு ஓசையை எழுப்புவது முக்கிய அம்சமெனலாம்.

இவ்வாறு தொழில் கட்டமைப்போடு அறிமுகமான 'தப்பு' இசைக்கருவி பின்னர் மலையக மக்களின் முக்கிய நிகழ்வுகளுக்கான இசைக்கருவியாகவும் நிகழ்த்துக் கலையாகவும் வடிவம் கொண்டது. மங்கள நிகழ்வுகளிலும் அமங்கள நிகழ்வுகளிலும் பிரதான இசைக்கருவியாகியது. ஒருவர் மட்டும் இசைக்கும் சந்தர்ப்பமும், குழுவாக சேர்ந்து இசைக்கும் சந்தர்ப்பமும் இருந்தது, இருந்துவருகின்றது. குறிப்பாக ஆலயங்களோடு தொடர்புடைய நிகழ்வுகளுக்கான இசைக்கருவியாகவும் உருமாற்றமடைந்தது. உதாரணமாக கோயில் திருவிழாக்கள், பாரம்பரியக் கூத்து நிகழ்வுகள் முதலானவை நிகழும்போது, அவற்றின் நிகழ்ச்சிக்கும், சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவகையில் ஓசையை மாற்றி, மாற்றி ஒலிக்கும் மரபு நிகழும். இவ்விசைக்கருவியோடு உடுக்கு, உறுமி முதலான இசைக்கருவிகள் ஆலய நிகழ்வுகளோடு தொடர்புடையவை. மலையகத்தைப் பொறுத்தமட்டில் 'தப்பு' இசைக்கருவியை இசைப்பவர் குறிப்பிட்ட சாதிய அடையாளத்தோடும் இருந்து வந்ததையும் வருவதையும் அவதானிக்க முடிகின்றது. 'தப்பு இசைக்கருவியும் சாதிய அடுக்கமைவும்' என்றவகையில் இது சார்ந்து ஆய்வுசெய்வது பயனுடையதாக அமையும். இன்றும் ஒருசில பெருந்தோட்டத் துறைகளில் குறிப்பிட்ட சாதியத்தோடு தொடர்புடைய கலைவடிவமாகவும் 'தப்பு' இருந்து வருகின்றது.

நவீனத்துவத்தின் வருகையும் வளர்ச்சியும் 'தப்பு' இசைக்கருவியின் சமூக அடையாளத்தை (Social Identity) இழக்கச்செய்துள்ளது. குறிப்பாக ஆகமநெறிப்பட்ட வழிபாடுகள் பெருந்தோட்டத்துறைக்குள் செல்வாக்குப் பெற்றமையினால் பாரம்பரிய கலைகள் பெற்றிருந்த சமூகப் பெறுமதி குறைந்துவிட்டது எனலாம். ஒரு காலத்தில் எல்லா சமூக நிகழ்வுக்குமான இசைக்கருவியாகப் பயிலப்பட்ட தப்பு இன்று வரையறுக்கப்பட்ட நிகழ்வுக்கான இசைக்கருவியாக மாற்றமடைந்துள்ளமையினை காணலாம். ஆகம நெறிப்பட்ட சமய நடவடிக்கைகளும் அதனோடு இணைந்துக் கொண்ட நாதஸ்வரம், மேளம் முதலான இசைக்கருவிகளும் 'தப்பு' இசைக்கருவியின் சமூக வகிபாகத்தைக் குறைத்துவிட்டது என்றே சொல்லலாம்.

மலையக நாட்டாரியலில் காணப்படும் நிகழ்த்துக்கலைகளுள் 'ஆட்டக்கலைகள்' தனித்து நோக்கத்தக்கவை. குறிப்பாக கோலாட்டம், காவடியாட்டம், கும்மியடித்தல், கரகம் முதலானவை நிகழ்த்துக்கலைப் பண்புகளைப் பெற்றவை. சமயஞ் சார்ந்த நிகழ்வுகளோடு இணைந்த 'ஆட்டக்கலைகளாகவே' இவைகள் விளங்குகின்றன. காவடியாட்டம், கும்மியடித்தல், கரகாட்டம் என்பன கோயில் திருவிழாக்களில் பிரதான நிகழ்த்துக் கலைகளாக அமைகின்றன. குழுநிலையில் நிகழ்த்தப்படும் ஆடல்களாவும் இவைகள் விளங்குகின்றன. காவடியாட்டமும் கும்மியடித்தலும் பக்தியைப் அடிப்படையாகக் கொண்டு அமைய, கரகாட்டம் பார்வையாளர்களை மகிழ்விக்கும் கலைவடிவமாக மாற்றமடைந்துள்ளது. இன்று ஒரு தொழில்முறைக் கலையாகவும் அது மாறியுள்ளது.

மலையக நாட்டாரியலில் காணப்படும் நிகழ்த்துக்கலைகளுள் சமயச்சார்புக் கலையாவும் கதைத்தொடர்புள்ள கலையாகவும் விளங்கும் நிகழ்த்துக்கலைகளாக காமன்கூத்து, பொன்னர் சங்கர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருச்சுணன் தபசு, பவளக்கொடி முதலான கலைகள் விளங்குகின்றன. இக்கலைகளோடு கதைப்பாடல் வடிவங்களையும் சேர்த்துக் கொள்ளமுடியும். ஆயினும், மலையக நாட்டாரியல் பரப்பில் கதைப்பாடல்களின் செல்வாக்கு என்பது குறைந்து வருவதையும் அவதானிக்கலாம்.

மகாபாரத கதைமரபுகளை அடிப்படையாகக் கொண்டு உருவான நிகழ்த்துக்கலைகளாக அருச்சுணன் தபசு, பவளக்கொடி முதலானவை அமைகின்றன. மகாபாரதக் கதைமரபுகள் மலையகச் சமூகப் பண்பாட்டில் எவ்வாறான முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தன என்பதற்கு மிகச் சிறந்த பதிவுகளாகவே இவைகள் விளங்குகின்றன. அருச்சுணன் தபசு, பவளக்கொடி முதலான கலைமரபுகள் ஒரு காலத்தில் மிகுந்த செல்வாக்குடன் காணப்பட்டன. எனினும் மாறிவரும் சமூகப் பண்பாட்டுச் சூழல் இக்கலைகளின் இருப்பை கேள்விக்குறியாக்கியுள்ளது. இக்கலைகளின் நிகழ்த்துமுறைகளில் உள்ள சிரமங்களும் இக்கலைகளின் சமூகப் பெறுமதியை இல்லாமலாக்கியுள்ளது எனலாம். குறிப்பாக அருச்சுணன் தபசு, பவளக்கொடி முதலான சமயமரபும், கதைமரபும் சார்ந்த படைப்புக்களின் நிகழ்த்துகை கால அளவு நீண்டது. விடிய விடிய நிகழ்த்தப்பட வேண்டிய கலைகளாகவும் இவைகள் இருக்கின்றன. இக்கலைகளின் இத்தன்மைகளே அவற்றின் பயன்பாட்டையும் இல்லாமலாக்கியுள்ளது. இவ்வகை நிகழ்த்துக்கலை வடிவங்களை குறிப்பிட்ட ஒரு சில மணித்தியாளங்களுக்குள் கொண்டு வந்து அவற்றை காலமாற்றத்துக்கேற்ப மீட்டெடுப்பது அவசியமாகும்.

மலையக நாட்டாரியலில் இடம்பெறும் நிகழ்த்துக்கலைகளுள் காமன்கூத்தும், பொன்னர் சங்கர் கூத்தும் இன்றும் உயிர்ப்போடு இருந்துவருகின்றன. மலையகத்துக்கேவுரிய கூத்துமரபின் அறுபடாத நிலையினை வெளிப்படுத்தும் கலைகளாவும் இவை விளங்குகின்றன. இக்கலைகள் கலைமரபும் பக்திமரபும் ஒன்றாக இணையும் நிகழ்த்துக்கலைகளாகும். இக்கூத்துக்கள் இடம்பெறும் களம் மிக முக்கியமானது. ஒரு சில இடங்களில் கோயிலை மையப்படுத்தியதாவும், வேறு சில இடங்களில் ஊரின் பிரதான பகுதியை மையப்படுத்தியதாகவும் இருந்து வருகின்றது. காமன் கூத்து, பொன்னர் சங்கர் ஆகிய இரு கூத்து வடிவங்களும் சடங்கியல் முறைமைக்குள் இருந்து இன்னும் வெளிவரவில்லை.

நிகழ்த்துக்கலைகளின் சமூகப் பயன்பாடு என்பது அக்கலை சமூகப் பண்பாட்டு மாற்றத்துக்கேற்ப தன்னை உருமாற்றிக் கொள்வதிலேயே தங்கியுள்ளது. சமூக மாற்றத்துக்கேற்ப பாரம்பரியக் கலைமரபுகள் வடிவமாறுதல் பெறும்பொழுதுதான் அக்கலைமரபு தலைமுறைகளைக் கடந்துவாழும் கலையாக பரிணமிக்கும். மலையக நாட்டாரியலில் இடம்பெறும் பெரும்பாலான கலைகள் இந்த கால மாற்றத்தை அனுசரித்ததாகத் தெரியவில்லை. பாரம்பரிய அளிக்கைமுறைகளிலிருந்து விடுபடாத நிலையைக் கொண்டவைகளாகவே காணப்படுகின்றன. நிகழ்த்துக்கலைகளின் இந்த அளிக்கைமுறை இடைவெளியே சமூகப் பங்குபற்றுதலையும் சடங்கிலிருந்து அது கலையாக உருமாறும் நிலையினையும் குறைத்துவிடுகின்றது எனலாம்.

நிகழ்த்துக்கலைகளை ஆவணமாக்க முனையும்போதும், ஆய்வுசெய்ய முனையும் போதும் மிகுந்த சமூகப் பொறுப்புணர்வோடு செயற்படுவது அவசியமாகும். ஒரு சமூகக் குழுமத்தினது அடையாளமாக விளங்கும் நிகழ்த்துக்கலையை அதன் நிகழ்த்தியல் அடிப்படைகளோடு பதிவுசெய்வது இன்றியமையாதது. மலையகத்தைப் பொறுத்தமட்டில் நிகழ்த்தியல் நுட்பங்களைக் கவனத்திற் கொண்டு கலைகளை ஆவணமாக்குகின்ற தன்மை மிகக் குறைவு என்றே சொல்லலாம். ஒரு சில முயற்சிகள் இடம்பெற்றிருந்தாலும் அவை முழுமை அடையவில்லை. பெரும்பாலான நிகழ்த்துக்கலைகள் கதைமரபினையும், பக்திப் பின்புலத்தையும் அடிப்படையாகக் கொண்டவை. ஒரே கதைமரபு பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபடும் இயல்பு கொண்டதாகவும் விளங்குகின்றது. நாட்டுப்புற நிகழ்த்துக்கலைகளின் பொது இயல்பாகவே இதனைக் கருதலாம். ஒரே கலைமரபு பிராந்தியத்துக்கு பிராந்தியம் வேறுபடுவதற்கான காரணம் என்ன, எவ்வெவ் அம்சங்களில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன, மூல கதைமரபின் அடிப்படை என்ன முதலான அம்சங்களை ஆய்வியல் நோக்கில் பார்க்கவேண்டும். இவ்வம்சங்களோடு நிகழ்த்துக்கலைகளின் கலை நியதியை மனத்திற் கொண்டு மலையக நாட்டாரியலின் நிகழ்த்துக்கலைகளை ஆராயும்போதே அது புதிய புதிய திசைவெளிகளையும், பரந்த அளவிலான சமூகப் பயன்பாட்டினையும் தோற்றுவிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழிய என் மொழியே

கோ. கணபதிப்பிள்ளை, ஆசிரியர், சிவானந்தா த.ம.வி, கண்டி.

அகத்தியன் மொழிந்த அற்புதமே
வள்ளுவன் கண்ட வான் மறையே
பவணந்தி பாடிய பைந்தமிழே
ஔவை திருவாய் மலர்ந்த ஔடதமே.....

கபிலன் கண்ட கலங்கரையே...
பரணன் கோர்த்த பாமாலையே...
நக்கீரன் நா கலந்த நற்றமிழே
சீத்தலை செய்த செந்தமிழே...
இளங்கோ யாத்த இன் கவியே...
ஐம்பெருங்காப்பியமே அருள்மொழியே...
காரைக்காலம்மையின் கற்பனையே...
ஆழ்வார்கள் போற்றிய அன்னையே...
ஆண்டாள் மொழிந்த அருள் வாக்கே...

ஓராயிரம் புலவோர் போற்றிய
ஒப்பற்ற செல்வமே
கம்பன் கண்ட காவியமே மொழியே

உயிரும் மெய்யும் உயிர்மெய்யும்
ஆய்தமும் அத்தனையும்
வல்லினமும் மெல்லினமும் இடையினமும்
எம்மொழிக்கும் இணையாகா இலக்கணமே...

சான்றோர் வரைந்த பேரோவியமே
சால்பு நிறை காவியமே...

காலச் சூழலில் கரையான்கள் தின்றபோது
அந்நிய மொழிகளுனை அறித்து நின்றபோது
செந்நெருப்பாய் தணலாய் சீரியெழுந்தான்
பாரதி எனும் பார்போற்றும் மாகவி.....
தமிழே என் மொழியே இனி நீ அவன் வழி.....
வாழிய நீடுழி வாழிய நீடுழி......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தின் முதல் சிறுகதைத் தொகுப்பு: கதைக் கனிகள்

எம்.எம். ஜெயசீலன், விரிவுரையாளர்,

தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

இலங்கைத் தமிழ்ச் சிறுகதைப் பரப்பில் பிராந்திய வாழ்வியலை கதையாக்கலில் மலையகத் தமிழ்ச் சிறுகதைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. இலங்கையில் தமிழ்ச் சிறுகதை பிரக்ஞைபூர்வமாகத் தோற்றம்பெற்ற 1930களிலேயே மலையகத் தமிழ்ச் சிறுகதையும் தோற்றம் பெற்றதாகக் குறிப்பிடப்படுகின்றது. குறிப்பாக, 1931ஆம் ஆண்டு வெளிவந்த கோ. நடேசையரின் 'இராமசாமி சேர்வையின் சரிதம்' மலையகத்தின் முதல் சிறுகதையாகக் கருதப்படுகின்றது. ஆனால், அக்கதையில் சிறுகதைக்குரிய வடிவச்செம்மை முழுமையற்றிருப்பதோடு கோ.நடேசையரும் அதனைச் சிறுகதை என்ற பிரக்ஞையுடன் எழுதியதாகத் தெரியவில்லை. தமிழ் நாட்டு வாலிபர்களைத் தட்டி எழுப்பும் நோக்கில் நடேசையர் எழுதிய 'நீ மயங்குவதேன்' என்ற நூலின் இறுதியாக 'இராமசாமி சேர்வையின் சரிதம்' இடம் பெற்றுள்ளது. இளைஞர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதை நோக்காகக் கொண்டு பத்துக் கட்டளைகளைப் பத்து அத்தியாயங்களில் விவரித்த நடேசையர், இறுதியாக அக்கட்டளைகளைக் கடைப்பிடிக்கும் இளைஞன் எவ்வாறு வாழ்வில் வெற்றி பெறுவான் என்பதற்கு உதாரணமாக இராமசாமி சேர்வையின் சரிதத்தைக் கூறியுள்ளார். நூலில் உள்ள பத்து அத்தியாயங்களும் கதை வடிவிலான கட்டுரைகளாக அமைந்துள்ளதோடு சொற்பொழிவாற்றுதல் அல்லது உரையாற்றுதல் பாணியில் அமைந்துள்ளன. இறுதியாக இடம்பெறும் இராமசாமி சேர்வையின் சரிதத்திலும் அச்சொற்பொழிவு தன்மையே மிகுந்துள்ளது. அத்துடன் வாய்மொழிக் கதைசொல்லல் போல அக்கதையில் சம்பவங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. எனினும் பாரம்பரிய கதை சொல்லல் மரபிலிருந்து வேறுபட்ட சில வளர்நிலைகளையும் அக்கதையில் கண்டுகொள்ளமுடிகின்றது. அதனால் இராமசாமி சேர்வையின் சரிதத்தை பாரம்பரியக் கதையாகவோ நவீன சிறுகதையாகவோ கொள்ளமுடியாதுள்ளது. அக்கதையை நவீன சிறுகதைகளுக்கும் மரபுரீதியான கதைகளுக்கும் இடைப்பட்ட வடிவமாகக் கொள்ளலாம். அவ் இடைமாறுகட்ட வடிவத்தின் வளர்ச்சியே சிறுகதையாக பரிமாணம் பெற்றுள்ளது.

மலையகத் தமிழ் இலக்கியப் பரப்பில் 1960களிலேயே சிறுகதை தனித்த கவனத்தைப் பெற்றதோடு தமிழ் இலக்கியப் பரப்பிலும் கனதியான தாக்கத்தினைச் செலுத்தத்தொடங்கியது. அத்துடன் 1930க்கும் 1960க்கும் இடைப்பட்ட காலத்தில் மலையகத்திலிருந்து சில கதைகளே வெளிவந்துள்ளதோடு அவற்றில் மலையகத்தின் சமூக வாழ்வியல் மேலோங்கியதாகவும் இல்லை. 1960கள் முதலே மலையகம் என்ற அடையாளம் வலுப்பெற்றதோடு அவ் அடையாளத்தை நிலைநிறுத்தும் இயக்கநிலைப்பட்ட செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. அம்முன்னெடுப்புக்களில் பிரதானமானதாக இலக்கியச் செயற்பாடுகள் அமைந்தன. அதனால் மலையகத் தமிழ் இலக்கியம் என்ற தனித்த அடையாளம் அதிக முனைப்புப் பெற்றன. இம்முனைப்பில் வலுவான இலக்கிய வடிவமாக சிறுகதை விளங்கியதோடு இற்றைவரை மலையக இலக்கியப் பரப்பில் செழுமையானதாகவும் தொடர்ச்சியாக வெளிவரும் இலக்கிய வடிவமாகவும் சிறுகதையே விளங்கிவருகின்றது.

மலையகத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் சிறுகதைப் போட்டிகளுக்கு மிகமுக்கிய பங்குண்டு. பல்வேறு அமைப்பினராலும் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டிகளே மலையகத்தில் இலக்கியம் பற்றிய உரையாடலை பரவலாக்கியதோடு இலக்கியம் படைக்கும் உந்துதலையும் தூண்டின. அதனால் புதிய எழுத்தாளர்கள் பலர் உருவாக்கம் பெற்றதோடு மலையகத் தமிழ் இலக்கியமும் புதிய தளத்தினில் பயணிக்கத் தொடங்கியது. அத்தகைய சிறுகதைப் போட்டி முறையை மலையக எழுத்தாளர்களுக்கெனத் தொடக்கி வைத்த பெருமை வீரகேசரியையே சாரும். மலையக எழுத்தாளர்களுக்கெனச் சிறுகதைப் போட்டியை முதற்தடவையாக வீரகேசரியே தொடக்கி வைத்தது. அத்துடன் வீரகேசரி தனது தினப் பதிப்பிலும் வாரப்பதிப்பிலும் தனியான பக்கங்களை மலையக இலக்கியத்துக்கென ஒதுக்கியது. இச்செயற்பாடுகள் மலையக இலக்கியத்தின் வளர்ச்சிக்கு தேவையான அடித்தளங்களை இடத்தொடங்கின. வீரகேசரியின் கவனம் மலையக இலக்கியத்தின் பக்கம் திரும்பியதற்கான காரணத்தையும் மலையக இலக்கிய விருத்திக்காக அப்பத்திரிகை முன்னெடுத்த செயற்பாடுகளையும் அக்காலத்தில் பத்திரிகை ஆசிரியராக இருந்த கார்மேகம் பின்வருமாறு கூறியுள்ளார்:
“1960ஆம் ஆண்டளவில் ஈழத்து எழுத்துலகில் ஏற்பட்டதொரு விழிப்பு மலையகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறவில்லை. இத்தாக்கத்தால் உணர்வு பெற்று எழுதத்துடித்த இளம் மலையகத்தினரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிப் பிரவாகத்துக்கு வடிகால் அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று வீரகேசரி உணர்ந்தது. எழுத்தார்வமிக்க இளைய மலையகத் தலைமுறையினருக்கென வீரகேசரி தினப் பதிப்பிலும் வாரப் பதிப்பிலும் தனிப் பக்கங்கள் ஒதுக்கிக் கொடுத்தது. 'தோட்ட வட்டாரமாக' ஆரம்பித்து 'தோட்ட மஞ்சரியாகி' இன்று 'குறிஞ்சிக்குரல்' என்ற பெயருடன் நடத்தப்பட்டுவரும் இத்தனிப்பக்க முயற்சி மலையக இலக்கிய வளர்ச்சிக்கு நல்ல விளைநிலமாக அமைந்தது. இம்முயற்சியின் அறுவடையில் விளைந்த நல்முத்தே 'கதைக் கனிகள்' என்ற இச்சிறுகதைத் தொகுதியாகும். தனிப்பக்கத்தை மட்டும் ஒதுக்கிவிட்டால் போதும் என்பதோடு நாம் நின்றுவிடவில்லை. போட்டிகள் மூலம் நல்ல ஆரோக்கியமான மலையக எழுத்துலகை சிருஷ்டிக்க விரும்பினோம்."

மலையகம் விழிப்புடன் மேலெழுந்தபோது அதற்கான வடிகாலை வீரகேசரி பல்வேறு தளங்களிலும் வழங்கியுள்ளது என்பதை இக்கூற்றுக்கள் உறுதிசெய்கின்றன. அத்துடன் மலையக இலக்கியச் செல்நெறியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைச் செலுத்திய மலைநாட்டு எழுத்தாளர் மன்ற உதயத்திலும் வீரகேசரிக்கு நெருங்கிய பங்குண்டு. வீரகேசரி மலையக எழுத்தாளர்களுக்காக நடாத்திய முதலாவது சிறுகதைப் போட்டியின் பரிசளிப்பு விழாவின்போதே மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்துக்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது. அத்துடன் வீரகேசரி அதன் பின்னர் நடாத்திய மலையக எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டிகளை மலையக எழுத்தாளர் மன்றத்துடன் இணைந்தே நடாத்தியதாகக் குறிப்பிடப்படுகின்றது. குறிப்பாக, வீரகேசரியின் தோட்ட மஞ்சரிக்கு பொறுப்பாக இருந்த கார்மேகமே மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் பொதுச்செயலாளராக இருந்தமையால் இரண்டையும் இணைத்து அப்போட்டிகளை நடாத்த முடிந்தது எனலாம். ஆனால், பரிசு பெற்ற கதைகளைத் தொகுத்து வெளியிட்டபோது நூலின் பதிப்புரை உள்ளிட்ட எக்குறிப்பிலும் மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்துடன் இணைந்து சிறுதைப் போட்டிகளை நடாத்திய பதிவு இடம்பெற்றில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மலையகத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் தனிநபர்களின் தொகுப்புக்கள் பலவும் கூட்டுத்தொகுப்புக்கள் பலவும் வெளிவந்துள்ளன. இவையாவற்றுக்கும் முன்னோடியாக மலையக எழுத்தாளர்களுக்காக வீரகேசரியால் நடாத்தப்பட்ட நான்கு சிறுகதைப் போட்டிகளின் தொகுப்பாக வெளிவந்த 'கதைக் கனிகள்' என்ற தொகுப்பே அமைகின்றது. பிந்திய காலத்தே மலையகத்தின் முக்கிய படைப்பாளர்களாக மேற்கிளம்பிய பலரும் இப்போட்டிகள் மூலமும் இத்தொகுப்பு மூலமும் உருவானவர்களே என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, தெளிவத்தை ஜோசப், சாரல்நாடன், மலரன்பன், பன்னீர்செல்வம், மு.சிவலிங்கம், மாத்தளை வடிவேலன், பரிபூரணன், மல்லிகை சி. குமார், அல். அஸ்மத், கே. கோவிந்தராஜ் போன்ற மலையகத்தின் முன்னணி படைப்பாளர்கள் பலர் இச்சிறுகதைப் போட்டிகள் மூலமே மேற்கிளம்பி இருக்கின்றனர்.

கதைக் கனிகள் தொகுதியில் எல்லாமாக பதினொரு கதைகள் இடம்பெற்றுள்ளன. வீரகேசரி பத்திரிகை தொடந்து நடத்திய நான்கு சிறுகதைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. அதில் குன்றவனின் சுமை என்ற கதை மட்டும் இடம்பெறவில்லை. 'உரிய காலத்தில் கிடைக்கப்பெறாததால் அக்கதையை இணைத்துக் கொள்ள முடியாமல் போனது' என்ற குறிப்பை தொகுப்பாசியர் தந்துள்ளார். என்றாலும் பிந்திய காலத்தே அந்நூல் இரண்டாம் பதிப்பு பெற்ற போதும் அக்கதை இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்தொகுப்பில் தெளிவத்தை ஜோசப், மு.க.நல்லையா, தங்க - பிரகாஸ், எம்.வாமதேவன், மு.சிவலிங்கம், பரிபூரணன், சி.பன்னீர்செல்வம், அ.சலமன்ராஜ், மாத்தளை பெ. வடிவேலன் ஆகியோரின் கதைகள் இடம்பெற்றுள்ளன. 'பொழுது போக்குக்காக எழுதப்பட்ட கதைகள் அல்ல இவை. தமது சமுதாயப் பிரச்சினைகளைச் சமுதாயப்பற்றுடன் யதார்த்த நோக்கோடு பிரக்ஞைபூர்வமாகக் கண்டு உணர்ச்சிக் குமுறலாக வெடித்து இக்கதாசிரியர்கள் கதை வடிவில் தந்துள்ள கனிகள் தான் இவை' (கார்மேகம் (தொ.ஆ) 1991: 8) என்ற கார்மேகத்தின் குறிப்பு அக்கதைகளின் சாரத்தை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. இக்கதைகள் யாவும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வினை உயிர்ப்போடு பதிவு செய்வதாக அமைந்துள்ளதைக் காணலாம். குறிப்பாக, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வாழ்வியல், பெருந்தோட்ட நிர்வாக அமைப்பு மற்றும் செயற்பாடுகள், நிர்வாகக் கெடுபிடிகள், அதிகாரிகளின் சுரண்டல், ஆதிக்கம், மலையகத் தமிழரின் பொருளாதார பிரச்சினைகள், கல்விப் பிரச்சினைகள், சமூகச் சீர்கேடுகள், சமூகத்தில் நிலவும் அறியாமைகள், தொழிலாளர்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினைகள், தொழிலாளர்களின் எழுச்சி என்பவற்றோடு அச்சமூகத்தின் மேல்நோக்கிய எழுச்சியையும் இக்கதைகளில் கண்டுகொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயம், பிரசவக்காசு ஆகிய கதைகள் மலையகத் தமிழரின் அறியாமையையும் சமூகச் சீர்கேடுகளையும் அப்பட்டமாகப் பதிவு செய்துள்ளன. காயம் என்ற கதை நோய்வாய்ப்பட்டுள்ள பெண்ணை பேய் பிடித்துள்ளது எனப் பூசாரி பேயோட்ட முயற்சிப்பதையும் பூசாரியின் சாட்டை அடியாலே அப்பெண் இறந்து போகின்ற அவலத்தையும் பதிவுசெய்துள்ளது. பிரசவக்காசு என்ற கதையில் பிரசவத்துக்கு சகாயமாக கொடுக்கும் எழுபது ரூபாய்க்காக தனது மனைவியை தொடர்ந்து கர்ப்பவதியாக்கும் கணவனைக் காட்டுகின்றது. இவ் அறியாமை அவலத்தை அம்பலப்படுத்தியுள்ளதோடு அவற்றுக்கு எதிரான சிந்தனை கொண்டவர்களையும் ஆசிரியர்கள் கதைகளில் பதிவு செய்துள்ளனர். உதாரணமாக, காயம் என்ற கதையில் வரும் ஓர் இளைஞனின் 'அக்கா! காயம் உங்க உடம்பில மட்டுமல்ல. எங்க சமுதாயத்திலே கூடத்தான் இருக்கு. உடல் காயத்தால், உள்ளக் காயத்தால் நீங்க ஒரேயடியாகச் செத்துடீங்க! இந்த மூடச் சமுதாயம் அணு அணுவாய் சாகிறது.' (மேலது: 47) என்ற கூற்று சமுதாய அறியாமையை அகற்றும் புதிய அறிவார்ந்த தலைமுறையினரின் வெளிப்பாடாகும்.

மலையகத்தில் நிலவும் கல்வி நிலையின் சீர்கேட்டையும் அதனால் அச்சமூகமே மொத்தமாகப் பின்தங்குவதையும் கால ஓட்டம், பிஞ்சு உலகம் போன்ற கதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. தோட்டப்புற பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களில் சிலர் பிற்போக்கு வாதிகளாகவும் பொறுப்பற்றவர்களாகவும் சுயநலவாதிகளாகவும் இருப்பதை அக்கதைகளில் கண்டுகொள்ள முடிகின்றது. பிஞ்சு உலகம் என்ற கதையில் வரும் ஆசிரியர், தானும் தனது மகளும் தொடர்ந்து அப்பள்ளிக்கூடத்திலேயே கடமையாற்றுவதற்காகவும் தனது மருமகனை எதிர்காலத்தில் அப்பள்ளிக்கே ஆசிரியராக்குவதற்காகவும் மேற்கொள்ளும் செயற்பாடுகள் ஆசிரியர் தொழில், சேவை மனப்பாங்கு என்ற பெயரில் மலையகத்தில் ஆசிரியர்கள் செய்த பிற்போக்கு செயற்பாடுகளையும் அநியாயங்களையும் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. கால ஓட்டம் என்ற கதையில் வரும் பின்வரும் குறிப்புக்கள் ஆசிரியர்களின் மனப்பாங்கை நன்கு வெளிப்புடுத்துகின்றது.

"சுந்தரமூர்த்தி வாத்தியார் வாரத்துக்கு இரண்டு முறை ஐந்தாம் வகுப்பில் படிக்கும் பெரிய பிள்ளைகளைப் பார்த்து விறகு கொண்டுவரும்படி கூறுவார். மற்ற வகுப்பு மாணவர்கள் அந்த நேரத்தில் பள்ளிகூடத்தைச் சுற்றியிருக்கும் அவரது தோட்டத்திலே 'தோட்ட வேலை' செய்வார்கள்" (மேலது: 32)

ஆசிரியர்களின் இத்தகைய பொறுப்பற்ற சுயலாபப் போக்கினால் மலையகத்தில் கல்வி பெரும் வீழ்ச்சியை சந்தித்தது. என்றாலும் பலர் அந்தச் சவால்களையும் எதிர்கொண்டு கல்வியில் முன்னேறி மேற்படிப்புக்காக நகரங்களை நோக்கி நகர்ந்ததோடு அரச உத்தியோகங்களையும் பெறத்தொடங்கினர். இத்தொகுப்பில் உள்ள கதைகளில் காயம் என்ற கதையில் தொழிலாளியின் மகன் பட்டணத்துக்குச் சென்று மேற்படிப்பு படிக்கின்றான். கால ஓட்டம் என்ற கதையில் வரும் கண்டக்டரின் மகள் பல்கலைக்கழகக் கல்வி பெற்று உயர் தொழில் புரிகின்றாள். பிஞ்சு உலகம் என்ற கதையில் தோட்டத்தில் கல்வி கற்ற சிலர் ஆசிரியத் தொழிலை எதிர்பார்த்திருக்கிறார்கள் என்று கலக்கமடைகின்றார் யாழ்ப்பாணத்து வாத்தியார். இவையாவும் மலையகத்தில் ஏற்பட்டுவரும் கல்வி விருத்தியின் வெளிப்பாடுகளாகும்.

1960 களில் மலையகத் தமிழர்கள் எதிர்கொண்ட வாழ்வியல் போராட்டங்கள் பல இக்கதைகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வு உபகாரச் சம்பளம், பென்சன் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளத் தொழிலாளர்கள் எதிர்கொண்ட அவலங்களும் பலர் அவ் ஓய்வூதியத்தைப் பெறாமலே இறந்துபோன சோகத்தையும் அக்கதைகளில் கண்டுகொள்ள முடிகின்றது. குறிப்பாக, மு.சிவலிங்கத்தின் 'இதுவும் ஒரு கதை', தெளிவத்தை ஜோசப்பின் 'பழம் விழுந்தது' போன்ற கதைகள் அவ்வகையில் குறிப்பிடத்தக்கன. பெருந்தோட்டத்துறை சமூக வரலாற்றில் கங்காணி, கணக்கப்பிள்ளை, துரைமார்கள் போன்ற அதிகார வர்க்கத்தினரின் அடக்குமுறையும் சுரண்டலும் மிகுந்திருந்துள்ளன. அவை பற்றிய பல பதிவுகளையும் இக்கதைகளில் காணமுடிகின்றது. பெரியகுறியானை சலமன்ராஜின் 'சம்பள நாள்', பரிபூரணனின் 'ரேம் ஆறு அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது' ஆகிய கதைகளில் தோட்ட நிர்வாக அதிகாரிகளின் அராஜகமும் ஆதிக்கமும் சுரண்டலும் சிறப்பாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

மலையகத் தமிழர்கள் தமது சமூக மேம்பாட்டுக்காக ஒன்றிணைந்து போராட முன்வந்துள்ளதோடு மலையகத் தமிழர் மத்தியில் புது எழுச்சியும் ஏற்பட்டுவருகின்றது என்ற பதிவும் இத்தொகுப்பில் உள்ள சில கதைகளில் உண்டு. 1960களில் உதயமாகிய புதிய மலையகத்தின் வெளிப்பாடாக இவற்றைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளலாம். உதாரணமாக, கால ஓட்டம் என்ற கதையில் வரும் தொழிலாளி துரைசாமியின் போராட்டக் குணம், தமது வேலை நிறுத்தத்துக்கு உடன்படாது வேலைக்குச் சென்ற தனது சித்தப்பா மகனையே கொல்லும் அளவுக்கு மிகுந்துள்ளதைக் காணலாம்.

மலையகத் தமிழர்களின் வாழ்வில் ஏற்பட்டுவரும் பல மாற்றங்களைக் கதாசிரியர்கள் போகிற போக்கில் சுட்டிக்காட்டத் தவறவில்லை. உதாரணத்துக்கு கால ஓட்டம் என்ற கதையிலே கால ஓட்டத்தில் தோட்டத் தொழிலாளரின் வாழ்வில் ஏற்பட்ட பல மாற்றங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் அவர்களின் வீடமைப்பில் ஏற்பட்டுவரும் மாற்றம் சுட்டிக்காட்ட வேண்டியதாகும். எடுத்துக்காட்டாக,

'முன்பு நாங்கள் பிள்ளையார் பந்து விளையாடிய பொட்டலில் புதிய லயன்கள் பல கட்டியிருக்கிறார்கள். பார்க்க நன்றாய்த்தானிருக்கின்றன. முன்பு மாதிரி குனிந்து சென்றால் இடிக்கும் மாட்டுப்பட்டிக் கதவு மாதிரி இல்லாமல் புதிய முறையில் சமயலறை எல்லாம் வைத்து கட்டியிருக்கிறார்கள்' (மேலது: 36) என்ற பதிவு தொழிலாளர்களின் வீடமைப்பில் ஏற்பட்ட ஒரு மாற்றத்தினை பதிவு செய்துள்ளது. இவ்வாறு மலையகத் தமிழரின் சமூக அசைவில் ஏற்பட்ட பல முக்கிய புள்ளிகளை இக்கதைகளில் கண்டுகொள்ள முடிகின்றது. அதனாலேயே "எத்தனை தலைமுறைகளானாலும் சரி, தோட்டத் தொழிலாளியின் மகன் தோட்டத் தொழிலாளியாகத்தான் இருக்க வேண்டுமென்ற ஒரு நியதியை ஏற்படுத்தினார்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள். இந்த நியதியைக் காப்பாற்ற வேகமாக மாற்றமடையும் வெளியுலகுடன் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தொடர்பில்லாமலிருக்க என்னவெல்லாமோ செய்தார்கள்.

அதேசமயம் தோட்டங்களில் அடைந்து கிடக்கும் குழந்தைகள் பயிர்களுக்கு சேதம் விளைவியாமல் தடுக்க, ஆடு, மாடுகளை அடைத்து வைக்கும் பட்டிகளைப்போல பள்ளிக்கூடங்களென்று பெயரிட்ட பட்டிகளில் அந்தக் குழந்தைகளை அடைத்து வைத்தார்கள் என்று இந்த நூலின் நுழைவாயிலில் வீரகேசரியின் பிரதம ஆசிரியர் கூறுவது போன்றிருந்த நிலைமை இன்று மாறிவருகின்றது என்பதற்கு இந்தச் சிறுகதைத் தொகுதி சரியான சான்றாக விளங்குகின்றன" என்று கூறியுள்ளார் இரா. தண்டாயுதம் (தண்டாயுதம், 1976, தற்காலத் தமிழ் இலக்கியம், 144,145). ஆகவே, கதைக் கனிகள் தொகுப்பிலுள்ள கதைகள் மாறிவந்த புதிய மலையகத்தின் முக்கிய போக்குகள் சிலவற்றின் பதிவாக அமைந்துள்ளதைக் காணலாம்.

மலையகம் என்ற அடையாளம் வலுப்பெற்றபோது அவ் அடையாளத்தை நிலைநிறுத்தவும் மலையகச் சமூகத்தை மேல்நோக்கி நகர்த்தவும் மலையகத்திலிருந்து மேற்கிளம்பிய புதிய தலைமுறையினர் பல்வேறு தளங்களிலும் செயற்படத்தொடங்கினர். பல்வேறு அமைப்புக்கள் மலையகத்தில் உருவாக்கம் பெற்றன. அவ் அமைப்புக்களும் தனிநபர்களும் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் வெளியிடத்தொடங்கினர். அத்துடன் தேசிய ரீதியில் இயங்கிய பல அமைப்புக்களும் பத்திரிகைகளும் மலையக சமூகத்தின் எழுச்சிக்கான செயற்பாடுகளை முன்னெடுக்கத்தொடங்கின. அத்தகைய செயற்பாடுகளுள் பிரதானமானதாக வீரகேசரியின் மலையக எழுத்தாளர்களுக்கான தனித்த சிறுகதைப் போட்டிகளும் மலையகத்துக்காக தமது வாரப் பதிப்பிலும் தினப் பதிப்பிலும் தனிப்பக்கங்கள் ஒதுக்கியதும் அமைந்தன. மலையகத்தைச் சேர்ந்த பலரும் அவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி எழுதத்தொடங்கினர்.

அதனால் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல், வாழ்க்கைப் போராட்டங்கள் நாடளாவிய ரீதியில் அதிர்வுகளை ஏற்படுத்தியதோடு மாறிவரும் மலையகத்தின் போக்குகள் பற்றிய பரந்தளவிலான உரையாடல்களையும் தோற்றுவித்தது. அத்துடன் மலையக இலக்கியச் செல்நெறி புதிய தளத்தினை நோக்கி நகரத்தொடங்கியது. அந்நகர்வில் வீரகேசரி நடாத்திய சிறுகதைப் போட்டிகளும் அப்போட்டிகளில் வெற்றிப்பெற்ற சிறுகதைகளின் தொகுப்பாக வெளிவந்த 'கதைக் கனிகள்' என்ற தொகுப்பும் முக்கிய அடையாளங்களாக அமைந்தன. குறிப்பாக, மலையகத்திலிருந்து புதிய எழுத்தாளர் பரம்பரையொன்று மேற்கிளம்புவதற்கும், மலையகத் தமிழ்ச் சிறுகதை செழுமையான போக்கில் விருத்தியடைவதற்கும் கதைக் கனிகள் தொகுப்பு பிரதான அடித்தளமாக அமைந்தது எனலாம். அத்துடன் 1960களில் மலையகத் தமிழரின் வாழ்வியலையும் அச்சமூகத்தில் ஏற்பட்டுவரும் மேல்நோக்கிய எழுச்சிக்கான எத்தனிப்புக்களையும் அத்தொகுப்பின் மூலம் கண்டுகொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்புற இலக்கியமும் அதன் செழுமையும்

A.துருஷா, கம்/கதிரேசன் இ.ம.க

உலக ஜந்துக்களிடையே புதுமைக் கண்டு செழுமைப் பெற்றிருப்பதென்றால் அது மானுடமேயெனலாம். நாம் எடுத்த இப்பிறவியை இரசிக்கச் செய்ய இலக்கியங்களை ருசிக்கும் போதுதான் எம் பிறப்பு இனிமை தருகின்றதென்றால் அது மிகையாகாது. அந்த வகையிலே இலக்கியங்கள் என நோக்குகின்ற போது எம்மவர்க்கு சிந்தையில் உதிப்பது ஏட்டிலக்கியங்களே! ஆனால் இவ்வேட்டிலக்கியங்கள் தோற்றம் பெற முன்னரே எம்மக்கள் இலக்கியச்சுவையை புசித்திருக்கின்றனர் என்பது மறுக்க முடியாத கருத்தாகும். "மறுக்க முடியாத கருத்து" என நான் கூறியமைக்கு காரணம், இன்று அதற்கு சான்று பகர்க்கின்ற நாட்டிலக்கியங்களாகும். இவ்வாறு நோக்குகின்ற போது, நாட்டுப்புற இலக்கியங்கள் என்றால் என்ன என்பது பற்றியும் அது மானுடப் பிறவியோடு எவ்வாறு ஒன்றி செழுமை பெற்றிருந்தது? என்பது பற்றியும் சற்றே விரிவாக நோக்குவோம்.

நாட்டுப்புற இலக்கியமானது, "நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் அம்சங்களைப் பிரதி பலிக்கின்ற ஒரு கண்ணாடி" எனக் கூறுவது சாலவும் பொருந்தும். நாட்டார் இலக்கியமானது நாட்டார் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், கூத்துக்கள், கதைப்பாடல்கள் எனப்படுகின்ற பல்வேறு வடிவங்களை தன்னிடையே கொண்டிருக்கின்றது எனலாம். இவை அனைத்தும் ஏட்டிலக்கியங்கள் தோற்றம் பெற முன்னர் எழுத்துக்கு வராத, சாதாரண மக்களால் தோற்றம் பெற்றதெனலாம். "வரலாற்றின் தந்தை ஹெரடோடர்ஸ்" என்கின்றோம். அது போல நாட்டார் இலக்கியத்துக்கு இன்னார் தான் தந்தை என்றோ தாய் என்றோ கூறமுடியுமோ?" இங்கே, "இல்லாத உறவுக்கு என்னென்ன பேரோ, நாடோடி பாட்டுக்குத் தாய் தந்தை யாரோ?" எனும் பாடலடிகள் எடுத்துக்காட்டுவது பொருந்தும்.

இவ்வாறான நாட்டார் இலக்கியத்தின் வடிவக் கூறுகளின் ஒன்றான நாட்டார் பாடல்களைப் பற்றி முதலாவதாக பார்ப்போம். அந்த வகையிலே இந் நாட்டார் பாடல்களானவை மக்கள் வேலை செய்கின்ற தளத்தைப் பொருத்தே முதலில் தோற்றம் பெற்றன. பின்னர் மனித வாழ்வியலோடு தொடர்புற்று குழந்தையை தாலாட்ட, சாய்ந்தாடம்மா என நடப்பதற்கு ஊக்குவிக்க, ஒரு மனிதன் இறந்தவுடன் ஒப்பாரி பாட என பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பாடப்பட்டன.

அந்தவகையிலே, ஒரு குழந்தைப் பிறந்தவுடன் அதனை தாலாட்டுவதற்காக ஒலித்த ஒரு தாயின் அன்புக் குரலை நோக்குவோமாயின்,

"ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ
கண்ணையடித்தாரார்
கற்பகத்தைத் தொட்டாரார்...."

என்றவாறு தன் குழந்தையை தாலாட்டுகின்ற அதே தாய் அந்தக் குழந்தை சற்றே வளர்ந்தவுடன் அதனை ஊக்குவிக்கும் முகமாக,

"சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சோலைக்கிளியே சாய்ந்தாடு
சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
தாமரைப் பூவே சாய்ந்தாடு" எனப் பாடுகின்றாள்.

இவ்வாறு குழந்தைப் பருவத்திலே எம் வாழ்வோடு செழுமைப்பெற்றிருந்த இந்நாட்டார் பாடல் தொழில் செய்யும் தளங்களிலும் எம்மோடு இணைந்த ஒரு அம்சமாகவே காணப்பட்டது. அந்த வகையிலே, தொழில் செய்யும் தளங்களிலே தன் களைப்பு தெரியாமல் இருப்பதற்காக பல்வேறு பாடல்கள் ஆண், பெண் என இணைந்தும் தொழில் தளங்களைப் பொருத்தும் பாடப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே,
"ஆடிப்பாடி வேலை செஞ்சா அலுப்பிருக்காது அதிலே ஆணும் பெண்ணும் சேராவிட்டால் அழகிருக்காது" எனும் அடிகள் தான் என் சிந்தையிலெழுகின்றன.

அந்த வகையில் தொழில் செய்கின்ற தளங்களில் பாடப்படுகின்ற பாடல்களை நோக்கின், எடுத்துக்காட்டாக வயலிலே வேலை செய்கின்ற ஓர் உழவன் தன் மனைவியை நோக்கி பின்வருமாறு பாடுகின்றான்.

"அருவி வெட்டப் போறேன் பெண்ணே
அரிவாளைக் கொண்டா - நானும்
அறியாமல் சொல்லிப் போட்டேன்
பழஞ்சோற்றைக் கொண்டா..." என்றவாறு

இப்பாடல் ஓசை நயத்துடன் எவ்வளவு இனிமையாயிருக்கின்றது.

இவற்றை எண்ணும் போது ஏட்டிலக்கியமா? நாட்டிலக்கியமா? இனிமையில் செழுமை பெற்றிருப்பது என்றொரு விவாதமே நடத்தலாம் போலும். விடயத்துக்கு வந்தோமானால், அடுத்த எடுத்துக் காட்டாக ஆண், பெண் என இரு பாலாருக்கிடையில் பாடப்படுகின்ற கேளிக்கை / வேடிக்கைப் பாடல்களின் வரிசையிலே,

"ஏன்டி குட்டி என்னடி குட்டி
என்னாடி செய்தாய்? - (ஆண்)
கோழிமுட்டையில் மயிர்பிடுங்கினேன்
சும்மாவா இருந்தேன் (பெண்)
"ஏன்டி குட்டி என்னடி குட்டி
என்னாடி செய்தாய்? - (ஆண்)
பாம்பு குட்டிக்கு பல்விளக்கினேன்
சும்மாவா இருந்தேன் (பெண்)" எனும் பாடலைக் குறிப்பிடலாம்.

இவை பொழுதுபோக்கிற்காக பாடப்பட்டவையாகும். இவ்வாறு மனித வாழ்வியலோடு பிரிக்க முடியாத அம்சமாக இருந்து வந்த இந்நாட்டார் பாடல்கள் ஒரு மனிதனின் வாழ்வின் இறுதி அத்தியாயமான இறப்பிலும் அவனுடனேயே இருந்தமை குறிப்பிட்டுக்காட்ட வேண்டிய விடயமாகும். இதற்கு ஒரு மனிதன் இறந்தவுடன் தன் துக்கத்தின் வெளிப்பாடாக பாடப்பட்ட ஒப்பாரி பாடல்களை எடுத்துக் காட்டலாம்.

"என்ன சொல்லி நான் காட்டலாம்
எதைச் சொல்லி நான் அழுவேன்
என் மகாராசா என்ன விட்டுட்டு போன
கதையச் சொல்லி நான் அழுவேன்....."

எனும் பாடலை உதாரணங் காட்டுவது பொருந்தும்.
அடுத்ததாக பெண்களுக்கேயுரிய கலையம்சமான கும்மியடித்தலை நோக்கின்,

"குனிந்து கும்மியடி - பெண்ணே
குனிந்து குனிந்து கும்மியடி...."

எனும் பாடலடிகள் பாடியவாறே பெண்கள் கும்மியடித்துள்ளனர். இவ்வாறாக நாட்டார் பாடல்கள் மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் அம்சங்களுடன் இணைந்து செழுமை கண்டிருந்தன.
நாட்டுப்புறவியலில் இடம்பெறும் வரிசையில் இரண்டாவதாக பழமொழிகளை நோக்கின், "அன்றைய மக்கள் ஓர் செயலை விமர்சிக்கும் முகமாகவும் அது தொடர்பான கருத்தை தெரிவிக்கும் முகமாகவும் தமது அனுபவத்தின் வெளிப்பாடாகவும் வாய்மொழியை ஊடகமாக பயன்படுத்திக் கூறியுள்ளவை" என்பது பொருந்தும். எடுத்தக்காட்டாக "ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது" என்பது, "ஆழமறியாது காலை விடாதே", "மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே" போன்ற பழமொழிகளைக் குறிப்பிடலாம். இவை இன்றும் நம் நடைமுறை வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்ற அறிவுறுத்தல்களாகவே இருக்கின்றன.

விடுகதைகளும், கதைப்பாடல்களும் நாட்டுப்புறவியலில் ஓர் இடத்தைத் தனக்கென தக்கவைத்துக் கொண்டிருந்தன. அந்த வகையில் "விடுகதைகளானவை மூளைக்கு வேலை கொடுக்கும் முகமாக கேட்கப்பட்ட புதிர்க்கேள்விகளாகும்." எடுத்துக்காட்டாக, "வட்டக் குடைப்பிடிச்சு எட்டுக்கால் ஊன்றி வர்றாராம் சின்னத்துரை அவர் யார்?" போன்ற விடுகதையைக் குறிப்பிடலாம். கதைப்பாடல்கள் என நோக்கின், "அன்றைய காலத்திலே நடந்த ஒரு சம்பவத்தை பாடலாக வெளிப்படுத்தல்" கதைப்பாடல்கள் ஆகும்.

நாட்டுப்புறவியலில் முக்கிய அம்சமான கூத்துக்கலை பற்றி நோக்கின், இது ஒரு தனி கலையம்சமெனலாம். "ஓர் இதிகாசத்தையோ அல்லது வரலாற்றில் நடந்த ஓர் விடயத்தினையோ மக்கள் தம் பாங்கில் பாடியும் ஆடியும் நடித்தும் செய்து காட்டுவது" கூத்துக்கலை எனப்படுகின்றது. இது சமயத்தைத் தழுவியதாகவே பெரும்பாலும் காணப்பட்டது. "காமன் கூத்து" இதற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

ஆகவே "நாட்டுப்புற மக்களின் வாழ்வியல், பண்பாட்டு பழக்க வழக்கங்கள் என்பவற்றை நாட்டுப்புற இலக்கியங்கள் பிரதிபலித்து நிற்கின்றன." இவை தான் பல்வேறு வடிவங்களாக (நாட்டார் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், கூத்துக்கள்) காணப்படுகின்றன. "ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது" என்பர். அதுபோல் ஏட்டுக்கல்வியின் புத்தக பூச்சாக மாத்திரம் நாம் இருந்துவிடாது, நடைமுறை வாழ்க்கைக்கு அனுபவத்தை தருகின்ற இந்த நாட்டுப்புறவியலின் செழுமையின் தொன்மைக்கு மண்ணின் மைந்தர்களாகிய நாம் விண்வெளியில் பயணித்து தன்மதியில் தடம்பதித்து விட்டோம் என்ற மிதப்பிலும் பெருமிதத்திலும் நாட்டுப்புறவியலை புறந்தள்ளிவிடாது இலத்திரனியலோடு இவ்விலக்கியத்தினையும் இரசித்து ருசி கண்டு வாழ்ந்து இன்பம் காணுவோமாக!

பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்திடினும்
கட்டி இழுத்து கால், கை முறித்து அங்கம்
பிளந்து, இழந்து துடித்திடினும்
பொங்கு தமிழை பேச மறப்பேனோ.......
பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன தொழில்நுட்பம் இதழியலை காப்பாற்றுமா?

சிவலிங்கம் சிவகுமாரன், வீரகேசரி ஆசிரிய பீடம்

சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு அமெரிக்காவின் பொருளாதார நிபுணர் ஒருவர் இப்படி ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார். " பத்திரிகைகளை கொலை செய்தது யார்?" கொலைச் சம்பவம் என்பது ஒரு குற்றவியல் செய்தி. அதை விரிவாகத் தரும் பணியை செய்வது பத்திரிகைகள். அந்தப் பத்திரிகைகளையே கொலை செய்வதென்றால் இது என்ன கேள்வி? ஆம் இணையத்தின் வருகையால் பல பாரம்பரிய பத்திரிகைகள் நட்டத்தையடைந்து பத்திரிகை நிறுவனங்கள் மூடப்பட்டன. இணைய பயன்பாட்டின் தீவிரத்தையே அந்தப் பொருளாதார நிபுணர் அவ்வாறு விளித்தார். இன்னும் பல பத்திரிக்கைகள் கொலை செய்யப்படலாம் என 2006ஆம் ஆண்டு அவர் எதிர்வுக் கூறியிருந்தார். அது உண்மையாகி வருகின்றது.

ஐக்கிய அமெரிக்காவில் சுமார் 1113 நாளாந்த செய்திப்பத்திரிகைகள் விற்பனையாகின்றன. ஆனால் 2006 மார்ச் இற்குப்பிறகு 2014 ஆம் ஆண்டு வரை எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் பத்திரிகை விற்பனையில் பாரிய சரிவு ஏற்பட்டது. பத்திரிகை நிறுவனங்களின் செய்திப்பிரிவு வேலை வாய்ப்புக்கள் 33 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. அதிர்ச்சிகரமான சம்பவங்களும் இடம் பெற்றன. சுமார் 140 வருடங்களாக வெளிவந்துக் கொண்டிருந்த Tucson Citizen என்ற அரிசோனா மாநிலத்தின் நாளாந்த பத்திரிகை 2009 ஆம் ஆண்டு மே மாதம் 16ம் திகதி தனது மூச்சை நிறுத்திக் கொண்டது. நவீன தொழில்நுட்பமானது இயந்திர உலக மக்களின் தேவைகளை உள்ளங்கைக்குள் கொண்டு வந்ததால் விளம்பரங்களையும் அவர்கள் இணைய பத்திரிகைகள் மூலமாக எதிர்ப்பார்த்தனர். அதுவும் நடந்தேறியது. மறுபக்கம் நவீன தொழினுட்பம் பல பாரம்பரியங்களை விழுங்கி விட்டது. இதில் பத்திரிகைகள் மட்டுமா கொலை செய்யப்பட்டன என்ற கேள்வி எமக்குள் எழுவது நியாயம் தான். ஆனால் இப்போது பார்க்கப்போவது அதை மட்டுந்தானே?

அச்சு ஊடகத்துறையில் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இதழ்கள் பல்கி பெருகி விட்டன. நவீன தகவல் தொழினுட்ப ஊடகப்போக்கில் எவ்வாறு அச்சு ஊடகங்கள் இன்னும் தாக்கு பிடித்திருக்கின்றன என்ற கேள்வி பலருக்கு எழுவதுண்டு. நவீன தொழினுட்பம் இதழியலை காப்பாற்றுமா? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. இன்று இணையம் தொடங்கி கையடக்கத் தொலைபேசி வரை நாளாந்த செய்திகளை மட்டுமல்லாது அந்தந்த வினாடியில் இடம்பெறும் சம்பவங்களையும் எம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. இவை தகவல் வழங்கும் முறையின் நவீன தொழினுட்பங்களாக இருக்கலாம். ஆனால் பத்திரிகை எனும் போது அது எந்தெந்த தொழினுட்பத்தை வாசகருக்கு தாங்கி வருகின்றது என்றால் நாம் நேர்த்தியான வடிவமைப்பையும் தெளிவான செய்திப்படங்களையும் மட்டுமே சுட்டிக்காட்டுவோம். ஏனெனில் தகவல் தருவதில் இன்னும் பாரம்பரிய முறையையே செய்திப் பத்திரிகைகள் பின்பற்றி வருகின்றன.

செய்திகளை வழங்கும் முறையில் மாற்றங்களைக் கொண்டு வருவதில் மேற்கத்தேய ஆங்கில பத்திரிகைகளும் சில ஆங்கில பத்திரிகைகளும் சில ஆசிய நாட்டு பத்திரிகைகளும் வெற்றி கண்டுள்ளன எனலாம். பொதுவாக ஆங்கில மொழி என்றால் அது மேற்கத்தேய மொழி என்ற அடையாளத்தை விட மேற்கத்தேய கலாசாரம் என்ற வடிவத்தையே அது தாங்கி நிற்கின்றது. ஆகையால் ஆங்கில மொழி பத்திரிகைகள் செய்தி வழங்குவதில் என்ன வித்தியாசத்தைக் கொண்டு வந்தாலும் அது கலாசாரத்தோடு தொக்கி நிற்கின்றது. ஆனால் கீழைத்தேய நாடுகளைப் பொறுத்தவரை இதழியல் துறையில் நாம் என்ன மாற்றங்களைக் கொண்டு வந்தோம் என்ற தலைப்பில் எவருமே பேச முன்வருவதில்லை. இதற்கு பிரதானமாக மூன்று விடயங்களை கூறலாம்.

1. கொள்கைப் பிடிப்புள்ள பத்திரிகை நிறுவனங்கள் அதை தளர்த்திக் கொள்ள தயங்குகின்றமை.
2. இதழியல் மாற்றங்களை புகுத்துவதற்குரிய தொழில் திறன் போதாமை.
3. தேடலுக்குரிய வாசிப்பு பழக்கத்தை வளர்த்துக் கொள்ளாத வாசகர்கள்.

பாரம்பரியம் என்ற விடயத்தை மாத்திரம் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அதன் அடுத்தடுத்த வளர்ச்சிக் கட்டங்களை தான் நாம் புதியன புகுதல் என்று கூறுகிறோம். இதழியலை பொறுத்தவரை கீழைத்தேய நாடுகளில் இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற அதிக பத்திரிகைகளை அச்சிடும் நாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிடும் முறையில் எவ்வாறு நவீன தொழினுட்பங்களை புகுத்தினவோ அதேபோன்று பத்திரிகையாளர்களையும் நவீனமயமாக்கியுள்ளன. இந்த உற்சாகப்படுத்தல் தான் அவர்களின் பணியாற்றும் உத்வேகத்தையும் புதிய சிந்தனைகளையும் ஏற்படுத்தியுள்ளன என்றால் மிகையாகாது. ஒரு பத்திரிகை நிறுவன ஊழியர்களின் நலன்களை மேம்படுத்தினாலே பத்திரிகைகள் மேம்படும். அச்சிடும் முறைகளில் நவீன தொழினுட்பத்தைப் புகுத்துதல், செய்தி அறைகளை நவீனமயப்படுத்தும் சிந்தனைகள் என்பதே ஒரு வித கொள்கை தளர்வு தான். அந்த விடயமானது நிறுவனத்தின் பல்துறை பிரிவு ஊழியர்களின் தொழில் திறனை வளர்ப்பதிலும் அப்படியானவர்களை இனங்காண்பதிலும் இருத்தல் அவசியம்.

அடுத்ததாக வாசகர்களின் மனநிலையை அறிதலாகும். ஒரு காலத்தில் விளையாட்டுச் செய்தி ஒன்றை அறிந்து கொள்ள வேண்டுமானால் ஒரு முழு பத்திரிகையையும் ஒரு வாசகன் வாங்க வேண்டும். பிற்காலத்தில் விளையாட்டுச் செய்திகளுக்கென தனி சஞ்சிகைகள் பத்திரிகைகள் வந்தன. அதற்கு அடுத்த கட்டமாக விளையாட்டு செய்திகளை உடனுக்குடன் பதிவேற்றம் செய்து தகவல்களை தரக்கூடிய விளையாட்டு இணைத்தளங்கள் உருவாகின. பயனாளிக்கு இதுவும் சுமையானது. ஏனெனில் நாம் எல்லோரும் எல்லா விளையாட்டுகளையும் விரும்புவதில்லையே? தற்போது ஒவ்வொரு விளையாட்டுக்கும் தனித்தனியே இணைய செய்திப்பக்கங்கள் உள்ளன. ஆனால் இதை நாம் இதழியலில் பரீட்சித்து பார்க்க முடிவதில்லை. ஏனென்றால் எமது வாசகர்களின் மனநிலை அப்படியானது. அடுத்ததாக உற்பத்தி செலவீனம், விளையாட்டுச் செய்தி, குற்றவியல் செய்திகள், தேசிய அரசியல், உலகச் செய்திகள் போன்றவற்றிற்கு தனித்தனி பத்திரிகைகள் எமது நாட்டைப் பொறுத்தவரை அச்சிட்டு வெளியிட முடியுமா? இது மட்டுமன்றி பத்திரிகை என்பது சந்தையில் ஒரு விற்பனை பண்டம் என்பதை பலரும் புரிந்து கொள்ளல் அவசியம். அதற்கு விளம்பரங்கள் முக்கியம். பத்திரிக்கை ஒன்றின் . விற்பனை விலை என்பது அப்பத்திரிகையின் வருமானம் இல்லை என்ற புரிதலும் முக்கியமானது,

**ஊடக அம்சமாகி விட்ட விளம்பரங்கள்**

விளம்பரங்கள், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் இன்றியமையாத அம்சங்களாகி விட்டன. ஊடகக் கற்கையை புதிதாக கற்றுக் கொள்ளவரும் இளையவர்களுக்கு விளம்பரங்களும் ஒரு ஊடக அம்சம் என்ற விளக்கம் தரப்படுகிறது, தகவல் தருதல், அறிக்கையிடல் தான் ஊடகப் பண்பு என்ற அடிப்படையில் விளம்பரங்களையும் ஆக்கிரமித்து விட்டதால் அதன் செயற்பாடுகள் இன்று உச்ச அளவில் நிற்கின்றது. வாசனை திரவியம் ஒன்றை சந்தையில் அறிமுகப்படுத்தல் வேண்டுமானால் அவ்விளம்பரம் தாங்கி வரும் பத்திரிகையின் குறித்த பக்கத்தில் அந்த வாசனை வீசும் வண்ணம் திட்டமிடப்பட்டது.( இதை வீரகேசரி வாசகர்கள் அனுபவித்திருப்பர்) அதே போன்று ஒப்பனை பொருட்களை சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் அதன் சிறிய வடிவத்தினை பத்திரிகைகளில் இலவசமாக இணைத்து விளம்பரம் செய்யும் உத்திகள் இன்று பரவலாக இருக்கின்றன. இதில் நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் இவ்வாறான உத்திகள் அச்சு ஊடகங்களில் மட்டுமே சாத்தியம்.

அதேபோன்று இணைய பயன்பாட்டின் வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் முகமாகவே இன்று பல பத்திரிகைகள் இலத்திரனியல் பத்திரிகைகளையும் இணைய ஒலி / ஒளிபரப்பு சேவைகளையும் ஆரம்பித்துள்ளன. ஆனால் இணைய பத்திரிக்கைகள் எந்தளவிற்கு துல்லியமான உண்மையான செய்திகளை தருகின்றன என்ற கேள்வி எழுகிறது, இது இதழியல் துறைக்கு ஆபத்தான செயற்பாடாகும். இத்துறையில் ஆர்வமுற்று கற்க வரும் இளையோர் இது தான் இதழியல் என்ற தவறான பாதையில் பயணிக்கின்றனர். இதைப் பலரும் உணர வேண்டும்.

பிரபல நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் எழுத்தாளர் நிக்கல்ஸ் கிறிஸ்டோப் என்பவர் இணைய இதழியலைப் பற்றி இப்படி கூறுகிறார். " நாம் இணையத்தளம் ஒன்றை ஆரம்பித்தால் எல்லோருமே அதன் ஆசிரியர்களாகவும் அதன் வாயிற்காப்பாளர்களாகவும் இருக்கிறோம்..." என்னதான் டிஜிட்டல் புரட்சி (digital revolution) என்று நாம் பேசிக் கொண்டிருந்தாலும் எமது மொழிப்பயன்பாடுகளில் உள்ள பாரம்பரிய தன்மையை எம்மால் இலகுவில் விலக்க முடியவதில்லை. ஆங்கில புதிய சொற்கள் உருவாக்கப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் தமிழில் இணையான சொற்களை உருவாக்குவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் ஆங்கில வடிவத்தையே தமிழில் நாம் பிரயோகிக்கின்றோம். ஆகவே நவீன தொழினுட்ப விடயமானது எமது மொழிப்பயன்பாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாகவே இதழியல் மொழிப் பிரயோகம் என ஒரு அம்சம் உருவாகியது, உலகின் பிரபலமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகை நிறுவனங்கள் தமது பயன்பாட்டிற்கென பிரத்தியேக சொல் அகராதிகளைக் கொண்டுள்ளன. அதில் பணியாற்றும் பத்திரிக்கையாளர்கள் அவற்றை மாத்திரமே பயன்படுத்த வேண்டும். இன்னும் நூறு ஆண்டுகள் சென்றாலும் கூட பத்திரிகைகள் உயிர்த்துடிப்புடன் இருக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றதென்றால் அதற்குப் பிரதான காரணம் எமது மொழிப்பயன்பாடு தான் என்று கூறலாம்.

தொழினுட்பமானது ஒரு புறம் வளர்ச்சிக்கு வித்திட்டாலும் அது அழிவுகளுக்கும் காரணமாகியுள்ளது. இதற்கு இதழியலும் விதிவிலக்கல்ல. ஆனாலும் எதையும் பூரணமாக அறிந்து தெரிந்து கொள்வதில் தானே ஒவ்வொரு வாசகனும் திருப்தி கொள்கிறான். அந்த வகையில் பத்திரிகைகள் என்றுமே உயிர்வாழும். அதற்கு பத்திரிகையாளர்களும் உயிர் வாழ வேண்டும் என்பதும் மிக முக்கியம்.

சந்தோஷத்தை விட
கஷ்டங்கள் மனிதனுக்கு
நிறைய படிப்பினைகளை
சொல்லிக் கொடுக்கின்றன.....

சுவாமி விவேகானந்தர்

நம்பிக்கை என்பது
ஒரு நாளில் உதிர்ந்து விடும்
பூவாக இருந்துவிடக் கூடாது
மேலும், மேலும் மலரை
உருவாக்கும் செடியாக
இருக்க வேண்டும்...

அரிஸ்டோட்டில்

நீ நடந்து போவதற்கான பாதை
இல்லையே என்று கவலைப்பாடாதே
நீ நடந்தால் அதுவே ஒரு
பாதையாக மாறிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் நாம்

**S.சேகர் -**
முகாமையாளர், ஆசிரியர் வள நிலையம், ஹட்டன்

மகளே!
அன்று மாடாய் உழைத்து
மார்தட்டி போன பெரியப்பா
ஏறாத மலையேறி
எட்டி கொழுந்து பறித்த பெரியம்மா
அன்று தொட்டு
இன்று வரை
வற்றி போன உடம்போடு
காலத்தை ஓட்டுகின்ற
கடும் உழைப்பாளி நாம் தானே

ஊர் அறியும் - நாம்
மண்ணை மட்டும் நோக்கி வரவில்லை
கலை எண்ணங்களையும் சுமந்து
வந்தோமென்று

கவ்வாத்து நேரத்திலே
கனல் பறக்கும் காதல் பாட்டு
கங்காணி வந்து விட்டால்
கனிவோடு மெட்டு கட்டும்
கொழுந்து பறிக்கும் போது
கோரசாக குவளைப்பாட்டு
கும்மிபாட்டும் கோலாட்டமும்
மலர்ந்து நிற்கும் மலையகத்தின்
மங்காத நாட்டுபாட்டு

பிள்ளையார் பந்து
ரவுன்ரேஸ் பாண்டியோடு
பல்லாங்குழி

பந்தடி களம் என்றால்
பத்து பேர் கூடி நிற்கும்
பாராளுமன்றம்
காமன் கூத்து பொன்னர் சங்கர்
அருச்சுணன் தபசு
வள்ளித்திருமணம்
ராத்திரி விழித்திருந்து
ரசிக்க வைத்த நமது பொக்கிஷம்

பள்ளிக்கூடம் போனோம்
ஆற்றிலே குதித்தோம், குளித்தோம்
விறகு பொருக்கினோம்
வென்றோம்
நின்றோம்
இன்றைய உலகத்தோடு

இன்றும் எல்லாம் இருக்கிறது-எம்மிடம்
என்ன காலமாற்றத்திற்கேற்ப
டாக்டராய் பொறியியலாளராய்
வக்கீலாய் ஆசானாய்
அரசியல்வாதியாய்

மகளே கொஞ்சம் வேகமா
நடந்து வா என்னோட - அவங்க
கொஞ்சம் முன்னால போறாங்க
புடிச்சிடலாம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையும் ஒரு தெய்வம்

M.I.ஆயிசா, கலே/அல்பூர்க்கான் மு.ம.வி.

"உமா…… உமா…….. சீக்கிரம் அத கொண்டுவாம்மா ஏற்கனவே லேட்டாகிவிட்டது" என்று கத்தியவாறே அவன் தன் காலுறையை மாட்டி சப்பாத்தை வேகமாக போட்டுக்கொண்டிருந்தான். "என்ன…. பண்ற நீ சீக்கரமா வா" என்று இன்னும் வேகமாக கத்திக்கொண்டு மனைவி வராததை கண்டு தானே எழுந்து பையை எடுக்க போகும் போது

"இதோ வந்திட்டேன்…….. பையன் எழும்பிட்டான் அதான் அவன…….. என்று இழுக்கும்போது "சரி சரி தா….. நா கௌம்புறன்" என தன் கழுத்துப்பட்டியை சரிசெய்தவாறே ஓபிஸ்"க்கு கிளம்பினான். மனைவி உமா தன் முன் வந்த தலைமயிரை பின் தள்ளி விட்டு முழு கொண்டையையும் கூட்டிப் பிடித்து ஒரு கட்டுப் போட்டு விட்டு விரைவாக கிச்சனை நோக்கி புறப்பட்டாள்.

உமாவும் ராஜு"ம் காதலித்து திருமணம் பண்ணிக் கொண்டவர்கள். கல்லூரி காலத்திலே அவர்கள் தமக்குள் காதலை வளர்த்துக் கொண்டு பின் வீட்டில் சம்மதத்துடன் மணம் முடித்தனர். உமா இப்போது இரண்டு பிள்ளைக்கு தாய். எப்போதும் சுறுசுறுப்பாக காணப்படுவாள். ஆனால் திடீர் கோபம் கொண்டவள். யாராவது பிழை செய்தால் முகத்தைப் பார்த்தே ஏசிவிடுவாள்.

ராஜ் ஒரு ஓபிஸ் மேனஜர். குழந்தை குட்டியை பாக்றது விட்டு, வேலைக்கு செல்வதற்கும் வருவதற்குமாகவே அவனுக்கு நேரம் போதுமானது. அந்த பெரிய வீட்டில் உமா, ராஜ், இரண்டு பிள்ளைகளுடன் ராஜின் தந்தையும் வாழ்ந்து வந்தார்.

மருமகள் என்றால் அத்தையுடன் தான் எலியும் பூனையுமாக இருப்பாள். மாமா என்றால் மருமகளுக்கு செல்லம் ஆனால் இங்கு அது எதிர்மாறாக இருந்தது.

"உமா……… உமா……… எனக்கு வாய் கசப்பா இருக்கு கொஞ்சம் காப்பி போட்டு தாம்மா" என்ற கிழவரை முறைத்துப் பார்த்தாள் உமா. அந்த வயதிலும் தள்ளாடியவராக இருந்தாலும் உறுதியான உடற்கட்டுடன் எழுந்து கழிவறையை நோக்கிச் சென்றார் அவர்.

" யோவ்……. கிழம் எனக்கு வந்து வாய்ச்சுருக்கு பாரு….. இதுக்கு வேளாவேளைக்கு சோறு குடுக்குறதுதான் எனக்கு வேலையாயிருக்கு அதுக்குள்ள காப்பி வேற" என்று முகம் சுழித்துக் கொண்ட உமா கூறியதும் தொலைவில் சென்று கொண்டிருந்தவர் காதில் அவளது கடைசி வார்த்தைகளே கேட்டது. திரும்பி பார்த்துவிட்டு தன் காலை கடனை முடிக்க சென்றார்.

ஏசிய வண்ணமே காப்பியை அவர் முன் வைத்து விட்டு விறு, விறு என்று செல்வதை பார்த்த கிழவருக்கு சிரிப்பு வந்தது. தன் கிழட்டு வாயை இலேசாக திறந்து சிரித்தவாறு இருந்தார். அதுவும் அவளுக்கு காணாமல். ஒரு வழியாக இரு பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்புவதற்குள் அவளுக்கு போதும் போதும்னு ஆகி விட்டது.

"அப்பாடியோ" என பெருமுச்சு விட்டபடியே சோபாவில் அமர்ந்தாள். அருகிலிருந்த ரிமோட்டை எடுத்து டீ.வியை போட்டாள். அவள் கால்கள் இப்போதே களைப்பு அடைந்தன போல் கை கால்களை நீட்டி உட்கார்ந்து வெகு உல்லாசமாக டீ.வியில் போகும் பாடல்களை ரசித்துக் கொண்டிருந்தாள். அதை வாயில் முணுமுணுத்துக் கொண்டாள்.

பக்கத்து அறையில் அமர்ந்துக் கொண்டு கண்ணாடி ஒன்றை போட்ட வண்ணம் பழைய பத்திரிகையை எடுத்து படித்துக்கொண்டிருந்தவர் தட்டுத்தடுமாறி எழுந்து தலையை நீட்டி "ஏம்மா இன்னைக்கி…. என்ன சமையல் பண்ணப் போற" என்று கேட்டதும் அவளுக்கு எரிச்சல் ஊட்டியது போலும் "யோவ்….. உனக்கு என்னயா…? நா என்ன வேணாலும் சமைப்பன்…. உனக்கு என்ன…… நேரத்துக்கு சாப்பாடு வரும் கொட்டிக்க வேண்டியது தான். ஒரு வேலையும் செய்ய வேண்டியதில்லை…… என் விதி உன்ன எல்லாம் பாத்துகனும்னு" என்று அவசரமாக திட்டி விட்டு தன் சீரியலை தொடர்ந்து பார்த்தாள். கிழவன் குட்டு பட்டவனாக பேசாமல் அமர்ந்தான். "ச்சே இந்த கமலா ஏன் நடுவுல வந்தா…… அடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நடக்குமோ'' என சீரியல் தொடரில் நடக்கபோவதை தான் யூகித்து கொண்டு சென்றாள். மதிய உணவு முடிந்தது.

பிள்ளைகள் பாடசாலை விட்டு வந்து, வீட்டை இரண்டகம் செய்தனர்... "குமார்.... என்ன செய்றே", "அத எடுக்காதே", அங்க ஓடாத பாலா'' அப்பாட்ட ஒன்ன பத்தி சொல்வேன் என்று மிரட்டி கத்திக் கொண்டே தன் பொழுதை கழித்தாள் உமா.

"தாத்தா... நீங்களும் வாங்க'' என அவரையும் அழைத்துக் கொண்டு விளையாடினர். "அவரென்ன... சின்ன பிள்ளையா... உங்ககூட விளையாட'' என்றதும் "விடும்மா... சின்னஞ் சிறுசுக அப்படிதான்'' என்றார். "யோவ்... நீயா புள்ள வளர்க்கிற?....பேசாம... பொத்திட்டு கம்முன்னு இரு... உன்னோட ஒரே இம்சையாய் போச்சு. உன்ன சொல்லி வேலல்ல ராஜ் கிட்டதான் சொல்லனும்.'' என்றாள். அவர் இதெல்லாம் பழக்கப்பட்டவராக ஏச்சை வாங்கி விட்டு சிரித்துக் கொள்வார்.

இரவு 9 மணிக்கெல்லாம் ராஜ் உடலெல்லாம் வியர்த்து முகம் வாடியவராக வீடு வந்து சேர்வார். கார் சத்தம் கேட்டவுடனேயே இரு பிள்ளைகளும் ஓடிச் சென்று அவனை சுற்றி பிடித்து அவன் வாங்கி வருவதை பறித்துக் கொண்டு ஓடுவார்கள்.

"உமா.... இன்னக்கி ஒரே டயட் நா போய் பிரஸ் ஆகிட்டு வாறன்'' என சென்றான். சிறிது நேரத்தின் பின் இரவு சாப்பாடு உண்ண அழைத்தாள் உமா. அதை உண்டுவிட்டு நேரே படுக்கையில் சென்று புரண்டான். சிறுசுகள் அவன் முதுகில் ஏறி மசாஜ் என்ற பெயரில் புகுந்து விளையாடினர். "சரி பசங்களா... வாங்க அப்பா... தூங்கட்டும்'' என்றவாறே இருவர் கைகளை பிடித்துக் கொண்டு மற்ற அறைக்குள் சென்றாள். இருவருக்கும் கதை சொல்லி தூங்க வைக்க வெகு நேரமாகிவிட்டது.

தன் அறைக்குள் வந்ததும் கணவருக்கருகில் உட்கார்ந்து "ராஜ் நா..... உங்கக்கிட்ட முக்கியமான விஷயம் சொல்லனும் என்றாள். "என்ன சொல்லு'' என்று ராஜ் அரை தூக்கத்தில் முணுமுணுத்தான். "அது வந்து அதான் மாமாவுக்கு இப்ப வயசாயிடுச்சு.... நமக்கு இரு பிள்ளைகள் இருக்கு எனக்கு உங்களையும் பசங்களையும் பார்க்கவே போதுமாயிருக்கு.... இதுல மாமாவ வேற பார்த்துக்கனும் பேசாம அவர முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டா என்ன''என்றாள் சிறிதும் தயக்கமில்லாமல். திடுக்கிட்டு எழுந்த ராஜ் "என்ன உமா சொல்ற அவரு உனக்கு என்ன சொன்னாரு? தொல்லை தாராறா அவரும் அவர்ர பாடுமாக இருக்கிற மனுசன போயி''

"இல்ல ராஜ் அவரு சும்மா சும்மா வேல வாங்குராரு நானும் எவ்வளோ நாள்தான் அவர பாக்குறது. இதுக்கு மேல முடியாது ராஜ் அவரோட ஒரே தொல்லை'' என்று படுத்துக் கொண்டாள்.
பொழுது விடிந்தது. மறுநாளும் ராஜ் அதே பரபரப்பு "எம்பா... ராஜ் எனக்கு ஒரு 100 ரூபா குடுப்பா கடையில நான் டீ குடிச்சிக்றன்''

"என்னது 100 ரூபாயா என்னாயா நீ சம்பாரிக்கிறாயா?. ஒனக்கு 100 ரூபாக்கு டீ கேக்குதா'' "உமா பிளீஸ் நா கௌம்பனும் சீக்கிரம் பைய கொண்டா'' குசினுக்குள் ஒரே பீங்கான், கோப்பை எரிகிற சத்தம் சலங் சலங் என்றது. "உமா ஒங்கிட்டதான் சீக்கிரமா'' என்றான். "போதும்ங்க ... உங்க ஒபிஸ் நீங்க இவருக்கு ஒரு முடிவு சொல்லுங்க என்னால இவருக்கு சாப்பாடு போட முடியாது'' என்று உறுமினாள்.

"ஏம்பா நான் வெளில தங்கிறன் அந்த டெயிலிமிரர் பேபர் வாங்க சல்லி இருந்தா குடும்பா'' "ஆஹ் இருக்கிற பேப்பர படிக்க துப்பில்ல டெயிலி மிரர் கேக்குதா...... யோவ் கெழம் வாய மூடுய்யா'' "உமா... அவர் என் அப்பா பிளீஸ்'' போதும் ராஜ் அப்பாதான் இவ்வளோ நாள் பார்த்தேன் இனிமேல் முடியாது ராஜ்''

இவ்வாறு வாய்த்தர்க்கம் கூடக் கூட ராஜீக்கு கோபம் தலைக்கேறியது. "போதும் நிறுத்துங்க..... இப்ப என்ன.....? அப்பாவ முதியோர் இல்லத்துல விடனும் அதானே சரி... வாங்கப்பா'' என்றதும் அந்தக் கிழவரின் இதயம் ஒரு கணம் வெடித்தது.

அதிர்ச்சியிலிருந்து மீளாதவராய் தன் உடைகளை பையில் போட்டுக்கொண்டு மகனோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றார். இவ்வளவு நாளும் மருமகளிடம் ஏச்சி வாங்கி குட்டுப்படுவதை அவர் சரியாக மனதில் எடுப்பதில்லை. ஆனால் இன்று அவளது பிடிவாதத்தை பார்த்த கிழவருக்கு ஒரே சங்கடமாக இருந்தது. கடைசியாக தன் வீட்டையும் மருமகளையும் பேரப்பிள்ளைகளையும் பார்த்து சிரித்துக்கொண்டார். வலுவிழந்தவராக குமார், பாலா, இருவரும் "தாத்தா எங்களோட விளையாட வரமாட்டீர்களா" என ஏக்கத்தோடு கேட்ட உமா அவர்களை இழுத்துக்கொண்டு உள்ளே சென்றாள். அவள் முகத்தில் சாதித்து விட்டோம் என்ற அகங்காரம் பரந்திருந்தது.

முதியோர் இல்லம் வந்தது. அப்பாவை அழைத்துக் கொண்டு சென்றான் ராஜ். பெயர் பதிப்பவர் அவனது தந்தையை பார்த்ததும் "சார் நீங்களா... வாங்க....? என எழுந்து தன் சீட்டில் அவரை அமரச் செய்தார். "என்ன... சார் நீங்களா.... இப்படி இருக்கீங்க ஆளே மாறி போய்ட்டீங்க.... அந்த காலம் உங்கள பார்த்தலே ஒரு கர்வம்..... இப்ப என்ன சோர்ந்து பொய்டீங்க" என்று நலம் விசாரித்தார் ராஜ்க்கு ஒரே ஆச்சர்யம் ஏன் தந்தையை இவ்வளவு பெரிய மனிதராக புகழுகிறார்.

"இது யாரு சேர்" என ராஜை காட்டி கேட்டான். "என் மகன் ராஜ் வளர்ந்திட்டான்" என்றதும் புரியாதவனாக பதிவாளர் விழிக்க அப்பா ஏதோ கண்களால் சைகை காட்டிபின் "ஆஹ்..... ராஜ்" என்றார் அவர் ஏதோ மறைப்பது போலிருந்தது. "இங்க ஏன் வந்தீங்க"

"என்ன இது எங்க அப்பாவை விடத்தான்" என்றான். கேட்டவனுக்கு பக் என்று இருந்தது. "இவரையா இங்க....." என்று இழுத்தவன் தன்னை சமாளித்துக்கொண்டு ரூம்களை பார்க்குமாறு சென்று விட்டான். ராஜ் அப்பாவை விட்டு விட்டு "அப்பா நா வாறன்பா" என்றான். "ராஜ்" மகனே என என்றுமில்லாதவாறு அனைத்துக் கொண்டார். "உமா விரும்பினால் அவளையும் கூட்டிக்கொண்டு வாப்பா" என்ன பார்க்க" என்று அழலானார்.

"அப்பா அழாதீங்கப்பா..... நா கண்டிப்பா கூட்டி வாரன் ஓபிஸக்கு டைம் ஆகுது" என்று சொல்லி விட்டு விரைந்தான். பாவம் அவரது தோய்ந்த இதயம் எந்தளவு காயம்பட்டது என்பது அவனுக்கு எங்கே தெரியப்போகுது. ஒரு மாதம் கழிந்தது.

உமாவுக்கு இப்போதெல்லாம் இளவரசி போல சுதந்திரமாக இருக்க முடிந்தது. ராஜீக்கு அழைப்பு வந்தது. முதியோர் இல்லத்தில் அவரது தந்தை இறந்தது என்ற செய்தியே அது. விரைந்து ஓடி சென்றான்.

அங்குள்ள பதிவாளர் ஓடி வந்து "தம்பி நீங்க வருவீங்க என்று ஒவ்வொரு நாளும் மனுசன் ஆசையா சொல்லிக்கொண்டிருப்பார். அதையே நினைத்து, நினைத்து மாரடைப்பில் இறந்து விட்டார்." என கதறினார். ராஜ்க்கு தன் மேலே கோபம் வந்தது வேலை, வேலை என்று தன் தந்தையை மறந்துபோனேனே என மனசுடைந்து கீழே அமர்ந்தான்.

"தம்பி இவர் யார் தெரியுமாப்பா..... அந்த காலத்துல உள்ள ஜமீன் பரம்பர இவருக்கு இந்த ஊஞ்சலில் தான்பா நீ கெடச்ச உன்ன பிடிக்களன்னு உன்னோட அப்பா, அம்மா உன்ன வீசிட்டு போயிட்டாங்க அவர்தான்பா உன்ன தூக்கி வளர்த்து ஆளாக்கினார். ஆனா அவரையே நீ முதியோர் இல்லத்துல சேர்த்துட்டயேப்பா" என கத்தி அழுதார். "இத அன்னக்கே உன்கிட்ட சொல்ல வந்த போ அவர் உன்கிட்ட சொல்ல வேணாம்னு சத்தியம் வாங்கிட்டாருப்பா..... உன்னோட ஆசைக்காக கல்யாணமே முடிக்காதவர் அவர் அவர போயி இப்படி"

கண்களில் கண்ணீர் ஆறாய் ஓட பேய் இறைந்தவன் போல உட்கார்ந்திருந்தான் ராஜ். இதை எல்லாம் கேட்டதும் தன் அப்பாவின் கையை பற்றி "அப்பா....அப்பா என்ன மன்னிச்சிடுப்பா.... அனாதையா இருந்த என்ன ஆளாக்கிய உன்னய நான் வீட்ட விட்டு இங்க கூட்டி வந்தன். அப்பா உங்களோட வீட்ல இருந்து உங்களையே வெளியப் போக சொன்ன பாவிப்பா நான்..... நான் பாவி என்ன மன்னிசிக்கப்பா" அப்பா வாங்கப்பா என்ன விட்டு போயிடாதீங்கப்பா... என் மனைவிதான் சொன்னாள்னு நானும் உன்ன இங்க கூட்டி வந்தனே என் மூளைய செருப்பால அடிக்கனும் அய்யோ அப்பா..... அப்பா..... என கதறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா கையை முத்தமிட்டான் தலையோடு தலை வைத்து படுத்தான். பார்ப்பவர்களுக்கு இது ஒரு பாடமாக இருந்தது. மேலும் கவலையை ஊட்டியது.

“என் கையை பிடிச்சு நடக்க வைச்ச உங்கள உங்க கைய பிடிச்சசுகிட்டே இங்க கூட்டி வந்தனே” அப்பா என்ன மன்னிப்பியா.... அனாதையாக இருந்த எனக்கு வாழ்க்கை தந்த உன்னையே கொன்னுட்டனேப்பா.. ஐய்யோ” என ஒப்பாரி வைத்தான்.

அப்போது குமாரும் பாலாவும் தன் தந்தையை கட்டிக் கொண்டு “அழாதப்பா.... நாங்க உன்ன இப்படி இங்க அனுப்ப மாட்டம் நல்லா பார்த்துக்குவோம் அழாதப்பா” என்றார்கள். அவர்களை கட்டிக் கொண்டு அழுதான் ராஜ்.

தாய், தந்தைகளை முதியோர் இல்லத்தில் சேர்க்கும்
இரக்கமற்ற பிள்ளைகளுக்கு இது ஓர் சமர்ப்பணம்

நீ எதை நினைக்கிறாயோ
அதுவாகவே ஆகிறாய்
உன்னை வலிமை உடையவன்
என்று நினைத்தால்
வலிமை படைத்தவன் ஆவாய்!
சுவாமி விவேகானந்தர்

சுமைகளை கண்டு
நீ துவண்டு விடாதே!
இந்த உலகத்தை சுமக்கும்
பூமியே உன் காலடியில்தான்!.....
சுவாமி விவேகானந்தர்

நீ பட்ட துன்பத்தை விட,
அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது!
சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்த வானம்

V.தவதாரிணி
மா/பாக்கியம் தேசிய கல்லூரி

நினையாத உச்சத்தில் - ஒரு
நீலநிறப் போர்வையாய்...... எம்
நெஞ்சமெலாம் நெகிழ்ந்திடவே
நீண்டுப் பரந்த வானம்......

சூரியன் சிரிக்கும் - பின்னே
சந்திரன் சிரிக்கும்
மன்னனும் மனைவியும் சிரித்திடவே
மகிழ்ந்து ஒளிரும் தாரகைகள்............!

இன்பங்கள் நிறைந்திருக்க
இன்னல்கள் மறைந்திருக்கும்........
சொந்தங்கள் எல்லாமே இந்த
ஒரு கூரைக்கு கீழே தான்.......!

துயரங்கள் வந்தாலும்
தயங்காத மனவுறுதி
உறங்கல்கள் வந்தாலும்
உறங்காத விழிகள்

கடுமையான போரோடும்
களைப்பின்றி போராடும்
முரட்டுக்காளைகள் எம்
முன்னோர்கள்.........!

களிப்புடன் கதைபேசி
கருணையுடன் உறவாடி
காலத்தை வென்றவர்கள் - எம்
முன்னோர்கள...........!

துணிச்சலாய் இந்த
செயல்கள் கண்டு
தலைவணங்கிக் கிடந்தது
அன்றைய வானம்......!

தூங்கவும் நேரமில்லை - இன்று
தொழிலெதுவும் நேர்த்தியில்லை
பணப்பொதிகள் நிறைத்திருந்தும்
கடனெதுவும் குறையவில்லை

பக்குவமில்லா இந்த
வாழ்க்கையைக் கண்டு
பயந்து போனதோ
அந்த வானம்.........?

எங்கென்று தெரியவில்லை
தொலைந்துப் போனது.....!
ஏனென்று தெரியவில்லை – வானம்
தொலைந்தே போனது.....!
கார்மழை பொழியும்
ஒரு பருவம்
கடும் வெயில் கொளுத்தும்
ஒரு பருவம்

காற்று வீசும்
ஒரு பருவம் - இவைகள்
கலந்தே நிகழும்
ஒரு பருவம்

கண்ணியமாய் பருவங்கள்
அறிந்து வைத்து – தன்
கடமைகள் செய்தது
அந்த வானம்.......!

மனிதன் தன் கடமைகளை
மறந்ததாலோ என்னவோ......
மறைந்தே போனது – அந்த
வளமிகு வானம்......!

வாழ்க்கையின் அர்த்தம்
தெரியாமல்......,
வாழ்வதிலும் அர்த்தம்
இல்லாமல்.......,

கடமைக்காக மூச்சு விடும்
மண்ணகம் கண்டு
கண் வலித்துப் போனதுவோ.... – அந்த
கள்ளமில்லா வானத்துக்கு....?

மின்சாரம் உருவாக்கி
விளக்குகளை அனைத்து விட்டான்
வனங்களை தனதாக்கி
விலங்குகளை அணைத்துக் கொண்டான்

உணவெல்லாம் சுருக்கி
மாத்திரை ஆக்கி விட்டான்
மருந்தே விருந்தாக – மனிதன்
நோயாளியாகி விட்டான்

வீதியெலாம் உடைத்து
'காப்பட்' போட்டு விட்டான்
வேலைகள் சிரமமென்றே
இயந்திரம் செய்து விட்டான்

இணைந்திருந்த உறவுகளைப்
பிரித்து............,
இல்லங்கள் பற்பல
அமைத்து....., - தானாக....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவு நல்குவதாய்
அடைக்கலம் கொடுத்தான்
அவர்களை........
அநாதைகள் என்று.....!

எப்படி ஏற்றிடும்
அந்த வானம்........
இரக்கமே இல்லா - இந்த
இதயங்களை........?

வேலை செய்கிறவன்
படித்ததே இல்லை - இங்கு
படித்த எவருக்கும்
வேலையும் இல்லை.....!

நாகரிகம் வளர்ந்தும்
பிச்சைக்காரர்கள் குறையவில்லை
'இலஞ்சம்' எனும் - ஒரு
நாகரிகமான பிச்சை......!

புதுப் புது நட்பைப் பெற
ஊடகத்துடன் ஒரு தேடல்
உண்மையில் அது 'முகப்புத்தகம்' அல்ல
'முட்டாள் புத்தகம்'

இருக்கிற உறவுகளுடன்
உரையாட மனமில்லை – எப்படியோ
இணைந்த ஒரு முகத்துடன்
உறவாட மனமுண்டோ......?

காணி நிலங்கள் வேண்டி
அயல்நாட்டுடன் கைக்குளுக்கி ஒப்பந்தம்
காசு போதாமலே – மறுநாட்டுடன்
கடன் கேட்கும் ஒரு நிரப்பந்தம்

உண்மையில் நாட்டில்
வளங்கள் இல்லாமல் இல்லை
முறையாகப் பயன் காணும்
வலிமை தானில்லை....!

மக்கள் எம் உறவினரென
அரசாங்கம் கொடியேந்த - இன்று
சஞ்சலங்களும் சலாகைகளும் ஏந்தியே
மக்கள்...... 'உறவுகளைத் தேடி...'

தலைகுனிந்துப் பார்த்து
தலை வலித்துப் போனதுவோ....?
தொலைதூரம் தாண்டி – வானம்
தொலைந்து போனது!

கொலன்னாவைக் குப்பைகள் கூட - இன்று
கொலையாளிகளாக......
குற்றவாளிகள் எல்லோரும்
நீதிபதி ஆசனத்தில்........!

களனி கங்கையோ - இன்று
கலங்கிய கங்கையாக......
கழிவுகள் போட வேண்டாமென்று
கைத்தொழிற்சாலை அதிபர்கள்.....!

இலங்கை தேசமது
எல்லோருக்கும் பொதுவென்று
மேடைகளில் கூச்சலிட்டு – மக்கள்
கரஹோசம் பெற்று......,

எம் மதம் சார்ந்தவரே
இலங்கையர் என்று
ஆசையெலாம் துறந்த
தேரர்கள் கருத்து......!

இந்தத் தொல்லைகள்
தாங்காமல் தான்
வானம் தொலைந்து
போயிற்றோ.........?

இவை மட்டுமா........?
வெள்ளவத்தை கட்டிடங்கள்
வீதியோரத்தில் கொட்டி
கிடக்கின்றன.......?

கடற்கரை மணலில்
வீடு கட்டுவதாய் எண்ணி
கைவைத்தனரோ என்னவோ......
அலைகள் மோதாமலே.......

இடிந்து விட்டன.........!
இப்பொழுது நாம்........
அலைமோதி அலைகிறோம்
கடற் கரைச் சிற்பிகளாய்......!

பொதுவாக மழைத் தந்து – சுட்டுப்
பொசுக்காத வெயில் தந்து
நேரத்துக்கு ஒளி தந்து
நித்திரைக்கு அமைதி தரும்.....

அந்த வானம் எங்கே.....?
இனமெல்லாம் ஒன்று சேர்த்து
மனமெல்லாம் கரங்கோர்த்து
மகிழவைக்கும் - அந்த

மாண்புமிகு நாளைத் தருவதற்காய்
மறுபடியும் என்று வரும்?....
தலைவாசல் காக்கும் - அந்த
'தொலைந்த வானம்'....

மானமில்லா மனிதர்ப் போல
கிடப்பதை உணர்ந்து தான்
வானமில்லா உலகத்தை
நிமிர்ந்து பார்க்கின்றோம்......!

பழைய வானமே வேண்டும்
பழைய மேகமே வேண்டும்
புதிய எண்ணங்கள் வேண்டும் - அங்கு
புதுமைகள் மட்டுமே வேண்டும்....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வில் வரங்களும் சாபங்களும்!

M.கும்சிவானி, நு/கேம்பிரிஜ் கல்லூரி, கொட்டகலை.

படைத்த இறைவனுக்கோர்
வேண்டுகோள்!.................
ஏன் இந்த அழகிய வாழ்வில்
வரங்களும் சாபங்களும்

புல்லின் நுனியில் அசைந்து
ஆடும் பனித்துளியே
நீ இந்த உலகிற்கு
வரமா? சாபமா?

குடிபோதையில் குடும்பத்தை
குழைத்து விடும் மனிதா!
நீ இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

சரித்திரத்தில் இடம்பெற்ற
பாரதியே நீர்
இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

விரிய துடிக்கும்
இளம்மொட்டுக்களே !
நீங்கள் இந்த தரணிக்கு
வரமா? சாபமா?

இருண்ட வானை
வெள்ளையடிக்க வந்த
நிலவே நீ இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

தன்னுயிர் நீத்து
சிசு உயிர் காக்கும்
அன்னையே நீர் இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

வானத்தில் நடைபழகும்
நட்சத்திரங்களே
நீங்கள் இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

ஓலை குடிலில் ஓட்டை
வழியில் எட்டிப்பார்க்கும் மதியே
நீ இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

பனியை விரட்டி ஒளியை
தரும் செங்கதிரவனே
நீ இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

சாலை ஓர அமைதி
காக்கும் மரங்களே
நீ இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

விண்ணைத்தாண்டி சாதனை
படைக்கும் வீரனே
நீ இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

குளிருடன் வரும் தென்றலால்
அசைந்து ஆடும் புற்களே
நீ இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

கடல் கடந்து வந்து
வறுமையால் கஷ்டப்படும்
மக்களே நீங்கள் இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

பட்டினியால் மடிந்து
சவப்பெட்டியை ஏந்தும் சொந்தங்களே
நீங்கள் இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

வெள்ளவத்தையில் இடிந்து
விழுந்த கட்டிடமே
நீ இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

மீதொட்டமுள்ளையில் சரிந்து
விழுந்த குப்பைமேடே
நீ இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

வீதியோர சாயலிலே படுத்து
உறங்கும் மனிதனே
நீ இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

பட்டப்பகலில் பெண்ணை
துன்புறுத்தும் காமவெறியனே
நீ இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

தொலைதூரம் சென்ற
வெண்ணிலவே
நீ இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

தரணியிலே தவழ்ந்திடும்
தமிழ் மொழியே
நீ இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

கள்ளங்கபடமற்ற புன்னகை
பூக்கும் பள்ளியரே
நீங்கள் இந்த உலகுக்கு
வரமா? சாபமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசத்துடிக்கும் ஊமையே
பார்க்கத்துடிக்கும் குருடனே
நீங்கள் இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

விடிவற்ற விடியலை நோக்கி
வீட்டு வாயிலில் காவல் காக்கும்
பெண்ணே நீ இந்த உலகுக்கு
வரமா? சாபமா?

தாகங்கள் கூட தண்ணீரை
தள்ளி விடுகின்றன
மனிதர்கள் வாழ்வின்
வரங்களையும் சாபங்களையும் கேட்டு

முறிந்த கிளைகள் இன்று
மண்ணினுள் உக்கிபோய்விட்டன
மனிதநேயமற்ற இந்த
மண்ணுலகில் வாழ்வதை விட்டு

படைத்த ஆண்டவன்
இன்பத்தை கொடுத்து
விட்டு, கூடவே துன்பத்தையும்
கொடுத்து விடுகின்றான்

மனித வாழ்வு வரங்களாலும்
சாபங்களாலும் பூட்டப்பட்ட
பொக்கிஷங்கள் இதை விடுவிக்க
சாவிகள் ஏதும் இல்லை

மனிதா உன் வாழ்வு ஒரு சில்லு
வண்டியாய் சுழன்று கொண்டு
இருக்கின்றது இதில் எப்போது
வரம் கிடைக்கும் எப்போது சாபம்
கிடைக்கும் என்று யாருக்கும் தெரியாது!

தெளிந்த நீரில் இட்ட கல்லால்
நீர் கலங்குவதைப் போல
மனிதன் செய்த வினையால் - அவனுக்கு
வரமும் சாபமும் சரிசமமாக
கிடைக்கின்றது.

விடிவற்ற மனித வாழ்வில்
வீணை வாசிக்க
வரங்களும் சாபங்களும்
வசிப்பது கட்டாயம்

மனிதா!... இப்போதாவது
கூறு உன் வாழ்வின்
வரங்களையும்!............
சாபங்களையும்!............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா - 2017
# விருது பெறும் பெருந்தகையாளர்



திரு. பெரியசாமி சீதாராமன்
ஊடகம்



திரு. பழனியாண்டி திருக்கேதீஸ்வரன்
ஊடகம்



ஜனாப். H.M. ஜவாட்
ஊடகம்



திரு. தனம் சந்திரமோகன்
ஊடகம்



செல்வி. ஜீவா சதாசிவம்
ஊடகம்



திரு. கணேசன் கிருஷாந்தன்
ஊடகம்



திரு. M.M. ஜெயமான்
ஊடகம்

திரு. மப்புள்ளே
மகேஸ்வரன்-ஊடகம்



திரு. ஷெல்டன்
ஹெட்டி ஆராச்சி - ஊடகம்



திருமதி. கலாநிதி
ஜோதிமலர் ரவீந்திரன்-கல்வி



திருமதி. அருந்ததி
ராஜா சத்தியேந்திரா-கல்வி

திருமதி. அருணாசலம்
சுலோச்சனா - கல்வி

திரு. அன்னமுத்து
ஜெகன்தாசன் - கலை



திரு. தியாகராஜா
சிவநேசன் - நாடகம்


திரு. அந்தோனிசாமி
பீட்டர் போல் - சட்டம்

திருமதி. சோபனா
சட்டம்

திரு. கருப்பையாபிள்ளை
பிரபாகரன் - இசை

ஜனாப். H.M.M. இக்பால்
இசை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரு. நெல்சன் ஜோன்
இசை



திருமதி. நிர்மலா பத்மநாதன்
ஆன்மீகம்




திரு. லாசரஸ் சாரளஸ்
சிற்பம்



திரு. இராமநாதன் புவனேந்திரன்
விளையாட்டு




திரு. ராகவன் சுப்பிரமணியம்
நாடகம்



செல்வி. V. தயானி
கவிதை



திரு. சிவனு மனோகரன்
சிறுகதை



திரு. R. தம்பித்துரை
மொழிபெயர்ப்பு



திரு. இராசையா மகேஸ்வரன்
ஆய்வு மாநாட்டுக்கட்டுரை



திரு. முரளீந்திரன் குமார்
சமூக சேவை

## மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா - 2017
## பாராட்டப் பெறும் புத்தாக்க முயற்சியாளர்

திரு. சுப்பையா பரமகுரு - விளையாட்டு

செல்வி. இந்திரராசு மிதுனா - இசை

திரு. புஸ்பராஜ் திருச்செல்வம் - சமூகசேவை

திருமதி. சிவப்பிரகாசம் சசிரேகா - எழுத்து

செல்வன். புஷ்பராஜ் விஷ்ணுதர்சன் - புத்தாக்கம்

செல்வன். புவனேந்திரன் வனகேசவன் - இசை - நாதஸ்வரம்

செல்வன். புவனேந்திரன் வனுஷ் - இசை - மேளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2017 மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா
இனிதே சிறப்புற சகல வழிகளிலும்
ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும்
எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.


நன்றி
விழா ஏற்பாட்டுக்குழு

பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்களின் தகுதியானது, தகுதிவாய்ந்த துறைசார்ந்தவர்களினால் நிர்ணயிக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது. ஆக்கங்களின் கருத்துகளுக்கு ஆக்கியோரே பொறுப்புடையவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org